நூலகர்
கோண்டாவில்
-வ்வார் பிரசே

உதயன்

சுடர் 30 | கதிர் 319 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 24, ஞாயிற்றுக்கிழமை 11.10.2015

மகாராஜா பொதிகள் சேவை
லண்டன், சுவிஸ், பிரான்ஸ்க்கு
01 Kg க்கானகட்டணம் 449/-,
கனடாவுக்கு 1Kg க்கு 549/-
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
021 - 2224338 / 021-4925024
இல 25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா
024 - 4930200

# பொறுப்புக் கூறலை விரைந்து மேற்கொள்க

## இலங்கையை நெருக்குகின்றது பிரிட்டன்

லண்டன், ஒக்ரோபர் 11


ஐ.நா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இலங்கையில் இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் பொறிமுறையை விரைந்து செயற்படுத்த வேண்டுமென பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அடுத்து வரும் வாரங்களில் இலங்கையுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளதாக பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலக அமைச்சர் ஹியூகோ ஸ்வைர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது வலைத் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில்விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையே 26 ஆண்டுகள் நடைபெற்ற உள்நாட்டுப் போர் பல பேரழிவுகளின் பின்பு கடந்த 2009 ஆண்டு நிறைவுக்கு வந்தது.

இந்தப் போரில் பக்.24



## இலங்கைக்கான நிதி உதவி அதிகரிக்கப்படும்

### உலக வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஒக்.11

இலங்கைக்கு வழங்கும் நிதி உதவியை அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடனான சந்திப்பில், உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணய நிதியம் ஆகியவற்றின் அதிகாரிகள் இத னைக் குறிப்பிட்டதாக நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக் கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

பெருவின்தலைநகர்லீமாவில் நேற்றுமுன்தினம் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணயநிதியத்தின்வருடாந்த மாநாடு ஆரம்பமாவதற்கு முன்பாக அவற்றின் அதிகாரிகளை சந்தித்து நிதி அமைச்சர் கலந்துரையாடினார்.

இலங்கையின் பொருளாதாரம், ஏற்றுமதி, தொழில் முயற்சி ஆகியவற்றை மேம்படுத்தவும், வர்த்தக மற்றும் முதலீட்டுத் துறைகளை ஊக்குவிக்கவும் அதிக நிதி உதவியை வழங்குவதற்கு இதன் போது உலக வங்கியின் அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கும் சர்வதேச பக்.24

## தேசிய அரசுக்குள் குழப்பம் அமைச்சரவையில் விவாதம்

கொழும்பு, ஒக்.11

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து முன்னெடுக்கும் தேசிய அரசுக்குள் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன எனவும், இதனால் இரு கட்சிக்காரர்களும் முரண்படும் நிலை உருவாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஊழல் மோசடி குற்றச்சாட்டு மற்றும் அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பிய ஜனாதிபதியை பல கோடி ரூபா விரயம் செய்து வரவேற்றமை ஆகிய விடயங்கள் தொடர்பில் இரு கட்சிகளுக்கும் இடையில் தற்போது கருத்து முரண்பாடு வலுப்பெற்று வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் விவாதிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா. பொதுச்சபையின் 70ஆவது கூட்டத்தொடரில் பங்குபற்றிவிட்டு நாடு திரும்பிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவரது கட்சி உறுப்பினர்கள் ஆரவாரமாக வரவேற்றிருந்தனர்.

இதன்போது மக்கள் கூட்டம் சேர்க்கப்பட்டமை, ஜனாதிபதியை வரவேற்று சுவரொட்டி, பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பைத் பக்.24

## அரசுக்கு ஜே.வி.பி எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.11

கொள்கை மறந்து செயற்படும் புதிய அரசு, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அதற்கு எதிராக நாட்டில் பெரியளவில் எதிர்ப்பலையை ஏற்படுத்துவோம் என புதிய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது ஜே.வி.பி.

பொதுமக்கள் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் ஏற்படுத்திய ஆட்சி மாற்றம் மூலம் மக்கள் எவ்வித பயனும் அடையவில்லை பக்.24

## கொழும்புத் துறைமுக நகரம் அமைக்க மீண்டும் அனுமதி

### வழங்க அரசு இணக்கம்

கொழும்பு, ஒக்.11

இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படுவதற்கான சமிக்ஞை இலங்கை அரசிடம் இருந்து கிடைத்துள்ளதாக, சீனாவின் சிறப்புத் தூதுவராக கொழும்பு வந்த, அந்த நாட்டின் உதவி வெளிவிவகார அமைச்சர் லியூ சென்மின் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசின் உயர்மட்டத்தினருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து, நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் அவர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அங்கு கருத்து வெளியிட்ட அவர்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தினேன். இதன் போது வரலாற்று ரீதியாக சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் சீனாவின் அபிவிருத்தித் திட்டங்களை, முன்னெடுப்பது தொடர்பாகவும், கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையில் புதிய அரசு பக்.24

## நாட்டுக்கு துரோகம் இழைக்க தயாரில்லை -இராணுவத் தளபதி

கொழும்பு, ஒக்.11

பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்த நாட்டுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் துரோகம் இழைக்கத் தயாரில்லை என்று இராணுவத்தளபதிலெப்டினண்ட் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

பனாகொடை இராணுவ முகாமில் நேற்று இடம்பெற்ற இலங்கை இராணுவத்தின் 66 ஆவது நினைவுதின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட் பக்.24



*கடந்த சில நாள்களாக மட்டக்களப்பு வெல்லாவெளியில் அட்டகாசம் செய்துவந்த யானையை போரதீவுப்பற்று, வேத்துச்சேனை கம்பி ஆறு பிரதேசத்தில் வைத்து வன ஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரிகள் பிடித்துள்ளனர்.*

*3 நாள்களாக இப்பிரதேசத்தில் தங்கி இருந்த அதிகாரிகள் நேற்றுக்காலை குறித்த காட்டு யானையை உயிருடன் பிடித்துள்ளனர். இந்த யானையே அங்கு கிராமவாசிகள் பலரைக்கொன்றதுடன் வீடுகளையும் பயிர்களையும் அழித்து அச்சுறுத்தி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*

## ஐ.நா. தீர்மானம் குறித்து ஆராய தமிழ்க் கூட்டமைப்பு கூடுகிறது

### எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில்

கொழும்பு, ஒக்.11

ஐ.நா. தீர்மானம் குறித்து எதிர்வரும் 20ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துரையாடவுள்ளது. நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். இந்தக் கூட்டத்தின் பின்னர் தமிழ் மக்களுக்கு ஐ.நா. தீர்மானம் தொடர்பில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெளிவுபடுத்துவார்கள்.


இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றம் என்ற சொல் மாத்திரமே இல்லை.

ஆனால், ஐ.நாவின் பக்.24

பிரதிபலன்களை பெறத்தக்கவர்கள்
SMEPLUS speedloan
உற்பத்தியாளர்களான உங்களை கரை சேர்க்கும் வழி
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011 5 411 411
SDB
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தொற்றுள்ள கழிவுகளை எரிக்கும் 7 மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திரம் செயற்படத்தொடங்கியது

## போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக யாழ்.போதனா வைத்தியசாலைக்காக எடுத்துவரப்பட்ட சிகிச்சையின் போது அகற்றப்படும் தொற்றுள்ள கழிவுகளை எரிக்கும் இயந்திரம், பொருத்தப்பட்டு அத்தகைய கழிவுகளை எரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் சுமார் 7 மில்லியன் ரூபா பெறுமதியுடையது. ஆயிரத்து 200 பாகை செயல்சியஸ் வெப்ப நிலையில்கழிவுகளைஎரிக்கக்கூடிய குறித்த இயந்திரம் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு சுகாதாரஅமைச்சினால்வழங்கப்பட்டுள்ளது.

குறித்தஇயந்திரம், ஒரேதடவையில் 30 கிலோகிராம் கழிவுகளை, அரை மணிநேரத்தில் எரித்து அழித்து விடும்.

சத்திர சிகிச்சையின் போது அகற்றப்படும் மனித உடற்கழிவுகள், நீரிழிவு நோயாளர்களிலிருந்து அகற்றப்படும் உடற்பாகங்கள் உள்ளிட்ட கழிவுகள் சுகாதாரச்சீர்கேடானவை. நோய்த்தொற்றுள்ளவை. அவற்றை சாதரணமாக வெளியே வைத்திருந்தால் தொற்று ஏற்பட்டுவிடும். துர்நாற்றம் வீசும். சூழலுக்குக் கேடு. அதனால் அவை குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு பின்னர் பிற மாவட்டத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு எரித்து அழிக்கப்படுகின்றன என யாழ். போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஒரு மாதத்தில் 4 தடவைகள்கழிவுகளைஎடுத்துச்செல்ல சுமார் ஒரு லட்சம் ரூபா வரை யில் செலவு ஏற்படுகிறது. அதனைத் தனியார் நிறுவனம் ஒன்று எடுத்துச் சென்று எரிக்கிறது. அதற்கான செலவு அதிகரித்துள்ளதாக முன்னரே தெரிவிக்கப்பட்ட நிலையில் தற்போது போதனா வைத்தியசாலையில்கழிவுகளின்தொகையும் அதிகரித்துள்ளதாகஅந்ததகவல்கள் குறிப்பிட்டுள்ளன. அத்துடன் மருத்துவ சிகிச்சை ஊசி, தையல் ஊசி, கழிவுகள், சத்திரசிகிச்சையின்போது வெளியேற்றப்படும்துணிகள், மருந்துகள் என்பன தொற்றை ஏற் படுத்தக்கூடியன என்பதனால் அவற்றை எரித்து அழிக்க வேண்டிய தேவை உள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சிடம் கோரப்பட்டிருந்த நிலையில், குறித்த இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. சாதாரணமாக 35 பாகை செல்சியஸ் வெப்பநிலையின் போதே வெப்பம் தாங்க முடியவில்லை என்றுகூறப்படும் நிலையில் ஆயிரத்து 200 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் அந்தக் கழிவுகள் எரித்து அழிக்கப்படுகின்றன. அவற்றை எரித்த பின்னர் அந்த இயந்திரம் குளிர் நிலைக்கு வந்த பின்னரே அதன் கதவு திறக்கப்படும். அவ்வாறு எரிக்கப்படும் போது அதிகமானவை ஆவியாகி வெளியேறிவிடுகிறது. சிறிதளவு சாம்பலே மிஞ்சும். ஒரு நாளில் ஒரு தடவை கழிவுகள் எரிக்கப்படுகின்றன. அதன் மூலமாக வெளியேறும் புகை ஆவி சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்காது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர் என்று வைத்தியசாலையில் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

இதேவேளை, சத்திர சிகிச்சை யினதும் ஏனையவற்றினதும் கழிவுகள் 3 பிரிவாக்கப்பட்டு ஒரு பிரிவே இவற்றில் எரிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன. ஏனையவை தொற்று இல்லாதவை என்ற அடிப்படையில் சாதாரணமாக எரித்தும், வேறு வகையிலும் அகற்றப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (வ–4)

# புலமைப் பரிசில் வெட்டுப்புள்ளியை குறைக்க வேண்டுமெனக் கோரிக்கை

கொழும்பு, ஒக்.11

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான சித்திபெறும் புள்ளி எல்லையை குறைக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரிய சேவைகள் சங்கத்தின் பொது செயலாளர் மகிந்த ஜயசிங்க இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்காக சித்திபெறும் புள்ளி எல்லை அதிகூடியதாக இருந்தது. இதனால் இந்தப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள்மனரீதியானஅழுத்தங்களுக்கு உள்ளானதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், மாணவர்களின்மனவளத்தைக் கருத்தில் கொண்டு, இந்தப் புள்ளி எல்லையை குறைப்பதற்கு கல்விசார் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (வ)

# மன்னாரில் இடம்பெற்ற பாலியல் வழக்குக்கு தீர்வு காண வலியுறுத்தும் 'வன்' அமைப்பு

## யாழ். மேல் நீதிமன்ற தீர்ப்பையும் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக்.11

விசுவமடுவில்இடம்பெற்றஇராணுவ பாலியல் வன்புணர்வு சம்பவம் தொடர்பில்யாழ்ப்பாணமேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை வர வேற்றுள்ள வடக்கை மையமாகக் கொண்டு இயங்கும் 8 பெண்கள் அமைப்புக்களின் கூட்டான 'வன்', மன்னாரில் 2001ஆம் ஆண்டு இடம்பெற்றபாலியல்வன்புணர்வு தொடர்பான வழக்கு இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதியிடம் முறைப்பாட்டையும் பதிவுசெய்துள்ளது.

2001ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதியன்று மன்னாரில் இரண்டு தாய்மார் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த சம்பவத்தில் மூன்று பொலிஸ் அலுவலர்களும் 9 கடற்படையினரும் சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டிருந்தனர். இது தொடர்பான வழக்கு 2006ஆம் ஆண்டு அநுரதபுர மேல்நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இதன்பின்னர் 2008ம் ஆண்டு பாதிக்கப்பட்டவர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக குறிப்பிட்டு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழக்கு விசாரணையை நிறுத்தியது. அதேநேரம் மற்றும் ஒரு பெண்ணும் பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு தப்பிச்சென்றார்.

இந்த நிலையில் குறித்த வழக்கை விசாரணை செய்ய ஜனாதிபதி விசேட பொறிமுறையை அமைக்க வேண்டும் என்று குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதியிடம் செய்த முறைப்படாட்டில்,

'விசுவமடு இராணுவப் பாலியல் வண்புணர்வுவழக்கில்வழங்கப்பட்ட முன்னுதாரணமிகு தீர்ப்பினை பெண்களின் செயற்பாட்டிற்கான வலையமைப்பு வரவேற்கின்றது. பாதிக்கப்பட்ட இரண்டு பெண்களினதும் துணிச்சலினை நாம் பாராட்டுகின்றோம். குறிப்பாக அவர்களில் ஒருவர் 2010 ஜூன் 14 ஆம் திகதி முறைப்பாடு செய்ததிலிருந்து அவருக்கு ஏற்படுத்தப்பட்ட உடல்ரீதியான தீங்கு, அச்சுறுத்தல், அவமானம், துன்புறுத்தல் என்பவற்றைத் தாண்டி அவர் காட்டிய விடாமுயற்சியினை நாம் பாராட்டுகின்றோம். இராணுவத்திற்கு எதிராக பாலியல் துஷ்பிரயோக வழக்குத் தாக்கல் செய்துள்ள ஏனைய பல பெண்களுக்கு இது நம்பிக்கையினை வழங்குகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்திலே, மன்னாரில் 2010 மார்ச் 19ஆம் திகதி இரண்டு தமிழ்தாய்மார்கள் கூட்டுப்பாலியல் வண்புணர்வுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசேட ஆணைக்குழுவினைநியமித்துள்ள போதிலும் இந்த வழக்கில் இன்னும் தீர்ப்பு வழங்கப்படாமலிருப்பதை நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். ஆயுதம் தாங்கிய நபர்களுக்கெதிராகஎழுந்துசிறுபான்மை இனப்பெண்கள் நீதிகோருவது அப்படியொன்றும் இலகுவான விடயமல்ல என்ற உண்மையினையும் தாண்டி இக்கூட்டுப் பாலியல் வண்புணர்வினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தாம் கொல்லப்படக் கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாது இந்த வழக்கினை முன்னெடுத்துச் சென்றிருக்கின் றனர்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மன்னார் கூட்டுப் பாலியல் வண்புணர்வில் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களையும் 9 கடற்படை உத்தியோகத்தர்களையும் குற்றத்தை நிகழ்த்தியோர் என அடையாளம் கண்டுள்ளனர். 2006ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்த வழக்கு அநுராதபுர மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பாலியல் வண்புணர்வு வழக்கினை விசாரிப்பது பயன்தராது என்றும் இரண்டு வழக்குகளையும் இணைத்து அதனை சித்திரவதை வழக்காக விசாரிப்பது என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்தது. பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் காணாமற் போன காரணத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தடை உத்தரவிற்கிணங்க 2008ஆம் ஆண்டில் வழக்கு விசாரணை நிறுத்தப்பட்டது. மற்றைய பெண் தன் பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் காரண்மாக நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்.

குற்றச்செயல்கள் இராணுவத்தினால் மாத்திரம் நிகழ்த்தப்படுவதில்லை. ஆனால் அதிகாரத்திலுள்ள அரச உத்தியோகத்தர்கள், அரசியல்வாதிகள் மற்றும் மக்களினாலும் நிகழ்த்தப்படுகின்றமையானது அரச இயந்திரங்களில் காணப்படும் குற்றத்திலிருந்து பாதுகாப்புப் பெறும் வசதியின் மட்டத்தினையே பிரதிபலிக்கின்றது. இவ்வாறான சம்பவங்களில் பொலிசார் முறைப்பாட்டினைப்பதிவுசெய்யமறுத்துவிடுகின்றனர். கைது செய்யவோ அல்லது விசாரணை செய்யவோ மறுத்து வழக்கு இழுத்தடிக்கப்படுவதை உறுதிப்படுத்துகின்றனர். இதனால் பெண்களுக்கு நீதி கிடைப்பது தாமதிக்கப்படுவதோடு, நீதி மறுக்கப்படுகின்றது.

அரசு மனித உரிமைச் செயற்பாடுகளிலும் எதிர்காலக் கொள்கைகளிலும் சமூகத்தினுள் விழிப்புணர்வினைஏற்படுத்தமுன்னேற்றகரமான நடவடிக்கைகளினை எடுக்க வேண்டும். அத்துடன் பெண்களின் சமத்துவத்தினைமேம்படுத்திஅனைவருக்கும் நீதியினையும் உறுதிப்படுத்த வேண்டும். இறுதியாக, குறைந்தது சுருக்க முறையல்லாத வழக்கு விசாரணைகள் முடியும் வரையிலாவது பாலியல்வண்புணர்வு, பாலியல் சித்திரவதை மற்றும் வன்முறை ஆகிய குற்றச் செயல்களை பிணை வழங்க முடியாத குற்றச்செயல்கள் எனப் பிரகடனப்படுத்துமாறு நாம் அரசினைவேண்டுகின்றோம்என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ–10)

# வடக்கு பண்பாட்டுப் பெருவிழாவில் பல்துறைக் கலைஞர்கள் கௌரவிப்பு



மாங்குளம் ஒக்.11

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள்திணைக்களத்தின்அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கலைகலாசார பேரவையும் யாழ் மாவட்ட செயலகமும் இணைந்துநடத்திய வடமாகாண பண்பாட்டுப் பெருவிழா நேற்று சனிக்கிழமை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது. இதில் பல்துறைக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ் மாவட்டச் செயலாளரும் யாழ். மாவட்ட கலை கலாசார பேரவைத் தலைவருமாகிய நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக வடக்குமாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ் வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கலைபண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண ஓய்வுநிலை பிரதமசெயலாளர் ஆ.சிவசுவாமி ஆகியோருடன் வடமாகாண சபை உறுப்பினர்கள், கல்வியலாளர்கள், படைப்பாளிகள் எனபலரும் கலந்து கொண்டனர்.

இதில்முக்கிய நிகழ்வாக யாழ்.மாவட்டத்தின் மூத்தகலைஞர்கள் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. இதில் நெடுந்தீவு மதியாபரணம் கந்தையா (கூத்து), வேலணையைச் சேர்ந்த நல்லான் தங்கவேலு (நாடகம்), ஊர்காவற்று றையைச் சேர்ந்த அந்தோனி சவரிமுத்து (கூத்து), காரைநகரைச் சேர்ந்த கந்தையா வடிவேலு (ஹார்மோனியம்), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நீக்கிலாஸ் பிலிப்பு (கூத்து), நல்லூரைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் (கர்நாடக இசை), கோப்பாயைச் சேர்ந்த வைத்திலிங்கம் குணசேகரம் (இலக்கியம்), உடுவிலைச் சேர்ந்த இராசு புண்ணியமூர்த்தி (தவில்), சங்கானையைச் சேர்ந்த செல்லத் துரை சிவசுப்பிரமணியம் (இலக் கியம்), சண்டிலிப்பாயைச் சேர்ந்த சூசைப்பிள்ளை அகஸ்ரின் (ஹார்மோனியம்), தெல்லிப்பழையைச் சேர்ந்த அமிரசிங்கம் இராசதுரை (இலக்கியம்), கரவெட்டியைச் சேர்ந்த செல்வி. பேரின்பநாயகி சிவகுரு (நடனம்), பருத்தித்துறையைச் சேர்ந்த காத்தமுத்து அமிர்தலிங்கம் (பறை), மருதங்கேணியைச் சேர்ந்த கதிர்காமு வல்லிபுரம் (கூத்து), தென்மராட்சியைச் சேர்ந்த பொன்னையா இராசகுலசிங்கம் (ஓவியம்) ஆகிய கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். (வ–422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை, தென்னை வள சங்கங்களின் கிளைகளுக்கு அனுமதி வேண்டும்

## சமாசத்தின் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்.குடாநாட்டில் இதுவரைக்கும் இருநூறுக்கும் மேற்பட்ட பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிலையங்கள் (கள்ளுத் தவறணைகள்) பூட்டப்பட்டுள்ளன.

இந்த கிளை நிலையங்களை மீளவும் திறந்து வைப்பதற்கு அனுமதியைப் பெற்றுத்தருமாறு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் என்.கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சமாசத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 93ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா கடந்த புதன்கிழமை சமாச மண்டபத்தில் இடம்பெற்றது. விழாவுக்கு தலைமைதாங்கி உரையாற்றும்போது அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய மற்றும் கூட்டுறவு அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கலந்துகொண்டார். சமாசத் தலைவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பனை தென்னைவள சங்கங்களில் இருநூறுக்கும் மேற்பட்ட கிளைகள் அனுமதிப்பத்திர பிரச்சினை காரணத்தால் பூட்டப்பட்டுள்ளன. இந்த கிளை நிலையங்கள் பூட்டப்பட்டதால் அனேகமான சங்கங்கள் போதிய வருமானம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளன. பூட்டப்பட்ட இந்தக் கிளை நிலையங்களை மீளத்திறந்து வைப்பதற்கு வடமாகாண கூட்டுறவு அமைச்சர் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள தர வேண்டும்.


குறிப்பாக எமது பிரதேசத்தில் உள்ளூர் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். குடாநாட்டில் மூலை முடக்கெங்கும் மதுபான விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதற்கு உரிய அனுமதிப்பத்திரங்கள் தாராளமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த மதுபான நிலையங்கள் ஊடாக தென்பகுதி மதுபான உற்பத்திகள் தாராளமாக விற்கப்படுகின்றன.

இந்த நிலையில் எமது உள்ளூர் உற்பத்தி பனைதென்னை வள பானங்களை விற்கமுடியாது சிரமப்படுவதோடு அதற்கான கிளை நிலையங்களும் படிப்படியாகப் பூட்டப்பட்டுள்ளன – என்றார்.

இந்த சர்வதேச கூட்டுறவாளர்கள் விழாவில், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், பனை அபிவிருத்தி சபையின் தலைவர் எஸ்.கோகுலதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதோடு சிறப்பு அங்கத்தவர்கள், பணியாளர்கள் போன்றோரும் கௌரவிக்கப்பட்டனர். (வ–17)



யாழ்.பண்ணை சுற்று வட்டத்தில் முன்னர் காப்பற் வீதி அமைக்கப்படும் போது உரிய திட்டமிடல் இருக்காததனால் மழை நேரங்களில் அந்தச் சுற்று வட்டத்தில் வீதியை மூடி மழைநீர் தேங்கி நிற்பது வழமையாக இருந்தது. அதனால் அந்தப் பகுதி ஊடான போக்குவரத்தும் மழை நேரங்களில் தடைப்பட்டு வந்தது. இந்நிலையில் அந்த இடம் புனரமைப்பு மூலமாக உயர்த்தப்படும் பணி தற்போது இடம்பெற்று வருகிறது. (4)

# அரச காணியிலிருந்தோரை வெளியேற்றியது நீதிமன்று

## மடு பிரதேச செயலரின் வழக்கில்

யாழ்ப்பாணம், ஒக். 11

மடுபிரதேசசெயலர்பிரிவுக்குட்பட்ட மழுவராஜன் கட்டை அடம்பனில் 10 ஏக்கர் கொண்ட அரச காணியை அடாத்தாகக் கைப்பற்றி அங்கு குடியிருந்த 2 குடும்பங்களையும் மன்னார் நீதிமன்று வெளியாத்து நடவடிக்கை மூலமாக வெளியேற்றியுள்ளது.

மன்னார் மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

குறித்தகாணியில் 2 குடும்பங்களும் 2008 ஆம் ஆண்டிலிருந்து குடியிருக்கின்றன. அதனுள் குடியிருக்க வேண்டாம் என்று பிரதேச செயலர் அறிவுறுத்தியும் அந்த அறிவுறுத்தலை அந்தக் குடும்பத்தினர் பின்பற்றியிருக்கவில்லை. அதனால் அவர்களுக்கு எதிராக மன்னார் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

இது தொடர்பில், விசாரணையின் பின்னர் அரசினால் வழங்கப்பட்ட எழுத்துமூல அதிகாரத்தின்படி அந்தக் குடும்பங்கள் குறித்த காணியை ஆட்சி செய்வதாக உறுதிப்படுத்தத் தவறிவிட்டனர். அதனால் அந்தக் காணியிலிருந்து வெளியேறுமாறு கடந்த தவணை நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

ஆனால் அந்தக் குடும்பத்தினர் நீதிமன்றக் கட்டளையைப் பின்பற்றாது தொடர்ந்தும் அதே காணியில் தங்கி இருந்துள்ளனர்.

இது தொடர்பில், மடுபிரதேசசெயலர், மன்னார் மாவட்ட நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றார். இதனையடுத்து நீதிபதி அலெக்ஸ்ராஜா கடந்த முதலாம் திகதி வெளியாத்து உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார்.

அதனையடுத்து மன்னார் நீதிமன்றப் பதிவாளர், அலுவலர்கள் மூலமாக வெளியாத்து நடவடிக்கை நிறைவேற்றப்பட்டுகாணி மடுபிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ–4)

# அடிமடி இழுவை வலைகளை பயன்படுத்தத் தடைச் சட்டம்

## வேண்டுமென சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.11

அடிமடி இழுவை வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதை தடை செய்யும் வகையில், சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடந்த சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனது உரையில்:–

வடக்கு, கிழக்கு கடற்பிரதேசங்களுக்குள் இடம்பெற்று வருகின்ற அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளால் எமது கடற்பரப்புக்களில் கடல் வளங்கள் அழிவடைகின்றன. எமது மீனவர்களும் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறிநுழைவதுடன் தடைசெய்யப்பட்டுள்ள அடிமடி இழுவை வலைகளைபயன்படுத்திமீன்பிடிநடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான மீன்பிடிமுறையினால், வலைகள் கடல் படுக்கை வரை சென்று வளங்களை அள்ளிச் செல்வதால் அவை முற்றாக அழிகின்றன. இந்த முறையில் பிடிக்கப்படுகின்ற மீன்களில் 80 வீதமான மீன்கள் விரயமாகின்றன. மிகுதி 20 வீதமானவையே பயன்படுத்தப்படுகின்றன.

இந்திய மீனவர்கள் இந்த அடிமடி வலை இழுவை முறையை இந்திய கடற்பரப்புக்குள் பயன்படுத்தியதால், அங்குள்ள கடல்வளம் அழிந்துவிட்டது. அதனால் தான் அவர்கள் தற்போது இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி இந்த முறையைப் பயன்படுத்துகின்றனர். இதனால் எமது கடற்பரப்பிலுள்ள வளங்கள் அழிந்து போகின்றன.

இந்திய மீனவர்கள் ஒருபுறம் இவ்வாறு மீன்வளத்தை அழித்து வருகின்ற அதேவேளை, தென்னிலங்கை மீனவர்களும் ஏனையோரும் வடக்கு, கிழக்கு கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைகின்றனர்.

தென்னிலங்கை மீனவர்கள் பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலுடனேயே வடக்கில் நுழைவதுடன் எமது மீன்வளங்களையும் கொண்டு செல்கின்றனர். இதனால் எமது பகுதி மீனவ தொழிலாளர்கள் பெரியளவில் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மீன்பிடி முறை தொடர்பான சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தனிநபர் பிரேரணை ஒன்றையும் நான் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்தேன். எனவே எமது பிரதேச கடல் வளத்தை இல்லாதொழிக்கும் அடிமடி வலை இழுவை முறைமை இல்லாது செய்யப்படுவதற்கான சட்டத்திருத்தமும் கொண்டுவரப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (வ)

# மேலதிக சம்பளக் கொடுப்பனவு அடிப்படையுடன் சேர்க்கப்படும்

## கூட்டுறவு ஆணைக்குழுவின் பதில் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.11

வடமாகாணக் கூட்டுறவு பணியாளர்களுக்கான முப்பது வீத மேலதிக சம்பள அதிகரிப்பை, அடிப்படைச் சம்பளத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் பதில் செயலாளரும், யாழ். மாநகர ஆணையாளருமான பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மேலதிகமாக முப்பது வீத சம்பள அதிகரிப்பு மற்றும் பத்துவீத சம்பள அதிகரிப்பு போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த சம்பள உயர்ச்சிக்கான கொடுப்பனவுகள் யாவும் அடிப்படைச்சம்பளத்துடன் இணைத்து வழங்கப்படவில்லை.

தற்போது இந்த இரு மேலதிக படிகளையும், பணியாளர்களின் அடிப்படைச்சம்பளத்துடன் இணைப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இந்த இரு கொடுப்பனவுகளும் அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும் என்ற புதிய சுற்றறிக்கை ஒன்றை ஆணைக்குழு விரைவில் வெளியிடவுள்ளது.

இதேவேளை, அனேகமான சங்கங்கள் இந்தக் கொடுப்பனவுகளை மாதாந்தச் சம்பளத்துடன் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கி வந்தாலும், சில சங்கங்கள், சங்க வியாபார நடவடிக்கையைக் காரணம்காட்டி பணியாளர்களுக்கு வழங்க பின்னடித்து காலத்தை இழுத்து வரு கின்றன.

இதன்காரணத்தினால் பணியாளர்களின் வாழ்வாதாரம், அவர்களின் எதிர்கால வசதி கருதி இந்த இரு கொடுப்பனவுகளையும் மாதாந்த அடிப்படைச் சம்பளத்துடன் இணைத்து வழங்குவதற்கான புதிய அங்கீகாரத்தை ஆணைக்குழு விரைவில் வெளியிடவுள்ளது.

ஆணைக்குழுவில் இந்தப் புதிய சுற்றறிக்கைக்கு அமைவாகக் கூட்டுறவுப் பணியாளர்களின் அடிப்படைச்சம்பளக்கொடுப்பனவுமேலும், அதிகரிக்கும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. இந்த அடிப்படை சம்பள அதிகரிப்பைச் சங்கங்கள் சட்டத்தின் பிரகாரம் பின்பற்றவேண் டும் எனவடமாகாண கூட்டுறவுஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் பொ.வாகீசன் மேலும் குறிப்பிட்டார். (வ–17)

# ஆசிரியர் தின நிகழ்வு இன்று

பண்டத்தரிப்பு ப்ளூமிங் பட்ஸ் டே கெயர் சென்ரர்– பாலர் பாடசாலையின் 2015 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் தின நிகழ்வு இன்று மு.ப. 9 மணிக்கு பாடசாலை வளாகத்தில் மாணவர்கள், பெற்றோர் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பாடசாலையின் பணிப்பாளர், ஆசிரியர்கள் குழந்தை இயேசு ஆலயத்தில் இருந்து பான்ட் [illegible] ளதாக பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (வ–ரி6)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# எந்த அரசு ஆட்சி செய்யினும் தமிழர் தலைவிதி மாறாதே...

வடக்கு, கிழக்கு, மலையகத் தமிழ் மக்களை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன் -- என்று நாட்டின் அதியுயர் தலைவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மனம் நெகிழ்ந்து பேசி உள்ளார்.

ஆனால், அவரது பேச்சின் ஊடாக, செயலளவில் என்ன நடக்கப்போகிறது என்ற நிலைப்பாடு குறித்த தகவல் அல்லது அனுமானம் எது என்பதைப் புரிந்துகொள்ள இயலவில்லை.

ஜனாதிபதியை நாங்கள் மறக்காமல் இருப்பதற்கு முன்னர், அவர் ஆற்றவேண்டிய பணி, எங்களை எமது சொந்த மண்ணில், நாம் வாழ்ந்த இடத்தில் குடியமர்த்துவதே ஆகும். அதுவே எமது நிலைப்பாடும் தேவையுமாகும்.

உண்மையில், எமது மக்களுக்குரிய மீள்குடியமர்வைப் பின்தள்ளுவதற்கு எந்தக் காரணத்தையும் இனிக் கூறமுடியாது என்பதே யதார்த்த உண்மை.

மேற்போந்த கருத்துக்களை நறுக்காக எடுத்து இயம்பி உள்ளார், போரினால் இடம்பெயர்ந்து மயிலிட்டி இடம்பெயர்ந்தோர் முகாமில் வாழும் மக்களின் தலைவர்.

நாம் ஜனாதிபதியை மறக்காமல் இருக்க வேண்டும் என்றால், எமது மக்களை, அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும். அதுவே எங்களுக்கு நீங்கள் ஆற்றும் பிரதி உபகாரமாக இருக்கும் - என்று மனம்மிக நொந்து தெரிவித்திருக்கிறார் இடம்பெயர்ந்தோர் முகாமின் தலைவர்.

மறுபுறத்தில் --

எமது மக்களின் காணிகளை அடாத்தாகக் கையகப்படுத்தி வைத்துக்கொண்டு, ஒரு சிறு துண்டுக்காணியைக் கூடத் தாம் அபகரிக்கவில்லை என்று பொய் கூறும் இராணுவத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழவேண்டுமா, இல்லையா -- என்ற வினா எழுப்பி உள்ளார் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளர் ஜேசுதாசன்.

இத்தனைக்கும், தமக்குச் சொந்தமான காணிகளின் உறுதிகளைக்காட்டி பாதிப்புற்ற மக்களால் இதுவரை இரண்டாயிரம் வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறாயின் எமது மக்களிடம் இருப்பதெல்லாம் அரச காணிகள் என்று கூறுவது எவ்வகையில் பொருத்தம் என்றும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

பிரித்தானியாவின் பிரதமர் டேவிட் கமரூன் வடக்கே வந்தவேளை, எமது கொட்டில்களைப் பார்த்த பின்னர், மக்கள் விரைவில் மீளக்குடியேற்றப்படுவர் என்று தெரிவித்துச் சென்றார். இரண்டு ஆண்டுகள் கழியும் நிலையிலும் இலங்கையின் பழைய மகிந்த அரசும் சரி, புதிய மைத்திரி அரசும் சரி, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சொந்தக் காணிகள், உறுதிக் காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளித்து மீளக் குடியமர்த்த நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. போதாதமைக்கு (புதிய) அரசினால் தொடர்ந்து காணிகள் கையகப்படுத்தப்பட்டுக் கொண்டே உள்ளன.

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி--

மக்களுக்குச் சொந்தமான காணிகள், அவர்களுக் குரியதே என்று தெரிவித்ததோடு, இராணுவத்தின் வசம் இருக்கும் காணிகள், மீளப்பெறப்பட்டு வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்துச் சென்றார்.

வடக்கு மாகாண ஒருங்கிணைப்பு மாநாட்டிலேயே (03.03.2015 இல் நடைபெற்றது.) அந்த வாக்குறுதி வழங்கப்பட்டது. மாதங்கள் ஏழு கடந்தேறி விட்டபோதிலும், செயலளவில்-- காரியத்தில்-- ஒரு துளியேனும் முன்னேற்றத்தைக் காண இயலவில்லை!

ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே கண்ணா? என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடலை இசைத்து, காலத்தைப் போக்கும் விதி தானா வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு? எவர் தலைமையிலான கொழும்பு அரசுகள் பதவியில் இருந்தாலும் அவர்கள் இரண்டாம் தரப் பிரசைகளே என்ற சிங்கள அரசுகளின் வாய்ப்பாடு, அழித்து எழுதப்படமாட்டாது என்பது மிக வெளிச்சமாகவும், தொனிப்பாகவும் புலப்படுகிறது தமிழர்கள் இனி என்னதான் செய்யப்போகிறோம்??

# குறைந்த வருமானங்களைப் பெறும் குடும்பங்களுக்கு உதவிடும் திட்டம்

## ஆரம்பிக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக்.11

நாட்டில் வறுமையை ஒழித்துக்கட்டும் வகையில் குறைந்த வருமானங்களைப் பெறும் குடும்பங்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டத்தை அரசு ஆரம்பிக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த நாட்டில் அப்பாவி மக்களின் நலன்களைச் சுரண்டுவதற்கு, அரசியல்வாதிகளுக்கு ஒருபோதும் தாம் இடமளிக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுகததாச உள்ளக அரங்கில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அரச சேவை முகாமைத்துவ உதவியாளர்கள் 2,700 பேருக்கு நியமனங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நலனோம்புகை முறைமைகளில் குறைபாடுகள் உள்ளன. அந்தக் குறைபாடுகளை நான் அமைச்சர்களுடன் கலந்துரையாடிச் சரி செய்யவுள்ளேன். தங்களிடம் சேவைகளை நாடிவரும் மக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்குவது அரச அதிகாரிகளின் பொறுப்பாகும்.

இலங்கையில் அரச சேவையை ஊழல், மோசடி, வீண்விரயம் இல்லாத ஒரு சேவையாகக் கட்டியெழுப்புவதற்குப் புதிய அரசு அர்ப்பணிப்போடு உள்ளது.

மக்களுக்காக அவர்களது நலனோம்புகை நடவடிக்கைகளுக்கு அரசு ஒதுக்கும் ஒவ்வொரு சதத்தையும் முதலீடு செய்யும் வகையில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

2014–2015ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு மூன்று வாரப் பயிற்சியின் பின்னர் அரச சேவை முகாமைத்துவ உதவியாளர்களுக்கான நியமனங்கள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

அரச முகாமைத்துவ சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மேலும் 1,061 பேர் அதிகாரிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அந்த வ்கையில். பல்வேறு அமைச்சுகள் திணைக்களங்களில் நிலவும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 80 வீத வெற்றிடங்கள் இதன்மூலம் நிரப்பப்படவுள்ளன.

அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே, அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(வ–சி)

# இரண்டு ஆணைக்குழு அறிக்கைகளும் அடுத்த வாரம் சபையில் சமர்ப்பிப்பு

## பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.11

உடலகம ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு ஆகியவற்றின் விசாரணை அறிக்கைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் மேற்படி அறிக்கைகள் தொடர்பிலும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றியும் விவாதம் நடத்தப்படும் என்றும் அவர் நேற்றுமுன்தினம் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பிரேரணைத் தாக்கல் ஆகியவை முடிவடைந்த பின்னர் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றிப் பிரதமர் கருத்து வெளியிட்டார். இதன்போதே மேற்படி தகவலையும் அவர் வெளியிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:–

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் விவாதம் நடத்துவதற்கு திகதி ஒதுக்குமாறு கடந்த வியாழக்கிழமை கோரிக்கை விடுக்கப்பட்டது.

உடலகம ஆணைக்குழுவின் அறிக்கை, பரணகம ஆணைக் குழுவின் அறிக்கை ஆகியவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். இவற்றுடன் சேர்த்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பிலும் விவாதிக்க முடியும்.

மேற்படி அறிக்கைகளை அடுத்த நாடாளுமன்ற அமர்வில் சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்கும். செவ்வாயன்று சமர்ப்பித்தால், வியாழனும், வெள்ளியும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியும். இரு அறிக்கைகளும் ஜனாதிபதி செயலகத்தில் இருக்கின்றன. அவை ஆங்கிலமொழியிலேயே உள்ளன. சிங்கள, தமிழ் மொழிகளில் இன்னமும் மொழிபெயர்க்கப்படவில்லை. அடுத்த நாடாளுமன்ற அமர்வில் ஆங்கிலமொழியிலான அறிக்கைகளையே சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்கும் எனப் பிரதமர் குறிப்பிட்டார்.

(வ–சி)

# படையினர் சட்டத்துக்கு மேலானவர்கள் அல்லர்

## ருக்கி பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.11

படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்டத்துக்கு மேலானவர்கள் அல்லர் என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

போரின்போது போர் விதிமுறைகளை மீறிய படையினர் அனைவரும் குற்றவாளிகள்தான் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கையில் சில சமூகத்தினர் படையினருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். படையினர் எந்தக் குற்றச்செயலையும் மேற்கொள்ள முடியும். அதற்கு இடமளிக்க வேண்டுமென அவர்கள் கருதுகின்றனர்.

குறிப்பாக, இராணுவத்தினருக்குத் தண்டனை வழங்கப்படும்போது தெற்குச் சமூகம் கோபிக்கின்றது.

குற்றம் இழைக்கும் படையினரை வீரர்களாகக் கருதமுடியாது. அவர்கள் குற்றவாளிகளாகவே கருதப் பட வேண்டும். எனவே, மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. போரை மேற்கொள்வது என்பது அரசின் உரிமை. எனினும், போரில் ஈடுபடுவதற்கு சில விதிமுறைகள் காணப்படுகின்றன. அவற்றை மீறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ கூறியுள்ளார். (வ–சி)

# ஊடகவியலாளர்களுக்கு ஆபத்தான நாடு இலங்கை

## உலகில் ஆறாவது இடத்திலுள்ளது

ஊடகவியலாளர்களுக்கு ஆபத்தான நாடுகளின் வரிசையில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது. ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்துவோரைத் தண்டிக்காத நாடுகளின் வரிசையில் இலங்கை ஆறாம் இடத்தை வகிக்கின்றது என்று அறிக்கை வெளியாகியுள்ளது.

கடந்த காலங்களில் இந்தப் பட்டியலில் இலங்கை நான்காம் இடத்தை வகித்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

லசந்த, எக்னெலிகொட ஆகியோர் குறித்த சம்பவங்கள் தொடர்பாக புதிய அரசு செய்து வரும் விசாரணைகள் குறித்தும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சோமாலியா, ஈராக், சிரியா, பிலிப்பைன்ஸ் மற்றும் தென் சூடான் ஆகிய நாடுகள் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தலான நாடுகளின் வரிசையில் முதல் ஐந்து நிலைகளையும் வகிக்கின்றன. (வ–சி)

# காணிப் பிணக்குகளைத் தீர்க்கும் விசேட நடமாடும் சேவை

## நேற்று வவுனியாவில் இடம்பெற்றது

வவுனியா, ஒக்.11

வவுனியா தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரிவுகளில் பல காலமாக தீர்க்கப்படாமலிருந்த காணிப் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் முகமாக நேற்றுக்காலை வவுனியா மாவட்ட செயலகத்தில் மேலதிக அரச அதிபர் தலைமையில் விசேட நடமாடும் சேவை இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையில், காணி ஆணையாளர் நாயகம் ராஜபக்ச, பிரதிக் காணி ஆணையாளர் ஏக்கநாயக்க, வட மாகாணக் காணி ஆணையாளர் தயானந்தன், உதவிக் காணி ஆணையாளர் மகேஸ்வரன், வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா, மேலதிக பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்ததுடன் ஆலோசனைகளையும் வழங்கினர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த பண்ணையாளர் தெரிவுக்கு விண்ணப்பம்

### வடமாகாண அமைச்சு கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.11

வடமாகாணத்தில் பாற்பசு, ஆடு, கோழி ஆகிய கால்நடைகளை வளர்க்கும் பண்ணையாளர்களில், மாவட்டரீதியாகச் சிறந்த பண்ணையாளர்களைத் தெரிவுசெய்து, அவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பதற்கு வடமாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் பண்ணையாளர்கள், திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களை அருகில் உள்ள கால்நடை வைத்திய அலுவலகங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம் என வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தமது பிரதேச கால்நடை வைத்திய அலுவலகங்களில் ஒப்படைக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ–ரி6)

## கரையோரங்களில் சவுக்கு மரங்கள் நடுவதற்கு ஏற்பாடு

சாவகச்சேரி, ஒக்.11

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் சவுக்கு மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடற்கரையோரங்கள் உட்பட சதுப்பு நிலங்களாக உள்ள பகுதிகளிலேயே இவ்வாறு சவுக்கு மரங்களை நட்டு வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் பூநகரி, சங்குப்பிட்டி, கேரதீவு ஆகிய பகுதிகளில் இந்தத் திட்டம் முதற்கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது. இதனால் இயற்கை இடர்களைத் தடுக்க முடியும் என்பதுடன் விறகுத் தேவையையும் பூர்த்தி செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சுமார் 260 லட்சம் சவுக்கு மரங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அரச அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ–131)

## மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர் கைது

வலி வடக்கு ஒக்.11

மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபரொருவர், சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை போக்குவரத்துப் பொலிசார் வழமை போன்று வாகனங்களைப் பரிசோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே குறித்த நபரை மறித்துச் சோதனை செய்த வேளை அவர் மது போதையில் வாகனத்தைச் செலுத்தி வந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபரைக் கைது செய்ததுடன் மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர். அத்துடன் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த பொலிஸார், பொலிஸ் பிணையில் வீடு செல்ல அனுமதித்தனர். (வ–86)


**முகாமையாளரும், பணியாளர்களும் தேவை**

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முகாமையாளரும் பணியாளர்களும் தேவை. 25- 45 வயதிற்குட்பட்ட, தகுதி உடையவர்கள் சுயவிவரக்கோவையில் உறவினர் அல்லாத இருவரின் சிபார்சுகளுடன், தங்களது விண்ணப்பங்களை, 18.10.2015 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Chairman, RC Enterprises Pvt. Ltd
67, Temple Road,
Jaffna.

**முன்பள்ளி மாணவர்களுக்கான அனுமதி - 2016**

உங்கள் பிள்ளைகளுக்கு இரண்டரை வயது நிறைவடைந்து விட்டதா?

எந்தவொரு பாடசாலை நாள்களிலும்
Play Group இல் இணைந்து கொள்ளலாம்
British and National Curriculum
Local Syllabus
ADMISSIONS FOR MONTESSORI
GRADE : 01 - 03

Hotline: 071 566 9641

(65450) (14,15,16)

Blooming Buds International School

PV 94034

| Thavadi Road, Suthumalai, Manipay P.N 021 225 6641 | 390/2/1 Base Line Road, Dematagoda, P.N 011 267 7641 | No- 5 Rathamalyaya, Puttalam, P.N 032 226 6641 |
|---|---|---|

**UNIVERSITY OF JAFFNA**
**INVITATION FOR BIDS**

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified biddersfor Supplying and fixing of 12mm thick High pressure Laminated compact Board (Besco or Technically Equivalent) to Toilet Partition walls and Doors in Toilet Area in Construction of Lecture Hall Complex Block - C for Faculty of Management Studies & Commerce, University of Jaffna (YA/CWP/RE/ 2015- 15) .The estimated cost is Rs. 1.5 million and the contract period is 21 days.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have valid Business Registration and minimum 5 years experience in the relevant specialized field.
4. Bids shall be accompanied by a Bid Security for Rs.15,000.00 valid up to **20.02.2016,** in the form included in the Bidding document
5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna**and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** until **22nd October, 2015** from **9.00 hrs to 15.00 hrs** upon payment of a non refundable fee of **rupees one thousand (Rs.1,000/-) for bid.**
7. Bids shall be sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Registrar's office to reach on or before 14.00 hrs on 23rd October 2015.** Bids will be opened immediately after closing of bids **on 23rd October 2015** in the Board room of the University, in the presence of the bidders' representatives, who choose to attend.
8. Bids shall be valid for a period for **90 days** from the date fixed for closing of Bids or any extend period.
9. Pre Bid meeting will be held at Board room, University of Jaffna at 10.00 hrs on the **16th October, 2015** for the above work.

**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna, Thirunelvely, Jaffna.**
**09.10.2015**

(c/18740,11,15,16)

American Swimming Coaches Association (ASCA) தரம்- 1 சான்றிதழ் பெற்ற Life Saving Association Of Srilanka (LSASL) அங்கத்தவரான பயிற்றுவிப்பாளரினால் நீச்சல் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

| | |
|---|---|
| இடம் | : கிறீன் கிறாஸ் ஹோட்டல் |
| தொடக்க காலம் | : 22.10.2015 (விஜய தசமி அன்று) |
| பயிற்சிக்காலம் | : 6 மாதங்கள் |
| மாதாந்த கட்டணம் | : வயது வந்தவர்களுக்கு ரூ.3500, சிறுவர்களுக்கு ரூ.2750 |

(c 18716) (14,15,16)

முற்பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்.
077 780 3874

**வேலைவாய்ப்பு**

கிளிநொச்சியில் இயங்கி வருகின்ற உணவகத்திற்கு பணியாளர்கள் தேவை.

- சமையற்காரர் (Cook), (இந்தியன் உணவு, சைனிஸ் உணவு சிறிலங்கன் உணவு)
- சமையல் உதவியாளர்(Kitchen helper)
- விநியோகம் செய்பவர்.(Delivery Boy with Licence)
- உணவு பரிமாறுபவர் (Waiter) ஆண் ,பெண்

இல- 59, புகையிரத நிலைய ,வீதி, கிளிநொச்சி.

தொடர்பு:- 077 367 9669
077 465 2366

**பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்**

**English Medium (Gr 1 - 11) All Subjects**

10 மாதங்கள் தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

**மேலதிகமாக**

சிங்களக்கல்வி மற்றும் கணினி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா, சிங்கள டிப்ளோமா ( பேசும் ஆங்கிலம் அடங்கியது ) ஆங்கில இலக்கிய டிப்ளோமா, சுயதிறன் விருத்திடிப்ளோமா, கணினி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்.

ஐந்து வருடங்களாக சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுநர் ஆசிரியர்களைப் பயிற்றுவித்த எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத் துக்கொள்ள முன் வந்துள்ளோம்.

**தகைமைகள்**

- க.பொ.த சாதாரண தரம் 6பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த உய தரம் கற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவ களிற்கு 60நாள் களிற்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.
- பயிற்சி கிழமையில் 5நாள்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களிற்குக் கொடுக்கப்படும்.
- பயிற்சி முடிவடைந்த பின்ன எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அம த்தப்படுவீ கள்.
- போயாதினம் உட்பட அரசவிடுமுறை தவிர ஏனைய நாள்கள் காலை 8.30 - 5.00 மணி வரை வேலை நாள்களாகும்.

கற்கைநெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிக்கடன் ஏற்பாடு செய்து தரப்படும்.
(நிபந்தனைக்கு உட்பட்டது)

பயிற்சியின் பின்னர் மாதாந்தக்கட்டணம் 34,000/= ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் [9X4] அளவுள்ள தபாலுறையில் 45 ரூபாய் முத்திரை ஒட்டி தராதரப்பத்திரத்துடன் இணைத்து பதிவுத்தபாலில் அனுப்பவும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் மேல் மூலையில் 01 – 11 வகுப்பு வரை என்று எழுதி அனுப்பவும்.

கிளைகள்: தெமட்டகொட, புத்தளம், ஹட்டன், யாழ்ப்பாணம் [சுதுமலை], கல்முனை

*பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி*

**Officer**
**Blooming Buds International Teacher Training Institute**
*Thavadi Road,*
*Suthumalai, Manipay*

PV 94034

தொடர்புகளுக்கு:077 152 9731/ 011 267 7641
021 225 6641
Hotline: 071 566 9641


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி





மலர்வு 08.01.1944 உதிர்வு 21.08.2015

**திருமதி கமலாதேவி கனகராசா**
(மழைய வீதி, கோப்பாய் தெற்கு)
இளைப்பாறிய எழுதுநர், யாழ் மாவட்ட செயலகம்- யாழ்ப்பாணம்

மலர்வு 21.12.1938 உதிர்வு 11.09.2015

**காசிப்பிள்ளை கனகராசா**
(தைதடி, தெற்கு)
காப்புறுதி ஆலோசகர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்- கொழும்பு

பாசத்தின் நிறைகுடமாய் பரிவுடன் எம்மை வளர்த்து கல்வியூட்டி
வாழ்வின் பாதைக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வங்களே!
மாதம் ஒன்று போனாலும் ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
ஆறாது எமது சோகம் மாறாது உங்கள் நினைவு.....

39/3, ஓவன் சயிற்,
தெகிவளை.
011 304 2629

(65229) (14,15)

பிள்ளைகள்,
சகோதரர்கள்.

# பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 05 . 11 . 1946

கண் நெகிழ 26 . 09 . 2000



மண் மகிழ 23 . 05 . 1975

**அமரர் கணபதிப்பிள்ளை யோகலிங்கம்**

**செல்வி தமிழரசி யோகலிங்கம்**

திதி:சதுர்த்தசி (11.10.2015)

கடந்த கால போர்ச் சூழலில் அநியாயச் ஷெல் அரக்கனின்
கோரத் தாண்டவத்தால் உள்ளத்தை உறைய வைத்தெம்
உறவுகள் இரண்டு எம்மை விட்டுப் பறந்தோடி ஆண்டுகள் பதினைந்து சென்றதோ...?
பதினைந்தல்ல பதினையாயிரம் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் எம் மனதைஎன்றும் விட்டகலாது!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(60623) (13,15,16)

சந்தை வீதி,
கொடிகாமம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்
குடும்பத்தினர்.

# வீட்டுக்கிருத்திய நிகழ்வும் அந்தியேட்டி அழைப்பும்



புவித்துவம்
16.04.1928



அமரத்துவம்
09.09.2015

## அமரர் மங்கையற்கரசி ஞானசேகரம்

கடந்த 09.09.2015 அமரத்துவம் அடைந்த
எமது குடும்ப விளக்கு மங்கையற்கரசி ஞானசேகரம்
அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 13.10.2015
செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில்
நடைபெறும். அன்றையதினம் நடைபெறும் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன
நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு.
(நந்தாவில் அம்மன் கோயிலுக்கு
பின்புறமாக உள்ள வீடு)

குடும்பத்தினர்,
பேரப்பிள்ளைகள்.

(65304) (13,15)

# கண்ணீர் அஞ்சலி

எமது வலயக்கல்வி அலுவலக -ஆசிரிய ஆலோசகர்
செல்வி. ம. மங்களவதனி அவர்களின் தந்தை

**R. மகாதேவா**

அவர்கள் 10.10.2015 இல் காலமாகியதையிட்டு அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

நலன்புரிகழகம் வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின்
அனுமதியுடன்

**புறூனை (Brunei)**

| உத்தியோக வகை | எண்ணிக்கை | சம்பளம் Brunei Dollars (ஒரு டொலர் 100/-) |
|---|---|---|
| பொது தொழிலாளர்கள்(ஆண்) | 100 | 500 + OT |

**மேலதிக தகவல்கள்**

- ★ மூன்று வருட ஒப்பந்தம்
- ★ 08 மணிநேர வேலை மற்றும் வாரத்தில் 6 நாள்கள்
- ★ உணவு, தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து, ஒருவழிப் பயணச் சீட்டு இலவசம்
- ★ நாளொன்றுக்கு 2 தொடக்கம் 3 மணித்தியாலம் வரை மேலதிக வேலை நேரம்.
- ★ மேலதிக சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகள் புறூனை சட்டத்திற்கு அமைவானது.

கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் சுயவிவரக்கோவை, கடவுச் சீட்டு பிரதியை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும்.

**SAINAS TRAVELS & TOURS**

No.19, Playground Road, obesekarapura,
Rajagiriya
Mobile: 077 731 1880, 077 528 0557
Email: stmazoorsl@yahoo.com,
Sainastravels@gmail.com

(19243) (14,15,16)

# பதினைந்தாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**கலைமணி இராசதுரை**

அன்னை மடியில்
22.10.1954

அரக்கர் அழிப்பில்
26.09.2000

அம்மா அம்மா எங்கள் தெய்வமே!
அனைவரையும் எமை அனாதைகளாகத் தவிக்கவிட்டு சென்றீர்களே!
ஆண்டுகள் பதினைந்து சென்றாலும் ஆறிடுமோ எங்கள் துயரம்
ஒருமுறையேனும் எமைப் பார்க்க ஓடோடி வரமாட்டீர்களா? அம்மா......
என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்போம்
சாந்தி சாந்தி! சாந்தி!!

குடமியன்,
வரணி.

என்றும் உங்கள் நினைவில் தவிக்கும்
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **தயாபரன் சிவதர்ஷன்**
(உரிமையாளர் - சிவதயா அச்சகம்)

தோற்றம் 27.09.1990
மறைவு 23.09.2014

திதி : சதுர்த்தசி

காலம் காலமாகும் காலம் தோறும் நீ உயிர்ப்பாய்
ஞாலம் உள்ளவரை நீ எம்முள் ஒளிர்ந்திருப்பாய்
சீலன் நீ சிவதர்ஷா சிவனடியில் சிறப்புறுவாய்
காலன் உன்னை கவரவில்லைகாவியமாய்
உலாவவிட்டான் வாழும் உன்
இன் உருவம் வரலாறாய் எம் உயிருள்......

குடும்பத்தினர்
தயா வெளியீடு, வெற்றி இலக்கு.
077 396 5214
தயா அச்சகம் (சாந்தி)
575,கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

## தமிழ்ப் பொலிஸாருக்கான நேர்முகத் தேர்வில் அதிகளவானோர் பங்கேற்பு

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்ப் பொலிஸாருக்கான ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் என பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

இலங்கைபொலிஸ்சேவைக்கு தமிழ்ப் பொலிஸாரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த பொலிஸ் ஆட்சேர்ப்புப் பிரிவினர் பொலிஸ் சேவைக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான முதலாவது நேர்முகத் தேர்வை நடத்தினார்கள்.

இதன்போது கல்விச் சான்றிதழ்களைப்பார்வையிட்டதுடன் அவர்களுடைய உயரம், நெஞ்சுச்சுற்றளவு என்பன அளவிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் நேற்றைய நேர்முகத் தேர்வுக்கு சமுகமளித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வ–86)

## ஆசிரியர் தின விழாவும் பூங்கா திறப்பு விழாவும்

மட்டுவில் வளர்மதி முன்பள்ளியின் ஆசிரியர் தின விழாவும் சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. வளர்மதிசனசமூக நிலையத் தலைவர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக முத்துமாரி மரத்தொழிலக உரிமையாளர் செ.பஞ்சலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைமுன்னாள் உறுப்பினர் வே.கந்தையா, கிராம அலுவலர் க.வாமதேவன், கிராம அலுவலர்க.முல்லைமாறன்ஆகியோரும் கலந்து கொள்வர். நிகழ்வில் ஆசிரியர் கௌரவிப்பும் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (வ–9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதியோர் அமைப்பு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஒக்.11

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சர்வதேச முதியோர் தின நிகழ்வும், மாவட்ட மட்ட முதியோர் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

2015 ஆம் ஆண்டுக்கான சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, முதியோரது உரிமை களைப் பாதுகாத்தல்– மேம்படுத்தல் தொடர்பாக மாவட்ட மட்ட முதியோர் அமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

அந்த அமைப்பின் ஆரம்ப நிகழ்வும் நிர்வாகக் குழுத் தெரிவும் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் சகல கிராம மட்ட முதியோர் அமைப்புக்களின் உறுப்பினர் களையும் நலன் விரும்பிகளையும் கலந்துகொள்ளுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் கேட்டுள்ளார்.

(வ–10)

## ஆசிரியர் தினம்

யாழ்ப்பாணம், ஒக்.11

ஈச்சமோட்டை சாம்றொக் தனியார் கல்வி நிறுவனத்தின் ஆசிரியர்தினவிழா இன்றுஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்குநடைபெறவுள்ளது. மூத்த தமிழ் ஆசிரியர் வைகுந்தநாதன் கலந்துகொள்ளும் இந்த நிகழ்வுக்கு, கல்வி நிலைய ஆசிரியர்கள் அனைவரையும் வருகைதருமாறு நிறுவனத்தின் நிர்வாகி கேட்டுள்ளார். (வ–10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி

செல்வி பாலகணேஸ் மதுமிதா

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமதுமகளை மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்கவேண்டும் என்று வாழ்த்துவதோடு அவரை வழிப்படுத்திய அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் விசேட வகுப்பு ஆசிரியர்கள், ஊக்குவிப்பாளர்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.



Best Wishes

வாழ்த்துவோர்:

அம்மா, அப்பா, சகோதரர்கள்

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

(65308) (13.15.17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி/ கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் ஆசிரியர்

இராசதுரை சாந்தகுமார் அவர்கள்

"பிரதீபா பிரபா"

விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



உள்ளத்தில் ஒளி படைத்து
உய்விக்குமுயர் கல்வியளித்து
எண்ணத்தில் செழுமை கொண்டு
ஏற்றத்தை இதயத்தில் சுமந்து
நல்லாசானாய் உயர்ந்து நிற்கும்
நம் பள்ளியின் நற்புகழே
உயர் பணிக்கு தலைசாய்த்தோம்

Congratulations

பழைய மாணவர் சங்கம்

கிளி/கிளிநொச்சி மத்தியமகாவித்தியாலயம்

(தேசிய பாடசாலை)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவன்

செல்வன் R.லவினாஷ்

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

ரமேஸ் ரதீஸ்வரி தம்பதியரின் புதல்வன் R.லவினாஷ் அவர்களை கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமென வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல வல்லிபுர ஆழ்வார் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்

Best Wishes

வாழ்த்துவோர்: [illegible]

சுன்னாகம் வீதி, புத்தூர் வடக்கு, புத்தூர்.

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை கேள்வி அறிவித்தல் -2016

## நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன் கடை,கோழி இறைச்சிக்கடை/சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை நடத்துதல்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை கோழி இறைச்சிக்கடை, சாளம்பைக்குளம், மாட்டிறைச்சிக்கடை மீன்கடை போன்றவற்றை 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை நடத்துவதற்கான கேள்விகள் 2015.11.03 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2015.11.02 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா என்ற முகவரிக்கும், ஒரு பிரதி "பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா" என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

2015.11.03 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை,கோழி இறைச்சிக்கடை,மீன்கடைகளுக்கு மாதாந்தம் ரூபா 2000/= வாடகையாகவும், சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடைகளுக்கு மாதாந்தம் ரூபா 1,500/= வாடகையாகவும் செலுத்தப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை இவ் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகை, மாதாந்த வாடகை என்பவற்றுடன் 11/% VAT, 2%NBT என்பவற்றை செலுத்துதல் வேண்டும். கேள்வி தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் வழங்கப்படும்.

| கடை விவரம் | ஒருவருடத்திற்குரிய குறைந்த கேள்வித் தொகை 11/% VAT, 2% NBT நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப்படிவக் கட்டணம் 11/% VAT, 2% NBT நீங்கலாக |
|---|---|---|---|
| நெளுக்குளம் மாட்டிறைச் சிக்கடை | 474,100.00 | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் மீன்கடை | 512,842.00 | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் கோழிறைச்சிக் கடை | 332,145.00 | 25,000.00 | 1,000.00 |
| சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 365,310.00 | 25,000.00 | 1,000.00 |
| சாளம்பைக்குளம் மீன்கடை | 165,000.00 | 25,000.00 | 1,000.00 |

சுகந்த கிஷோர்
செயலாளர்.

நேரியகுளம் வீதி, நெளுக்குளம்.

# தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சன சமூக நிலையம்

## 50 ஆவது ஆண்டு விழா 1965-2015

காலம் : 11.10.2015 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி
இடம் : யா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்
தலைவர் : லயன் தி.உதயசூரியன் MJF.J.P (நிலையத்தலைவர்)

**பிரதம விருந்தினர்**

நா.வேதநாயகன்
(அரசாங்க அதிபர்/மாவட்ட செயலர், யாழ்ப்பாணம்.)

**சிறப்பு விருந்தினர்கள்**

அ.சோதிநாதன்
(பிரதேசசெயலர், வலிமேற்கு சங்கானை)

திருமதி சா.உருத்திரசம்பவன்
(செயலாளர், வலிமேற்கு பிரதேச சபை, சுழிபுரம்)

திருமதி ஹேமா சிவசோதி
(சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், வலிமேற்கு பிரதேச சபை)

இ.கணேசானந்தன்
(அதிபர் யா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்)

ச.வைத்தியநாதன்
(கிராம அலுவலர், தொல்புரம் கிழக்கு)

திருமதி நளாயினி நந்தகுமாரன் J.P
(தலைவி, தொல்புரம் கிழக்கு மாதர் அபிவிருத்திச் சங்கம்)

**நிகழ்ச்சி நிரல்**

- ஆலய வழிபாடும் விருந்தினர்களை மங்களவாத்தியத்துடன் அழைத்துவரலும்
- தேசியக்கொடியேற்றல்
- நிலையக்கொடியேற்றல்
- மங்களவிளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம் :- யா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலய மாணவிகள்
- வரவேற்புரை :- சி.ஜனகன் (நிலையப் பொருளாளர்)
- ஆசியுரை :- சிவஸ்ரீ சு.ஸ்ரீரங்கநாதக்குருக்கள் (தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானம்)
- தலைமையுரை
- சிறப்புவிருந்தினர் உரைகள்
- பிரதமவிருந்தினர் உரை

**பொன்விழா மலர் வெளியீடு**

- வெளியீட்டுரை :- பா.தனபாலன் (தேசிய கல்வியியற்கல்லூரி, கோப்பாய்)
- முதற்பிரதி பெறல் :- திருமதி. நாகரஞ்சினி ஐங்கரன் (முன்னாள் தவிசாளர் வலிமேற்கு பிரதேச சபை)
- சிறப்புப்பிரதிகள் பெறல்

**பரிசில் வழங்கல்**

- முன்பள்ளி மாணவர், ஏனையோருக்கான விளையாட்டு போட்டி பரிசுகள் வழங்கல்
- மரதன் ஓட்டப்போட்டிக்கான பரிசில்கள் வழங்கல்
- ஆங்கிலமொழிப்போட்டி, பொதுஅறிவுப்போட்டிக்கான பரிசில்கள் வழங்கல்
- கலைநிகழ்ச்சிகள்
- நன்றியுரை :- ப. மதனகோபாலன் (நிலையச்செயலாளர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

நிர்வாகம்.

(65337)(10.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் ஆக்கப் பொருள்கள் கண்காட்சி


கிளிநொச்சி, ஒக் 11

கிளிநொச்சி மாவட்ட செயலக பிரிவிலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையங்களினால் உருவாக்கப்பட்ட ஆக்கப் பொருள்கள் காட்சிப் படுத்தல், நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை மு.ப. 9.00 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக் களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் மாவட்ட மட்ட ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலில், ஆடை வடிவமைத்தல், அழகுக் கலை மற்றும் மனைப் பொருளியல் பயிலுநர்களால் உருவாக்கப்பட்ட ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தப் படவுள்ளன.

மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டு காட்சி அறைகளைத் திறந்து வைக்கவுள்ளனர். நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.பெலிசியன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் ச.மோகனபவனும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 238

# நீரிழிவு நோயாளிகளின் பாதங்களைப் பாதுகாப்போம்



நீரிழிவு(Diabetes mellitus) இன்று எமது சமுதாயத்தில் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. வளர்ந்தவர்களில் 10பேருக்கு ஒருவர் என்ற ரீதியில் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வருங்காலத்தில் இந்த நிலைமை மேலும் மோசமடையலாம்.

நீரிழிவானது முறையாகச் சிகிச்சை பெறப்படாவிட்டால் உடலிலுள்ள எல்லா உறுப்புக்களையும் பாதிக்கக் கூடியது. கண்கள், மூளை, இருதயம், ஈரல், சிறுநீரகங்கள், பாதங்கள் என இந்தப் பட்டியல் நீண்டு செல்கின்றது.

நீரிழிவால் பாதங்களில் ஏற்படும் பாதிப்புக்கள் யாவும் பாரதூரமானவை. இதனால் சத்திரசிகிச்சை மூலம் கால்களை அகற்றவேண்டியும் ஏற்படலாம் (Amputation). விபத்துக்களால் அல்லாத Amputations இற்கான பிரதான காரணம் நீரிழிவாகும்.

**நீரிழிவானது எவ்வாறு பாதங்களைப் பாதிக்கின்றது?**

இது மூன்று வகையான தாக்கங்களால் ஏற்படுகின்றது.

1. காலிலுள்ள நரம்புகள் பாதிப்படைவதால் காலில் உணர்ச்சி குறைவாக இருக்கும். இதனால் சிறுகாயங்கள் ஏற்பட்டால் நோயாளிக்கு அது தெரியாது. அது மட்டுமல்லாது, நரம்புத் தாக்கத்தால் காலிலுள்ள தசைகள் பலவீனமடைவதால், காலின் வடிவமைப்பு மாறுபடுகின்றது. இதனால் காலின் குதி, பெருவிரலின் அடிப்பகுதி போன்ற இடங்களில் அதிக அழுத்தம் ஏற்பட்டு புண்கள் ஏற்படுகின்றன. இதைவிட காலிலுள்ள ஈரலிப்பு மற்றும் எண்ணெய்த் தன்மை குறைவடைவதால் தோல் வறண்டு வெடிப்புக்கள் ஏற்பட்டுக் கிருமித் தொற்று ஏற்படுகின்றது.
2. நீரிழிவு நோயாளிகளின் கால்களிலுள்ள இரத்தக் குழாய்களில் கொலஸ்



ரோலால் அடைப்பு ஏற்படுகின்றது. இதனால் காலுக்குச் செல்லும் இரத்தோட்டம் குறைவடைவதால் இலகுவில் புண்கள் ஏற்படுகின்றன. அத்துடன் காயங்கள் சீக்கிரத்தில் ஆறுவதில்லை.
3. நீரிழிவு நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடைகிறது. அத்துடன் அதிக குளுக்கோஸ் நோய்க்கிருமிகள் பெருக ஏதுவாகின்றது. இதனால் காலில் கிருமித்தொற்று ஏற்படும் வாய்ப்பு அதிகமாகும்.

**நீரிழிவு நோயாளிகள் காலில் உள்ள பாதிப்புக்களை இனம்காண்பது எவ்வாறு?**

நீரிழிவு நோயாளிகள் குறிப்பாக காலில் நரம்புத்தாக்கம் உள்ளவர்கள், தினமும் தமது கால்களில் காயங்கள், ஆணிக்கூர் என்பவை உள்ளதா எனப் பரிசோதிக்க வேண்டும். கண்பார்வைக் குறைபாடுடையவர்கள் வீட்டிலுள்ள உறவினர்களைக் கொண்டு தமது கால்களைப் பரிசோதிக்க வேண்டும்.

கால்களில் ஆணிக்கூர் (Calosity), காயங்கள், புண்கள்,வெடிப்புக்கள், Fangus (பூஞ்சணம்) போன்ற பாதிப்புக்கள் தோன்றினால் காலந்தாழ்த்தாது வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது சிறந்தது. வருடத்துக்கு ஒருமுறையாவது வைத்தியரைக் கொண்டு கால்களைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

**நீரிழிவு நோயாளிகள் கால்களைப் பராமரிப்பது எவ்வாறு?**

முன்குறிப்பிட்டதுபோல், தினமும் இரவில் படுக்கைக்குச் செல்லும் முன்னர் பாதங்களைப் பரிசோதியுங்கள். அடிப்பாதத்தைக் கண்ணாடியின் உதவியுடன் அவதானிக்கலாம்.

கால்களில் ஏற்படும் வறட்சித் தன்மை வெடிப்புக்கள் ஏற்பட்டு கிருமித்தொற்று ஏற்பட ஏதுவாகின்றது.

இதனைத் தடுப்பதற்கு கால்களின் மேற்புறத்தில் நல்லெண்ணெய் போன்ற எண்ணெய், ஈரலிப்பைத் தரும் Aquoas cream, Emoderm என்பவற்றைத் தடவலாம். ஆனால் எண்ணெயையோ கிறீமையோ கால்விரல்களுக்கிடையில் தடவக்கூடாது. இதனால் Fungus தாக்கம் ஏற்படக்கூடும்.

உங்கள் கால்களை தினமும் இளஞ்சூட்டு நீரில் அல்லது சாதாரண நீரில் கழுவிய பின்னர் நன்றாக ஒத்தித் துடைக்க வேண்டும். விசேடமாகக் கால்விரல்களுக்கிடையே ஈரலிப்பு இருந்தால் பங்கஸ் வளர ஏதுவாகும். கால்களை அதிகநேரம் நீரில் ஊற விடாதீர்கள். கால்விரல்களுக்கு இடையே Talcom பவுடரைப் போடலாம்.

கால்களில் இரத்தோட்டத்தைச் சீராக்குவதற்கு இருக்கும்போது கால்களை ஸ்ரூல் (Stool) ஒன்றில் உயர்த்தி வையுங்கள். கால் விரல்களையும் பாதங்களையும் மேலும் கீழுமாக 5 நிமிடங்களுக்கு அசையுங்கள். இவ்வாறு ஒரு நாளைக்கு 23 தரம் செய்யுங்கள் . கால்களை ஒன்றுக்கு மேல் ஒன்றைப்போட்டு உட்காராதீர்கள்.

**நகங்களைப் பராமரிப்பது எவ்வாறு?**

நகங்களைக் காலத்துக்குக் காலம் வெட்டிச்சுத்தம் செய்ய வேண்டும். நகங்களை வெட்டும்போது குறுக்காக நேராக வெட்டவும். மூலைகளில் அதிகமாக வெட்டக்கூடாது.

மூலைகளில் அதிகம் வெட்டினால் நகம் தோலுக்குக் கீழ் வளர்ந்து நோவை ஏற்படுத்தும். குளித்தபின் நகங்கள் மென்மையாக உள்ளபோது நகம் வெட்டுவது இலகுவாகும்.

**ஆணிக்கூர்களை (Callosity and corns) என்ன செய்வது?**

நீரிழிவு நோயாளிகளுக்கு ஆணிக்கூர் ஏற்படுவது மற்றவர்களைவிட அதிகமாகும். இதனால் மாறாத புண் ஏற்படலாம். ஆணிக்கூர் ஏற்பட்டால் வைத்தியரின் உதவியுடன் அகற்றலாம். கடையில் விற்கும் கிறீம்களையோ கோண் பிளாஸ்ரர் Corn plaster களையோ பயன்படுத்த வேண்டாம். அவை தோலில் புண்களை ஏற்படுத்தலாம். ஆணிக்கூர் ஏற்படுவதைத் தடுக்க விசேட பாதணிகளையோ, பாதணிகளில் காலுக்குக் கீழ் வைக்கக்கூடிய தட்டுக்களையோ பயன்படுத்தலாம். இவற்றை யாழ்ப்பாணத்தில் சுண்டுக்குளியில் உள்ள ஜெய்ப்பூர் புனர்நிர்மாண நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பாதணிகளைத் தேர்ந்தெடுப்பது எவ்வாறு?**

நீரிழிவு நோயாளிகளது பாதங்களில் உணர்ச்சி குறைவாக இருப்பதால், அவர்கள் பாதணிகளை உபயோகிப் பது அவசியம். வீட்டுக்கு வெளியே என்றால் அத்தி யாவசியமாகவும் உள்ளே என்றால் கூடுமான வரைக்கும் பாதணிகளை அணியுங்கள். பாதணிகளை வாங்கும்போது முழுவதும் மூடிய, சௌகரியமான பாதணிகளை வாங் குங்கள். அதாவது San dles, Slippers ஐவிட Shoås (சப்பாத்துக்கள்) தான் சிறந்தவை. மேலும் நுனி அகலமாக தட்டையான பாதணிகள் கூரான, (ஹீல்ஸ்) குதி உயர்ந்த பாதணிகளைவிடச் சிறந்தவை. தோலால் அல் லது கித்தான் துணியால் (canvus) ஆன பாதணிகளைத் தேர்ந்தெடுங்கள். பாதணிகளை வாங்கும்போது மாலை நேரத்திலேயே வாங்கப்பட வேண்டும். மாலை வேளைகளில் காலையை விட பாதங்கள் வீக்கமடை வதால் அந்தநேரம் வாங்கும் பாதணி களே அளவாக அமையும். மேலும் பாதணிகளை வாங்கும்போது விரல் நுனியை விட 1/2 அங்குலம் முன்னால் இடைவெளி உள்ளதா எனப்பார்த்து வாங்குங்கள். பாதணிகளை அணியும் போது அதனுள் கல், ஆணி போன்ற பொருள்கள் உள்ளனவா எனப்பார்த்து அணியுங்கள். பாதணிகளை அணியும்போது காலுறைகளையும் கட்டாயமாக அணிய வேண்டும். காலுறைகளும் இறுக்கமாக இருக்கக் கூடாது. பருத்தித்துணி ஆட்டுரோமம் (Cotton, wool) போன்ற இயற்கையான இழைகளினாலானவை நைலோனால் ஆனவற்றைவிட நல்லவை. அவற்றைத் தினமும் தோய்த்து அணியுங்கள்.

**முடிவாக**

நீரிழிவு நோயாளிகள் தமது பாதங்களை முகம்போல பராமரிக்க வேண்டும். காலத்துக்குக் காலம் வைத்தியரிடம் சென்று கால்களைப் பூரணமாகப் பரி சோதித்துக் கொள்வது நல்லது. புகை பிடித்தல் கால்களுக்கு இரத்தோட்டத் தைக் குறைப்பதால் அதனை முற்றாகத் தவிர்ப்பது நல்லது. நீரிழிவால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்பல. முறையாகவும் ஒழுங்காகவும் வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெறுவதன் மூலமும், உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதன் மூலமும் உங்களைப் பாதிப்புக்களிலிருந்து உங்களைப் பாதுகாத் துக் கொள்ளலாம்.

Dr.S.கேதீஸ்வரன் (MBBS,MD)
*பொது வைத்திய நிபுணர்,*
*விடுதி இலக்கம் 9& 3,*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழாக் காணுகின்றது

# யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர்
– யாழ்.பல்கலைக்கழகம்

**கார்மேல் சபைக் கன்னியர்களால் நிர்வகிக்கப்படும் வட பகுதியின் தலைசிறந்த ஆரம்பப் பாடசாலையான யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் ஒக்ரோபர் மாதம் 07 ஆம் திகதி தனது வைரவிழாவைக் கொண்டாடியதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

யாழ்.நகரின் மத்திய பகுதியில் – கோவில் வீதியில் இருந்து புறப்படும் றக்கா வீதியில் – கல்வியைக் கண் என மதிக்கும் வடபகுதித் தமிழ் மக்களின் தலை சிறந்த ஆரம்ப பாடசாலையான புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் 60 ஆண்டுகளை நிறைவு செய்து தொடர்ந்தும் வீறுநடை போடத் தலை நிமிர்ந்து நிற்கிறது. பாரம்பரியமாக நரிக்குண்டு என மக்களால் அழைக்கப்படும் பகுதியில் அழகிய குளக்கரை அருகில் மருத மரத்தைத் தழுவி வரும் குளிர்ந்த இளம் தென்றல் தாலாட்ட – இளையவர்களின் பாதுகாவலரான புனித ஜோண் பொஸ்கோ அமர்ந்து சிறார்களுக்கு அறிவருள் பாலித்து வருகிறார். அன்பும் சேவையும் என்ற மகுட வாக்கியத்துடன் புனித ஜோண் பொஸ்கோவின் 200 ஆவது பிறந்த தினத்தில் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் தனது 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது மகிழ்ச்சியான விடயமாகும்.

இளையவர்களின்பாதுகாவலரானபுனிதஜோண்பொஸ்கோவின் பெயரில் பாங்சால் வீதியில் யாழ் ஆயரால் வளர்ந்த மாணவர்களுக்கென நிர்வகிக்கப்பட்டு வந்த ஒரு பாடசாலை இட நெருக்கடியால் றக்கா வீதியில் உள்ள ஒரு கொட்டகைக்கு இடம் மாற்றம் பெற்றது என்பதே யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் ஆரம்ப வரலாறாகும்.

வளர்ந்த மாணவர்களுக்கென இந்தப் பாடசாலை இயங்கிவந்த போதும் 1955 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையிலேயே முதலாம் ஆண்டு கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டது. இட நெருக்கடி காரண மாக புதிய பாடசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டு 1955 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி புனித ஜோண் பொஸ்கோவின் திருநாள் தினத்தன்று அவரின் பெயரையே பாடசாலைக்குச் சூட்டி ஜேம்ஸ் அடிகளார் கல்விப் பணிகளை ஆரம்பித்து வைத்தார் என அறிய வருகிறது.

இந்தப்பாடசாலையானது.யாழ்புனிதமரியன்னைபேராலயபங்குத் தந்தையாகிய ஜோண் மேரி குசறோண் அ.ம.தி அடிகளாரால் யாழ் ஆயரின் மேற்பார்வையில் வழி நடத்தப்பட்டு வந்தது. 1957 ஆம் ஆண்டு யூலை 22 ஆம் திகதி அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் அச்சுவேலி லங்கா மாதா மடத்தின் தலைவியாகிய அருட்சகோதரி ஒடிலியா அ.கா அவர்களின் ஆலோசனையுடன் இந்தப் பாடசாலை ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி. ஆண்டகையால் அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியரிடம் ஒப்படைக்கப்பட்டது.

1957 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி அ.கா (22-07-1957 - 31-12-1964) இப்பாடசாலையின் முதல் அதிபராகப் பொறுப்பேற்றபோது கத்தோலிக்க முகாமையின் கீழ் இது ஒரு கத்தோலிக்கப் பாடசாலையாக பதியப்பட்டு யா – தல்லாலை புனித ஜோண் பொஸ்கோ றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை என அழைக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி முதல் இந்தப் பாடசாலை யா – புனித ஜோண் பொஸ்கோ றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை எனவும், பின்னர் 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி முதல் யா – புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் எனவும் அழைக்கப்பட்டு வருகிறது.

1962 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் அரச நிர்வாக மயமாக்கப்பட்டு கத்தோலிக்க முகாமைத்துவத்தின் கீழ்இருந்துகல்விஅமைச்சின்நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டது. புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் அரச நிர்வாக மயமாகும் போது இதன் அதிபராக அப்போஸ்தலிக்க கார் மேல் சபையின் அருட்சகோதரிகளே அமர்த்தப்படுவர் என்றநிபந்தனையும், மாணவர் அனுமதியில் 60வீத றோமன் கத்தோலிக்க மாணவர்களும் 40 வீத சைவ சமய மாணவர்களும் அனுமதிக்கப்படுவர் என்ற நிபந்தனையும் முன்வைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தப் பாடசாலையின் இரண்டாவது அதிபராக அருட்சகோதரி அன்ரனீனா அ.கா (01-01-1965 – 31-01-1968) பணியாற்றியதைத் தொடர்ந்து இரண்டாவது தடவையாக அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி அ.கா (01-02-1968- 13-05-1970) அதிபராக பணியாற்றினார். பின்னர் திரும்பவும் அருட்சகோதரி அன்ரனீனா அ.கா (14-05-1970 -24-07-1983) அதிபாரகப் பணியாற்றினார். 06-03-1976 இல் அதிபராகப் பணியாற்றிய அருட்சகோதரி அன்ரனீனா அ.கா அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் சிறிசேவியர் மாட்டீன் அவர்களின் உதவியுடன் பாவிப்பில் இருந்த கட்டடத்தை முற்றாக அழித்து ஒரு மாடி கொண்ட கட்டடத்துடன் அலுவலகம் – மேடை – மலசலகூடம் என்பவற்றையும் அமைத்து அதே ஆண்டு திறந்து வைத்தார். அவ்வாண்டிலேயே பாடசாலையின் மூன்று பக்கங்களும் மதில் கட்டப்பட்டதோடு பெற்றோர் ஆசிரியர் சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டது.

மீண்டும் இட நெருக்கடி ஏற்பட்டபோது யாழ் றக்கா வீதியில் அமைந்துள்ள புனி. திரேசம்மாள் ஆலயத்திற்கு மேற்குப்பக்கமாக உள்ள 11 பரப்புக்காணியை ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையிடம் பணம் கொடுத்து வாங்கி 1979இல் கட்டடம் அமைக்கப்பட்டது. 1981ஆம் ஆண்டு புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் 940 மாணவர்களையும் 24 ஆசிரியர்களையும் கொண்ட பாடசாலையாகத் திகழ்ந்தது. 1981ஆம் ஆண்டிலே 163 மாணவர்கள் 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 44 மாணவர்கள் சித்தி அடைந்தனர்.

1982 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி அதிபர் அருட்சகோதரி அன்ரனீனா அ.கா அவர்களின் முயற்சியினால் திறந்தவெளி அரங்கு ஒன்று அமைக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் திகதி அதிபர் பணியில் இருந்து அருட் சகோதரி அன்ரனீனா அ.கா இளைப்பாறிய போது அவரின் அயராத முயற்சியால் அமைக்கப்பட்ட அரங்குக்கு அன்ரனீனா அரங்கு எனப் பெயரிடப் பட்டதோடு அவரது உருவப்படமும் திறந்துவைக்கப்பட்டது.



அருட்சகோதரி எலொய்சா அ.கா (25-07-1983- 31-12-1984) அவர்களின் குறுகிய பதவிக் காலத்தின் பின்னர் அருட் சகோதரி ஸ்ரனிஸ்லஸ்மேரி அ.கா (01-01-1985 -23-02-1988) மீண்டும் மூன்றாவது தடவையாக அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவரது பணிக்காலத்தில் 1988 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 7 ஆம் திகதி ஒன்றிணைந்த பாடத்திட்டத்திற்கமைவான சிறந்த கண்காட்சி நடந்தப்பட்டு புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் பெரும் புகழ் ஈட்டித் தன்னை இனம் காட்டிக் கொண்டது. புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் தினம் தைமாதம் 31ஆம் திகதி கொண்டாடத் தொடங்கப்பட்டது. பாண்ட் வாத்தியக் குழுவை புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைத்த பெருமை அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி அ.கா அவர்களையே சாரும்.

அருட்சகோதரி ஜெறோம் அ.கா (24-02-1988 - 11-11-1996) அவர்கள் அதிபர் தரம் 3 உடன் அதிபர் பதவி ஏற்றவர் என்ற பெருமையுடன் 1988இல் பணி ஏற்றார். இவரது பணிக்காலத்திலேயே அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரிட்சையில் சித்தி அடைந்தனர் என்பது இங்கு பெருமையுடன் குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும். 1989ஆம் ஆண்டு 232 மாணவர்கள் தோற்றி 70 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். 1992ஆம் ஆண்டு 180 மாணவர்கள் தோற்றி 70 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். 1992ஆம் ஆண்டில் இலங்கைக் கல்வி வரலாற்றில் முதன் முதலாக தேசிய ரீதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 199 புள்ளிகளைப் பெற்று இலங்கையில் முதல் மாணவனாகிய செல்வன் கே.பிருந்தாபன், யப்பான் செல்லும் வாய்ப்பைப் பெற்ற போதும் தந்தையின் அதிக வருமானம் காரணமாக அதனை இழந்தார். 1995ஆம் ஆண்டு 195 மாணவர்கள் தோற்றி 101 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். 1996ஆம் ஆண்டு 124 மாணவர்கள் தோற்றி 80 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். இவரது காலத்தில் மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதாயினும், நாட்டு நிலமை காரணமாகக் கீழ்த்தள வேலைகளுடன் அது நிறுத்தப்பட்டது.

அருட்சகோதரி செல்வராணி அ.கா (12-11-1996- 15-09-2005) 1996ஆம் ஆண்டு அதிபர் பொறுப்பை ஏற்றார். இவரது பணிக்காலத்தில் 1997 ஆம் ஆண்டு 135 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 66 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். 1998ஆம் ஆண்டு 164 மாணவர்கள் தோற்றி 60 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். 1999ஆம் ஆண்டு 136 மாணவர்கள் தோற்றி 65 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். 2000ஆம் ஆண்டு 145 மாணவர்கள் தோற்றி 59 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். 2000ஆம் ஆண்டில் செல்வி ஜி.பவித்திரா 181 புள்ளிகளைப் பெற்று யப்பான் செல்லும் வாய்ப்பைப் பெற்றார். 2001ஆம் ஆண்டு 132 மாணவர்கள் தோற்றி 74 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். 2002ஆம் ஆண்டு 168 மாணவர்கள் தோற்றி 79 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

2003ஆம் ஆண்டு 186 மாணவர்கள் தோற்றி 82 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். 2003ஆம் ஆண்டு விதுசன் மற்றும் வசந்தன் ஆகிய இரு மாணவர்களும் முறையே 172 – 171 புள்ளிகளைப் பெற்று முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றனர். 2004ஆம் ஆண்டு 184 மாணவர்கள் தோற்றி 77 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். 2004 ஆம் ஆண்டில் செல்வி அனற்ரூபி சாரூபநாதன் 175 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் 2ஆம் இடத்தையும், செல்வன் சிவபாலன் சிவநீபன் 4ஆம் இடத்தையும் பெற்றனர். 2005ஆம் ஆண்டில் செல்வன் பேதிணேஸ் 175 புள்ளிகளைப் பெற்று தேசிய ரீதியில் 1ஆம் இடத்தைப் பெற்று யப்பான் செல்லும் வாய்ப்பைப் பெற்றார்.

அருட்சகோதரி மரிய ஜீவந்தி அ.கா 16-09-2005இல் அதிபர் பொறுப்பை ஏற்று இன்று வரை சிறப்பாகத் தமது பணியை ஆற்றி வருகிறார். இவரது காலத்தில் 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதியன்று முதலாவது விளையாட்டுப் போட்டியும் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதியன்று முதலாவது பரிசளிப்பு தினமும் நடத்தப்பட்டது. 23.07.2010 புனித ஜோண் பொஸ்கோவின் அலுவலகத்தின் பழைய தோற்றத்தை மாற்றி அமைக்க முடிவு செய்யப்பட்டு புதிய கட்டடத்துக்கு அதே ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி யன்று அடிக்கல் நடப்பட்டு 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் திகதியன்று மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டில் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி அ.கா அவர்களுக்கு பிரதீபா பிரபா விருது வழங்கப்பட்டமை வித்தியாலயத்தின் புகழை மேலும் ஓங்கச் செய்தது.

2014ஆம் ஆண்டில் 230 பேர் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி 167 பேர் சித்தி பெற்றனர். 2015 இல் 227 பேர் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 133 பேர் சித்தி பெற்றனர். 2015ஆம் ஆண்டில் செல்வன் சோதிநாதன் வசீகரன் 192 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் 1ஆம் இடத்தையும், செல்வன் கனகராஜ் சுவிலக்சன் 188 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்தையும், சிறீஸ்கந்தராஜா கஜலக்சன் 186 புள்ளிகளைப் பெற்று 9ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

வடபகுதியின் தலைசிறந்த ஆரம்பப் பாடசாலையான யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் சாதனைகளைத் தொடர்ந்த தொடர் சரித்திரம் படைத்துக் கொண்டே இருக்க புனித ஜோண் பொஸ்கோ அருள்பாலிப்பாராக.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மார்பகப் புற்றுநோய் சோதனைக்கு 20 வீதம் கழிவு வழங்கும் செலிங்கோ ஹெல்த்கெயார்

மார்பகப் புற்றுநோய் இன்று சமூகத்தில் தனிநபர்கள் மத்தியிலும் சமூக மட்டத்திலும் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும் ஒரு நோயாக மாறியுள்ளது. மார்பகப் புற்றுநோய் புற்றி வழிப்புணர்வை ஏற்படுத்தும் மாதமாக உலகளாவிய ரீதியில் ஒக்ரோபர் மாதம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



அந்த வகையில் இலங்கையிலும் இந்த மார்பகப் புற்றுநோய்த் தாக்கத்தை குறைக்கும் வகையில் அதை நேரகாலத்தோடு கண்டறியும் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் திட்டத்தில் உலகம் முழுவதும் உள்ள பல நிறுவனங்களோடு இணைந்து செலிங்கோ ஹெல்த்கெயார் நிறுவனமும் செயற்படவுள்ளது.

இலங்கையில் ஆயுள் காப்புறுதித் துறையில் தலைமை தாங்கும் நிறுவனமான செலிங்கோ லைப் நிறுவனத்துக்கு முற்றிலும் சொந்தமான கிளை நிறுவனமான செலிங்கோ ஹெல்த்கெயார் ஒக்ரோபர் மாதம் முழுவதும் முன்கூட்டிய தடுப்பு நடவடிக்கையாக மார்பகப் புற்றுநோய் ஸ்கான் சோதனைகளை மேற்கொள்ளும் தனிநபர்களுக்கு 15 வீதமும், ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட குழுவினருக்கு 20 வீதமும் கழிவுகள் வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான முதலாவது கட்டணத் திட்டம் மருத்துவ ஆலோசனை, மெமோகிராம், மார்பக ஸ்கேன் என்பனவற்றை உள்ளடக்கியதாகவும் 6 ஆயிரத்து 375 ரூபா கட்டணத்தைக் கொண்டதாகவும் அமையும். சாதாரணமாக இவற்றுக்கான கட்டணம் 7 ஆயிரத்து 500 ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை கொண்ட பெண்கள் ஒரு குழுவாக இணைந்து இந்தக் கட்டணத் திட்டத்தை பெற்றுக் கொள்கின்றபோது ஒருவருக்கான கட்டணம் 6 ஆயிரம் ரூபாவாக இருக்கும் என்று கம்பனி அறிவித்துள்ளது.

இரண்டாவது கட்டணத் திட்டம் 40 வயதுக்கு கீழ்பட்ட பெண்களுக்கானது. இது 3 ஆயிரத்து 250 ரூபாவில் இருந்து 2 ஆயிரத்து 750 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது மருத்துவ ஆலாசனை மற்றும் மார்பக ஸ்கேனிங் என்பனவற்றை உள்ளடக்கியது. ஒக்ரோபர் மாதத்தில் இந்தப் பிரிவுக்கான குழுவுக்குரிய கட்டணம் ஒரு நபருக்கு 2600 ரூபாவாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து உரிய சிகிச்சைகளை அளிப்பதன் மூலம் அதனை வெற்றிகொள்ள முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ள போதிலும், பெரும்பாலான பெண்கள் தமது வழமையான சுகாதாரப் பராமரிப்பு திட்டத்தின் கீழ் அவ்வப்போது புற்றுநோய் சோதனைகளை மேற்கொள்ளத் தவறிவிடுகின்றனர்' என்று கூறினார் இந்த நிலையத்தின் சிரேஷ்ட மருத்துவ அதிகாரி டாக்டர் சாருக்கி வீரசூரிய.

'ஒவ்வொரு வருடமும் உலகளாவிய ரீதியில் ஒக்ரோபர் மாதத்தில் பெண்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு செயற்பாடுகளை நாமும் இங்கு ஊக்குவித்து வருகின்றோம். இதற்கான கட்டணம் கிட்டத்தட்ட ஒரு தரமான சிற்றுண்டிச்சாலையில் ஒருவேளை உணவுக்கு சமமான தொகை. ஒரு வேளை உணவுக்கான தொகையில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு வாய்ப்பு கிடைக்கும்போது அதை தவற விடக் கூடாது' என்று அவர் மேலும் கூறினார்.

செலிங்கோ ஹெல்த்கெயார் நிறுவனம் புற்றுநோயை முன்கூட்டியே கண்டு பிடிப்பதற்கான சகல விதமான நவீன வசதிகளையும் கொண்டுள்ளது. இங்கு வருகை தருபவர்கள் ஆஸ்பத்திரி அற்ற ஒரு சூழலில் தேவையான சோதனைகள் மற்றும் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். புற்றுநோயாளர்களை ஆதரிக்கும் ஒரு குழுவின் மூலம் நோயாளிகளுக்குத் தேவையான தார்மீக ஆதரவும் இங்கு வழங்கப்படுகின்றது. நோயாளிகள் ஒருவருக்கு ஒருவர் என்ற ரீதியில் நன்கு பயிற்றப்பட்ட ஒரு பராமரிப்புக் குழுவால் கவனிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையத்தின் மார்பகப் புற்றுநோய் பராமரிப்பு பிரிவு வைத்தியர்கள், கதிர்வீச்சு நிபுணர்கள், நோயியல் நிபுணர்கள், மார்பக சத்திரசிகிச்சை நிபுணர்கள், புற்றுநோய் நிபுணர்கள், தாதியர், கதிர் சிகிச்சை நிபுணர்கள், வாடிக்கையாளர் சேவை அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கியதாகும். இலக்கம் 2, பார்க் வீதி கொழும்பு-02 என்ற முகவரியில் அமைந்துள்ள இந்த நிலையம் நோய் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட ஆபத்து மதிப்பீடு, சிகிச்சைச் சோதனைகள், மெமோகிராபி, அல்ட்ராசவுண்ட் விசாரணைகள் மற்றும் பல்வகை சிகிச்சை தெரிவு ஆகிய சேவைகளையும் வழங்குகின்றது. (த)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடிகாமம் லயன்ஸ் கழக அனுசரணையுடன் இடைக்குறிச்சி சர்வோதய முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டி அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் இடம் பெற்றது. போட்டியில் கலந்து கொண்ட விருந்தினர்கள் சிறார்களால் அழைத்து வரப்படுவதையும் விளையாட்டு நிகழ்வுகளையும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு லயன்ஸ் கழக செயற்றிட்ட தலைவர் லயன் கா. இராசதுரை பரிசில்களை வழங்குவதையும் காணலாம். (ஐ-9)



கிளிநொச்சி மாவட்டத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் எதிர்கால வாழக்கைத் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாக, மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்களுக்கான செயலமர்வு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் உளநல மருத்துவர் சி.ஜெயசீலன், தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் இ.செந்தூரன் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர் ச.முத்துக்குமரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (ஐ-9)



மட்டக்களப்பு சிவானந்தா தேசிய கல்லூரியில் இடம் பெற்ற தேசிய மட்ட தமிழ்தின நாடகப் போட்டியில் கல்லூரியின் காப்பு என்னும் நாடகம் முதலிடத்தைப் பெற்றதன் மூலம் தொடர்ந்து மூன்று வருடங்கள் தேசியமட்ட தமிழ் தினப் போட்டியில் முத லிடத்தைப் பெற்று யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி சாதனை படைத்துள்ளது. பு.கணேசராஜாவின் நெறியாள்கையில் அதிபர் மு.செல்வஸ்தானின் வழிப்படுத்தலில் மாணவர்களின் அயராத முயற்சியினால் இந்தச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. (ஐ)



வவுனியா பொலிசாரின் ஏற்பாட்டில் சிறுவர் தின நிகழ்வுகள் சமனங்குளம் சாரதா வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. வவுனியா, சமனங்குளம் சாரதா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதன் போது வவுனியா பொலிசாரினால் சிறுவர்களுக்கான பரிசுப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-402)



மாகாணத் தொழிற்பயிற்சி நிலையத்தால் பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாங்குளத்தில் நடத்தப்பட்டது. அதில் பிரதம விருந்தினராக வடமாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் விருந்தினர்கள் கலந்து கொண்டனர். அதில் மாணவி ஒருவருக்கு பட்டச் சான்றிதழ் வழங்கப்படுவதனைக் காணலாம். (ஐ-4)



வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த மகோற்சவ சப்பைரதம், தேர், தீர்த்தத்தின் போது சுவாமி பக்தர்களுக்கு அருட் காட்சியளித்தார். (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வங்காலை கிராமத்தில் புனித ஆனாள் மகா வித்தியாலயத்தில் உள்ள இளையோரால் சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வுகள் கொண்டாடப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் கலந்துகொண்ட சிறார்கள் மற்றும் முதியோருக்கு அங்கர் பால்மா பக்கற்றுக்களை அன்பளிப்பாக வழங்கிவைத்தார். (ஐ)



புதுக்குடியிருப்பிலுள்ள இனிய வாழ்வு இல்லத்தில் தங்கியுள்ள 50 சிறார்கள் ஒவ்வொருவருக்கும் குடை, மழைக்கவசம், சாப்பாட்டுப் பெட்டி என்பன வழங்கப்பட்டன. 41 ஆயிரம் ரூபா பெறுமதியான குறித்த பொருள்களை வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் அண்மையில் வழங்கியுள்ளது. (ஐ-4)



கிளிநொச்சி முட்கொம்பன் அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வு. (ஐ-422)



மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வும் இளைஞர் சங்க கலையரங்கத்தில் இ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத்துணைத் தூதரகத்தின் தூதுவர் ஆ.நடராஜன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம், கௌரவ விருந்தினர்களாக கனடா மாதகல் நலன்புரி சங்க செயலாளர் சபா அருள்சுப்பிரமணியம், பிரான்ஸ் நலன்புரி சங்க உறுப்பினர் வீ. ரவீந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் மாதகல் மான்மியம் எனும் நூல் வெளியிடப்பட்டது. (ஐ-86)





றுவர், முதியோர், ஆசிரியர் தின நிகழ்வு நமச்சிவாய மூதாளர் பேணகத்தில் புனித லூக்கா முன்பள்ளியினரால் பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில் பூசை வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. அருட்தந்தை எஸ்.கே.டானியல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் பரந்தன் மக்கள் வங்கி முகாமையாளர், மூதாளர் பேணக மைய முகாமையாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-422)





வவுனியா கூமாங்குளம் கிராம சேவகர் அலுவலகத்தில் டெங்கு ஒழிக்கும் நடவடிக்கைக்காக கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் துப்புரவுப் பணி இடம்பெற்றது. கிராம அலுவலகம் துப்பரவு செய்யப்பட்டு அலுவலகத்தைச் சுற்றி சிதைவடைந்திருந்த வேலிகளும் செப்பனிடப்பட்டன. இதில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளரும், மற்றும் அப்பகுதி பொது மக்களும் ஈடுபட்டனர். (ஐ-422)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





இணுவில் மத்திய கல்லூரியில் இயங்கும் விசேட தேவையுடைய மாணவர்களின் பயன் பாட்டுக்கான மாடிப்படிக்கட்டுக்கள் வடிவிலான மாதிரியை மானிப்பாய் நகர லயன்ஸ் கழகம் வழங்கியுள்ளது. இந்த உபகரணத்தை வழங்கும் நிகழ்வு இணுவில் மத்திய கல்லூரியில் மானிப் பாய் நகர லயன்ஸ் கழகத்தலைவர் லயன்ஸ் என்.கமலநாதன் தலைமையில் நடை பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட உப முதல்வர் லயன்ஸ் வைத்திய கலாநிதி வி.தியா கராசா கலந்து கொண்டார். மற்றும் மாவட்ட தலைவர்களான லயன்ஸ் எஸ்.ஜெயந்தன், கே.சுந்தரேஸ்வரன் மற்றும் யாழ்ப்பாணம் பல் கலைக்கழக வர்த்தக பீடத்தலைவர் பேராசி ரியர் லயன்ஸ் கே. தேவராசா உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ஐ–86)



வவுனியா மாவட்டத்தில்; நெடுங்கேணிப் பிரதேசத்தில் உள்ள சின்னப் பூவரசங்குளம் பாலர் பாடசாலைகக்கு சுற்றுப்புற வேலி அமைத்தலுக்காக வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா அவர்கள் தன்னுடைய குறித்து ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து அப்பாடசாலைக்கு வழங்கி வைக்கப்பட்ட நிகழ்வின் போது ஆசிரியர் மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து சிறப்பிப்பதைக் காணலாம். (ஐ–402)



கரவெட்டி பிரதேச செயலக வாழ்வு எழுச்சியின் விற்பனையும் கண்காட்சியும் அண்மையில் நடைபெற்ற போது... (ஐ–108)





வவுனியாவில் முன்னாள் போராளி களின் குடும்பங்களுக்கும், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கும் வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் மாகாண சபை உறுப் பினருக்கு ஒதுக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டுக்கான நிதியிலிருந்து அக் குடும் பங்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தும் நோக்கில் சுயதொழில் மேற் கொள்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட 17 குடும்பங்களுக்கு கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் வைத்து தையல் இயந்திரங்களை வழங்கிவைத்தார்.(ஐ)



சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியர் ம.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.(ஐ-500)





வவுனியா தோணிக்கல் ஜீனியஸ் பாலர் பாடசாலையின் கண்காட்சி நிகழ்வு பாலர் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் மயில் வாகனம் தியாகராசா. சிறப்பு விருந்தினராக் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் க.சந்திரகுலசிங்கம்.பண்டாரிகுளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலர் பாடசாலை அபிவிருத்தி குழு அங்கத்தவர்கள். ஆசிரியர்கள். பெற்றோர்கள். மாணவர்கள். நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் கீழ் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ashok STEEL

நீடித்த வலிமை

# அசோக் TMT

## அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கு அறிமுகஞ்செய்கின்றோம் அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகள். தலைமுறைகள் தாண்டி நீடித்து நிலைத்து நிற்க உங்கள் வீடுகளுக்கும் அசோக் TMT இரும்புக் கம்பிகளை உபயோகித்து, முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.112,500 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397, மேல் மாகாணம் - 077 3263518, மத்திய மாகாணம் - 077 3825832,
வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு – 011 7388940-3

SLS 375



## குறைந்தளவான கட்டணங்களுடன் சுயதொழில் வாய்ப்புகளை கொண்ட கற்கைநெறிகள்

New Gateway Tech இடமிருந்து....



AUTODESK AUTOCAD

### கட்டட நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் துறைகளில் மிக முக்கியமான மென்பொருள்

விரும்பிய நேரசூசியுடன் ஆரம்பத்திலிருந்து மென்பொருளை முழுமையாக கையாளக்கூடிய நிலை வரை பயிற்சிகள் வழங்கப்படும். **AutoCAD for Beginners** மற்றும் ஏற்கனவே மென்பொருள் பற்றி அறிந்தவர்கள் பயிலக்கூடிய வகையில் **Advanced AutoCAD** கற்கை நெறிகளும் நடைபெறுகின்றன.

NGT GATEWAY
*No. 39, College Road, Neeraviady, Jaffna.*

Address : 39, College Road, Neeraviyadi, Jaffna.
Telephone : 021 493 6666 / 0716 362 362



## உங்கள் காப்புறுதியின் பலம்



எசட்லைன் இன்ஷுரன்ஸ் ப்ரோக்கர்ஸ்

உங்களுக்கு உகந்த காப்புறுதியினை எந்தவொரு ஸ்தாபனத்திலும் உடனடியாகவும் இலகுவாகவும் பெற்றுக்கொள்ள
எசட்லைன் இன்ஷுரன்ஸ் ப்ரோக்கர்ஸிற்கு அடியெடுத்திடுங்கள். அதுமட்டுமின்றி காப்புறுதி பிரதிலாபங்களை உடனடியாக பெற்றுத்தர
எசட்லைன் இன்ஷுரன்ஸ் ப்ரோக்கர்ஸ் என்றும் முழுமுதற் திறனுடனும் அர்ப்பணிப்புடனும் உங்களுக்காக செயற்படுகின்றது.

உங்களுக்கும் தேசத்திற்கும் பலம் சேர்க்கும்
எசட்லைன்
தேசத்திற்கு பலம்

எசட்லைன் இன்ஷுவரன்ஸ் ப்ரோக்கர்ஸ் லிமிடட்

www.facebook.com/assetlinelk

அழையுங்கள் 011 4 700 100


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### உடன் விற்பனைக்கு
அலுவலக பாவனைக்கேற்ற சுழல் கதிரைகள், மரமேசைகள், சில்வர் வரவேற்பு கதிரை செற், மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 922 9041

### வீட்டுடன் காணி விற்பனைக்கு
மாம்பழம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள 3 படுக்கை அறைகளைக் கொண்ட வீடும் 1 பரப்பு 9 குளி விஸ்தீரணம் கொண்ட காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 472 3680 ,077 7561 676

### காணி விற்பனைக்கு
தெல்லிப்பழை கிழக்கு ஓவசியர் ஒழுங்கையில் காங்கேசன்துறை வீதிக்கு அண்மையாக கிணற்றுப் பங்கு வசதியுடன் கூடிய 3 பரப்பு குடியிருப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 315 6938

### காணி விற்பனைகுண்டு
கேணியடி வீதி, கொக்குவில் மேற்குப் பகுதியில் ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இக் காணியில் புதிதாக வீடு கட்டுவதற்காக அத்திபாரம் எல்லைச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன.
தொடர்பு : 077 992 9692 ,077 801 8195

### கோழி இறைச்சி விற்பனைக்கு
குளிரூட்டப்பட்ட (FROZEN) கோழி இறைச்சி (HALAL) விற்பனைக்குண்டு.
- Whole Chicken - Breast
- Whole leg & other parts

**For order please call**
**077 986 1800**

### வீட்டுடன் காணி விற்பனைக்கு
ஆஸ்பத்திரியடி, அச்சுவேலியில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியும் பெரிய வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 480 1867

### விற்பனைக்கு
சிறிது காலம் பாவித்த 4000 லீற்றர் தண்ணீர் பௌசர் ஒன்றும் Lister beter (England) 3 Phase Generator 10kv ஒன்றும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 756 8686

### வீடு விற்பனைக்கு
வட்டுக்கோட்டை,இலங்கை வங்கிக்கு அண்மையில் 3 ¼ பரப்புக்காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு :077 774 0928
077 9235 690

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
HX..... இலக்கமுடைய Lifan 100 மற்றும் E Bike விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 871 5616

### காணி விற்பனைக்கு
யாழ் நகர் பாங்ஷால் வீதியில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. வியாபார நிலையம்,வீடு அமைப்பதற்கு சிறந்த இடமாகும். கண்டி வீதி (A-9) இற்கு அருகில் உள்ளது .
தொடர்பு :
077 741 3393, 011 255 9345

### காணி வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், சுண்டுக்குளிக்கு அருகில் நில.பர. 2 குளி 0.25 விஸ்தீரணம் 6 அறைகள், நவீன வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 0229 762

### காணி விற்பனைக் குண்டு
ஊரெழு மேற்குப்(தீலீபன் வீதியில்) அமைந்துள்ள கிணற்றுப் பங்குடன் சேர்ந்த 3½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. (பலாலி வீதியில் 100 m )
தொடர்பு : 077 612 2447

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
CD 200Road master
Red Colour
BBO xxxx
தொடர்பு : 077 869 6960

### காணி விற்பனைக்கு
மானிப்பாய் வடக்கு உடுவில் (றோட்டில்) வீதியில், Green ஆஸ்பத்திரிக்கு பின்புறமாக சந்திக்கு அண்மையாகவுள்ள ஐந்து (05) பரப்புக் காணி விற்பனைக்கு.
இல 17, உடுவில் வீதி, மானிப்பாய்
தொடர்பு :
**இரவீந்திரன்**
**077 727 0310**
**Sam- UK- London**
**+ 44 7818557193**

## ஜோதிடம்

### இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N.குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல் மாலை 5.00 மணிவரை.
இல.424/11,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
(சிவன்கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
தொ.பே. 072 681 6681, 072 681 6691

### ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்
இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்
**ஸ்ரீ ராம சாஸ்திரிகள்**
ஜாதகம்,கைரேகை,நாம நட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டுப் பிரச்சினை,குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினை களுக்கு தீர்வு காண எம்மை ஒருமுறை சந்தித்துப் பயன் பெறுங்கள்.
காலை- 8.00 மணி -இரவு- 7 .00 மணி வரை
T. P: 077 233 3075
இடம்- நல்லூர் கோயில் வடக்கு வீதி.

## வாடகைக்கு

### வீடு வாடகைக்குண்டு
இல.55, கண்டி வீதி, அரியாலை (புங்கன்குளம் புகையிரத நிலையத்துக்கு அருகில் ) யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு
தொடர்பு : 076 898 7028 ,077 857 7154

### கட்டடத்தொகுதி வாடகைக்கு
யாழ். நகருக்கு மிக அருகில் வங்கிகள் வியாபார ஸ்தாபனங்களை அண்மித்த, அலுவலகபாவனைக்கும் காட்சியறைக்கும் உகந்த கட்டடத்தொகுதி கீழ்த்தளம் வாடகைக்குண்டு.
தொடர்பு : 077 922 9041

### வாடகைக்கு உண்டு
சாவகச்சேரி நகர் மத்தியில் (BOC இயங்கிக் கொண்டிருக்கும் கட்டடம்) 2016 தை மாதம் தொடக்கம் வாடகைக்கு விடப்படும். (அரச/தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு:
077 784 9369, 021 222 8063

### அறைகள் வாடகைக்குண்டு
யாழ் நகருக்கு மிக அண்மையில் ($A_9$) றோட் பஸ்ரியன் சந்தியில் ... இல் ... அறைகள் உள்ளன.(பெண்களுக்கு மட்டும்.)
தொடர்பு :
077 243 3938, 077 284 0793

## தேவை

### மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1976 இல் பிறந்த விஞ்ஞானப் பட்டதாரி அரச உத்தியோக மணமகனுக்கு நற்குணமுள்ள குடும்பப்பாங்கான தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு : 021 320 9458

### மணமகன் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம் 1976 இல் பிறந்த பூசநட்சத்திரம் 7 இல் செவ்வாய் 48 பாவமுடைய கனடாவில் எக்கவுண்டனாகப் பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.(கனடா, அமெரிக்கா விரும்பத்தக்கது
தொடர்பு : 065 224 0890
076 9027 334

### தேவை
வாகன சுத்திகரிப்பு பாரமாரிப்பு நிலையம் யாழ். மாவட்டத்தில் வாடகை அடிப்படையில் / குத்தகைக்கு தேவை.
தொடர்பு :
077 0760048,077 410 9151

### மணமகள் தேவை
வடமராட்சி இந்து கௌரவ குடும்பம், 1972 ,உத்தராடம் முதலாம் பாதம், லக்கினத்தில் செவ்வாய் 96 கிரகபாவம் கொண்ட தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு : 076 906 7925

## ஏனையவை

### காணவில்லை
சுண்டுக்குளியில் கறுப்பு பொமனேரியன் நாயை (ஆண்) காணவில்லை. கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு : 077 136 2706

### காணி விற்பனைக்கு
வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட பண்டாரிக்குளம் அம்மன் கோயில் வடக்கு வீதியில் இரு வீடுகளுடன் கூடிய 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு
தொடர்பு :
077 233 8360 ,077 345 4610

### விநியோகஸ்தர்கள் - Distributors
வைத்திய உபகரணங்கள் அழகு சாதன பொருட்கள் உற்பத்தி நிறுவனத்தில் மொத்த விற்பனை செய்வதற்கு மாவட்ட ரீதியில் விநியோகஸ்தர்கள் தேவை (நாடு முழுவதும்)

எங்களிடமிருந்து...
- கவர்ச்சியான கழிவு
- வாகன கொடுப்பனவு
- விற்பனை பிரதிநிதி

உங்களிடமிருந்து...
- பண வைப்பு (ரூ.400,000.00 - பிரதேசங்களுக்கு ஏற்றவாறு மாறும்)
- களஞ்சிய வசதி, வாகனம்

துடிப்பான விற்பனை பிரதிநிதி (Sales Rep) மற்றும் காரியாலய உதவியாளர்கள் தேவை.

NJS INTERNATIONAL PVT LTD. No. 471/7, Colombo Road, Gampaha.
0115 785 552
0775 493 439
0768 209 440

### VISA REJECTED?
நாம் உங்களுக்கு உதவ தயார்
•Visit Visas •Rejected Visas
நிராகரிக்கப்பட்ட மற்றும் புதிய விண்ணப்பங்கள்
*Appeals & Rejected Visas *Special Occasions
*Family & Friends Visit *Medical Visits
*Tourist/Business Visits

| | | |
|---|---|---|
| • Australia | • Italy | • Switzerland |
| • Canada | • Japan | • Sweden |
| • China | • New Zealand | • UK |
| • France | • Netherlands | • USA |
| • Germany | • Norway | |

100% உத்தரவாதம்*
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**THE VISA CENTRE**
Migration, Work & Study Solutions
Level One, 21, Maitland Crescent, Colombo 07.
HOTLINES:
0777 633 955 / 0777 633 977 / 0773 444 447
அனைத்து விதமான கட்டணங்களும் The Visa Centre தலைமை காரியாலயத்தில் மட்டுமே செலுத்தப்படல் வேண்டும்..
Tel: 5 334433 Fax: 5 352303 Email: info@thevisacentre.com
www.thevisacentre.com

### வேலை வாய்ப்பு
புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள எமது கம்பனி கிளைகளுக்கு வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. பயிற்சியளித்து இணைத்துக் கொள்ளப்படுவர்.
O/L, A/L தகைமையுள்ளவர்கள் அல்லது (O/L) மாத்திரம் சித்தியடைந்தவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.
(ஆண், பெண் இருபாலாரும்)
தொடர்பு :
கிளிநொச்சி- 077 2803773
யாழ்ப்பாணம்- 077 526 7295
திருகோணமலை- 077 208 3140

### வாடகைக்கு
வெள்ளவத்தையில் குறைந்த விலையில் நாளாந்த அடிப்படையில் A/C, Non A/C Rooms வாடகைக்கு (தனிநபர்,குழு குடும்பத்தினர்களுக்கு வழங்கப்படும்). அத்துடன் Luxury வீடு F/Furinishet A/C Fridge w/ machene Hotwater car Parking வசதிகளுடன் நாளாந்த வாடகைக்கு
Thaas Rest
391/6 Galle Road.Wellawatte.
uthaya Rest
58 Harmers Avenue Wellawatte
011 250 3552 011 236 0515
Hol Line 077 7667511

### வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை வீதி சயன்ஸ் அக்கடமி ரியூசன் சென்ரருக்கு அருகில் வீடு கிணற் றுடன் சேர்ந்த மூன்று பரப்பு ஆதனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: சந்திரதாசன் 077 610 6760
சிவா (416) 438 8509, (416)845 85..

### HEAT TRANSFER PRODUCTS
හීට් ට්‍රාන්සර් ප්‍රඩක්ට්ස්
UPTO 50% DISCOUNT* STOCK CLEARANCE SALE
Plate, Glass Clock, Metal Key Chain, Sheet Metal (Silver,Gold,White)
Cristal, Mugs, Woods Plaque, Granite
• Sublimation Transfer Paper • Sublimation Ink
• T-shirt Transfer Paper (Light/Dark) • Tiles
• Vinyl Transfer Paper
ABC Trade & Investments (Pvt) Ltd.
No. 03, Bandaranayapura Road, Rajagiriya. Tel: 011 5289283
Email: info@abcsrilanka.biz Web: www.abcsrilanka.biz
HOT LINE - 0716 858 362

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமான வரி செலுத்தாதோருக்கு அபராதம்

தமது வருமானத்தை வெளிப்படுத்தி, வருமான வரியை செலுத்தாதவர்களுக்கு எதிராக உள்நாட்டு இறைவரித் திணைக் களத்தினரால் சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் இவ்வாறு வருமான வரியைச் செலுத்தாத, தமது வருமானத்தை வெளிப்படுத்தத் தவறிய 07 நபர்களுக்கு எதிராக யாழ்.நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவர்களில் மூவருக்கு இறைவரித் திணைக்களத்தினரால் ஏற்கனவே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டும், அவர்கள் தொடர்ந்தும் வருமான வரியைச் செலுத்தாத காரணத்தினால் [illegible]ா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் இறைவரித்திணைக் களத்தினரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்படாது, வருமான வரியை செலுத்த தயாராக இருந்த ஏனைய நால்வரையும் வருமான வரியை செலுத்துமாறும் நீதிமன்று எச்சரித்து பிணையில் விடுவித்தது. (வ–103)

# பேராசிரியர் சண்முகதாசின் பவளவிழா

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாசின் பவள விழாவும், சண்முகதாஸ் இணையரின் திருமணப் பொன்விழாவும் எதிர் வரும் 14ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பி.ப 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமை வகிக்கவுள்ளார். நிகழ்வில் அகவைப்பரிசிலாக 'ஜப்பானியக் காதல் பாடல்கள்' என்ற நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்த ஆண்டில் கனடா, சுவிஸ் மற்றும் ஜேர்மனியில் பேராசிரியர் சண்முகதாஸின் பவளவிழா நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (வ–10)


## Job Vacancies



*Admin Secretory
*Educational Counselors

Send your CV to below address on or before 16-10-2015

iCS Study Overseas
77,Clock Tower Road, Jaffna
sutha@icssrilanka.com
021-4926222,021-7306000


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
15.03.1936

உதிர்வு
26.09.2011

திதி: சதுர்த்தசி (11.10.2015)

### அமரர் பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி

(தேவி அச்சகம் ஸ்தாபகர், மூர்த்தி விளம்பர சேவை)

அன்பான எம் அருமை அப்பாவே!
நான்கு ஆண்டுகள் கடந்தாலும் மறவோம்
கண்களில் கண்ணீர்
ஈரவிழிகள் காயவில்லை அப்பா!
இரக்கமில்லை இறைவனுக்கு எம் அப்பாவைத் திருப்பிதர
இதயங்களில் சுமையோடு காத்திருக்கிறோம் அப்பா!
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

உங்கள் நினைவுகளுடன்
உங்களது ஆத்மா சாந்தியடைய
மாரியம்மனை வேண்டி நிற்கும்

114/19. நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(65317 03.10.10)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி கந்தையா



தோற்றம்
05
04
1932

மறைவு
09
10
2015

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம், நீராவியடியை தற்போது இருப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கந்தையா (09.10.2015) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தையல்நாயகம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பலவாணர் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் , பரமசிவம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் யாழ்.மாநகரசபை), சிற்றம்பலம் மற்றும் குமாரசாமி, சிவபாக்கியம் (ஜேர்மனி), மார்க்கண்டு ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரியும், நடராசா (ஜேர்மனி), பாக்கியலட்சுமி, பவளராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சினி (ஓய்வு பெற்ற ஆசிரியர் - ஜேர்மனி), காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்) மற்றும் தெய்வேந்திரன் (ஓய்வு பெற்ற தபால் உத்தியோகத்தர் அஞ்சல் அலுவலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தீபாதினி, தீபதர்சினி, பார்த்தீபன் (அமெரிக்கா), டிசாந்தினி, நந்தகுமாரன் (Software Engineer - Black Shadow International), ருத்திரகுமாரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2015) திங்கட் கிழமை மதியம் 12.00 மணியளவில் கருப்பிட்டி பிள்ளையார் கோயிலடி அராலி தெற்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப ஒரு மணியளவில் அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கருப்பிட்டி பிள்ளையார் கோயிலடி, அராலி தெற்கு, அராலி, வட்டுக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்.
0213008829,0778019115


## VACANCY - ACCOUNTANT

Northern Farm (Pvt) Ltd is a business established in Vavuniya producing and distributing agro processing products. The business operations are getting expanded to Northern and Eastern Provinces currently.

Northern Farms seeks to recruit an exceptionally competent professional with a proven track record and intellectual depth to lead drive for excellence.

Reporting to the CEO, the incumbent will have the total responsibility for the overall financial management of the Company and lead a team accounting and book keeping professionals to collectively achieve the organization's finance functions.

**Key Tasks :**

- To work according to SLAS and produce company annual reports and ensure the audited financial report before end of June every year.
- To ensure the efficient financial management of the company as per the financial manual
- To liaise with all business partners to ensure the smooth accomplishment of the business transactions

**The ideal candidate will possess:**

- University Degree with Management Accounting Specialization
- Fully completely professional qualification in Management Accounting or Accounting (MAAT, HNDA)
- A minimum of 03 years post qualifying experience, preferably in manufacturing set up in a medium scale industry
- Should be an excellent team player, well organized work
- Proficiency in MS Office / Excel and experience in Accounting Packages (Quick Book)
- Fluency in English and excellent interpretation skills
- Excellent analytical skills and up to-date knowledge in accounting standards
- Below 50 years of age

An attractive remuneration package along with fringe benefits commensurate with qualification and experience awaits the ideal candidate.

Please forward your complete CV with contact details of two non-related referees to northernfarmpvtltd@yahoo.com within 07 days of this advertisement.

**Managing Director / Chief Executive Officer**
**Northern Farm (Pvt) Ltd,**
**Marukarampali,**
**Vavuniya.**

(65251 10.15.17)



## Malaysiaவில் படிக்க, உழைக்க... Hotel முகாமைத்துவகற்கைநெறி

ஆகக்கூடிய கல்வித்தகைமை O/L மட்டுமே
கவர்ச்சிகரமான மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவுகள்

கற்கைநெறி கட்டணம் இலவசம்*
*Conditions Apply

Limited seats only



iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
077-3013060,021-4926222
107, B 1/1,Galle Rd, Wellawatte, Colombo 6



## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (PVT) LTD

### P. ஜெய்சங்கர்


கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில் வாய்ப்புகள், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால், தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : 384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்.)

தொலைபேசி : 021 221 7944

கொழும்பு முகவரி:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி.
தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய மட்ட ஈட்டி எறிதலில் 19வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி மாணவன் எம்.சஞ்சீவன் வர்ண விருதைப் பெற்றுள்ளார். (ம-422)

# நித்தம்புவவிடம் வீழ்ந்தது சீனிகம;
## முரளி கிண்ணத்தின் மகளிர் ஆட்டத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 11

நடப்பு வருடத்துக்கான முரளி கிண்ணத் தொடர் கடந்த புதன்கிழமை முதல் நடைபெற்றுவருகின்றது. இந்தத் தொடரில் மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான ஆட்டம் ஒன்றில் சீனிகம மகளிர் கல்லூரிஅணியை 73ஓட்டங்களால் வீழ்த்தி அபார வெற்றிபெற்றது நித்தம்புவ மகளிர் கல்லூரி அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நித்தம்புவமகளிர்கல்லூரிஅணிமுதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில்ஆரம்பவீராங்கனைகளாக காஞ்சனா மற்றும் ரணபாகு. அணியின் ஓட்ட எண்ணிக்கை 36ஆக இருந்தபொழுது ஆரம்ப வீராங்கனைகள் இருவரும் ஆட்டமிழந்திருந்தனர். இருப்பினும் மத்திய வரிசைவீராங்கனைகளானஎஸ்.மதுசிகா மற்றும் ஆர்.மதுசிகா இரு வரதும் அதிரடியில் நிர்ணயிக்கப்பட்ட 15 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களைக் குவித்தது நித்தம்புவ மகளிர் கல்லூரி அணி. அதிகபட்சமாக ஆர்.மதுசிகா 24 ஓட்டங்களையும், எஸ்.மதுசிகா 23 ஓட்டங்களையும் டில்சானி 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்கஉதிரிகளாக25ஓட்டங்கள் கிடைக்கப்பெற்றன. பந்துவீச்சில் சீனிகம மகளிர்கல்லூரிஅணிசார்பாக மென்டிஸ், நிம்சானி, சசிகலா, சந்தமானி, டிசாலி ஆகிய ஐவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

90 பந்துகளில் 142 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சீனிகம மகளிர் கல்லூரி அணிக்கு மென்டிஸ், டியுலானி ஆகிய இரு வீராங்கனைகளைத் தவிர ஏனைய எவரும் இரட்டை எண்களில் ஓட்டங்களைப் பெறவில்லை. முடிவில் அந்த அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் வரை மட்டுமே தாக்குப் பிடித்து 68 ஓட் டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக டியுலானி21ஓட்டங்களையும்,மென்டிஸ் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நித்தம்புவ மகளிர் கல் லூரி சார்பாக மதுசிகா 4 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

## கோலூன்றிப் பாய்தலில் யாழ். வீரர்கள் அசத்தல்



மாங்குளம், ஒக். 11

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலானதேசியமட்ட, கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மகாஜனவைப் பிரதிநிதித்து[illegible] செய்த ரிசோத் தங் கப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

தேசியமட்ட கோலூன்றிப் பாய்தல் போட்டி தியகம மகிந்த ராஜபக்ச சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் 21வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் மகாஜனக் கல்லூரி மாணவன் ப.ரிசோத் 4.2 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், அருணோதயக் கல்லூரி மாணவர்களான பி.நிதுசன் 4.1மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் எம்.சாள்ஸ்அன்ரனி 3.8 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும், பா.லவணன் 3.8மீற்றர் பாய்ந்து வர்ண விருதையும் தமதாக்கினர். (ம-422)

# இன்று இடம்பெறவுள்ள இறுதியாட்டங்கள்



யாழ்ப்பாணம், ஒக். 11

அராலி, ஏ.எல். விளையாட்டுக் கழகமும் அராலிஏ.எல்.இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதை பந்தாட்ட லீக்குகளில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தி வந்த உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும், சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட உதை பந்தாட்டத் தொடரின் இறுதியாட் டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை ஏ.எல். கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் அராலி ஜேம்ஸ் அணியை எதிர்த்துதுணைவி நியூஸ்ரார் அணி மோதவுள்ளது. லீக்குகளுக்கு இடையில் நடத்தப்பட்ட தொடரின்இறுதியாட்டத்தில்நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருத்தினராக யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதி இயக்குனர் தபேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

# ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் கூடைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 11

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் 17வயதுக்கு உட்பட்ட இருபாலாருக்குமான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம்வெள்ளிக்கிழமையும், நேற்று சனிக்கிழமையும் இடம் பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரிஅணியைஎதிர்த்துயாழ். இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.இந்துக் கல்லூரிஅணி38:37என்றபுள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல்சர்வதேசப் பாடசாலை அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் ஏஞ்சல்சர்வதேச பாடசாலை அணி 46:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் முதலாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் காலை 7.30 மணிக்கு மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் ஏஞ்சல்சர்வதேசப் பாடசாலை அணி 65:28 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

காலை 8.45 மணிக்கு இரண்டாவதாக இடம்பெறவிருந்த ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மோத இருந்தது. இதில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி ஆட்டத்துக்கு குறித்த நேரத்தில் சமுகம் தராமையினால் உடுவில் மகளிர் கல்லூரி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. தொடர்ந்து காலை 10 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் சென்.பற்றிக்ஸ்கல்லூரிஅணி59:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## ஞானமுருகனிடம் வீழ்ந்தது பொம்மர்ஸ்

மாங்குளம், ஒக். 11

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும், அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் பொம்மர்ஸ் அணியை மிக இலகுவாக வீழ்த்தியது ஞானமுருகன் அணி. ஆரம்பத்திலிருந்து ஆதிக்கம் செலுத்திய ஞானமுருகன் அணி முதற்பாதியில் 2:0 என்ற அடிப்படையில்முன்னிலைவகித்தது. இரண்டாம் பாதியிலும் இதே ஆதிக்கம் தொடர முடிவில் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422)

# இளம்பறவை வி.கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 11

இளம்பறவைவிளையாட்டுக்கழகத்தினால் முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்களுக்குஇடையில்நடத்தப்பட்டுவரும் வேலுப்பிள்ளை சோமசுந்தரம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறிந்த கழக மைதானத்தில்இடம்பெற்றுவருகின்றன. இந்தத்தொடரில் கடந்த புதன், வியாழன், மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

புதன்கிழமைஇடம்பெற்றஆட்டத்தில் அலம்பில் இளந்தென்றல் அணியை எதிர்த்து வற்றாப்பளை செந்தமிழ் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வற்றாப்பளை செந்தமிழ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வியாழக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்புக்குளம் அலை ஓசை அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு உதிக்கும் திசை அணி மோதிக் கொண்டது. இதில் உடுப்புக்குளம் அலை ஓசை அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு பாரதிதாசன் அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோலையும் பெறாததனால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரையில் நீடித்தது. சமநிலை தவிர்ப்பு உதைகளில் புதுக்குடியிருப்பு பாரதிதாசன் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பொக்கணை ஒற்றுமை அணியை எதிர்த்து முள்ளியவளை வளர்மதி அணி மோதிக் கொண்டது. இதில் பொக்கணை ஒற்றுமை அணி 2:1 என்ற கோல் கணக்கில்வெற்றிபெற்றது.தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் முள்ளிவாய்க்கால் செல்வா அணியை எதிர்த்து மந்துவில் ஆனந்தா அணி மோதிக்[illegible] இதில் மந்துவில் ஆனந்தா அணி[illegible] என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# ஞானமுருகன் எதிர் றோயல்
## ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது



மாங்குளம், ஒக். 11


மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்டு வரும், அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதை பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஊரெழு றோயல் அணியும் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதிய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் ஆரம்பித்தது முதல் தமது அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய றோயல் அணி ஆட்டத்தின் 4வது, 6வது நிமிடங்களில் கோல்களைப் பதிவுசெய்து முன்னிலை வகித்தது. சரிவில் இருந்து மீண்ட ஞானமுருகன் அணி 12ஆவது நிமிடத்தில் பதில்கோலைப் [illegible] ஆதிக்கத்தைத் தொடரும் முனைப்பில் றோயலும், பழிதீர்க்கவேண்டும் என்றகட்டாயத்தில்ஞானமுருகனும் இரண்டாவதுபாதியைஆரம்பித்தன. நீண்டதும் பலமானதுமான போராட்டத்துக்கு ஏற்ப வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை. றோயலுக்குச் சாதகமாக ஆட்டம் முடிவடையப் போகிறது என்று எதிர் பார்க்கப்பட்ட வேளையில் ஆட்டம் நிறைவடைய 8 நிமிடங்கள் இருக்கும் பொழுது ஞானமுருகன் அணிக்கு கிடைத்த மூலை உதையைச் சாதகமாகப் பயன்படுத்தி பதில் கோலைப் பதிவுசெய்ய ஆட்டம்சமநிலையானது.வேறெந்தக் கோல்களும் பதிவாகவில்லை இரு அணிகளுக்கும் சாதகமான முடிவுடன் முடிந்தது ஆட்டம். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபர் திணைக்களத்தை உடனே மறுசீரமைக்க வேண்டும்

*அனுரகுமார எம்.பி சபையில் காட்டம்*



கொழும்பு, ஒக்.11
சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர்அதிகாரி ஒருவருக்கும் எவன் கார்ட் நிறுவனத்தின் பிரதானிக் குமிடையில் கடந்த மாதத்தில் மாத்திரம் 15 தடவைகளுக்கு மேல் இரகசிய தொலைபேசி கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன என்று நாடாளுமன்றில் நேற்று முன்தினம் பரபரப்புத் தகவல் வெளியிட்டார் எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவும் ஜே.வி.பியின் தலைவருமான அநுரகுமார திஸா நாயக்க.
இவ்வாறு அசட்டையாகவும் அசமந்தமாகவும் செயற்படும் சட்டமா அதிபர் திணைக்களத்தை முழுமையாக மறுசீரமைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவி யளித்தல் சட்டத்தின்கீழ் கட்டளை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் கூறியவை வருமாறு:–
சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகளும், வழக்குத் தொடர்பான அணுகுமுறையும் அசமந்தப் போக்கிலேயே இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக, சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணி புரிபவர்களுள் குடும்ப உறுப்பினர்கள் நிரம்பிக் காணப்படுகின்றனர். தந்தை இறந்த பின் அந்தத் தொழில் மகனுக்கு என்ற முறை முன்னர் ரயில் திணைக்களத்தில் இருந்தது. அந்த யுகம் தற்போது மாறியுள்ளது. ஆனால், சட்டமா அதிபர் திணைக்களத்தில்தான் எவ்வித மாற்றமும் இல்லை.
சட்டமா அதிபர் திணைக்களத் தின் பழைய நிகழ்ச்சிநிரல் மாற வேண்டும். ஜனவரி 8ஆம் திகதியும், ஓகஸ்ட் 17ஆம் திகதியும் மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளித்து மேற்படி திணைக்களம் செயற்படவேண்டும். கடந்த காலத்தில் அரசியல் மயம் என்ற பிடிக்குள் சிக்கியிருந்த சட்டமா அதிபர் திணைக்களம், அதிலிருந்து விடுபட்டுச் சுயாதீனமாகச்செயற்படவேண்டும். ஆனால், கடந்த காலங்களில் சட்டமா அதிபர் திணைக்களம் எப்படிச் செயற்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்துல்காதரின் வழக்கு மூடிமறைக்கப்பட்டது. இவ் வாறு பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். அடுத்ததாக கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் வழக்கு விடயத்தில் சட்டமா அதிபர் திணைக் களத்தின் வகிபாகம் எப்படி இருக்கிறது?
நிதி, ஆயுதம், சர்வதேச வலைப்பின்னல் ஆகிய மூன்று விடயங்களால்தான் புலிகள் அமைப்பு பலமடைந்தது. இவற்றை புலிகளுக்குப் பெற்றுக் கொடுக்க முக்கிய பங்களிப்பு செய்தவர்தான் கே.பி. கே.பி. கைதான பின்னர் பகிரங்க நீதிமன்றில் விசாரணை நடத்தப்பட்டிருந்தால் பல உண்மைகள் வெளியாகியிருக்கும். ஆயுதம் எப்படி கிடைத்தது? நிதி எவ்வாறு திரட்டப்பட்டது? உள்ளிட்ட விவரங்களை அறிந்திருக்கலாம்.
அத்துடன், இன்று மனித உரிமைகள் பற்றி பேசும் சில நாடுகளின் உண்மை முகமும் வெளிச்சத்துக்கு வந்திருக்கும். இவை வெளியிடப் படவில்லை. இதனால் கே.பியை கைது செய்யுமாறு நாம் வழக்குத் தொடுத்தோம். ஆனால், அவரை கைதுசெய்வதற்குப் போதுமான சாட்சியங்கள் இல்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் கூறியது. சாட்சியங்கள் இல்லாமல் கே.பியை எப்படி கைதுசெய்தார்கள்? நிலைமை இப்படியே போகுமானால் தன்னைக் கடத்திவிட்டார்கள் எனத் தெரிவித்து மனித உரிமைகள் அமைப்பிடம் கே.பி. மனுத் தாக்கல் செய்யலாம்.
அதேவேளை, எவன்கார்ட் விவகாரமும் மூடிமறைக் கப்படுகிறது. மேற்படி நிறுவனத்துக்கு எதிராக 53 பிரிவுகளின் அடிப்படையில் வழக்குத் தொடரமுடியும். ஆனால், அவ்வாறு செய்யப்படவில்லை.
சட்டமா அதிபர் திணைக்களத் தின் உயர் அதிகாரிக்கும், எவன்கார்ட் நிறுவனத்தின் பிரதானிக்குமிடையில் கடந்த மாதத்தில் 15 தடவைகளுக்குமேல் தொலைபேசி கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. சி.ஐ.டியிலும் இதுபற்றிய விவரம் இருக்கிறது.
ஆகவே, சட்டமா அதிபர் திணைக்களம் மறுசீரமைக்கப்படவேண்டும். நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாக்கவேண்டும் – என்றார்.
(த–சி)

# கணித பாட முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்கள் வழங்கப்படவில்லை

*ஆங்கில மொழிமூல பரீட்சார்த்திகள் பாதிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 11
நாடளாவிய ரீதியில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணித பாட முன்னோடிப் பரீட்சை பாடசாலை மட்டத்திலே நேற்று இடம்பெற்றது. இந்தப்பரீட்சைகளில் தோற்றுவதற்காகச் சென்ற தமிழ் மொழிமூல மற்றும் ஆங்கில மொழி மூல பரீட்சார்த்திகளில் தமிழ்மொழி மூலப் பரீட்சார்த்திகளுக்கான வினாத் தாள்கள் மாத்திரம் பரீட்சை மண்டபத்திலே வழங்கப்பட்டுள்ளதுடன் ஆங்கில மொழிமூல பரீட்சார்த்திகளுக்கான வினாத்தாள்கள் வழங்கப்படவில்லை.
இதன் காரணமாக மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றமுடியாமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதாக தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் உதயகுமாரிடம் கேட்டபோது,
இந்த முன்னோடிப் பரீட்சை விசேட செயற்திட்ட மாணவர்களுக்காக குறிப்பாக, கணித பாடத்திலே 40 இற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரீட்சையாகத்தான் இடம்பெறுகிறது. இது தொடர்பில் வலயக்கல்வி அலுவலகங்கள், பாடசாலை அதிபர்களுக்கு சரியான அறிவுறுத்தலை வழங்கியதாகவும் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்கள் இந்த விசேட செயற்றிட்ட மாணவர்கள் என்ற வரையறைக்குள் வராதவர்கள்– திறமையடிப்படையில் 40 வீதத்துக்கு மேலானவர்கள் – என்றார்.
மேலும் கணித பாடத்தில் 40 வீதத்துக்கு குறைந்த விசேட செயற்றிட்ட மாணவர் என்ற அடிப்படையின் கீழ் இனங்காணப்பட்ட பாடசாலைகளுக்கு மாணவர்களின் தொகைக்கு ஏற்ப வினாத் தாள்கள் வலயக்கல்வி அலுவலகங்களால் வழங்கப்பட்டது. ஏனைய பாடசாலைகளுக்கு இந்த வரையறையினுள் வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வினாத்தாள்கள் வழங்கப்பட்டன. எனினும் ஆங்கில மொழிமூல பரீட்சார்த்திகளுக்குப் பின்னர் பரீட்சைகள் இடம்பெறுமென தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாடசாலை அதிபர் ஒருவர் தெரிவித்தார்.
(வ–ரி2)

# கிளி. பரவிப் பாஞ்சானில் 258 கைக்குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 11
கிளிநொச்சி பரவிப் பாஞ்சானில் வீடு ஒன்றிலிருந்து 258 கைக் குண்டுகளை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவற்றில் 154 கைக்குண்டுகள் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.
ஜனாதிபதியினால் அண்மையில் விடுவிக்கப்பட்ட குறித்த பகுதியில் அந்த வீட்டு உரிமையாளர் நேற்று வீட்டைத் துப்புரவு செய்தபொழுது மதியமளவில் மலசலகூடக் குழியில் அவற்றைக் கண்டுள்ளார். அதனால் அது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கும் ராணுவத்தினருக்கும் அறிவித்துள்ளார்.
சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், பயன்படுத்தக்கூடிய வகையில் இருந்த 154 கைக்குண்டுகளையும் பயன்படுத்த முடியாதளவிலிருந்த 94 கைக்குண்டுகளையும் மீட்டுள்ளனர். அத்துடன் கான்ரா எனப்படும் ஒருவகை துப்பாக்கி ரவைகளையும் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
அவற்றை மீட்ட அவர்கள் அங்கு மேலும் குண்டுகள் இருக்கின்ற [illegible] தெரிவிக்கப்பட்டது. (வ–4,422)

# வதிவிடச் சான்றிதழ் வழங்க லஞ்சம் வாங்கிய கிராம சேவையாளர் கைது

*விசுவமடுவில் சம்பவம்*

புதுக்குடியிருப்பு, ஒக்.11
புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில், பொதுமகன் ஒருவருக்கு வதிவிடச்சான்றிதழ்வழங்குவதற்கு லஞ்சம்பெற்றகிராமசேவையாளர் ஒருவரை லஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவினர் கைது செய்துள்ளனர்.
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட விசுவமடு கிழக்கு மற் றும் மேற்கு பிரிவுகளின் கிராம சேவையாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தகவல்கள் தெரிவித்தன.
குறித்த கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் பொதுமகன், உறவினர் ஒருவர் தமது வீட்டில் வசித்து வருவதனை உறுதி செய்து வதிவிடச் சான்றிதழ் வழங்குமாறு கேட்டுள் ளார். இந்த வதிவிடச் சான்றிதழை வழங்குவதற்கு, குறித்த கிராம சேவையாளர் 25 ஆயிரம் ரூபா பணத்தை லஞ்சமாகக் கேட்டுள் ளார்.
இந்நிலையில் குறித்த கிராம சேவையாளர் லஞ்சம் பெற்றுக் கொள்ள முற்பட்ட வேளை லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரைக் கைது செய்த விடயம் நேற்று லஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவினரால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை கைது செய்யப்பட்ட கிராம சேவையாளரைக் கிளிநொச்சி நீதிவானிடம் முன்னிலைப் படுத்தப்படுவார் எனதெரிவிக்கப்பட்டது. (த–வ–5)

# ஆயுத முனையில் கொள்ளை; தாக்கியதில் மூவருக்கு காயம்

*வவுனியாவில் சம்பவம்*

கொழும்பு, ஒக்.11
வவுனியா சாம்பல் தோட்டம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை 1.20 மணியளவில் 6பேர் கொண்ட குழுவினர் ஆயுதங்களுடன் வீட்டிற்குள் புகுந்து மூன்று பவுண் நகை, 12 ஆயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையிட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.
இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,
வவுனியா சாம்பல்தோட்டம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை ஆயுதங்களுடன் 6பேர் கொண்ட குழுவினர் வீட்டிற்குள் புகுந்து வீட்டிலிருந்த வி.ஜெயலட்சுமி (வயது–60) அவரின் கணவர் விஜயராசா (வயது–63) மற்றும் அவரின் மகன் ஆகியோரை ஆயுதங்களை காட்டி பயமுறுத்தி நகைகளுடன் பணமாக இருந்த 12ஆயிரம் ரூபாவினையும் திருடியுள்ளதுடன் கணவனை தாக்கி காயப்படுத்தியதுடன் மனைவி தடுக்கச் சென்ற சமயம் தலையில் தாக்கியதில் காயம் ஏற்பட்டுள்ளது. மகன் மதனீஸ்வரன் கத்தியினை பறிப் பதற்கு முயற்சித்தபோது கையில் காயம் ஏற்பட்டுள்ளது.
இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என இரண்டு குழுவினரை பொலிஸார் தேடி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.
காயமடைந்த மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதுடன் மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(வ)

# 19 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது



யாழ்ப்பாணம், ஒக்.11
இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 19 இந்திய மீனவர்கள் நேற்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.
இலங்கையின் கடற்பரப்பிற்குள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பெயரில் இரண்டு படகுகளில் தொழில்புரிந்த தமிழக நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் நேற்று அதிகாலை யாழ். குடாநாட்டின் வட மராட்சி கிழக்கு கடற்பகுதியான வெற்றிலைக் கேணி– கட்டைக்காடு கடற்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.
குறித்த மீனவர்கள் அனைவரும் காங்கேசன்துறை இறங்குதுறைக்கு கொண்டுவரப்பட்டு மருத்துவப் பரிசோதனைகளின் பின்னர் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப் படைக்கப்பட்டனர். (வ–101)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விதை நெல் விற்பனைக்கு**

விவசாயப் பகுதியினரால் சுத்திகரிக்கப்பட்டு சிபார்சு செய்து அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்ட B.G. 406 ரக விதை நெல் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 659 2044 (60625)(12.15.17)

**தையல்**

இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும்

இடம் : குமாரசாமி வீதியிலிருந்து பிரம்படி வீதி, கொக்குவிலுக்கு மாற்றப்பட்டுள்ளது.

தொடர்பு : 076 639 9277

**வேலையாள்கள் தேவை**

கட்டட வேலை செய்ய மேசன், கூலியாள்கள் மற்றும் காவலாளிகள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு : 077 284 4505

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி தனங்கிளப்புப் பிரிவு அறுகு வெளியில் தென்னைச் செய்கைக்கு ஏற்ற நிலப்பரப்பு 27 காணி விற்பனைக்குண்டு. (பூநகரி-யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அருகில்)

தொடர்பு: (C/18401)(10.15.17)

071 534 6641, 077 471 3097

**காணி தேவை**

யாழ் மாநகரசபை எல்லைக்குள் 2 பரப்பு வெற்றுக் காணி நீண்டகால குத்தகைக்குத் தேவை.

தொடர்பு : 0776623824

**பதவி வெற்றிடம்**

முன்னணி காப்புறுதி நிறுவனத்திற்கு கிளி நொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய கிளைகளில் காப்புறுதி உத்தியோகஸ்தர்களுக்கான பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

குறிப்பு - அடிப்படை சம்பளம் உள்ளடங்கலாக மேலதிக கொடுப்பனவுகள்.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் (A/L பரீட்சை எழுதியவர்களும்)

தொடர்பு : 0777759636, 0770297372

**அமெரிக்க Green Card Lottery - 2017**

அமெரிக்க Green Card Lottery விண்ணப்பிப்பதில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை Bristol Cyber Cafe, No. 8/3/4, Bristol Street, Colombo-01 எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

எமது நிறுவனத்துக்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையில் எப்பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

Tel: 0112393919, 0774276579

W/A 44843 www.bristolcc.biz

**காணி விற்பனைக்கு**

மிருசுவில் A9 வீதியில் பத்து (10) பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 607 9340 (C/18404(12.15.17)

**ஆயுர்வேத பூஷணம்**

ஆயுர்வேத வைத்தியர்கள் RAMP சிகிச்சா ரத்னா, ஆயுர் வேதபூசணம் இந்திய பட்டங்களுக்கு அழையுங்கள். தொடர்பு : 0777904345, 0772217575

**விற்பனைக்கு**

70 சிறி 550 லாண்ட்மாஸ்ரர் பெட்டியுடனும், AAY புதிய ஆட்டோவும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 869 1461

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு சம்பியன் லேனில் நல்லசூழலில் 4 ¾ பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு . தரகர் தேவையில்லை

தொடர்பு: 071 4821 946 (65515) (12.15.17)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம் நல்லூர் இல.174/16, கோயில் வீதியில் கைலாசப்பிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கும் உகந்தது.

தொடர்பு : 077 630 7106

**வேலைவாய்ப்பு-பெண்கள் மட்டும்**

கோப்பாயில் இயங்கிக்கொண்டு இருக்கும் பெண்களுக்கான ஆடை உற்பத்தி நிறுவனத்துக்கு தையல் பயிலுனர்கள் உடன் தேவை. பருத்துறை பேருந்து வழித்தடத்தில் இருந்து வருவோருக்கு முன்னுரிமை. சம்பளம் பேசி தீர்மானிக்கலாம். EPF, ETF வழங்கப்படும்.

விபரங்களுக்கு, பசுமை உற்பத்தியகம், பகவான் பாதை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்

தொலைபேசி : 0212231414, 0213203030 தொடர்பு நேரம் : 8.30am-4.30pm வரை

Email : evergreenmanufactory@gmail.com Web: www.egmfashion.com


# பாடசாலை மாணவர்களுக்காக தனியார் பஸ் சேவை ஆரம்பம்

### கிராஞ்சியிலிருந்து நாளை முதல்

யாழ்ப்பாணம், ஒக். 11

கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் போக்குவரத்து இடையூறுகளை எதிர் கொண்டிருந்த நிலையில் கிராஞ்சி மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கு என விசேட பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதன்படி காலையில் மாணவர்களை தனியார் பஸ் ஏற்றிச் செல்லும். பிற்பகல் பாடசாலை முடிந்த பின்னர் வழமை போன்று போக்குவரத்துச் சபையின் பஸ்ஸில் மாணவர்கள் வீடு திரும்ப முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சேவையின் மூலம், கிராஞ்சி தொடக்கம் வேரவில் வரை போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. கிராஞ்சி சந்தியிலிருந்து நாளை திங்கட்கிழமை காலை 7.30 தொடக்கம் மாணவர்களுக்காக தனியார் பஸ் சேவையில் ஈடுபடவுள்ளது. மாணவர்களது நலன் கருதி வேரவில் மாதர் சங்கமும் கிராம அபிவிருத்திச் சங்கம் வேரவில் மகா வித்தியாலய அதிபர் ஆகியோர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலமாக அனைத்து மாணவர்களும் பாடசாலைக்குச் செல்லுமாறும் இந்தச் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் சங்கத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் அந்தப் பகுதியில் மாத்திரம் சுமார் 15 மாணவர்கள் வரை பாடசாலைக்குச் செல்வதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கு இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.(வ–4,ரி3)


# VACANCIES @ICBT JAFFNA CAMPUS

ICBT Campus, leading private sector education service provider in Sri Lanka offering a range of International qualifications in association with some of the best universities and education service providers in UK has the following vacancies.

**Centre Manager**

Preferably from the region, male candidates age above 25 years with suitable qualifications may apply. Should have excellent communication and promotional skills. Should be willing to work long hours & be energetic and self motivated. Experience in Educational industry or other relevant experience will be an added advantage.

**Student Counselors**

Candidates above 20 years of age may apply. Should have good communication & Interpersonal Skills. Previous experience in education related services or in hospitality industry would be an added advantage.

**Programme Coordinator**

Ideal candidate should have a bachelors degree from a recognized university. Previous experience in similar capacity will be an added advantage. Should be a person with excellent communication skills, high degree of computer literacy, good analytical skills and capability of multitasking. Ability to work on weekends.

**Marketing Executive**

Candidates above 22 years with suitable qualifications may apply. Should have good communication and interpersonal skills. Previous experience in educational industry will be an added advantage.

**Lecturers (Full Time / Part Time)**

Civil Engineering | Quantity Surveying(QS)

Management | IT | MBA | MSc IT

Bachelor's Degree in respective subject field. Having a Master's Degree , relevant professional qualifications & previous teaching experience will be an added advantage. Pleasant personality with art of teaching. Ability to work on weekends.

**Accounts Executive**

Part qualification in CASL or similar Qualification with minimum of one year experience in accounting field. High degree of computer literacy. Should be a person with good interpersonal skills, who work under minimum supervision and have a positive approach. Should be able to work on weekends.

**Office Assistant**

Education up to GCE O/L's, Age between 18-25 years. Should be willing to go out of office for work related activities when necessary,Ability to speak in English would be an added advantage.

**All candidates should have good command of Tamil & English language.**

Attractive remuneration package above industrial rates and host of other benefits await the right candidates. Please apply with a comprehensive bio data with photo and details of two non-related referees within 7 days of this advertisement. Please mention the position applied for in the top left of the envelope.

ICBT CAMPUS

HR Manager
No. 36, De Krester Place,
R.A. De Mel Mawatha, Colombo 04

hr@icbtcampus.edu.lk


# மடு காட்டினுள் மரம் வெட்டியவர்களுக்கு மன்னார் நீதிமன்று அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 11

மன்னார் மடு காட்டுக்குள் அத்துமீறி நுழைந்து முதிரை மரங்கள் தறித்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது மன்னார் நீதிவான் நீதிமன்று.

கடந்த 6 ஆம் திகதி அதே இடத்தைச் சேர்ந்த 3 பேரும் குறித்த காட்டுக்குள் நுழைந்துள்ளனர். அதன்பின்னர் அங்கு சென்ற வனவளத் திணைக்களத்தினர் குறித்த மூவரையும் மரம் வெட்டிக் கொண்டிருந்த நிலையில் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும், மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில், கடந்த புதன்கிழமை விசாரணைக்கு வந்த குறித்த வழக்கில் அத்துமீறிக் காட்டுக்குள் நுழைந்த 3 பேருக்கும் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டதோடு மரம் வெட்டியதாக அவர்களில் பிரதான நபருக்கு மேலதிகமாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.


வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த 3 பேரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர். அதனையடுத்து அத்துமீறி காட்டுக்குள் நுழைந்த குற்றத்துக்காக 3 பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மரம் வெட்டிய குற்றத்துக்காக பிரதான நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வனவளத் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்ட வாகனத்தை 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 10 லட்சம் ரூபா பிணை முறியிலும் விடுவித்து அது பற்றிய வழக்கை ஒத்திவைத்தது நீதிமன்று. (வ–4)

# புதிதாக மூன்று கிராம செயலகங்கள் இன்று திறப்பு

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் மூன்று கிராம செயலகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன. அரசின் கிராமத்திற்கு பத்து லட்சம் ரூபா என்ற நிதித் திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற நிதியின் மூலம், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிராம செயலகங்களை பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் யாழ். அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் திறந்து வைக்கவுள்ளார். அளவெட்டி வடக்கு ஜே 216, வீமன்காமம் ஜே 236 மற்றும் வறுத்தலைவிளான் ஜே.241 கிராம அலுவலர்கள் பிரிவுகளில் இந்த கிராம செயலகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.இந் நிகழ்வுகளில் வலி வடக்கு பிரதேச செயலாளர் க. ஸ்ரீமோகனன் வலி வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சோ.சுகிர்தன் மேலதிக அரச அதிபர் எஸ்.முரளிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (வ–86)


**British English வகுப்பு ஆரம்பம்**



U.K இல் இருந்து வருகை தந்த MR.KEVIN அவர்களால் A/L பரீட்சை எடுத்த மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச, தனியார் அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்கள், வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கான 04 மாதத்தில் இலகுவாக UK ஆங்கிலம் பேசுவதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பம் : 14.10.2015 புதன் காலை 11.00 மணி

இடம்:SKY Computer, 89, kandy road, Jaffna (Near Kachcheri)

0212224865, 0750698608


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் படுகாயமடைந்த பெண் சிகிச்சை பயனளிக்காது சாவு

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ்.திருநெல்வேலியில் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த பெண் தலையினுள் ரத்தக் கசிவு ஏற்பட்டு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.

எனினும் விபத்துக்குக் காரணமானவர் என்று கூறப்படும் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபரைப் பொலிஸார் இன்னும் கைது செய்யவில்லை என்று குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி திருநெல்வேலிச் சந்தையிலிருந்து, வீதியின் மறுபுறம் சென்றபோது வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள் நபர், குறித்த வயோதிபப் பெண்ணை மோதியுள்ளார். எனினும் உடனடியாகவே அவர் குறித்த பெண்ணை வைத்தியசாலையில் சேர்ப்பித்திருந்தார். அவரது வலது கால் பாதத்துடன் முறிந்தும், இரண்டு கண்களும் வீங்கிய நிலையிலும் சிகிச்சை பெற்று வந்தார். எனினும் குறித்த பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். தலையினுள் ஏற்பட்ட ரத்தக் கசிவு காரணமாக அவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றப் பணிப்புக்கமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். பொலிஸாரும் விசாரணைகளைமேற்கொண்டபின்னர், சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தனர். எனினும் விபத்தை ஏற்படுத்தியவர் என்று குற்றஞ்சாட்டப்படும் நபரைப் பொலிஸார் இது வரை கைது செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## 11 வயது சிறுமியை முத்தமிட்ட புத்த பிக்குக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஒக்.11

பதினொரு வயதுச் சிறுமியைக் கட்டியணைத்து முத்தமிட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட புத்த பிக்குவை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தெகியத்த கண்டிய நீதிவான் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றஞ்சாட்டப்பட்ட புத்த பிக்குவை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தெகியத்த கண்டிய– மொரதெனிய விஹாரையின் புத்த பிக்கு ஒருவர் விஹாரையின் அருகேயுள்ள வீடொன்றிற்குள் புகுந்து தனிமையில் இருந்த 11 வயது நிரம்பிய சிறுமியை கட்டியணைத்து முத்தம் கொடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதனைக் குறித்த சிறுமி பெற்றோரிடம் தெரிவிக்க, பெற்றோர் தெகியத்த கண்டிய பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கு அமைய கைது செய்யப்பட்ட பிக்கு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார். (ற)

## வடக்கு பஸ் உரிமையாளர்கள் சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள்

### *தெரிவு இன்று கிளிநொச்சியில்*

கிளிநொச்சி, ஒக்.11

வடமாகாணத்தை பிரதிபலிக்கும் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைமை சங்கத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் இன்று ஞாயிறு மு.ப. 10 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில், வெளி மாவட்டங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும்பஸ்உரிமையாளர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–


அண்மைக்காலத்தில் வடக்குமாகாணத்தில் போக்குவரத்து தொடர்பாக பல்வேறு ஒழுங்கீனங்களும், வன்முறைகளும் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் பொதுமக் களுக்கு தரமானதும் பாதுகாப்பானதுமான சேவை யினை வழங்குவது மட்டுமல்லாது, பஸ்உரிமையாளர்களின் நலன்களை பாதுகாக்கும் விதமாகவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவது அனை வரும் அறிந்ததே.

நீண்ட காலமாக செயற்படாமல் இருந்த வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், தற்போது புதிதாக நிர்வாகத்தை தெரிவு செய்து மீண்டும் இயங்குவதற்கான தங்களுடைய கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதைத் தாம் வரவேற்பதாக, வடமாகாண போக்குவரத்துத்துறை அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார். (வ–ரி5)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் மகாதேவா (மகான்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் மகாதேவா நேற்று (10.10.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் மனோன்மணி தம்பதியரின் இரண்டாவது மகனும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - அன்னமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் சிவசோதியின் பாசமிகு கணவரும் மங்களகௌரி, மங்களதேவி, மங்களவதனி (ஆசிரியர் ஆலோசகர் - யாழ் கல்வி வலயம்), சசிகலா(முன்பள்ளி ஆசிரியர்) தயாளன் தாரணி ஆகி யோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், பரமேஸ்வரி, ஆனந்தகுமார், மகேந்திரநாதன், சோதிமலர் மற்றும் கந்தசாமி, ஞானேஸ்வரி ஆகியோரின் சகோ தரரும் கிருபாகரனின் மாமனாரும் சஞ்சிகா, சயந்தன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
வதனி - 076 549 4951
கலா - 076 637 0625

## சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் மாத்திரம் 1929க்கு முறையிடுங்கள்

### *சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வேண்டுகோள்*

கொழும்பு, ஒக்.11

சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான பிரச்சினைகளை மாத்திரம் 1929 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு முறையிடுங்கள் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக குறித்த 1929 தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அநாவசியமற்ற முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன என்றும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்தவியாழக்கிழமைகுறித்ததொலைபேசி இலக்கத்திற்கு 1290 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவற்றில் 1202 முறைப்பாடுகள் தேவையற்றவை என்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அவற்றில் சிறுவர்களை பாடசாலைக்கு சேர்ப்பதில் உள்ள பிரச்சினைகள், சர்வதேச பாடசாலைகளின் கட்டணப் பிரச்சினைகள், வீடு, காணி தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நிதிப் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகம் கிடைத்துள்ளன என்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.


இவ்வாறான தொலைபேசி அழைப்புக்கள் கிடைக்கும் போது சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான பிரச்சினைகளை முறையிடும் சந்தர்ப்பங்கள் இழக்கப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆகவே சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான பிரச்சினைகளை மாத்திரம் 1929 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு முறையிடுங்கள் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கேட்டுக் கொண்டுள்ளது. (ற)

## மரண அறிவித்தல்

### குமரேசு சிவசோதி

(தட்டிவான் சோதி - கிருஷிகா பஸ் உரிமையாளர் )



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமரேசு சிவசோதி (குட்டிவான் சோதி கிருஷிகா - பஸ் உரிமையாளர்) 09.10.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசு - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகமுத்து - லட்சுமி (சாவகச்சேரி) தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசேஸ்வரியின் பாசமிகுகணவரும் சுவிற்றி(பிரான்ஸ்), சஞ்சீவன்(Engineer), ஸ்ரான்லி(Q.S), கிருசன்(Q.S), கிருசிகா(SLIIT) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவமணி(பிரான்ஸ்), தெய்வேந்திரம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயக்கொடி மற்றும் சமரக்கொடி(பிரான்ஸ்), ஜீவரத்தினம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுந்தரலிங்கம் (U.S.A), புஸ்பராணி, ஜெகதீஸ்வரி, குணதீஸ்வரி (கனடா), சுதாகரன்(கனடா), சுதர்சன் (ஆஸ்திரேலியா), சுஜீவன்(கனடா), நடேசு ஆகியோரின் மைத்துனரும் ஏலோரி(பிரான்ஸ்), அபிலாஸ்(பிரான்ஸ்), ஆகாஸ்(பிரான்ஸ்), கவிநயா ஆகியோரது அன்பு பேரனும் சசிதரனின் மாமனாரும் விஜிதா மில் உரிமையாளர் களின் சம்பந்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அச்சுவேலி வடக்கு குருக்கள் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று இன்று (11.10.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி வடக்கு வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருக்கள் வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

தகவல்: குடும்பத்தினர்.
077 959 6631, 077 518 0271,
077 322 2712

## சுற்றுலா விசாவில் தொழிலுக்கு செல்வோர் குறித்து விசாரணை

### *அமைச்சர் தலதா அத்துகோரள உத்தரவு*

கொழும்பு, ஒக்.11

சுற்றுலா நுழைவிசைவுகளைப் (விசா) பெற்று குவைத் உட்பட பல நாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளுக்காக நபர்களை அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், அது குறித்து விரிவான விசாரணைகளை நடத்துமாறு அமைச்சர்தலதா அத்துகோரள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்வாறு சுற்றுலா நுழைவிசைவுகளில் குவைத் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த 11 பேர் அண்மையில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணிபுரியும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 4 அதிகாரிகள் இடைக்கால பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

சுற்றுலா நுழைவிசைவில் நபர்களை தொழில் வாய்ப்புகளுக்கு அனுப்பி வைக்கும் வியாபாரத்தின் பின்னணியில், வேலைவாய்ப்பு முகவர் அமைப்புகள், உப முகவர்கள், சில அதிகாரிகளும் உள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இடம்பெற்றுள்ள நிதி முறைகேடுகள் மற்றும் ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்க புதிய பணிப்பாளர் சபை ஒன்றையும் அமைச்சர் தலதா அத்துகோரள நியமித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் அத்துமீறல் தொடர்பில் சர்வதேச உதவியைப் பெறுக

## வாசுதேவ நாணயக்கார எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.11
இலங்கைக்கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்து மீறல்களைத் தடுக்க சர்வதேசசமூகத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்றஉறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்கடந்தவெள்ளிக்கிழமை ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தால் கொண்டுவரப்பட்ட இந்திய மீனவர்களின் அத்துமீறலால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது – சர்வதேச கடற் சட்டங்களுக்கு அமைய, இந்திய மீனவர்கள் இலங் கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவது சட்ட விரோதமானது.



இலங்கையின் போர் தொடர்பான விவகாரங்களில் மட்டுமன்றி இந்திய மீனவர்களின் அத்து மீறல்கள் தொடர்பிலும் சர்வதேச ஒத்து ழைப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

எனினும்இவ்வாறானபிரச்சினைக்கு பேச்சுமூலமாகவே தீர்வு காணப்பட முடியும். இலங்கையில் போர் இடம்பெற்ற காலத்தில் இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக மீன்பிடியில் ஈடுபட்டனர். தற்போது யுத்தம் நிறை வடைந்துள்ள நிலையில் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வினைக் காண சர்வதேச மாநாடு ஒன்றை நடத்தி அதன் ஊடாக உரிய பொருத்தமான தீர்வு காணப்பட வேண்டும். – என்றார். (ற)

# பிரபல நடிகை மனோரமா மாரடைப்பால் காலமானர்

சென்னை, ஒக்.11
பழம் பெரும் நகைச்சுவை நடிகை மனோரமா,(வயது–78)மாரடைப்பால் நேற்றிரவு காலமானார்.



அண்ணாதுரை, கருணாநிதிஆகியாருடன் மேடை நாடகநடிகையாக நடித்து, பின்னர் தமிழ் திரை உலகில் ஆச்சிஎன்று எல்லோராலும் அழைக்கப்பட்டுவந்தநடிகைமனோரமா, மறைந்த நடிகர்கள் எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி கணேசன், நாகேஷ் ஆகியவர்களுடனும், ரஜினி, கமல் ஆகியோருடனும்,தற்போதைய இளைய தலைமுறை நடிகர்களுடன் நடித்து புகழ்பெற்றார்.

ஆயிரத்திற்கும்மேற்பட்ட திரைப்படங்களில்நடித்துகின்னஸ் சாதனை படைத்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன் உடல் நலக்குறைவால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். நேற்றிரவு சிகிச்சை பயனின்றி இறந்தார். இதேவேளை, வாழ் நாள் சாதனையாளருக்கான பிலிம் பேர் விருது, பத்மஶ்ரீ உள்ளிட்ட விருதுகளை நடிகை மனோரமா பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(வ)

## இலங்கைக்கான

நாணய நிதியத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு வலுப்பெற்றுள்ளதாகவும் அது சிறந்த தொரு முன்னேற்றமாகும் எனவும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

188 நாடுகளின் நிதி அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் ஆரம்பமான இந்த மாநாட்டில் சர்வதேச பொருளாதாரம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்படும். இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி வழிமுறைகள் தொடர்பில் இந்த மாநாட்டில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உரையாற்றவுள்ளார் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## தேசிய

தெரிவித்திருந்தது.

இது நல்லாட்சி அரசின் கொள்கைகளுக்கு முரணான செயலாகும் எனவும் ஐ.தே.க. சுட்டிக்காட்டியிருந்தது.

எனினும், சுவரொட்டி மற்றும் பதாகைகள் கட்சியின் தீர்மானத்துக்கு அமையவே காட்சிப்படுத்தப்பட்டன என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. அத்துடன், கட்சித் தீர்மா னங்கள் தொடர்பில் ஜனாதிபதி எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை எனவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கடந்த அமைச்சரவையில், பெரியளவில் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் முடக்கப்படுவதற்கு அமைச்சர்கள் சிலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ராஜித சேனாரத்ன, சம்பிக்க ரணவக்க, அர்ஜுன ரணதுங்க உள்ளிட்டவர்களே பெரியளவில் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் முடக்கப்படுவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்கள். (வ-சி)

## அரசுக்கு

மாறாக மக்களின் எதிர்பார்ப்புக்கள் சிதைக்கப்பட்டுள்ளன. இதனைச் சரி செய்வதற்கு அரசுக்கு ஜே.வி.பி. குறுகிய காலம் வாய்ப்பு வழங்கியுள்ளது. இதற்குள் தனது தவறை சரிசெய்து கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நாடு பூராகவும் பெரியளவில் எதிர்ப்பலையை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

## நாட்டுக்கு

டுள்ளார்.

நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கி நாட்டை பாதுகாப்பது, பாதுகாப்புத் தரப்பினரின் பொறுப்பாகும் என்று அவர் கூறியுள்ளார்.

மனிதாபிமான செயற்பாடுகள், ஒழுக்கம், நேர்மை, தொழில்முறை போன்ற காரணங்கள் சம்பந்தமாக இலங்கை இராணுவத்திற்கு உலகப் புகழ் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்ட அவர், இலங்கை அடைந்த போர் வெற்றியானது உலகிற்கு ஒரு பாடமாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (வ)

## ஐ.நா. தீர்மானம்

சர்வதேச விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைவாக கலப்பு நீதிமன்றப் பொறிமுறையினூடான விசாரணையே இலங்கையில் நடை பெறவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஐ.நா. தீர்மானம் தொடர்பில் உதயனுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசின் சம்மதத்துடனேயே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்ட இலங்கை அரசுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை அரசு தவறவிடக் கூடாது.

ஜெனிவாவில் ஐ.நா. தீர்மானத்தை வழிமொழிந்த நாடுகளில் இலங்கையும் ஒன்று. ஐ.நாவின் சர்வதேச விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

ஐ.நாவின் சர்வதேச விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்ற விசாரணை இலங்கையில் நடைபெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் மறந்துவிட முடியாது.

ஐ.நாவின் சர்வதேச விசாரணை அறிக்கையின் பரிந்துரையை ஆதரித்துத் தான் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக பொதுநலவாய அலுவலக மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், பாதுகாப்பு சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக அங்கீகரிக்கப்பட்ட நம்பகத்தன்மை கொண்ட சுயாதீன நீதிப் பொறிமுறை ஒன்றை உள்நாட்டில் அமைக்குமாறு ஐ.நாவில் அமெரிக்காவின் தலைமையில் நிறைவேற்றிய தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது கலப்பு நீதிமன்றத்தின் ஊடான விசாரணையே இலங்கையில் நடைபெறவுள்ளது. சர்வதேசத்தின் அனுசரணையில் ஐ.நாவின் மேற்பார்வையில் சகல விடயங்களும் நடைபெறவுள்ளன.

இந்த விசாரணை ஊடாக தமிழ் மக்களுக்கு நீதி, தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை பிரகாசமாகியுள்ளது.

இதேவேளை, ஜப்பான் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க[illegible] நாடாளுமன்றில் [illegible]த்துப் பேசினோம். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் உட்பட அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சு நடத்தித் தீர்வு காண்பதற்கு நேரம் தருமாறு பிரதமரிடம் கேட்டுக்கொண்டோம்.

விரைவில் சந்திப்புக்குரிய நேரத்தை ஒதுக்கித்தருவதாக அவர் எம்மிடம் உறுதியளித்தார். எனவே, பிரதமருக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் விரைவில் சந்திப்பு நடைபெறவுள்ளது- என்றார். (வ-சி)

## பொறுப்புக் கூறலை

போர்க்குற்றங்கள் நடைபெற்றதாக ஊடகங்களில் பல ஆவணங்கள் வெளியாகின. இதில் பாலியல் வன்புணர்வு, காணாமற் போதல்கள், சித்திரவதைகள் மற்றும் கொலைகள் என்பன மிகக் கொடூரமானவைகள். இதில் தெளிவாக இருக்கவேண்டும். இரு தரப்புகளும் கொடுமைகளை மேற்கொண்டுள்ளன.

இலங்கையின் இறுதிப் போரில் போர் மரபுகள் பின்பற்றப்படவில்லை. பழைய காயங்களுக்கு வலி இருக்க முடியும் என்பது எமது சொந்த அனுபவத்தின் மூலம் தெரியும். ஆனால் அவர்களின் வலிகள் இன்னும் மோசமாக உள்ளன என்பதை எமது அனுபவம் காட்டுகிறது. உண்மையான நோக்குடன் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கு நம்பகமான செயல்முறையை ஏற்படுத்துவதன் மூலமே இலங்கை அதன் மகத்தான திறனை நிறைவேற்ற முடியும். அதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. ஏனெனில் 2012 ஆம் ஆண்டு நான் அமைச்சுப் பதவிக்கு வந்ததிலிருந்து இலங்கையர்களுடன் நடந்த பல பேச்சுக்கள் மூலம் அது தெரியும்.

எனவே தான் இந்தப் பொறிமுறை மூலம் இலங்கையில் நம்பகமான விசாரணை நடத்தப்படவேண்டும். அதனூடாகப் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்பதில் ஐ.நா மனித உரிமைகள் சபையில் 2013 ஆம் ஆண்டு எமது பிரதமர் டேவிட் கமரூன் உறுதியாக இருந்தார். எனினும் இலங்கை அரசு அவ்வாறு செய்ய விரும்பவில்லை என்று தெளிவான போது, நான் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு ஆதரவு திரட்டுவதற்காக, ஜெனிவா சென்றேன்.

அப்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் அவரது அரசுக்கும் ஆதரவான நாடுகளை எதிர்த்து அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது நல்ல அனுபவமாக அமைந்தது. இந்தத் தீர்மானத்தின் மூலமே ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும் தற்போது இலங்கையின் புதிய அரசு நம்பிக்கையான செயல்முறையை முன்னெடுத்துள்ளமை நம்பிக்கையளிக்கின்றது. இந்த நிலையில் நான் கடந்த மாதம் ஜெனிவாவுக்கு மீண்டும் சென்ற போது, இலங்கை குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் மீண்டு மொரு தீர்மானத்தை கொண்டுவர முயற்சித் தோம். அதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சும் ஆதரவு வழங்கியது. இதனால் அந்த பரிந்துரைகளை இலங்கை முழுமையாக நிறைவேற்றவேண்டும். இது இலங்கையர்களுக்கு உண்மை மற்றும் நீதி [illegible]துவதன் மூலம் அவர்களுக்குச் சட்டத்தின் ஆட்சியில் எதிர்காலத்தில் நம்பிக்கை உண்டாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த கட்டம் சில நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதில் அரசியல் கைதிகளின் விடுதலை, ஊழல் மோசடிகளுக்கு சட்ட நடவடிக்கை,இராணுவ நடமாட்டம் மற்றும் தலையீட்டைக் குறைத்தல் போன்றவற்றை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும். இவை அவசியம் செய்ய வேண்டும்.

இலங்கையின் நம்பகமான செயல் முறைக்குப் பிரிட்டன் தனது பூரண ஆதரவை வழங்கும். இது தொடர்பில் இலங்கை அரசுடன் பிரிட்டன் அடுத்த வாரங்களில் பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளது. நான் 2013 ஆம் ஆண்டு இலங்கை வந்தபோது பல குடும்பங்களைச் சந்தித்தேன், அவர்கள் தமது உறவினர்களைக் காணவில்லை என என்னிடம் முறையிட்டனர். தம்து உறவுகள் உயிருடன் இருப்பது கூடத் தெரியாது எனச் சுட்டிக்காட்டினர். எனவே சில சந்தர்ப்பங்களில் அவர்களின் தேடுதலுக்கு நீதி வேண்டும். ஆனால் அவற்றுக்கு மேலாக அவர்களுக்குப் பதில் கொடுக்க வேண்டியிருந்தது.

ஐந்தாயிரம் மைல்கள் தாண்டி ஜெனிவா சென்று இரண்டாயிரம் வார்த்தைகள் கொண்ட தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம். எனவே அவற்றை இலங்கை அரசு நடைமுறைப் படுத்துவதன் மூலம் தான் நீண்ட கேள்விக்கு பதில் கிடைக்கும் என்றார்.

(த-வ)

## கொழும்புத்

பதவிக்கு வந்த பின்னர், இடைநிறுத்தப்பட்ட பெரும்பாலான திட்டங்கள் மீள ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் இலங்கைக்குப் பெரிய நன்மைகளை வழங்கும் திட்டமாகும். இதன் மூலம் 82,000 பேருக்கு வேலைவாய்ப் புகளை வழங்க முடியும். இந்தத் திட் டம் தாமதமடைவதால் அதில் முதலீடு செய்த நிறுவனங்கள் நட்டத்தை எதிர் நோக்கியுள்ளன. இது தொடர்பாக அவர்கள் எமக்கு முறைப்பாடு செய் தார்கள். இந்தவிடயம் தொடர்பாகவும் இலங்கை அரச தலைவர்களுடன் பேசப் பட்டது.

இது தொடர்பிலான நிதி செலவு மீளாய்வு செய்யப்படுவதாகவும், இந் தத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப் படலாம் என்ற சமிக்ஞையும் அரச தரப்பிலிருந்து வெளிப்படுத்தப் பட்டது.

எதிர்காலத்தில் இலங்கையில் அடிப்படை வசதிகளை மேம் படுத் துவது உட்பட அபிவிருத்தித் திட் டங் களை சீனா முன்னெடுக்கவுள் ளது. சீன சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவது அதிகரித்துள்ள நிலையில், இங்கு சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கும் சீன அரசு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

கடல் வழிப் பட்டுப்பாதை திட்டம் தொடர்பாகவும் பேச்சுகள் நடத்தப்பட்டன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சு நடத்திய போது, அவரை சீனா வருமாறு அழைப்பு விடுத்தோம். அதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டார். இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவு எமது பயணத்தின் மூலம் வலுப்பெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்படிக்கட்டில் சிக்கி 4 வயதுச் சிறுவன் சாவு

## சீனாவில் பரிதாபச் சம்பவம்

பீஜிங், ஒக்.11

சீனாவின் தென்மேற்கில் உள்ள சாங்குயிங் நகரில் மின் படிக்கட்டில் எதிர்பாராத விதமாக சிக்கி 4 வயது சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.




சாங்குயிங் நகரில் உள்ள மெட்ரோ ரயிலுக்கான டிக்கெட் எடுக்கும் அறைப் பகுதியில் தாய், 4 வயது மகன் மற்றும் 3 வயது மகளுடன் சென்றார்.

அப்போது குழந்தைகள் நகரும் மின் படிக்கட்டு எஸ்கலேட்டர் அருகே விளையாடிக் கொண்டிருந்த போது திடீரென சிறுவனின் கை நகரும் மின் படிக்கட்டில் சிக்கி கொண்டது. அதைத்தொடர்ந்து இழுத்துச் செல்லப் பட்ட அவன் தரைக்கும், படிக்கட்டின் கை பிடிக்கும் இடையில் உள்ள பகுதியில் விழுந்து விட்டான்.

அதனால் அவனது மார்பு பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது.

அதை தொடர்ந்து, அங்கிருந்த ஊழியர்கள் நகரும் படிக்கட்டின் இயக்கத்தை நிறுத்தி, சிறுவனை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இருப்பினும், சிறுவனைப் பரிசோதித்த வைத்தியர்கள் சிறுவன் ஏற்கனவே இறந்து விட்டான் என்று தெரிவித்தனர். இந்தச் சிறுவனின் உயிரிழப்பு பலரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ற)




காசா மற்றும் கான் யூனிஸ் நகரங்களில் இஸ்ரேல் ராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 15 வயது சிறுவன் உட்பட 6 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் 80 பேர் காயம் அடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தெற்கு இஸ்ரேலிய நகரான டிமோனாவில் நான்கு பேர் கத்திக்குத்துக்கு உள்ளாகினர் என்றும் அவர்களில் இருவர் பாலஸ்தீனியர்கள் என்றும் மற்ற இருவரும் அரபு இஸ்ரேலியர்கள் என்றும் இஸ்ரேலிய பொலிஸ் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஒரு இஸ்ரேலியர் கைது செய்யப்பட்டுள்ளதையடுத்து, இச் சம்பவம் மோதலாக உருவெடுத்தது என்றும் இதனை ஒடுக்க ராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே குறித்த 15 பேரும் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. தற்போது இச் சம்பவமானது அப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (ற)

# சிரிய கிளர்ச்சியாளருக்கு பயிற்சிகள் இடைநிறுத்தம்

## அமெரிக்கா தெரிவிப்பு

வொஷிங்டன், ஒக்.11

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக போராடிவரும் சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கும் 580 மில்லியன் டொலர் மதிப்பிலான திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அமெரிக்காவின் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பென் ரோதிஸ் தெரிவித்துள்ளார்.



சிரிய போராளிகளுக்கு தொடர்ந்து போர்ப்பயிற்சி அளிப்பதில் இருக்கும் சிக்கல்களை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும், புதிய கொள்கையின் அடிப்படையில், தேர்வு செய்யப்பட்ட முக்கிய தலைவர்களுக்கும் அவர்களது குழுக்களுக்கும் இனி போர் ஆயுதங்கள் மட்டும் விற்பனை செய்யப்படும் என்று அவர் கூறியுள்ளார்.


ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக போர் தொடுப்பதாக கூறி ரஷ்யாவும் களத்தில் இறங்கியுள்ளமை அமெரிக்காவுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு புறம் அமெரிக்கா, நவீன ஆயுதங்களின் பலத்தைப் பரிசோதிப்பதற்காகவே சிரியாவில் ரஷ்யா காலடி பதித்துள்ளது என்று கூறினாலும், மறுபுறம் ஆயுதம் விற்றுப் பணம் சம்பாதிக்கும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற)

# நான்ஜிங் படுகொலை ஆவண கோப்புக்கு ஜப்பான் எதிர்ப்பு

டோக்கியோ, ஒக்.11

சீனாவின் நான்ஜிங் நகரில் நடந்த போர்க்கால படுகொலைகள் தொடர்பான ஆவணங்களை சர்வதேச ஆவணக் கோப்பு ஒன்றில் சேர்க்கும் ஐ.நாவின் கலாசார பாரம்பரியங்களுக்கான நிறுவனத்தின் முடிவுக்கு ஜப்பான் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.



1937ஆம் ஆண்டில் நான்ஜிங் நகரை ஜப்பானிய படையினர் கைப்பற்றியபோது நடந்த பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் கொலைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் சீனாவின் ஆவணங்களை யுனெஸ்கோவின் உலக நினைவுகளுக்கான பதிவேட்டுக் காப்பகம் ஏற்றுக்கொண்டது.

சீனாவின் முன்னாள் தலைநகரான நான்ஜிங்கில் சுமார் 3 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர் என்று சீனா கூறுகின்றது. சிப்பாய்கள் அல்லாத பெருமளவிலானவர்கள் கொல்லப்பட்டதை ஏற்றுக்கொள்ளும் ஜப்பானிய அரசு யுனெஸ்கோவின் இந்த ஆவணக் கோப்பு அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் படக் கூடாது என்று கேட்டுக்கொண்டுள்ளது. (ற)

### கலங்கரை விளக்கு அமைக்கும் பணி தென்சீனக் கடலில் நிறைவு

சர்ச்சைக்குரிய தென்சீனக்கடல் பகுதியில் கலங்கரை விளக்கம் கட்டும் பணியை சீனா நிறைவுசெய்துள்ளது என்று அந்தநாட்டுச் செய்திநிறுவனமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கலங்கரை விளக்கங்கள் நிறைவு பெற்றதை கொண்டாடும் நிகழ்ச்சி அங்குள்ள ஹுயாங் ரீஃப் மற்றும் சிகுவா ரீஃப் பகுதிகளில் நடத்தப்பட்டன என்றும் அந்தச் செய்திநிறுவனம் தெரிவித்துள்ளது.

தென் சீன கடல்பகுதி முழுவதும் தங்களுக்கே சொந்தம் என சீனா உரிமை கொண்டாடி வருகின்றது. எனினும் வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் தங்களுக்கும் அந்த பகுதியில் பங்கு உண்டு என்று தெரிவித்து வருகின்றன.

அங்கு கட்டுமானப்பணிகளை சீனா மேற்கொண்டதற்கு அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன. (ற)





# அமெ. ஆரம்பிக்கும் போரை எதிர்கொள்ளும் வடகொரியா

## அந்த நாட்டு ஜனாதிபதி தெரிவிப்பு

பியோங்யாங், ஒக்.11

அமெரிக்கா ஆரம்பிக்கும் எந்தவொரு போருக்கு எதிராகவும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வல்லமை வட கொரியாவுக்கு இருக்கின்றது என்று அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார். ஆளும் பாட்டாளிகள் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தலைநகர் பியோங்யாங்கில் [illegible] நடைபெற்று பெரும் [illegible] களின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நினைவு தினத்தையொட்டி, ஆயிரக்கணக்கான ராணுவ வீரர்கள் அவருக்கு முன்னால் அணிவகுத்துச் செல்ல, போர்த் தாங்கிகளும் ஏவுகணைகளும் பொதுமக்களின் பார்வைக்காக அணிவகுத்துச் சென்றன.

பின்னர், பாடசாலை மாணவர்கள் அடங்கலாக ஆயிரக் கணக்கான [illegible] களை [illegible] நடனமாடியவாறும் ஊர்வலமாகச் சென்றனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனமழையின் காரணமாக தத்தளிக்கிறது கரோலினா

## இதுவரை 17 பேர் சாவு

நியூயோர்க், ஒக்.11

தென் கரோலினாவில் தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

கரோலினாவின் தென் பகுதி மற்றும் நான்கு கரையோரப் பிராந்தியங்களில் கடந்த ஒன்பது நாள்களாகத் தொடர்ந்தும் கன மழை பெய்து வருகின்றது. கரோலினாவில் தொடர்ந்து பெய்து வரும் வரலாறு காணாத மழையால், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் நூற்றுக் கணக்கான வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

வெள்ள நீர் மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதால், வீதிகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பெருகியுள்ள வெள்ள நீரானது அத்திலாந்திக் கடலை நோக்கி வேகமாக நகர்கின்றது. அதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெருந்தொகையிலான மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஜேம்ஸ்டவுனில் உள்ள சன்ரி நதிக்கு அருகில் வசிக்கும் சுமார் 140 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக பெர்க்லி மாவட்ட செய்தித் தொடர்பாளர் மைக்கெல் மியூல் தெரிவித்தார்.

தொடர்ந்து பெய்து வரும் கன மழையின் காரணமாக தென் கரோலினா பகுதிகளில் வெள்ள நீர் மட்டம் இரண்டு அடிக்கும் அதிகமாக உயரும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ற)

## இலவச கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

1) பொறியியல் கற்கைநெறி

* தகைமை - க.பொ.த. உயர்தரம் கணிதப்பிரிவில் 3 பாடங்கள் சித்தி ஒரே அமர்வு அவசியமற்றது
* பயிற்சி நடைபெறும் இடங்கள் - திறந்த பல்கலைக் கழகம் யாழ்ப்பாணம், புதுக்குடியிருப்பு
* பயிற்சிக் காலம் - 5 வருடங்கள்

2) தாதியர் பயிற்சி

* தகைமை - க.பொ.த உயர்தரம் 2 பாடங்களில் சித்தி
* பயிற்சி நடைபெறும் இடங்கள் - மானிப்பாய், பாசையூர், தனியார் தாதியர் பயிற்சிக் கல்லூரிகள்
* பயிற்சிக்காலம் - 3 வருடங்கள்

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி -**
**செரண்டிப் சிறுவர் இல்லம்,**
**இல, 1009, திருநகர் தெற்கு, கிளிநொச்சி.**
**தொடர்பு : 0778278463, 0776372695**

(65340)(11.15.17)

## கணக்கியல் உதவியாளர் தேவை

எமது நிறுவனத்தில் கணக்குகள் சம்பந்தமான நடைமுறைகளை செயற்படுத்துவதற்காக கணக்கியல் உதவியாளர் ஒருவர் தேவைப்படுகின்றார்.

அவரிடமிருந்து பின்வரும் தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

* கல்வித்தகைமை

I. க.பொ.த உயர்தரத்தில் வர்த்தக துறையில் கல்வி பயின்று இருக்க வேண்டும். முக்கியமாக கணக்கியல் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

II. அல்லது NCAT/AAT பாடநெறியில் கணக்கியல் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

III. அல்லது க.பொ.த சாதரணதரத்தில் வணிகக்கல்வி A சித்தியும் கணிதபாடத்தில் C சித்தியும் பெற்றிருத் தல் வேண்டும்.

* வயதெல்லை 29 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* விடுமுறை வாரத்தில் இரு நாள்கள் வழங்கப்படும். அவை சனி, ஞாயிறு தவிர்ந்த நாள்களாக இருக்கும்.
* சம்பள அளவுத்திட்டம்

முதல் 3மாத காலப்பகுதிக்கு - 20 000/= (All inculsive)
பின்னர் - 25 280/= (All inculsive)

* முன்னனுபவம் தேவையில்லை.
* இதுவொரு கள வேலையாகவே இருக்கும்.அதாவது வடமாகா ணத்தின் அனைத்து பகுதிகளும் சார்ந்த களவேலையாகவே அமையும்.

**தொடர்பு : நிர்வாக உத்தியோகத்தர்**
**JK Construction Engineering (PVT Ltd)**
**Vavuniya**
**077 874 8314**

(65340)(14.15.16)

## Biztech Lanka (Pvt) Ltd

50/1, Kandy Road, Jaffna. Sri Lanka.

www.biztech.lk

### Senior .NET Developer

C#/ ASP .NET/ MVC/ SQL Server

Biztech Lanka Privet Limited is an innovation and solutions organisation based in jaffna. We are also planning to expand our business branch in Colombo soon.

we are currently looking for developers who are interested to work in jaffna initially.

Our current team is small as we are new start up. Therefore, you will be working along with them and you will have to be a logical thinker with a customer focused approach who can prioritise their workload and have a good attention to details.

You should have a strong background with .NET stack including MS SQL, ASP.NET, and C#. Also experience in Entity Framework, Front End technologies (such as HTML, JavaScript and CSS AJAX etc...)

**Our Requirements:**

1. Very strong experience in C#, ASP.NET 4.5, MVC, WebForms.
2. Skills with jQuery / HTML5 / CSS3 / Bootstrap and if you know Angularjs that will be advantage.
3. Good knowledge of WEBAPI'S
4. Creative, logical thinker and self-motivated person
5. Experience of the full project lifecycle.

**Packages :** Salary of Rs. 60,000 to Rs. 100,000 monthly

**GENERAL**

Applicant are required to forward a complete curriculum vitae & names fp 2 referees and email to : **careers@biztech.lk**

**0212217800**

(65335)(10.15.17)

## இயந்திரமோ ஒன்று! வேலையோ பல !!

**3D ஹீட் பிறஸ் மெசின்**

விசேட விலைக்கழிவுடன்

**கிடைக்கும் இலாபமோ மிக அதிகம் !!!**

Studio ,Colour Lab, Book Shop,Gift Centers, Communication.. போன்ற வியாபார ஸ்தலங்களிற்கு உகந்தது







பிரின்ட் செய்யக்கூடிய சகல பொருட்களும் எம்மிடம் உண்டு மக், பிலேற், ரிங் போத்தல், ஸ்ரோன்ஸ், ரீ சேர்ட், டைல் போன்றவற்றில் பிறின்ற் செய்யக்கூடியது

**077 385 0089**
**077 201 5330**

**WINRICH INTERNATIONAL(PVT)LTD**
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

max adz

## குளவி கொட்டியதில் நால்வர் படுகாயம்

தென்மராட்சிப்பிரதேசத்தில் அண்மையில் மழை பெய்தமையடுத்து, பனை மரங்களிலிருந்து விழும் ஓலைகளுக்குள்ளிருந்து புறப்படும் கருங்குளவிகள் வீதிகளில் செல் வோரைத்தாக்குகின்றன. இதில் நேற்றுமுன்தினம்வெவ் வேறு இடங்களில்கருங்குளவிகளால்தாக்கப்பட்ட மூன்று பெண்கள் உட்பட நால்வர் சிகிச் சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

இதில் வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த சிதம்பர நாதன் ரஞ்சித பாமா (வயது–57) மந்துவில் மேற்கைச் சேர்ந்த தங்கவேலு யோகமலர் ( வயது–51) கிருஷ்ணராஜா தங்கரத்தினம்(வயது–53) சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த தங்கராசா ஜெய ரூபன் (வயது–21 ) ஆகியோரே சிகிச்சைக்காக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ–9)

## வரும்காலம் மழைகாலம் நீர்கசிவைத் தடுப்போம்

வரும் காலம் மழைகாலம் என்பதனால் தங்கள் வீடுகள் வியாபார ஸ்தாபனங்களில் உள்ள சிமெந்திலான கூரைகள் நீர்த் தொட்டிகள் ஆகியவற்றில் ஏற்படும் நீர்க்கசிவை நிரந்தரமாக தடுப்பதற்கும் மற்றும் கம்பிகள் துருப்பிடிப்பதால் விழுந்துள்ள சிமெந்துப் படையை உத்தரவாதத்துடன் சீர் செய்து கொள்வதற்கும் நாடுங்கள்.

NORTH AND EAST ENGINEERING
No. 55, Stanley Road, Jaffna.
(பிப்பில் லீசிங்குக்கு முன்பாக)

FINCO

**021 222 2363, 077 524 4177, 077 756 8686**

## ELECTRONI C VACANCY

வவுனியாவிலுள்ள இலத்திரனியல் (ELECTRONIC) நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு வெற்றிடம் உள்ளது.

01. ELECTRONIC TECHNICIAN
02. ELECTRONIC ENGINEER
03. ELECTRONIC DESIGNER

**உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்.**

தொடர்புகளுக்கு- N.N. Jackshon
076 7676 772, 071 7171 810
Email: jfffsi@jfffsi.com

## தேவை

யாழ்ப்பாணத்திலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தில் "தபோவனம்" என்ற 6 ஏக்கர் தென்னந்தோப்புடன் கூடிய வீட்டுடனான காணியை அவ்வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கேற்ற நற்குணமுள்ள, பொறுப்பும் அனுபவமும் நிறைந்த தனிநபர் அல்லது குடும்பத்துடனான ஆர்முள்ளவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். மேலும் இக்காணிக்கு அருகில் போக்குவரத்து வசதிகள், மின்சார வசதிகள், பாடசாலை வசதிகள் என்பனவும் உள்ளன.

மாதாந்த வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

குறிப்பு : மதுபாவனை அற்றவர்களும் ஆன்மீகத்துறையில் ஈடுபாடுள்ளவர்களும் மிகவும் விரும்பத்தக்கது. தங்கள் சேவையில் திருப்தி ஏற்படும் பட்சத்தில் மேலும் சலுகைகள் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு :பேராசிரியர் தயாசோமசுந்தரம்**
**தொலைபேசி இலக்கம்:**
077 5609200, 077 8210113

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள். யாரும் படிக்கலாம்.

ஆரம்பம் விரைவில்... உடன் அழைத்து பதியவும்...

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## தேவை

இலங்கையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், வங்கிகள் மற்றும் பல நிறுவனங்களுக்கு பயிற்சியுள்ள பயிற்சியற்ற ஆண்கள்/ பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. சாறி அணியும் பெண்கள் விரும்பத்தக்கது. வயது 18 - 55 சம்பளம் OT யுடன் 35, 000/= சாப்பாடு தங்குமிடம் இலவசம் தேவைப்படும் பிரதேசங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மன்னார் மற்றும் சகலபிரதேசங்களுக்கும் மொழி அவசியமில்லை. வருகை தரும் நாளில் சேர்க்கப்படுவீர்கள்.

**தொடர்பு:**
**076 801 6129,**
R.S International Job Centre
No- 48A1/1
Hill Street, Magaragama Road,
Dehiwala, Colombo.

## வாடகைக்கு

இல.144, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (K.K.S வீதிக்கு அருகில்) பாதுகாப்பான பெரிய பிளாட் (கீழ்) கடை வாடகைக்குண்டு.
தொடர்பு:
0112363113, 0771526874, 0775361370

## அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தையில் அறைகள் நாள் வாடகைக்கு 600/=, 1200/=, 2500/=, A/C, TV - 4000/= (Attached Bathroom) காலி வீதிக்கு முகப்பாக இராமகிருஷ்ண பெட்ரோல் ஷெட்டிற்கு அருகில்.
Hotel Villa - 0114999944, 0722552222

## அமெரிக்க விசா லொத்தர்

A/L தகுதியுடையவர்கள் விசா லொத்தர் மூலம் அங்கு குடியேறலாம்.
BBS NETTING
(19238)
(14.15.16) தொடர்பு: 077 581 1106

## Majestic Cineplex Jaffna

**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.30 / 2.30 / 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

**விசாரணை ☎ 021- 2227712**

CeylonTheatres
www.ceylontheatres.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிச்மனிடம் வீழ்ந்தது சென்.ஜோன்ஸ்
# தவறியது இறுதிக்கனவு

யாழ்ப்பாணம், ஒக். 11
நடப்பு வருடத்தின் முரளிக் கிண்ணத் தொடர் கடந்த புதன்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாவது அரையிறு தியாட்டத்தில் 7 இலக்குகளால் சென்.ஜோன்ஸை வீழ்த்திய ரிச்மன்ட் கல்லூரி இறுதி யாட்டத்துக்கு தகுதிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ரிச்மன்ட் கல்லூரி அணி களத்தடுப்பைத் தீர்மானிக்க ஆரம்பவீரர்களாக சஜீந்திரன் மற்றும் பிளமிங். இருவருமே 28 ஓட்டங்களை பெற்றிருந்தாலும் சஜீந்திரன் சிறிது அதிகம் நிதானித்து விட்டார். தற்பொழுது சென்.ஜோன்ஸ் 61–2. மூன்றாம் நிலை வீரரான மணிவண்ணன் 21 பந்துகளை எதிர்கொண்டு வெறும் 10 ஓட்டங்களை பெற்றார். மத்திய வரிசை வீரர்கள் எவரும் நிலைப்பதாயில்லை. அருளானந்தம் 4 ஓட்டங்களுடனும் துவாகரசீலன் 8 ஓட்டங்களுடனும் அமரசேன 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க சென்.ஜோன்ஸின் தடுமாற்றம் ஆரம்பமானது. இலக்குச்சரிவுகளால் சென்.ஜோன்ஸின் சராசரியும் ஸ்தம்பிதமாக 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகள் இழப்புக்கு 120 ஓட்டங்களையே பெறமுடிந்தது. பந்துவீச்சில் ரிச்மன்ட் சார்பாக தீக்சனா 5 இலக்குகளையும் எதிரிவீர, லக்ஸ்சன், உடேசன், மென்டிஸ் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

120 பந்துகளில் 121 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரிச்மன்ட் கல்லூரி அணிக்கு அந்த அணியின் ஆரம்ப வீரர்களே பலமான தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தனர். மத்திய வரிசை வீரர்களும் பதின்மங்களில் தடம்பதித்து தமது பங்களிப்பை வழங்க முடிவில் 18.3 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் இலக்கை அடைந்து 7 இலக்குகளால் வெற்றி பெற்றது ரிச்மன்ட் கல்லூரி. அதிகபட்சமாக லக்சன் 31 ஓட்டங்களையும் பிம்சாரா 25 ஓட்டங்களையும் சமிக்க 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் சார்பாக வசந்தன், ஜெயக்குமார், குலேந்திரன் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (ம)




## முரளி கிண்ணத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 11
கடந்த புதன்கிழமை முதல் நடைபெற்றுவந்த நடப்பு வருடத்தின் முரளி கிண்ணத்தொடரின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

ஆண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் ரிச்மன்ட் கல்லூரியை எதிர்த்து ஆனந்தாக் கல்லூரி அணி மோதவுள்ளது. ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 1.40 மணியளவில் இந்த ஆட்டம் ஆரம்பமாகும்.

பெண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் இணைந்த மகளிர் அணியை எதிர்த்து நிட்டம்புவ மகளிர் அணி மோதவுள்ளது. (ம)

# இணைந்த மகளிரிடம் வீழ்ந்தது சக்தி மகளிர்



யாழ்ப்பாணம், ஒக். 11
நடப்பு வருடத்துக்கான முரளிக் கிண்ணத் தொடரின் பெண்கள் பிரிவில் மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற நேற்றைய ஆட்டமொன்றில் சக்தி மகளிர் அணியை 8 இலக்குகளால் வெற்றி பெற்றது இணைந்த மகளிர் அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சக்தி மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க ஆரம்ப வீராங்கனைகளாக மேனகா மற்றும் பீரிஸ். மூன்றே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பீரிஸ். பெரேரா, முதுமாலி இருவரும் 5 ஓட்டங்களைத் தாண்டவில்லை. நீண்ட இடைவேளையின் பின்னர் போராட்டம் காட்டினார் சன்ஜனா. பின்வரிசை வீராங்கனைகளும் சொதப்ப முடிவில் சக்தி மகளிர் அணி 105–6. அதிகபட்சமாக மேனகா 39 ஓட்டங்களையும், சன்ஜனா 19 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் இணைந்த மகளிர் அணி சார்பாக ஜெயவர்தன 3 இலக்குகளையும் அனாலி, டில்காரி, செவாண்டி மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

எட்டக்கூடிய இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இணைந்த மகளிர் அணிக்கு ஆரம்ப வீராங்கனையும் அணித்தலைவியுமான மாதவி மிகையான நம்பிக்கை கொடுத்தார். ஏனைய வீராங்கனைகளும் சுமாரான பங்களிப்பை வழங்க அரைச்சதம் கடந்தார் மாதவி. தலைமை இன்னிங்ஸ் தொடர்ந்தும் நிதானிக்க 13.2 பந்துப்பரிமாற்றத்தில் 2 இலக்குகள் இழப்புக்கு இலக்கை அடைந்தது இணைந்த மகளிர் அணி. அதிகபட்சமாக மாதவி இறுதிவரை ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும் சில்வா 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சக்தி மகளிர் அணி சார்பாக நதீசா, ரதுநாயக்க இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (ம)

# இறுதிக்குச் சென்றது ஆனந்தா
## முரளிக் கிண்ணத்தில் சேனநாயக்கவை வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஒக். 11
நடப்பு வருடத்தின் முரளிக் கிண்ணத் தொடர் கடந்த புதன்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் சேனநாயக்க கல்லூரியை 6 இலக்குகளால் இலகுவாக வீழ்த்தி இறுதிக்குச் சென்றது ஆனந்தாக் கல்லூரி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சேனநாயக்க கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க ஆரம்ப வீரர்களாக விஜயசேகர மற்றும் ரட்நாயக்க. விஜயசேகரவின் அதிரடி மூலம் கிடைக்கப்பட்ட ஓட்டங்கள் ரட்நாயக்க அதிகப்படியான பந்துகளை வீணடித்ததன் மூலம் சரிசெய்யப்பட்டது. மொத்தத்தில் இலக்குச் சரிவு ஏற்படாமல் இருந்தமை ஒன்றே சேனநாயக்கவுக்கு சாதகமாக அமைந்திருந்தது. அரைச்சதம் கடந்து விடைபெற்றார் விஜயசேகர. தற்பொழுது அணியின் ஓட்ட எண்ணிக்கை 89. ரட்நாயக்கவும் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர்கள் இருவரைத் தவிர வேறெந்த வீரர்களும் நிலைக்கவில்லை. ஜெயலத்தின் பந்தில் திக்குமுக் காடி ஒருவர்பின் ஒருவராக பவி லியன் சென்றுகொண்டிருந்தனர். 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சேனநாயக்க கல்லூரி அணி 146–7. பந்துவீச்சில் ஆனந்தா கல்லூரி அணி சார்பாக ஜெயலத் 5 இலக்குகளையும் எரங்க, அஞ்சுல இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



எட்டக்கூடிய இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆனந்தாக் கல்லூரிக்கு முன்னிலை வீரர்கள் எவரும் நிலைக்கவில்லை. ஆரம்ப வீரர்கள் உட்பட முன்வரிசை வீரர்கள் எவரும் நிலைக்கவில்லை. தற்பொழுது ஆனந்தா 46–4. வெற்றியின் விளிம்பில் இருந்த சேனநாயக்க கல்லூரியிடம் இருந்து வாய்ப்பை பறித்து வந்தார்கள் கக்கல்ல மற்றும் அஞ்சுல. 46 ஓட்டங்களின் பின்னர் இலக்குகள் எவையும் வீழ்த்தப்படவில்லை. இணைப்பாட்டமாக 103 ஓட்டங்களைப் பகிர்ந்து வெற்றிக்கு வித்திட்டனர். அதிகபட்சமாக அஞ்சுல 56 ஓட்டங்களையும் கக்கல்ல 39 ஓட்டங்களையும் இறுதிவரை ஆட்டமிழக்காது குவித்தனர். பந்துவீச்சில் சேனநாயக்க கல்லூரி சார்பாக சில்வா, டானியேல் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (ம)



*யாழ். மாவட்ட செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன. (ம)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைந்த மகளிர் அணிக்கு 89 ஓட்டங்களால் அபார வெற்றி

நடப்பு வருடத்துக்கான முரளிக் கிண்ணத் தொடரின் பெண்கள் பிரிவில் மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற நேற்றைய ஆட்டமொன்றில் பொலநறுவை மகளிர் அணியை 89 ஓட்டங்களால் வீழ்த்தியது இணைந்த மகளிர் அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இணைந்த மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீராங்கனைகள் இருவரும் அசத்தலான தொடக்கம் கொடுத்தனர். நூறு ஓட்டங்கள் தாண்டியும் முதல் இலக்குச் சரிக்கப்படவில்லை. இணைப்பாட்டமாக 118 ஓட்டங்கள் பதிரப்பட்டிருந்த வேளையில் 38 ஓட்டங்களுடன் விடைபெற்றார் சில்வா. சக ஆரம்ப வீராங்கனையும் அணித்தலைவியுமான மாதவி அதிரடியில் மிரட்டிக் கொண்டிருந்தார். அவர் அரைச்சதத்தை பதிவுசெய்து ஆட்டமிழக்காதிருக்க முடிவில் இணைந்த மகளிர் அணி 168–3. அதிகபட்சமாக மாதவி 71 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் பொலநறுவை மகளிர் கல்லூரி அணி சார்பாக முது மலி ஒரு இலக்கைக் கைப்பற்றினார்.

15 பந்துப்பரிமாற்றத்தில் 169 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நோக்கி பதிலுக்குதுடுப்பெடுத்தாடிய பொலநறுவை மகளிர் கல்லூரி 8 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக எல்.முதுமலி 23 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் இணைந்த மகளிர் அணி சார்பாக அனாலி, டில்கெரி, ஜெயவர்தன மூவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (ம)

## காணி வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள இரண்டு பரப்பிற்கு சற்று குறைவான காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
076 9011662 அல்லது 077 405 6474

## வேலைவாய்ப்புக்கள்

உங்கள் மனம் விரும்பும் வேலை கிடைக்கவில்லையா?
பல நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்றும் பலன் இல்லையா?
கவலையை விடுங்கள்!
உங்கள் கனவுத் தொழிலை நனவுத் தொழிலாக்க உடன் தொடர்பு கொள்ளுங்கள்
WIN STAR JOB BANK
(முதற்தர வேலைவாய்ப்பு ஆலோசனை நிலையம்)

- Accountant
- Office works
- Cashier
- Security
- Executives
- Marketing

வேலைதேடும் புத்திசாலிகளின் தேர்வு WINSTAR JOB BANK மட்டுமே

(65512)(10.15.17)

**WIN STAR JOB BANK**
106, Palaly Road, Thirunelveli. 021 320 2789

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

புலமைப்பரிசில் கற்றும் அனைவருக்கும்

அடிப்படையில் இருந்து என்ஜினியரிங் கற்கைநெறிகள் வரை

Typing, Ms Office 2013, Web design, DTP, AutoCAD(2D,3D & House Plan)
Internationally recognized Engineering (Hardware / Server Network / Software / Web)
பதிவுகளுக்கு : கல்வியங்காட்டு சந்தியில் MCAI CAMPUS
SMS Your name & Course to 775520940 & Get Schol.

## Group Classes

- ELOCUTION வகுப்புகள்
- சிங்கள வகுப்புகள்
- Key board Classes
- G .C.E (A/L) English Medium வகுப்புகள்
- London (A/L) & (O/L) (Edexcel) வகுப்புகள்
- Grade 1 - 8 (English Medium) Sci., Maths, English வகுப்புகள்
- சர்வதேசப் பாடசாலைக்கான பிரத்தியேக வகுப்புகள்
- Icing Classes
- Abacus வகுப்புகள்
- Spoken English

என்பன மாலை நேர மற்றும் சனி,ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றன

**BEEFORT INTERNATIONAL SCHOOL**
# 136, Navalar Road, Jaffna | Tel: 0115925923
Colombo : #27, St.Lucia's Street, Colombo 13
Trinco : #59A, Green Road, Trincomalee
Manipay : #248, Jaffna Road, Manipay

BRITISH COUNCIL



ENGLISH FOR CHILDREN
Young Learner and Teen classes
Weekdays / Saturdays

ENGLISH FOR ADULTS
General English, Spoken English and IELTS classes
Weekdays / Sundays

Term 4 14 October to 20 December

Contact us for more information

www.britishcouncil.lk

## சமையலாள் தேவை

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்படவுள்ள ரெஸ்ரோறன்ட் ஒன்றுக்கு 23 வயதுக்கு மேற்பட்ட முழுநேரமாக வேலை செய்யக் கூடிய ஆண் சமையலாள் தேவை. 15.10.2015 இற்கு முன்னர் தங்கள் சுயவிவரத்தை பின் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்
16, கண்டி வீதி, வவுனியா.
T.P: 077 313 6262

(65344)(10.17)

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

தனியார் தொலைத் தொடர்புசேவை ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

மேலதிக தொடர்புகளுக்கு
airtelcbajaffna@gmail.com
217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(65342)(10.17)

## FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

FLC

## பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1002 மாணவர்கள் French கற்றுள்ளனர்...
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781

| No. 40, பலாலி வீதி, ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 17.10.15 சனி 10 மணி | பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 19.10 @ 4pm | கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 21.10 @ 4pm |
|---|---|---|

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

## விரைவான வேலை ! நிறைவான இலாபம் !!

## ஜூஸ் பக்கெட் மெசின்




தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD




இந்திய -தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முத லாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. கான் பூரில் உள்ள கிரீன் பார்க் மைதானத்தில் பகல் ஆட்டமாக காலை 9 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகும்.(ம)

புவியியல்
J.துஷிராஜ்

துரித மீட்டல் வினாவிடை வகுப்பு
திங்கள் 4 - 6 pm

A/L 2017
செவ்வாய் 3 pm

A/L 2016
செவ்வாய் 4 pm

கண்ணி மூல கற்பித்தல் செயற்பாடுகள்

யூனிவேர்சல்
சுந்தரம்பட்.

(65528)(10.17)

## வாடகைக்கு/குத்தகைக்கு

மருதனார் மடச்சந்தியில் உள்ள மொத்த சில்லறை விற்பனை நிலையம் வாடகைக்கு/ குத்தகைக்கு விடப்படும்.
தொடர்பு: 071 976 4514

(62158)(14.15.16)

## இத்தாலி மொழி

புதிய பிரிவுகள் - 12.10.2015
21, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
0771327818

## After O/L, A/L உங்கள் எதிர்காலம்?

உங்கள் எதிர்கால கனவுகளை நனவாக்க ஓர் அரிய வாய்ப்பு....!
மலேசியாவில், சர்வதேச அங்கீகாரம் பெற்ற Diploma கல்வித்தகைமையுடன் இரண்டு வருட வேலைவாய்ப்பையும் (with good salary) பெற்றுத்தரும் Znfinity Education
மேலதிக தொடர்புகளுக்கும் இலவச செயலமர்வு முற்பதிவுகளுக்கும்

1/65D, 1st குறுக்குத்தெரு, வவுனியா.
072 0756761
072 0756765

(63897)(10.15.17)

## ரைல்ஸ், மாபிள் வேலை செய்து கொடுக்கப்படும்

திறமையான வேலையாள்களால் தரமான வேலை எம்மால் செய்து கொடுக்கப்படும்
1 சதுர அடிக்கு 50/=

அழையுங்கள்-
077 329 1745
(நுவான்)

## மீண்டும் வந்தார் மலிக்

பாகிஸ்தான். அணியின் முன்னாள் தலைவரும் சகலதுறை வீரருமான மலிக் 5 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ளார்.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர்எதிர்வரும்13ஆம் திகதி அபுதாபியில் தொடங்குகிறது. அதில் விளையாடவுள்ளபாகிஸ்தான் அணியில் 16ஆவது வீரராக மலிக் இடம்பெற்றுள்ளார். இங்கிலாந்து தொடருக்காககடந்தமாதம் அறிவிக்கப்பட்ட 15 வீரர்கள் கொண்ட அணியில் மலிக்இடம்பெறவில்லை. ஆனால் அவர் சிறந்த போர்மில் இருப்பதோடு, அனுபவம் வாய்ந்த வீரரும்கூட.அதனால்அவரை அணியில் சேர்க்குமாறு அணி நிர்வாகம் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்துஅவர்16ஆவது வீரராக சேர்க்கப்பட்டுள்ளார்எனபாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. மலிக் இறுதியாக 2010 ஆம் ஆண்டு டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடியிருந்தார்.

(ம)

## Jaffna Central College Education Care Trust

## யாழ். மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்

**தரம் 6 முதல் A/L வரை தமது கல்வியைத் தொடரும் 20 மாணவர்களுக்கு அனுசரணை**

**யாழ் மத்திய கல்லூரி ஆரம்பித்து 200 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு இந்தத் திட்டம் எம்மால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.**

- 2016 ஆம் கல்வி ஆண்டுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள்
- நிலையத்தால் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்பறைகள் வழங்கப்படும்.
- புலமைப்பரிசில் வெகுமதிகள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் மாதாந்தம் தலா 1200 ரூபா.
- விண்ணப்பதாரிகள் 170 புள்ளிகளுக்கு மேல் புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றிருக்க வேண்டும்.


விண்ணப்ப முடிவு திகதி : 30.11.2015
தொடர்பு : S.Sukirathan - 021 2222184
விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்
யாழ்.மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பிதழ் 11.10.2015



# இந்தியாவின் கள்ள மௌனத்துக்கு காரணம்தான் என்ன?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பழ.நெடுமாறன்

# இந்தியாவின் கள்ள மௌனத்துக்கு காரணம்தான் என்ன?

இன அழிப்புக் குறித்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சாசனத்தில் இலங்கை கையெழுத்திட வேண்டும்.

- போர்க்குற்றம், மனித குலத்துக்கு எதிரான குற்றம், இன அழிப்பு மற்றும் கடத்திச் சென்று காணாமற் போகச் செய்தல் ஆகியவை கடுமையான குற்றங்கள் ஆகும் என இலங்கை அரசு சட்டமியற்ற வேண்டும்.
- விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் இலங்கை இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டவர்கள் தற்போது எங்குள்ளார்கள்? அவர்களின் நிலை என்ன? என்பது வெளிப்படையாக அறிவிக்கப்படவேண்டும்.
- பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக இலங்கை அரசு மீள் பரிசீலனை செய்யவேண்டும்.
- இராணுவம் ஆக்கிரமித்துள்ள தனியார்களின் நிலங்கள் உரியவர்களிடம் மீளக் கையளிக்கப்படவேண்டும்.
- இலங்கையில் மனித உரிமை நிலவரங்களைக் கண்காணிப்பதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் கிளை ஒன்றை நிரந்தரமாக நிறுவுமாறு இலங்கை அரசு அழைக்க வேண்டும்.
- புலனாய்வுப் பிரிவுகள் உட்பட இலங்கை ஆயுதப்படைகளின் கட்டளைச் சங்கிலியில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் யார் என்பது பகிரங்கமாக வெளிப்படுத்தப்படவேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் அமைத்த விசாரணைக் குழு அளித்த பரிந்துரைகளில் முக்கியமானவை இவை.

மேலும் உணவு, மருந்து ஆகியவற்றையும் ஆயுதமாக இலங்கை அரசு பயன்படுத்தியது. மருத்துவமனைகள் குறிவைத்துத் தாக்கப்பட்டன, சரணடைந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்பது போன்ற குற்றச்சாட்டுக்களும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆனாலும், அமெரிக்கா, பிரிட்டன், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் மேற்கண்ட கொடுங்குற்றங்களைப் புரிந்தவர்களைச் சர்வதேச நீதிமன்றத்தின் முன் குற்றவாளிகளாக நிறுத்தி விசாரித்து உரிய தண்டனைகளை வழங்கவேண்டும் என வலியுறுத்துவதற்குப் பதில் இலங்கை அரசே இது குறித்து விசாரிக்கலாம் எனக் கூறியதை மற்ற நாடுகளின் பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டு ஏக மனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளன.

கடந்த காலத்தில் 1963ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை 18 விசாரணை ஆணைக் குழுக்களை இலங்கை அரசு அமைத்துள்ளது. அவற்றில் பெரும்பாலானவை தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்து விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டவை.

கடைசியாக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு, காணாமல்போனவர்களைப் பற்றிய விசாரணைக்காக நியமிக்கப்பட்டது. ஆனால், போர்க்குற்றங்கள் குறித்தும் இந்த ஆணைக்குழு விசாரிக்கலாம் என அதன் பணியை இலங்கை அரசு பின்னர் விரிவாக்கியது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் சயிட் அளித்தவிசாரணை அறிக்கையில்,காணாமல் போனவர்கள் குறித்து இலங்கை அரசு அமைத்த விசாரணை ஆணைக்குழுவின் மீது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு நம்பிக்கையில்லை, எனவே, இதன் அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இலங்கை அரசு அமைத்த விசாரணை ஆணைக்குழுவின் மீது நம்பிக்கை இன்மையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரே தெரிவித்த பிறகும், போர்க்குற்றங்கள் குறித்த விசாரணையை இலங்கை அரசிடமே ஒப்படைப்பது என அமெரிக்காவும் பிற நாடுகளும் முடிவு செய்திருப்பது நகைப்புக்கிடமாகும்.

இலங்கைக் குடியரசுத் தலைவராக மைத்திரிபால பதவியேற்றதன் பிறகு நிலைமை மாறியிருப்பதாகவும், திருந்திவருவதாகவும் அமெரிக்கா வாதாடுகிறது. ஆனால் உண்மை என்ன?

ஐ.நா. விசாரணைக் குழுவின் அறிக்கையில் மனித உரிமை மீறலில் ஈடுபட்ட முக்கியமானவர்களின் பட்டியல் இடம்பெற்றிருந்தது. மேலும், இலங்கைக்கு எதிராகப் பல கடுமையானக் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டு பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டிருந்தது. ஆனால், தன்னுடைய அரசு இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தியது, ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால் இவற்றைத் தடுத்திருக்க முடியாது என்று இலங்கை அதிபர் மைத்திரிபால செப்டம்பர் 18ஆம் திகதியன்று நடைபெற்ற இலங்கைப் பத்திரிகையாசிரியர்கள் மற்றும் தொலைக்காட்சி இயக்குநர்கள் கூட்டத்தில் கூறினார்.

இலங்கையின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச விசாரணையை அனுமதிப்பது என்பது இலங்கையின் நீதித்துறையை அவமதிப்பதாக அமையும், எனவே ஒரு போதும் சர்வதேச விசாரணையை ஏற்றுக் கொள்ளமுடியாது என பிரதமர் பதவியை ஏற்றவுடனேயே அறிவித்திருந்தார்.

2009ஆம் ஆண்டு போர் உச்சக்கட்டமாக நடைபெற்ற காலத்தில் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ராஜபக்ச அந்தப் பதவியின் அடிப்படையில் முப்படைகளின் தலைமைத் தளபதியாகவும் திகழ்ந்தார். தற்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால போரின் இறுதிக் கட்டத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சராகப் பதவி வகித்தார்.

இராணுவத்தின் தலைமைத் தளபதியாகத் திகழ்ந்த பொன்சேகா, முள்ளிவாய்க்காலில் தமிழர்களைக் கொடூரமான முறையில் கொலை செய்த 57ஆவது படைப்பிரி வுக்குத் தலைமை தாங்கிய மேஜர் ஜென ரல் ஜெகத் டயஸ் மற்றும் பல்வேறு படைப் பிரிவுகளின் தளபதிகளும் அந்தப் போரில் நிகழ்த்தப்பெற்ற இனப்படு கொலைகள், மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்களே. ஆனால், மைத்திரிபால ஜனாதிபதி யாகிவிட்டார். தலைமைத் தளபதி பொன்சேகாவிற்கு பீல்ட் மார்ஷல் பட்டம் வழங்கப்பட்டு அவர் பெரு மைப்படுத்தப்பட்டுள்ளார். ஜெகத் டயஸ் இராணுவத்தின் தலைமைத் தளபதியாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். மற்றத் தளபதிகளும் அவ்வாறே பதவி உயர்வுகளும் விருதுகளும் பெற்றுள்ளனர். கொடிய குற்றங்களைப் புரிந்தவர்கள் இப்போது மிக உயர்ந்த பதவிகளில் வீற்றிருக்கிறார்கள். இவர்களை உள்நாட்டு விசாரணைக்கு உட்படுத் தினால் என்ன நடக்கும்? எதுவும் நடக்காது. அனைத்தும் மூடி மறைக்கப்பட்டு தண்டனை பெறவேண்டியவர்கள் தப்பித்து விடுவார்கள்.

அமெரிக்காவின் போக்கில் ஏற்பட்ட இந்த மாற்றத்திற்கு என்ன காரணம்?

கடந்த காலத்தில் 2012, 2013, 2014ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக் கூட்டங்களில் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என வலியுறுத்திய அமெரிக்கா, அதற்காக விசாரணை ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என வற்புறுத்தி, அத்தகைய ஆணையத்தை அமைத்து, அந்த ஆணையமும் இலங்கை அரசின் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை சுமத்தும் அறிக்கையை அளித்த பிறகு, சர்வதேச நீதி விசாரணை மன்றம் அமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்த வேண்டிய அமெரிக்கா, தனது போக்கைத் தலை கீழாக மாற்றிக் கொண்டு இலங்கை அரசே விசாரணை நடத்தினால் போதும் எனக் கூறுவதன் பின்னணி என்ன?

இந்துமா கடலில் முக்கிய இடத்தில் இலங்கை அமைந்திருக்கிறது. இலங்கையை எந்த நாடு தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறதோ அந்த நாடு இந்தியாவையும் கட்டுப்படுத்த முடியும். தென்னாசிய நாடுகளையும் கட்டுக்குள் கொண்டுவர முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக இந்துமா கடல் அதனுடைய கண்காணிப்பு வலையத்துக்குள் வந்து சேரும்.

இந்த நோக்கத் துடன் அமெரிக்காஇலங்கையில் சீன ஆதிக்கத் தைக் கொண்டு வந்த ராஜபக்சவை அகற்றிவிட்டு மைத்திரிபாலவைக் கொண்டு வருவதற்கு மறைமுகமான உதவிகள் அத்தனையும் செய்தது. அது விரும் பியபடியே ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்ட பின்னர், அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு விட்டது. ஏகாதிபத்திய நாடான அமெரிக்கா தனது நோக்கத்தை மாற்றிக்கொண்டதில் வியப்பில்லை. ஆனால், காந்தியடிகளை தேசத் தந்தையாகக் கொண்ட இந்தியாவின் பிரதிநிதி தனது மிக அண் மையில் உள்ள ஒரு நாட்டில் நடைபெற்ற இனப்படுகொலை, மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் ஆகியவை குறித்துப் பேசாமல் 13ஆவது சட்டத் திருத்தத்தை வலியுறுத்திப் பேசியமை, இந்தப் பிரச்சினையிலிருந்து நழுவிச் செல்லும் முயற்சியே ஆகும்.

பேச வேண்டிய நேரத்தில் பேசவேண்டியதைப் பேசாமல் பிரச்சினைக்கு சம்பந்தம் இல்லாமல் பேசுவதும் ஊமை போலவாய்மூடிக் கிடப்பதும் ஒன்றுதான். உலகில் எந்தவொரு நாட்டிலும் எந்த இன மக்கள் பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்காகச் சுதந்திர இந்தியா குரல் கொடுத்தது. அதற்குக் காரணம், முதலாவது பிரதமர் நேரு ஆவார்.

எடுத்துக்காட்டாக, தென்னாபிரிக்காவில் கருப்பர்களுக்கு எதிரான நிற வெறிக் கொள்கையை வெள்ளை அரசு கடைப்பிடித்தபோது அந்த அரசை பொதுநலவாய நாடுகள் அமைப்பிலிருந்து வெளியேற்ற வேண்டும் என ஓங்கி ஒலித்து வெளியேற்றிய பெருமை நேருவையே சாரும்.

அதேபோல, அவரது மகளான முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி வங்கதேச மக்கள் பாகிஸ்தான் இராணுவத்தின் இனப்படு கொலைகளுக்கு ஆளான போது, இந்திய இராணுவத்தை அனுப்பி வங்க தேசம் விடுதலை பெற உதவினார்.

வியட்நாம் பிரச்சினை பாலஸ்தீனப் பிரச்சினை சூயஸ் கால்வாய் பிரச்சினை, கொரியப் பிரச்சினை போன்ற உலகப் பிரச்சினைகளில் ஆதிக்க நாடுகளுக்கு எதிராக அஞ்சாமல் குரல் கொடுத்த இந்தியாவின் குரல் இப்போது அடங்கிப்போனது ஏன்?

ஈழத் தமிழரின் கதறலும் அவர்களுடன் தொப்புள் கொடி உறவு பூண்ட தமிழக மக்களின் ஓலக் குரலும் செவிப் பறைகளைக் கிழித்தபோதிலும், எதுவும் நடவாதது போல இந்தியா கள்ள மௌனம் சாதிப்பது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலி தந்த பனையைப் பாதுகாப்போம்!

முகுந்தன்

பட்டுக்கோட்டை அருகே பனங்காடு மிகுந்த குக்கிராமத்தில் பனை ஓலையும் எழுத்தாணியும் கொண்டு அரிச்சுவடி படித்தேன். பின்னர், மன்னார்குடியில் படித்தபோது ஆசிரியர் கேள்வி கேட்பார். பதில் தயாராக வராது. ஆசிரியர் பரிகாசமாகப் பாடுவார்: "பனை மரமே பனை மரமே ஏன் வளர்ந்தாய் பனை மரமே" என்று.

அன்றே பனை மரம் கேலிப் பொருளானது. பதில் சொல்லத் தெரியாத பாமர மாணவரைவிட ஆசிரியர் பனை மரத்தின் பயன் அறியாத பாமரனாக இருந்தார். காகிதங்கள் தோன்றாத காலத்தில், எழுத்தறிவைச் சுமந்த ஏடுகள் அறிவின் சின்னம். ஏடு என்ற சொல்லின் வேர் பனை ஓலை அல்லவா? அறிவுப் பசியைப் பன்னெடுங்காலமாகப் போக்கிய பனை மரங்களே ஏடுகளின் தாய். பனை மரங்களின் பலன்களை அறியாத மக்களே பாமரர்கள்.

கடந்த தலைமுறையில் திருக்குடந்தை அருணாசலப் புலவர் எழுதியுள்ள "தால விலாசம்" பனையின் 801 பயன்களைப் பற்றிக் குறிப் பிட்டுள்ளதாகத் தகவல் உண்டு. "தால விலாசம்" என்றால், "பனையின் முகவரி" என்று பொருள்.

இன்று தங்கத்தில் தாலி செய்கிறார்கள். மஞ்சள் நாணில் திருமாங்கல்யத்தைக் கோத்துக் கழுத்தில் அணிவது தாலி. பனங்காட்டுப் பண்பாட்டில் பழந்தமிழர்கள் பனை ஓலையில் மணமகள் பெயரை எழுதி, சுருட்டி; துவாரமிட்ட மணமகள் காதில் அணிவார்களாம். அதுதான் தாலி. காதணி விழாவும் கல்யாணமும் ஒன்றாக நிகழ்ந்தன. "தால" என்றால் "இலை" என்று பொருள். பனை ஓலையும் இலைதானே! ஆகவே, பனை மரம் தால மரமாயிற்று! தாலி வழங்கிய மங்கல மரமும் அதுவே. பழந்தமிழ் மன்னர்களின் குலச் சின்னம் பனை மரம்.

பழந்தமிழர் வாழ்வில் பனை மரமே பணம் தரும் மரம். அன்று கரும்புச் சர்க்கரை தோன்றவில்லை. இனிப்புக்கு இலுப்பைப் பூவும், பனங் கருப்பட்டியுமே பயனாயிற்று. போதைக்கு அன்று சாராயம், கசிப்பு இல்லை. பனம் கள் மட்டுமே பயனாயிற்று. படை வீரர்களுக்கு மன்னர்கள் பனம் கள் வழங்கியதைப் புறநானூறு தெரிவிக்கிறது. கலங்கல் என்பது பனங்கள். மன்னர்கள் கலங்கல் வழங்கினராம். மற்றொரு பாடல்,

"கள்ளின்வாழ்த்தி கள்ளின் வாழ்த்தி காட்டொடு மிடைத்த சியாமுற்றில்" (புறநானூறு 316) மன்னன் வழங்கிய கலங்கலைக் குடித்து விட்டுப் படை வீரர்கள் கள்ளை வாழ்த்தினர். பனங்கள் மிகவும் அரிய சித்த - ஆயுர்வேத மருந்து என்பதை அறியாத பாமரர்கள் நாம். என்ன சாப்பிட்டாலும் எடை ஏறாமல் பலம் குன்றியவர்கள் கள்ளைக் குடித்து நல்லுணவு உண்டால் பலசாலியாவார்கள். வயதுக்கு ஏற்ற எடை ஏறும். சுவாச கோசம், நீரிழிவு நோய்களுக்கு மருந்து. போதைக்கான வேதியல் கலக்காமல் சுத்தமான கள் மருந்து. சுத்தமான கள்ளில் போதை குறைவு. 'பீர்' போல் தான் கள்.

மதுபானக் கடைகளில் விற்கப்படும் பிராந்தி, விஸ்கி, ரம், ஜின் எல்லாம் சுத்தமானவை அல்ல. மொலாசஸ்ஸிலிருந்து பிரித்தெடுக்கப்படும் அல்கஹோலின் அடர்த்தியைக் குறைத்து விஸ்கி, பிராந்தி, ரம் ஆகியவற்றின் நிறம் கெராமல் என்ற சாயத்தினால் பெறப்படுகிறதாம்.

பிராந்தியை திராட்சை ரசத்திலிருந்தும், பார்லி மால்ட்டிலிருந்து விஸ்கி, ஜின்னும் பெற வேண்டும். இப்போது மக்காச் சோள மால்ட் பயனாகிறது. ரம் மட்டும் கரும்புச் சாறிலிருந்து பெற வேண்டும். மேலை நாடுகளில் சுத்தமான சரக்கு பெற வாய்ப்புண்டு. ஆனால், உள்ளூரில் விற்கப்படும் பலவற்றில் மொலாசஸ் + கெராமல் கலப்புதான்.

இலுப்பைப் பூக்களிலிருந்து பழங்குடி மக்கள் தயாரிக்கும் சாராயம்கூட தீமையளிக்காது. மதுபானங்கள் எல்லாம் நின்று கொல்லும் விசம். அவற்றைவிடப் பனங்கள் நூறு மடங்கு உயர்ந்த பானம். சங்க காலத் தமிழர்கள் பனங்கள் பருகி திடமுடன் வாழ்ந்ததால், மனித நல வாழ்வுக்குப் பனை மரங்களை வளர்க்க வேண்டும் என்று புறநானூறில் 323ஆவது பாடல் கூறுகிறது.

சங்க காலத் தமிழ் மன்னர்கள் பனை மரங்களை வளர்த்தனர். பனை மர வளர்ப்புக்கு இன்றைய அரசு திட்டமிடவில்லை. பன்னாட்டு நிறுவனங்களை அழைத்துத் தொழில் முதலீடு செய்யும்படி வற்புறுத்தும் அரசுகள், பனை மரம் வளர்த்தல் போன்ற பல்வேறு குடிசைத் தொழில்கள் வழங்கும் வேலை வாய்ப்புகள் பற்றி கவனம் செலுத்தாதது ஏன்?

பனை நுங்கு அமெரிக்க - ஐரோப்பிய சந்தைகளைக் கவரக் கூடியது. பனை நுங்கு ஜாமை லண்டனில் உண்டதாகக் கூறும் குமரி அனந்தன், லண்டனில் பனை நுங்கு 123 ரூபாய்க்கு விற்பதாகத் தெரிவித்தார். தாய்லாந்திலிருந்து பனம் பழச்சாறு, நுங்கு, நுங்கு ஜாம் ஆகியவை ஐரோப்பியச் சந்தையைப் பிடித்துள்ளதாம்.

அப்படிப்பட்ட ஐரோப்பியச் சந்தையை நாம் பிடித்துவிட்டால் பனை மரம் பண மரமாகுமே! உள்நாட்டிலும் பனை சார்ந்த தொழில்களை வளர்க்கலாமே. பனை வளர்த்துக் கோடையில் மக்களுக்கு நுங்குகளை வழங்கினால், உள்ளம் குளிர்ந்து பனை வளர்த்த தலைவர்களுக்கு தேர்தலில் வாக்களிப்பார் களே! பனை தரும் பொருள்களில் ஏழைக்கேற்ற சத்துணவும் உண்டு. அதுவே பனங்கிழங்கு. கிராமங்களில் பெண்கள் பனங்கொட்டைகளைச் சேகரித்து மண்ணில் நெருக்கமாக நடவு செய்வார்கள். பனங்கொட்டை நட்ட 100ஆவது நாளிலிருந்து அறுவடை செய்யலாம்.

ஒரு பனம் பழத்தில் ஒன்று முதல் மூன்று விதைகள் இருக்கும். ஒரு பழத்திலிருந்து ஒன்று முதல் மூன்று கிழங்குகள் கிட்டும். இப் பனங் கிழங்குகளைச் சுட்டுத் தின்னலாம். வேக வைத்தும் உண்ணலாம். பனங்கிழங்கில் புரதச் சத்துடன் நிறைய கல்சியமும், பொஸ்பரஸும் உண்டு. இயற்கையான சத்துணவு. 75 சதவீதம் மாவுச் சத்தும் உள்ளதால் நல்ல சக் தியை அளிக்கும்.

தால விலாசம் எழுதிய அருணாசலப் புலவர் பனையை ஓர் அற்புத மூலிகை என்றும், கற்பக விருட்சம் என்றும் வர்ணித்துள்ளார். பனை ஓலை, பனம் பூ, பூந்தண்டு, பதநீர், கள், கருப்பட்டி, பனங்கற்கண்டு, நுங்கு, பழம், பனங் கிழங்கு, பனை வேர் எல்லாமே நாட்டு மருந்துச் சரக்குகள். ஒவ்வொன்றுக்கும் தனித் தனியான குணம் உண்டு.

சங்க காலத் தமிழர்களுக்குக் காசநோய் வந்தால், பனங்கள் கொடுத்து குணப்படுத்துவார்களாம். அன்று பனங்கள்ளே 'ஸ்ட்ரப்டோ மைசின்'.

நூறாண்டு வைரம் பாய்ந்த பனை மரம் கருந் தேக்கு. அந்தக் காலத்தில் கொங்கிரீட் வீடுகள் ஏது? வளைவு ஓடுகள் கொண்ட ஓட்டு வீடுகளுக்கு வைரம் பாய்ந்த பனங்கைகள், உத்திரம், தூண்களாகப் பயனாயிற்று. பனை மரம் கனம் நிரம்பிய உறுதியான மரம். பனை மரங்களை நெருக்கமாக நட்டு உயிர்வேலி எழுப்பிவிட்டால் யானை கூட உள்ளே நுழையாது. காட்டுப் பகுதிகளில் விவசாயம் செய்வோர் பனை மர உயிர்வேலி அமைப்பது நன்று.

பனை மரங்களுக்கு இவ்வளவு பயன்பாடு இருந்தும் நாம் பெற்ற நாகரிகம் பனை மரங்களுக்கு உதவுவதா யில்லை. இது கொங்கிரீட் யுகம். பனை ஓலை வேயப்பட்ட குடிசைகள், ஓட்டு வீடுகள் எல்லாம் காணாமல் போய் விட்டன.

ஏழை மக்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகளை வழங்கக் கூடிய பனை மரம், அன்று தமிழர்களின் குலச் சின்னமாயிருந்தும்கூட, இன்று பாழ்பட்டது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பு, அன்பு மட்டுமே வேண்டும்!

அ. கோவிந்தராஜ்

அன்பு ஆற்றல் மிக்கது. பிளவுபட்ட குடும்பம் ஒன்று ஒரு குழந்தையின் அன்பால் சேர்வது உண்டு. காதலனுக்கு மண்ணில் மாமலையும் ஒரு சிறு கடுகாய் தோன்றக் காரணம், காதலி காட்டும் அன்பின் வலிமைதான்.

மனைவி காட்டும் தன்னலமற்ற அன்பு, நெறி கெட்டுச் செல்லும் கணவனை நல்வழிப்படுத்தும் ஆற்றல் மிக்கது.

இன்றளவும் குடும்பம் என்னும் கட்டுக்கோப்பு குலையாமல் இருப்பதற்குக் காரணம், அன்னை பொழியும் அன்பின் வலிமைதான். குடும்பத் தலைவனாய் விளங்கும் தந்தை ஓய்வின்றி உழைப்பதும் ஆழ்மனதில் கிடக்கும் அன்பின் பேராற்றலால்தான்.

சாதி, மதம், இனம் பாராமல் அன்பு காட்ட வேண்டும். மற்ற எல்லா உயிர்களிடத்தும் அன்பைப் பொழிய வேண்டும். பகைவரையும் மன்னித்து அன்பு செய்ய வேண்டும்.

இந்த அன்பு நெறியைத்தான் நின்னோடு ஐவரானோம் என்று குகனையும், நின்னோடு அறுவரானோம் என்று அனுமனையும், நின்னோடு எழுவரானோம் என்று விபீடணனையும் இராமன் தம்பியராக்கிக் கொள்வதாய் கம்பன் படைத்துக் காட்டுகிறான்.

இவ்வன்பு நெறி தழைக்குமாயின் உலக மாந்தர் மகிழ்ச்சியுடனும் அமைதியுடனும் வாழலாம்.

அளவுக்கு விஞ்சினால் அமிர்தமும் நஞ்சே. இக்கூற்று அன்புக்கும் பொருந்தும். தாயும் தந்தையும் தம் குழந்தைகளிடத்து அளவுக்கு அதிகமான அன்பைச் செலுத்தி, அதாவது செல்லம் கொடுத்து, குழந்தையின் போக்குக்கு விட்டு, பின்னர் துன்பப்படுவதுண்டு. கண்மூடித்தனமான அன்பு என்று ஒரு வகையும் உண்டு. இது மிகவும் ஆபத்தானது. இது காலப்போக்கில் வெறியாக மாறிவிடும்.

> “நம் நாட்டில் இல்லறம் என்பது வற்றாத அன்பின் அடிப்படையில் அமைவது. ஆயினும், அவ் வற்றாத ஊற்று வரதட்சணைச் சிக்கல்களால் வறண்டு போவதைப் பார்க்கிறோம். செல்வ மகளையும் கொடுத்து, செல்வத்தையும் கொடுக்க ஏழைத் தந்தையால் இயலுமா?

மொழியின் மீது அன்பு இருக்க வேண்டும். மொழி வெறியாக மாறக் கூடாது. மதத்தின் மீது அன்பு இருக்க வேண்டும். ஒருபோதும் மத வெறியாக மாறுதல் கூடாது.

நம் நாட்டில் இல்லறம் என்பது வற்றாத அன்பின் அடிப்படையில் அமைவது. ஆயினும், அவ் வற்றாத ஊற்று வரதட்சணைச் சிக்கல்களால் வறண்டு போவதைப் பார்க்கிறோம்.

செல்வ மகளையும் கொடுத்து, செல்வத்தையும் கொடுக்க ஏழைத் தந்தையால் இயலுமா? பாரதியார் கண்ணம்மாவை நோக்கி, அன்பொழுக “செல்லமடி நீ எனக்கு சேமநிதி நானுனக்கு” என்று கூறுவதைப்போல, அன்பு காட்டி மணம் புரியும் இளைஞர் கூட்டம் பெருக வேண்டும்.

வள்ளுவர் கூறுவதுபோல், அன்பு பண்பாகவும், அறம் பயனாகவும் உள்ள இல்லங்கள் பெருகின், நாட்டில் நலம் பெருகும், அமைதி நிலவும்.

கிணற்று நீர் இறைக்க இறைக்கத்தான் ஊறும். அதுபோல், அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டினால் அன்பு பெருகும்.

பிற உயிர்களிடத்து அன்பு காட்டி, அதனால் கிடைக்கும் இன்பத்தைச் சுவைக்க வேண்டும். இவ்வின்பத்தைச் சுவைத்தவர் தாயுமானவர். “அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலைதானே வந்தெய்தும் பராபரமே” என்று கூறுகிறார்.


காக்கை குருவிகள் எங்கள் ஜாதி - நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம் என்று அஃறிணைப் பொருள்களிடத்தும் அன்பு காட்டியவர் பாரதியார்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று அன்பின் மிகுதியால் நெஞ்சு நெக்குருகப் பாடியவர் வள்ளலார்.

முன்னர் ஒருசமயம், அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் சுவாமி விவேகானந்தர், சகோதர அன்போடு, அமெரிக்க நாட்டுச் “சகோதரர்களே, சகோதரிகளே” என்று தொடங்கி உரையாற்றியபோது, அங்கிருந்தோர் தம் மெய்மறந்து செவிமடுத்தார்கள்.

நாடு, மொழி, இனம் கடந்து எல்லா நாட்டினரும் நம் உடன் பிறந்தார் என ஒவ்வொருவரும் எண்ணி வாழத் தொடங்கினால், உலகில் போர் ஏது, பூசல் ஏது?

அண்மைக் காலமாக மனித மனங்கள் பாலைவனங்களாக மாறி வருகின்றன. இறைவன் அன்பு மயமானவன் என எல்லா மதங்களும் போதிக்கின்றன. மனித நேயமும் அன்பும் மீண்டும் பெருக் கெடுக்க வேண்டும், அதற்கான வழிகளைச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இப்போது உள்ளோம்.




# மேய்ப்பன் எங்கிருந்து வருவான்

சாம் ரமேஸ்குமார்

பூமிக் கிரகம்
உருண்டு கொண்டிருக்கின்றது......
காலம்
சுழன்று கொண்டிருக்கின்றது......
நம் ஆயுள்
முடிவை நோ[illegible]
தர்மம்
எம்மை வாவா என்று
அழைக்கின்றது......
அதர்மமும்
எம்மை வாவா என்று
அழைக்கின்றது......
இடையில் - எம் மனம்
திக்கித் தவிக்கின்றது......
சிங்கங்கள் ஆன நாம்
ஆட்டு மந்தைகள் ஆனோம்
மேய்ப்பன்
எங்கிருந்து வருவான்......
எம்மை - எம்
ஆன்மாவில் எப்போது
தூக்கி
நிலை நிறுத்துவான்......
இதையறிந்த யோகிகள்
நிச்சயம்
எம்மிடம் வந்து சொல்லுங்கள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்னெலிகொட கடத்தல்; அம்பலமாகும் உண்மைகள்




■ அதிரன்

பிரபல ஊடகவியலாளர் எக்னெலிகொட கடத்தல் விவகாரத்தில் இப்போது புதிய திருப்பங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தக் கடத்தலுடன் படைத் தரப்புக்கு நேரடித் தொடர்பு உள்ளமை இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது. இந்தக் கடத்தலுடன் தொடர்புடையதாக இதுவரை 11 படையினர் கைதாகி விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ராஜபக்ச ஆட்சியில் கடத்தப்பட்ட பலர் தடுத்து வைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் கிரிதல படைமுகாமிலேயே ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவும் கடத்தப்பட்டுத் தங்கவைக்கப்பட்டுள்ளார் என்ற தகவல் இப்போது தெரியவந்துள்ளது.

பிரகீத் எக்னெலிகொட இலங்கையின் ஊடகவியலாளரும், கேலிச்சித்திர ஓவியரும் ஆவார். சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்த இவர் லங்காநியூஸ்.கொம் இணையத்தளத்தின் ஊடகவியலாளராகப் பணியாற்றியவர். இவர் ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் கொஸ்வத்தை என்ற இடத்தில் வைத்துக் காணாமற் போனதாகக் கூறப்படுகின்றது. இவர் இலங்கை அரசு சார்பானவர்களால் கடத்தப்பட்டதாக அவரது குடும்பத்தினர் நம்புகின்றனர், ஆனாலும் இதனை அப்போதைய அரசு மறுத்தது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரகீத் முன்னொரு தடவையும் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை மையப்படுத்தி போர் ஒன்றை வெற்றி கொள்வதற்கான இரகசியங்கள்' என்ற 40 நிமிட நேர ஆவணத் திரைப்படத்தைத் தயாரித்தவர்களில் இவரும் ஒருவர்.

தனது கணவர் காணாமற்போன விடயம் தொடர்பிலான இராணுவ அதிகாரிகளை சி.ஐ.டியிடம் கையளிக்குமாறு எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட முன்னர் இராணுவத்திடம் வேண்டு கோள் விடுத்திருந்தார்.

இராணுவ அதிகாரிகள் சிலருக்கு இவ்விடயம் தொடர்பில் தொடர்பு உள்ளதாகத் தனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் தனது கணவர் கிரிதல அல்லது மின்னேரியா அல்லது மட்டக்களப்பு இராணுவ முகர்மில் சிறை வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் அவர் கூறியிருந்தார்.

தனது கணவர் காணமற்போனமை தொடர்பில் ராஜபக்சவினருக்குத் தொடர்பு உள்ளது. அவரைக் கொலை செய்து விடுவார்களோ அவரை எங்களால் பார்க்க முடியாமல் போய்விடுமோ என நாங்கள் பயப்படுகின் றோம்.

எனவே யாராயினும் இது குறித்து தொடர்புபட்டிருப்பார்களேயானால் அவரை சி.ஐ.டியிடம் ஒப்படைக்கவேண்டும் என இராணுவத் தளபதியிடம் தான் வேண்டுகோள் விடுக்கிறேன் என அவர் பகிரங்கமாகக் கோரியிருந்தார்.

இந்நிலையில், இப்போது புதிய அரசு பிரகீத் கடத்தல் தொடர்பான விசாரணைகளைக் கையில் எடுத்துள்ளது. இதில் தற்போது பல அதிர்ச்சி தரும் விடயங்கள் வெளியாகி வருகின்றன. குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுக்கும் இந்த விசாரணைகளின் அடிப்படையில் இதுவரை 11 படையினர் கைதாகி விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

காணாமல்போன பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கிரிதல இராணுவ முகாமில் விசாரணை நடத்த ஹோமாகம நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அனுமதி வழங்கியது. காணாமல் போன பிரகீத் எக்னலிகொட இந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி இருந்தன. இதன் அடிப்படையில் அங்கு விசாரணை நடத்த அனுமதி கோரி, குற்றப் புலனாய்வுத் தரப்பினர் தாக்கல் செய்திருந்த மனுவின் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த விசாரணைகளை நடத்துவதற்கு இராணுவத்தினர் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனடிப்படையில் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுக் காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள், கிரிதல இராணுவ முகாமில் முக்கிய விவரங்களை வெளியிட்டுள்ளனர். கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்ட விதம், தடுத்து வைக்கப்பட்டிருந்த இடம் ஆகியன தொடர்பில் சந்தேக நபர்கள் தகவல்களை வெளியிட்டுள்ளனர். கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் இராணுவக் கேணல்கள், இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் உள்ளிட்ட 11 சந்தேக நபர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கிரிதல முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். கிரிதல முகாமின் ஆவணங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. எக்னெலிகொடவுக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்த தகவல்களை வெளியிட இந்த விசாரணை வழியமைக்கும் என புலனாய்வுப் பிரிவினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

நர்டாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ், மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட படுகொலைகள், புலனாய்வுப் பிரிவினராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் படுகொலையின் மூளையாகச் செயற்பட்டவரான சரண் என்று அழைக்கப்படும் நபரை, சுவிற்சர்லாந்தில் இருந்து விசாரணைக்காகக் கொழும்புக்கு அழைத்து வருவதற்கு இன்ரபொல் உதவியை நாடியுள்ளது இலங்கை அரசு . சந்தேக நபரான சரண், சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கிறார். அவருக்கு அங்கு நிரந்தர விதிவிட உரிமை வழங்கப்படவில்லை. இவரை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு கோருவதற்கு நீதிமன்ற உத்தரவு ஒன்று தேவை. அத்துடன் இதற்கு இன்ரபோல் உதவியும் தேவைப்படுகிறது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையதாகக் கைது செய்யப்பட்ட, இராணுவத்தின் கேணல் தர அதி காரி ஒருவர், ரவிராஜ் படுகொலையிலும் தொடர்புபட்டுள்ளார்.

மைத்திரி தலைமையிலான புதிய அரசின் ஆட்சியில் வெளிப்பட்டுள்ள இந்தக் கடத்தலின் பின்னணி குறித்து இப்போது மேலும் பல தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன. அப்போது நாட்டில் ஆட்சியில் இருந்த அதிகாரத் தரப்பு ஒன்றின் உத்தரவுக்கு அமையவே இந்தக் கடத்தல்கள், கொலைகள் இடம்பெற்றுள்ளமை இப்போது தெரியவந்துள்ளது.

இதனை வைத்துப் பார்க்கும்போது கொழும்பிலும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற வெள்ளை வான் கடத்தல்கள், படுகொலைகள், காணாமற் போதல்கள் என்பவற்றுடன் படையினருக்கு நெருங்கிய தொடர்பு உள்ளதா என்ற நியாய பூர்வமான சந்தேகம் அனைவரிடமும் எழுகின்றது. இவ்வாறு அதிகாரத் தரப்பின் அனுமதியுடன் இரகசிய முகாம்களில் இன்னும் எத்தனை பேர் சிறை வைக்கப்பட்டுள்ளனர், படுகொலை செய்யப்பட் டுள்ளனர் என்பது பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது.

எனவே மைத்திரி அரசு தனியே பிரகீத் கடத்தல் விசாரணையுடன் மட்டும் நின்று விடாமல் நாட்டில் கடத்தப்பட்ட, காணாமற்போன, படுகொலை செய்யப்பட்ட அனைத்துச் சம்பவங்கள் தொடர்பிலும் உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைத் தண்டிக்கவும் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கவும் உதவவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.



**மைத்திரி தலைமையிலான புதிய அரசின் ஆட்சியில் வெளிப்பட்டுள்ள இந்தக் கடத்தலின் பின்னணி குறித்து இப்போது மேலும் பல தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன. அப்போது நாட்டில் ஆட்சியில் இருந்த அதிகாரத் தரப்பு ஒன்றின் உத்தரவுக்கு அமையவே இந்தக் கடத்தல்கள், கொலைகள் இடம்பெற்றுள்ளமை இப்போது தெரிய வந்துள்ளது. இதனை வைத்துப் பார்க்கும்போது கொழும்பிலும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற வெள்ளை வான் கடத்தல்கள், படுகொலைகள், காணாமற் போதல்கள் என்பவற்று டன் படையினருக்கு நெருங் கிய தொடர்பு உள்ளதா என்ற நியாய பூர்வமான சந்தேகம் அனைவரிடமும் எழுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும்

# 4

# மக்கள் கருத்தை உருவாக்கும் சக்தி

ரம்யன்

பத்திரிகைகளில் குறிப்பாக நாளாந்தம் மற்றும் வாராந்தப் பத்திரிகைகளுக்கு மேற்கு நாடுகளில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் அளிக்கப்படுகின்றது. அவைகள் வெளியிடும் செய்திகள் பெரும்பாலும் புலனாய்வுச் செய்திகளாகவும் செய்தி வெளியிடும் தன்மையில் அவை கைக்கொள்ளும் புதுமைகளாலும் மக்கள் அவைகளை விரும்பிப் படிக்கிறார்கள்.

இவைகளைவிடப் பத்திரிகைகள் பொது விடயங்களில் குறிப்பாக அரசியல் தொடர்பானவற்றில் அவை வெளியிடும் விமர்சனங்கள் மக்கள் மத்தியில் விரிவாகப் பேசப்படுபவையாக அமைந்து விடுகின்றன. அதனால் பொதுமக்களின் அபிப்பிராயம் அல்லது கருத்துக்களைப் பதவியிலிருக்கும் அரசுக்கு ஆதரவாகவோ அன்றில் எதிராகவோ உருவாக்கிவிட அந்தப் பத்திரிகைகளால் முடிகின்றது. அதிகாரத்தில் அமர்ந்துள்ள அரசொன்றைத் தமது செய்திகளாலும் விமர்சனங்களாலும் மக்கள் கருத்தைத் திரட்டி அந்த அரசைப் பதவியிலிருந்து இறக்கிவிடும் சக்தி அவைகளுக்கு இருக்கின்றது.

**மக்கள் கருத்தை உருவாக்கும் சக்தி**

இவ்வாறான ஒரு நிலைமை அங்கு காணப்படுவதற்கு அங்குள்ள ஆட்சி முறைகளும் மக்கள் ஆட்சி அதாவது ஜனநாயக விழுமியங்கள் அங்கு மேலோங்கியிருப்பதும் ஒரு காரணம் எனலாம். ஆட்சிக்கு எதிராகக் கருத்து வெளியிடும் பத்திரிகைகள் தண்டிக்கப்படுவதில்லை. விமர்சனத்துக்குள்ளாகும் நபர்களோ அரசுகளோ பத்திரிகை நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்துவதில்லை. தாக்குதல் நடத்தி விட் டுத் தப்பிக்கொள்வதில்லை. அவ்வாறுசெய்யும்நபர்களைஅரசுதரப்பினா் மறைமுகமாகப் பாதுகாத்துப் பதவிகளும் பவுசுகளும் அளிப்பதில்லை.

அதேபோல் பத்திரிகைகளும் தமது நிலையறிந்து பொறுப்புடனும், நாடு, மக்கள், ஜனநாயகம் என்ற கரிசனைகளைப் பேணிக் கொண்டும் பணியாற்றுகின்றன. அதனால்தான் மேற்கு நாடுகளில் பத்திரிகைத்துறையை 4ஆவது அமைப்பு அல்லது பீடம் (Fourth Estate) என்று அழைக்கி றார்கள். இங்கிலாந்தில் மக்கள் அவை, பிரபுக்கள் அவை மற்றும் சமயபீடம் என்பவற்றுக்கு அடுத்தபடியாகப் பத்திரிகைத் துறை உயர்வாக மதிக்கப்படு கின்றது. மக்கள் கருத்தை உருவாக்கும் சக்தியாகப் பத்திரிகைத்துறை விளங்குவதால், அவைகள் கூறுவதையும் அரசில் இருப்பவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற மரபு அங்கு காணப்படுகின்றது. அரசியல் மட்டத்தில் அதனால்தான் அதற்குப் பாதுகாப்பு இருந்து வருகின்றது. ஆனால், மேற்கு நாடுகளில் பத்திரிகைத்துறை இந்த அளவில் ஓர் உன்னதமான நிலையை அடைவதற்குப் பல்வேறு போராட்டங்களையும் தியாகங்களையும் செய்தே இருக்கின்றன. அவைவேறு கதை.

பத்திரிகைத்துறை மேற்கு நாடுகளில் எவ்வளவு வெளிப்படையாகவும், சுயேச்சை யாகவும் பணியாற்றுகின்றன என்பதை எடுத்துக்காட்டுவதற்கு அமெரிக்காவில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டுவார்கள்.

1972ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நிக்ஸன் என்பவர் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார். இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு நிக்ஸன் ஊழல் புரிந்திருந்தார் என்பதை வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகை வெளிப்படுத்தியது. அதற்கான ஆதாரங்களையும் முன்வைத்து அந்தப் பத்திரிகை கண்டித்து எழுதத் தொடங்கியது.

**இங்கு என்றால் என்ன நடந்திருக்கும்?**

நம் நாடுகளில் என்றால், என்ன நடந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க முடியாமல் இருக்கின்றது. அந்தப் பத்திரிகை நிறுவனம் பாதுகாப்புப் படையினரால் முகமூடி அணிந்த புலனாய்வாளர்களால், இரவுவேளையில் தீவைத்து கொளுத்தப்பட்டிருக்கும். ஊழியர்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி இருப்பார்கள். அரசு சார்ந்த ஊடகங்கள் தம்மால் முடிந்தளவு அந்தப் பத்திரிகைக்கு எதிராகப் பரப்புரைகளைச் செய்திருக்கும். அந்தப் பத்திரிகை தாக்கப்பட்டமைக்கு, நியாயம் கற்பித்தும் செயற்பட்டிருக்கும். அதாவது, அந்தப் பத்திரிகையை இருந்த இடம் இல்லாமலே செய்திருப்பார்கள்.

அமெரிக்காவில் நடந்தது என்ன? அந்தப் பத்திரிகை உண்மைகளை வெளிக்கொண்டு வந்தமைக்காகப் பாராட்டுப்பெற்றது. குற்றம் நடந்திருப்பதை ஒப்புக்கொண்டு அதிபர் நிக்ஸன் பதவி விலகினார். மக்கள் மத்தியில் பத்திரிகைக்கு மதிப்பு பன்மடங்கு அதிகரித்தது. அதுதான் ஊடக சுதந்திரம். ஜனநாயக விழுமியங்களைத் தற்காத்து நிற்கும் ஒரு துறையாக அங்கு பத்திரிகைத்துறை மதிக்கப்படுவதை இதிலிருந்து அறிந்துகொள்ளலாம். இதைத்தான் ஊடக சுதந்திரம் என்றழைக்கிறார்கள்.

சர்வாதிகாரம், இராணுவ ஆட்சி, தனி ஒரு கட்சி ஆட்சி மற்றும் ஏகாதிபத்தியம் நிலவுகின்ற நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரம் என்பதைக் கிஞ்சித்தும் எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு பத்திரிகைகள் செயற்பட்டாலும், அவை ஆட்சியாளர்களின் ஊது குழல்களாகவே காணப்படும்.

ஜனநாயகத்தின் பேரால் தேர்தல்களை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றியவர்கள், அவசரகாலச் சட்டங்களை மற்றும் இராணுவச் சட்டங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்டு, அவைகளின் கீழ் நடைபெறும் ஆட்சிகளிலும் பத்திரிகைச் சுதந்திரம் என்பது முயற்கொம்பே. வடகொரியா, பர்மா, சீனா இன்னும் இவை போன்ற பல நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரம் இருப்பதாகத் தெரியவில்லை. உலகின் மூன்று வீதத்துக்கும் அதிகமான மக்கள் இந்த நாடுகளில் வாழ்கின்றனர் எனக் கணிக்கப்படுகின்றது. ஜனநாயகம் என்றால் என்ன என்பதையே அறியாதவர்களாய் இந்த நாடுகளில் மக்கள் வாழ்கிறார்கள்.

ஜனநாயகம் என்பது. மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளால் நடத்தப்படும் ஆட்சிமுறை என்றே கருதப்படுகின்றது. அதனால், மக்களின் கருத்துக்களை வெளியிடவும் ஆட்சியாளர்களின் செயற்பாடுகளை மக்கள் அறிந்து கொள்ளவும் செய்திப் பத்திரிகைகள் தேவைப்படுகின்றன. இவ்வாறான ஆட்சி முறை இல்லாத நாடுகளிலும், செய்தி ஏடுகள் வெளியிடப்படுகின்றன. அரசின் அறிவித்தல்கள் மற்றும் அதன்




செய்திகளை வெளியிடுவதும் அரசுக்கான பரப்புரைகளை மேற்கொள்வதுமே இவைகளின் பணியாகக் காணப்படுகின்றது.

ஜனநாயகம் நிலவும் மேற்கு நாடு களிலும் கூட, பத்திரிகைத்துறையானது எடுத்த எடுப்பில் இன்றைய நிலையை அடைந்துவிடவில்லை என்றே கருதப்படுகின்றது.

இன்று 4ஆவது இடத்தில் வைத்துப் போற்றப்படுகின்ற பத்திரிகைத் துறையானது, பல்வேறு விதமான இடையூறுகளையும் எதிர்ப்புக்களையும் எதிர்கொண்டே இன்றைய நிலைக்கு உயர்ந்துள்ளது. பிரிட்டனில் பத்திரிகைத்துறை வளர்ந்த விதம் பற்றி எழுதுகையில் டேனிஸ்தோமஸ் என்ற எழுத்தாளர் வரிகளும் தணிக்கையும் என்ற தமது கட்டுரையில் கூறுவதாவது:

**மேல் மட்டம் விரும்பாத நிலை**

பத்திரிகைகளுக்குப் புகழும் செல்வாக்கும் அதிகரித்து வருவதை மேல்மட்ட வர்க்கத்தினரால், சகித்துக்கொள்ள முடியவில்லை. கீழ்நிலையாளர்கள் (உழைக்கும் மக்கள் அவ்வாறுதான் அழைக்கப்பட்டனர்.) அரசியல் [illegible] விவகாரங்களிலும் அதிக அக்கறை காட்டும் படியாக ஊக்கமளிக்கப்படுவதில் உள்ள அபாயத்தை அவர்கள் உணரலானார்கள். அதனால், வரிகளைச் சுமத்தி பத்திரிகைகளின் விலைகளை அதிகரிப்பதன் மூலம் ஏழை மக்களின் கைகளுக்குப் பத்திரிகைகள் இலகுவில் சென்றடைவதைத் தடுக்க நடவடிக்கைகளை விரைந்து எடுக்கலானார்கள்.

1712ஆம் ஆண்டு ஒரு பத்திரிகைத் தாளுக்கு ஒரு பெனி (Penny) வீதம் வரி விதிக்கப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில் இந்த வரி படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. 1815ஆம் ஆண்டளவில் 4 பென்ஸ் அளவில் வரி அதிகரிக்கப்பட்டது. 1855ஆம் ஆண்டு வரை இது நீடித்தது. இந்த இடைக் காலத்தில் பல நல்ல பத்திரிகைகள் வெளிவர முடியாமல் நின்றுவிட்டன.

அதே காலத்தில் இடம்பெற்ற இன்னொரு சம்பவம் பற்றியும் டெனிஸ்தோமஸ் எழுதுகிறார்:

நாடாளுமன்ற நிகழ்வுகளைப் பத்திரிகைகள் பிரசுரிக்கலாகாது என்று தடை விதிக்கப்பட்டிருந்த காலம் அது. மக்கள் அவை (House of Commons), பிரபுக் கள் சபை (House of Lords) களில் இடம்பெறும் வாதப்பிரதிவாத நிகழ்வுகள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவது அக் காலத்தில் தடைசெய்யப்பட்டிருந்தது. இவ்வாறான தடைகளை மீறிச் செயற்பட்ட பத்திரிகை ஆசிரியரும் உரிமையாளர்களில் ஒருவருமான, வில்க்ஸ் கைதுசெய்யப்பட் டார். டெனிஸ் தோமஸ் அது பற்றி எழுதியிருப்பதாவது:


மிடில் செக்ஸ் ஜேர்னல் என்ற பத்திரிகையில் நாடாளுமன்றச் செய்திகளை வெளியிட்டிருந்தார் வில்க்ஸ். அவரது நண்பரான அந்த நகர மேயருக்கும் அந்தப் பத்திரிகையில் அக்கறை இருந்தது. இதில் சம்பந்தப்பட்டிருந்த பிரசுரிப்பாளர்கள் மூவரும் நகர நீதிபதிகளின் முன்விசாரணைக்கு நிறுத்தப்பட்டனர். இவர்களில் ஒருவர் கில்ட் ஹால் (Guild Hall) நீதிமன்றின் முன்னிலையிலும் மற்ற இருவரும் மேன்ஷன் ஹவுஸ் (Mansion House) நீதிமன்றிலும் விசாரிக்கப்படவிருந்தார்கள். ஆனால், தங்கள் மீதான வழக்கை முன்கூட்டியே நகராண்மைக் கழகத்தின் முன் விசாரிக்கப்படுவதற்கு வில்க்ஸ் ஏற்பாடு செய்து கொண்டார்.

நகராண்மைக் கழக உறுப்பினர்கள் வில்க்ஸின் ஆதரவாளர் என்பதுடன் அவரும் அதில் ஓர் உறுப்பினராகவே இருந்தார். இந்த நிலையில் விசாரணை ஆரம்பமானபோது தாமும் ஒரு விசாரணையாளராக அமரும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. எனவே குற்றம் சுமத்தப்பட்டிருந்த மூன்று பத்திரிகை பிரசுரிப்பாளர்களும் விடுதலை செய்யப்பட்டதில், ஆச்சரியம் என்ன இருக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதியவர்களை விழுந்துபோக விடாதீர்கள்



மருத்துவர் ச. முருகானந்தன்

முதியோர் பராமரிப்பு இன்றைய நவீன உலகில் பெரிய பிரச்சினையாக நோக்கப் படுகின்றது. கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை முடிவுக்கு வந்த பின்னர் முதியவர் களின் நிலை திரிசங்கு சொர்க்கத்தில்தான் உள்ளது.

இன்றைய அவசர உலகில் பலரும் தமது வயோதிபப் பெற்றோரைத் தம்முடன் வைத்துப் பார்ப்பதில்லை. கணவன், மனைவி இருவரும் தொழிலுக்குச் செல்வது உள்ளிட்ட இதர பல்வேறு காரணிகளால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பொருளாதாரப் பிரச்சினைகள், வீட்டில் இடமின்மை, பராமரிக்க நேரமின்மை என்பன நகர வாழ்வில் எதிர்கொள்ளப்படும் முக்கிய காரணங்களாகும். என்ன தான் பிரச்சினைகள் இருந்தாலும் எம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களை நட்டாற்றில்கைவிடுதல்முறையாகுமா? போதிய முதியோர் பராமரிப்பு இல்லங்கள் இல்லாத இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் இன்று இது பெரிய பிரச்சினையாக வெடித்துள்ளது.

முதியோர் இயல்பாக இயங்குவதில் சிரமம் ஏற்படும்போதே இந்த நிலை என்றால் அவர்கள் படுக்கையில் விழுந்துவிட்டால்? பெரும் பாரமாகி விடும். இதனால் முதியவர்களைப் படுக்கையில் விழாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

முதியவர்கள் படுக்கையில் விழுவதற்கான காரணங்கள்

**1. பக்கவாதம்** (STROKE)

மூளை அடைப்பினால் ஏற்படும் ஆபத்தான ஒரு நோய். நிலையான 'ஸ்ரோக்' சாவை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தானது. அடைப்புக் குறைந்தளவில் ஏற்படும்போது, பக்கவாதமாக வெளிப்படும்.

வாய் கோணுதல், கதைப்பதில் சிரமம், கைகால் வழங்காமை என்பன இந்த நோயின் அறிகுறிகளாகும். உடனடியாகச் சிகிச்சைக்குக் கொண்டு சென்றால் நோயிலிருந்து விடு படும் சாத்தியம் உண்டு.

மருந்துகளுடன், இயன்மருத்துவ சிகிச்சையும் (PHYSIOTHERAPY) என்பனவும், தொடர் சிகிச்சையும் அவசியமாகும். சிலரில் பாதிப்பு அதிகமாக இருப்பின் படுக்கையிலும், சில்லுக் கதிரையிலும் (WHEEL CHAIR) ஆக எஞ்சிய வாழ்நாள்களைக் கழிக்க வேண்டி ஏற்படும்.

தமது அன்றாட கருமங்களைக் கூடச் செய்ய முடியாதவர்களாக அவதிப்படுவர். நீரிழிவு, குருதி அழுத்தம், அதிக கொலஸ்ரோல் உள்ளவர்களுக்கு இந்த நோய் ஏற்படும் சாத்தியம் அதிகம்.

இவ்வாறான நோயாளர்களில் சிலர் படுக்கையிலேயே விழுந்து விடுவதால், படுக்கையிலேயே மலசலம் போகும் நிலையும் ஏற்படலாம். நீண்ட நாள்களாகப் படுக்கையிலே இருக்கும்போது, படுக்கைப் புண்கள் ஏற்பட்டுத் தொல்லை கொடுக்கும். இவ்வாறான நோயாளர்களைப் பராமரிக்கத் தனியான ஒருவர் தேவைப்படலாம்.

இன்றைய உலகில் இதற்கான சாத்தியம் வசதி படைத்தவர்களுக்கு மாத்திரமே கிட்டும். ஏனையவர்களை குடும்ப உறுப்பினர்களே சிரமங்கள் மத்தியில் சினந்து சினந்து பராமரிப்பதைக் காணலாம்.

**2. நீரிழிவினால் ஏற்படும் அவய இழப்பு**

கட்டுப்பாடற்ற நீண்டகால நீரிழிவு நோயாளர்களின் பாதங்களில் ஏற்படும் காயங்கள் தொற்று ஏற்பட்டு மாறாமல் போவதுடன், போதிய குருதிச் சுற்றுக் கிட்டாமையினால் கலங்களும் இறக்கின்றன. இவர்களில் நோய் எதிர்ப்புத் தன்மை குறைவாக இருப்பதனாலும், உரிய மருந்துகள் பாதங்களை வந்தடைய முடியாமல் போவதனாலும், புண்கள் மாறாமல் கால்களின் பகுதியை அகற்ற வேண்டி ஏற்படுகின்றது. மேலும், தீவிர நீரிழிவினால் நினைவிழப்பு கோமா (COMA) ஏற்படலாம். இவர்களையும் பராமரிப்பது சிரமம்.

**3. எலும்பு தேய்மானமும் மூட்டு வாதங்களும்**

முதியவர்களைப் பீடிக்கும் எலும்பு மூட்டு என்பன தொடர்பான நோய்களில் ஒஸ்ரிரோஸாரோரிஸ் (OSTEOPOROSIS) ஒஸ்ரியோ ஆதரைற்றிஸ் (OSTEOARTHRITIS) என்பன முதியவர்களைப் படுக்கை நோயாளியாக்கும் சாத்தியம் உண்டு.

எலும்பு தேய்மான நோயினால் எலும்பின் அடர்த்தி குறைவடைவதனால் அவற்றின் உறுதி குன்றிவிடும். இதனால் முதியவர்களின் எலும்புகள் இலகுவில் முறியக் கூடியனவாக இருக்கும். சாதாரணமாக விழும்போதுகூட, இவர்களது எலும்பு முறிந்து போவதுண்டு. இவ்வாறு முறியும் எலும்புகள் இளமையில் பொருந்துவதைப் போல் இலகுவில் பொருந்துவதில்லை.

நாரி, முள்ளந்தண்டு, தொடை என்பவற்றின் எலும்புகள் முறிவடைந்தால் நடக்க முடியாமல் படுக்கை நோயாளியாகி விடுவார்கள். கால், பாதம் மற்றும் மூட்டுகளில் ஏற்படுகின்ற முறிவுகளும் நடமாட முடியாமல் செய்துவிடும். எனவே முதியவர்களை விழுந்துபோக விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முதியவர்களின் மூட்டுக்களில் ஏற்படும் தேய்வும் அவர்களை நடமாட முடியாமல் செய்து விடுவதுண்டு. எனவே முதியோர் பராமரிப்பில் முறிவு நெறிவு இன்றிப் பாதுகாப்பது அவசியமாகும்.

# தலையெழுத்து!

மல்லாவிக் கஜன்

கழுத்தில் கிடந்த தாலியும் - வங்கிக்
கணக்கில் ஏலம் போனது - உழைத்து
குடிகாக்க வேண்டிய தந்தையும்
குடிவீடு குடியேறிவிட்டார்
படித்துப் படித்து
பல்கலையும் முடித்து
வேலையொன்றும் கிடைத்திடாமல்
ஆசைத் தம்பியும்
மூலையில் சுருண்டுவிட்டான்
கடைசித் தங்கை காவியா
அம்மா பசிக்கு உணவு தருவியா
சேலை முந்தானை பிடித்து
அழுதபடி நிற்கிறாள்....
சுடலை செல்லும் வயசிலும்
மணப்பெண்
படலை தாண்ட வழியின்றி
விடலை தாண்டியும்
வீட்டில் முடங்கியே கிடக்கிறேன்
சீதனப்பேய் விரித்த
வ(வி) லையதில் சிக்கிய
கன்னிமானாய்.....
இதுதான் என்
தலையெழுத்துப்போலும்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர் நீச்சலடி

சு.சிவானி

இன்றைய உலகம் மிகவும் நாகரிகமானது. அதன் வீச்சுக்கேற்ப மூச்சுக்கொண்டு நாமும் இயங்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம். எமது வாழ்வின் தேவைகள் யாவும் எமது இயக்கத்திறனின் ஊடாகவே நடைபெறுகின்றன. மனிதனாகப் பிறந்த நாம் அனைவரும் நிச்சயமாக வாழவே பிறந்துள்ளோம். இந்த நிலையிலிருந்து எவரும் விடுபடவே முடியாது. எமக்குக் கிடைத்த வாழ்வு சரியில்லை, வறுமை, துன்பம், ஏமாற்றம், ஏன் நாம் உயிருடன் இருக்க வேண்டும் என்ற கேள்விகள் பலரது மனங்களிலும் எழுவதுண்டு. உண்மையில் ஏன் நாம் பெரும்பாலும் எம்மிடமுள்ள குறைகளையும், கவலை, ஏமாற்றங்களையும் மீண்டும் மீண்டும் தோண்டிப் பார்க்கவேண்டும். இது தொடர்பில் யார் சிந்திக்கின்றோம்?

நாம் பூமியில் பிறந்த நாள் தொட்டு இன்றுவரை நடைபெற்ற சம்பவங்களில் ஒன்றுகூட மகிழ்வைத் தரவில்லையா? வெற்றியைத் தரவில்லையா? ஏன் அவற்றை மீட்டுப் பார்த்து எமது வாழ்வை மகிழ்ச்சியுள்ளதாக ஆக்க முயற்சிக்கின்றோம் இல்லை? மனிதப் பிறவி எடுத்த அனைவருக்கும் இன்பம், துன்பம் என்ற இரண்டையும் தவிர வேறு எதுவும் நடக்கப் போவதில்லை. அதுதான் இயற்கை. இதனை நாம் உணர மறுப்பதால் தான் இன்று வாழ்வில் ஏற்படும் சின்ன சின்னத் துன்பங்களைக்கூட தாங்க முடியாமல் துவண்டு கிடக்கின்றோம்.

எமது சமூகத்தில் வாழ்கின்ற உறவுகளையும் உங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து அவர் இப்படியிருக்கிறார் நான் இப்படியிருக்கிறேனே என்கிற தாழ்வு மனப்பான்மையும் பல மனிதர்களை நிம்மதியாக வாழவிடுவதில்லை. இது தவறான விடயம். அவர்களின் நிலை உயர்வுக்கு அவர்களின் கடின உழைப்புத் தான் காரணம். எங்கள் வறுமை நிலைக்கு எங்கள் சோம் பல்தான் காரணம் என்று சிந்திக்கத் தொடங்கினால் எங்கள் வாழ்வும் செழிப்புடையதாக மாற வாய்ப்பு நிறையவே உண்டு.

> "மனிதப் பிறவி எடுத்த அனைவருக்கும் இன்பம், துன்பம் என்ற இரண்டையும் தவிர வேறு எதுவும் நடக்கப் போவதில்லை. அதுதான் இயற்கை. இதனை நாம் உணர மறுப்பதால்தான் இன்று வாழ்வில் ஏற்படும் சின்ன சின்னத் துன்பங்களைக்கூட தாங்க முடியாமல் துவண்டு கிடக்கின்றோம்."

நாம் வாழ்கின்ற வாழ்க்கை ஒரு போர்க்களம். நாம் அனைவரும் போராளிகளாக இருந்து போராடினால் மட்டுமே வாழ்வை வெல்ல முடியும். வாழ்வு முழுவதும் ஏதோ ஒரு விதத்தில் பிரச்சினை, கவலை, ஏமாற்றம் என்பவைதான் தொடர் கதையாகக்கூட இருக்கலாம். எந்த விடயத்திலும் வெற்றியே இல்லை. அனைத்தும் ஏமாற்றமே. ஏன் எவரைக் கேட்டாலும் உதவிக் கரம் நீட்டவும் முன்வரமாட்டார்கள். இதுதான் சமூகம் என்பது. இந்த நிலையில்தான் நாம் வாழ்வின் கோட்பாட்டையும், மீண்டும் வெற்றி பெறவேண்டும் என்ற நிலையையும் கற்றுக் கொள்கிறோம். தொடர்ந்து வரும் துன்பங்கள் எம் மனதை இரும்பை ஒத்த திடம்கொள்ள வைக்கின்றது.

கவலை என்பது கொடியது. அது எம்மை அழிக்க முன் நாம் அதைக் கொல்ல வேண்டும். நாம் அனைத்தையும் அனுப வித்து மனமே கலக்கமின்றி போய்விட்டது என்று சிலர் கூறுவார்கள். அதுதான் உண்மை. ஏனெனில் எம் வாழ்வில் எல்லாமே கவலையாகவும் ஏமாற்றமுமாக இருந் தால் எதற்கென்று அழுவது. உண்மையில் நீங்களே சொல் லுங்கள் இப்டியான நிலையில் மனதைக் கல்லாக்கி எதிர்கால வெற்றிக்காக வாழத்தானே வேண்டும். "போனால் போகட்டும் போடா" என்று அனைத்தையும் தூக்கியெறிந்து விட்டுச் சிரித்து வாழ்வதால் தான் இன்றைய நாளை மகிழ்ச்சியுடையதாக்க முடியும். என்னவாக இருந்தாலும் எங்களுடைய மனம்தான் காரணம்.

எனது வாழ்வில்அழுவதற்குஎன்றுஆண்டவன்நூறுகாரணங்கள்கொடுத்த போதிலும் ஆயிரம் காரணங்கள் சிரிப்பதற்கு என்னிடம் இருக்கின்றன என்று சவால் விட்டு எதிர்நீச்சலடித்து வாழ்வதுதான் வாழ்க்கை.



# இலை மாலைகள்!

செம்மை நதிராசா

பழந்தமிழகத்தே ஆடவரும் பெண்டிரும் மாலை அணிந்திருந்தனர். தார் என்பது ஆடவர் அணியும் மாலை; கோதை என்பது பெண்டிர் அணியும் மாலை; கண்ணி என்பது தலையில் சூடப்படும் மாலை. இயற்கையின் எழிலால் பிணையப்பட்ட அவை பூக்களால் ஆக்கப்பட்டன என்று கருதுகிறோம். ஆனால், அவை பெரும்பாலும் பசிய இலைகளால் ஆக்கப்பட்டிருக்கின்றன.

இன்று துளவம், பச்சை, அருகம்புல், மருக் கொழுந்து முதலிய இலைகளால் அணிபெற மாலையாக்கப்படக் காண்கிறோம். ஆனால், முற்காலத்தில் இலைகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. குருத்து ஓலைகளைக் கொண்டு காதோலை உண்டாக்கப்பட்டு, அவை காய்ந்த பின் பயன்படுத்தப்பட்டன. காதுகளில் அவை ஆடுவதும், ஓசை எழுப்புவதும் வியப்பை நல்குவன ஆகும். இராம, லட்சுமண, சீதையர் மரவுரி தரித்தே கானகம் சென்றனர் என்பதன்றோ வரலாறு!

பசிய இலைகளால் மாலை சூடுவது எக்காலத்தும் இயலுவதாகும். இலைகளினாலான மாலைகளும் மணம் தரும். அவற்றின் பசிய நிறம் உடல் நலனை விளைவிக்கும். உடலுக்கேற்ற குளிர்ச்சியும் தருவனவாம். இலைகளினாலான உடைகளும் வனையப்பட்டு உடுக்கப்பட்டன.

***வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன்***<br>***வெறியாட் டயர்ந்த காந்தளும் உருபசை***<br>***வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்***<br>***போந்தை, வேம்பே, ஆர்என வரூஉம்***<br>***மாபெரும் தானையர் மலைந்த பூவும்***<br>***வாடா வள்ளி வயவர் ஏந்திய***<br>***ஓடாக் கழல்நிலை உளப்பட ஓடா***<br>***உடல்வேந் தடுக்கிய உள்ள நிலையும்***

(தொல்.பொருள். நூ. 63)

இதன் உரையாசிரியர்கள் தம் உரையுள் வெறிவேலன் காந்தள் மலர் அணிந்திருந்தான் என்று கூறியுள்ளனர்.

பூக்கள் எல்லாக் காலமும் பூக்கா; உரிய காலத்துப் பூத்து ஓயும் நிலையின. பூக்காத காலத்தே அப்பூச்சூடுவது எங்ஙனம்? காந்தள் இலைகளே எப்போதும் விளங்கும் தன்மையால், காந்தளாலான தழை மாலையையே வெறியாடும் வேலன் அணிந்திருக்க இயலும். எனவே, வெறியாடும் வேலன் அணிந்திருந்த மாலை காந்தளாலான தழை மாலையே! தழை மாலை – பிடவம் என்றும் அழைக்கப்படுமாம். சேரன் போந்தையும், பாண்டியன் வேம்பையும், சோழன் ஆர்தனையும் அணிந்திருந்தனர். இங்கும் மன்னர் அணிந்தவை தத்தமக்குரிய தழை மாலையே.

மன்னர் எல்லாக் காலத்தும் தத்தமக்குரிய மாலை சூடியவராக இருத்தலே மரபு. எல்லாக் காலத்தும் தத்தமக் குரிய பூக்கள் கிட்டா. எனவே சேரன், பனை(போந்தை) ஓலையைக் கொண்டு பூப்போல அழகிய மாலை யாக்கி அணிந்திருந்தனன்; பாண்டியன் வேப்ப இலைகளால் வனையப்பட்ட மாலை அணித்திருந்தனன்; சோழன் ஆர் இலைகளால் ஆன மாலையே அணிந்திருந்தனன். மலைந்த பூவும் என்றே தொல்காப்பியத்துள் உள் ளதே எனில், பூவாக இலைகளை ஆக்கி அணிந்தனர் என்பதாம். இலைகளைக் கொண்டு பூவாக்குவதும் எளியதே.

இலைகளாலான பூக்களை அணிவதே எக்காலமும் இயலும் என்பதைக் கருத்தில் கொண்டால், இலைகளின் ஆட்சி எத்துணைச் சிறப்புக் கொண்டது என்பதை இன்றும் உணரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களின் உரிமைகள்

இணையவள்

பெண்களை வீட்டின் கண்கள் என்பார். அந்த அடிப்படையில் இன்று பெண்கள் ஒவ்வொரு வீட்டிலும் கண்களாக இருந்தாலும் அவர்கள் தங்களுடைய தியாக சிந்தனை வெளிப்பாடுகள் காரணமாக நாடாளும் நிலைக்கும் உயர்ந்திருக்கின்றார்கள். காரணம் பெண்கள் வெறுமனே போதைப் பொருள் என்கிற நிலையிலிருந்து மாற்றம் பெற்று நவீன சிந்தனைகளும், புதிய சித்தாத்தங்களும் பெண்கள் விடுதலை நோக்கிய பயணத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்ணும் உயர்ந்திருக்கின்றாள். பெண் சுதந்திரம் பற்றிய ஓர் அறிவிப்பில் ஒரு பெண் தனது கணவனுடைய இல்லத்தின் அரசியாவாள்.ஒரு பெண்ணுக்கு தனது கணவன் மீது வெறுப்பு ஏற்படும்படி அவளுடைய மனதைக் கெடுப்பவர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று கூறியுள்ளனர். இவ்வாறு பெண் ஓர் அடிமையல்ல அவளும் சரி நிகரான போக்குடையவள் இல்லத்தின் அரசி என்று வர்ணித்துள்ளார்கள். அப்படிப்பட்ட பெண்கள் இன்று பல்வேறு போராட்டங்களுக்குள் தன்னை உட்படுத்தி வெளியேற முடியாது சிக்கித் தவிக்கின்ற ஒரு நிலைமையும் இன்றைய கால கட்டங்களில் ஏற்பட்டுள்ளதை காண்கின்றபோது ஆண் வர்க்கத்தின் மேலாதிக்க வெறித்தனம் இன்னும் முடியவில்லை என்கிற வாதங்களும் பெண்களின் விடுதலை நோக்கிய பயணத்தில் தடைக்கற்களாக வந்த வண்ணமே உள்ளன என்பதற்கான காரணத்தை ஆண் வர்க்கம் கண்டறிந்து அவர்களுக்கே உரித்தான சமூக அந்தஸ்தை முழுமையாக வழங்க வேண்டியுள்ளது.

மாதா பிதா குரு தெய்வம் என்கிற சம்பிரதாயங்களில் திளைத்திருக்கும் நாம் பெண்களை மனிதப் பிறவியின் உருவாக்கத்துக்கான பிறவியாகவேஒவ்வொருவரும் பார்க்கின்றோம். அன்பு, கருணை போன்றவற்றின் வெளிப்பாடுகள் பெண்மையிலிருந்தே பிறக்கின்றன. அப்படிப்பட்ட பெண்களுக்கான உரிமைகளையும், மாண்புகளையும் மதிக்க வேண்டியது ஆண்களின் மீதுள்ள கடமைப்பாடாகும். சர்வதேச ரீதியாக பெண்களின் அடக்குமுறைக்கு எதிராகவும், பெண்களின் மீது கட்டவிழ்த்துவிடப்படுகின்ற துஷ்பிரயோகங்கள் காரணமாகவும் ஒவ்வொரு ஆணும் வெட்கப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை நாம் தினமும் ஊடகங்கள் வழியாகவும், நேரிலும் காண்கின்றோம், கேட்கின்றோம். அவதானிக்கின்றோம். பெண்கள் ஆண்களுக்குச் சமமாக தொழில் புரியும் இன்றைய நவீன யுகத்தில் கூட பெண்கள் மீது வரம்பு மீறும் ஆண்களது செயல்களுக்கு சில பெண்களது நடத்தைகளும் அதே வேளை சில ஊடகங்களில் வெளிக்காட்டப்படுகின்ற விரசமான காட்சிகளும் காரணமாக அமைகின்றன என்கிற வாதங்களும் மேலோங்கியுள்ளதையும் மறுக்கமுடியாது.

பெண்கள் பற்றிய நவீன சிந்தனைகளும், பெண்களுக்கு எதிரான குரல்களும், பெண்கள் சமுதாயத்தின் முக்கிய பங்காளிகள் என்கிற தத்துவார்த்தங்களும் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்த சம்பவங்கள் இக்கால கட்டங்களில் நினைவுகூர வேண்டிய ஒன்றாகும்.

மேலும், பெண்களது நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு பெண்களது உரிமைகள் காலத்துக்குக் காலம் புதுப்பிக்கப்பட்டு வந்தாலும் போர், பயங்கரவாதம், தனிமை, தொழில்சார் விடயங்கள் போன்றன காரணமாக ஆண்வர்க்கத்தினால் பெண்கள் இழிநிலைக்குள் தள்ளப்பட்டே வந்திருக்கின்றனர். பாடசாலையிலும் சரி, வேலைத்தளத்திலும் சரி, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களிலும் சரி பெண்கள் மீதான துஷ்பிரயோகங்கள் எல்லை மீறிக் கொண்டே செல்கின்ற ஒருநிலைமை தொடர்ச்சியாக வெளிக்காட்டப்பட்டே வருகின்றன. வறுமை, கணவன் இறந்து போதல், அடக்குமுறை போன்றனவும் பெண்களின் கற்பை இழப்பதற்கு சாதகமான காரணங்களாகின்றன. அரசியல் அமைப்புக்களில், மனித உரிமைகளில் பெண்களுக்கான பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டிருந்தாலும் சிலவேளைகளில் சந்தர்ப்பம் சூழ்நிலைகள் காரணமாக குற்றம் செய்கின்ற ஆண்கள் தப்பித்துக் கொள்கின்றனர். வீட்டில் அடுப்பூதும் பெண்களுக்கு எதற்குப் படிப்பு என்கிற காலம் போய் ஆண்களைப்போல பெண்களும் உழைக்கத் தொடங்கியுள்ளனர். இருந்தாலும் பெண்களுக்கே உரித்தான பெண்மையை எம்மில் எத்தனைபேர் மதிக்கின்றனர். பெண்கள் விடுதலை என்று வாய்கிழிய கத்தினாலும் சிலரது போக்குகளில் மாற்றங்களே ஏற்படாது. தாயும் பெண்ணே, தாரமும் பெண்ணே.

## பெண்மையைப் போற்றுவோம் பெரிதாய் மதிப்போம்

மொட்டு வளர மலர்
மேகம் குளிர மழை
நாற்று வளரக் கதிர்
காற்று வீச உயிர்
என
இயற்கையாய் விடயங்கள்
நிகழும் போது
ஏன் பெண்ணே!
நீ மட்டும்
இயல்பை மாற்றி
கூன் விழும் காலம் மட்டும்
குடும்பமே
பெரிதென்றெண்ணி
தன் துயர் தானே துடைத்து
தளர்ச்சியை உணவாய்த்
தின்று ஓ!
பெண்மையைப் போற்றுவோம்
பெரிதாய் மதிப்போம்
தாய்மையைப் போற்றுவோம்
தலை வணங்குவோம்.
பெண்கள்
வீரிட நினைக்கும் போதும்
விழிகளில் சிரிப்பைத் தேக்கி
கதறிடும் காலம் வந்தால்
கவிதையாய்க் [illegible]
ஆனந்தக் கண்ணீர்
என்றும்
அவர் தமக்கே சொந்தம்
மனதில்
கலவரம் என்றால் கூட
புன்னகைப் பூ தான் முகத்தில்
உண்மைக்கும் நன்மைக்கும்
உளமாரப் போராடி
பொய்மைக்கும் தீமைக்கும்
பொங்கிப் புறப்படுவர்
இல்லை எனும் சொல்
என்றும் அவர் பதிலில் இல்லை
ஏற்றமிகு தீர்வே வாழ்வில்
என்றும் அவர் எல்லை.
தாயன்பின் குழந்தைகளைச்
சீராட்டி
எவரிடத்தும்
தன்னலமற்ற தூய நட்பு பாராட்டி
நோயுற்ற வேளையிலே உதவி
செய்து
நம்பிக்கை ஒளியாக உயர்ந்து
நிற்பர்
பெண்கள் வாழ்வில்.
தன்
மக்களும் மற்றவரும் உயரும்
போதும்
பற்றுடன் கைத்தலம் பற்றும்
போதும்
பெற்றெடுத்தார் புது மகவை
என்ற போதும்
பெண்கள்
உள்ளம் நெகிழ்ந்து உணர்ச்சிப்
பிழம்பாவர்.
உற்றார்
உடனிருந்து பிரியும் போதும்
கூற்று வந்து அவர்கள்
உயிர் பிரியும் போதும்
உடைந்து அழும் ஓலம்
உயிரை உருக்கும்
என்றாலும்
உள்ளத்து உறுதியில்
உரைத்து நிற்பவர் பெண்கள்
உடைந்த உள்ளத்தை ஒரு
முத்தத்தால்
ஒட்டத் தெரிந்தவர் பெண்கள்.
பெண்மையைப் போற்றுவோம்
பெரிதாய் மதிப்போம்
தாய்மையைப் போற்றுவோம்
தலை வணங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்கொடை



ஏழூர் என்ற ஊரில் ராமசாமி என்ற விறகு வெட்டி இருந்தான். அவன் நல்ல உழைப்பாளி. அவனுக்கு அன்பு என்ற மகன் இருந்தான். அவன் அரச பாடசாலையில் எட்டாவது வகுப்பு படித்துக் கொண்டு இருந்தான். அவன் நன்றாக படிக்கக் கூடியவன். அன்பு பெயருக்குத் தகுந்தாற் போல் அனைவரிடத்திலும், அன்பாகவும், பணிவாகவும் இருப்பான். படிப்பைத் தவிர மற்றவர்களுக்கு என்ன தேவையோ அவன் உதவி செய்வான். அன்பு பாடசாலை விட்டு வந்தவுடன், அம்மாவுக்குத் தேவையான உதவிகள் செய்து விட்டு, பின்னர் இரவு பத்து மணி வரை படித்துவிட்டு, தூங்கச் செல்வான். அவன் படிப்பில் முதல் மாணவனாக திகழ்ந்தான். அவனது அம்மா அவனிடம் அடிக்கடி எமக்குப் பணவசதி கிடையாது, நன்றாக உழைத் துப் படித்தால் பிற்காலத்தில் நல்ல வசதியுடன் வாழலாம் என்று கூறுவார். அவனது அப்பா பாடசாலை விடுமுறை நாள்களில் அவனுக்கு நீதி போதனைக் கதைகளைக் கூறுவார். அவனுடன் படிக் கும் மாணவர்கள் அனைவரும் நல்ல வசதியுடன் இருந்தனர். அவனுடைய ஊருக்கு ஒரு மருத்து வமனை கட்டுவதற்கும், பழைய கோவிலைப் புதுபிக்கவும், அவனுடைய பாடசாலையை உயர் நிலைப் பாடசாலையாக மாற்றுவதற்கும் ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அந்த விழாவுக்கு அடிக்கல் நடுவதற்கு ஒரு மகானை அழைத்து வருவதாக தகவல் கூறப் பட்டது. அந்த மகான் வந்தால் ஊருக்கு நல்ல அதிர்ஷ்டம் வரும் என்று மக்கள் நம்பினர். ஒவ்வொருவரும் எவ்வளவு நன்கொடைகள் கொடுக்க முடியுமோ அவர்கள் அனைவரும் அந்த ஊர் தலைமையாளிடம் கொடுக்கலாம் என முடிவு செய்யப்பட்டது. மக்களும் அவரவர் சக்திக்குத் தகுந்த நன்கொடைகளைக் கொடுத் தனர்.

ஆனால் அன்பின் அப்பா ஒரு விறகுவெட்டி என்ப தால், ஒருநாள் சாப்பாடு சாப்பிடு வதே பெரிய கஷ்டம். அதில் நன்கொடை எங்கே கொடுப் பது என்று மிகவும் கவலைப் பட்டார்.

எம்மால் பணம் கொடுக்க இயலாது. ஆனால் பணத் தைத் தவிர வேறு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று அன்பு மனதில் நினைத் தான்.

நாள்களும் கடந்தன. இரண்டு நாள்கள் இருக்கும் நிலை யில், ஊரில் மகானை வர வேற்பதற்காக எல்லாரும் ஒற்றுமையாகவேலைசெய்து கொண்டு இருந்தனர். அவனு டைய கிராமத்தில் பழைய கோயிலைச் சுற்றி துப்புரவு செய்யப்பட்டது. பெரியவர் வருவதற்கு ஒற்றையடிப் பாதை மட்டும் சுத்தம் செய்யப்பட்டது. மீதியுள்ள இடங்களில் தேவையில்லாத செடி, கொடிகள் படர்ந்து இருந்தன. அவற்றை நாம் சுத்தம் செய்தால் என்ன என்று அன்பு நினைத் தான். அதனால் இரவு பகல் பார்க்காமல் மும் முரமாக அவன் நெருஞ்சி முள்கள் நிறைந்த பகுதியை எல்லாம் அழகாகச் சுத்தம் செய்து, ஒரு வழிப் பாதையாக அல்லாமல், எந்தப்பக்கத்தால் வந்தாலும், மக்கள் வரக் கூடிய அழகான பாதையை அமைத்தான். அவன் இவ்வளவு சுத்தமாக செய்ததைப் பற்றி எவரும் புகழ்ந்து சொல்ல வில்லை. ஏன் என்றால், மகான் வருவதற்கு யார் யாரோ என்னவெல்லாம் செய்யும் பொழுது, இந்த வேலை மற்றவர்களுக்கு ஒரு பெரிய விடயமாகத் தெரியவில்லை. மகானும் வந்தார். கோவிலை அழகாகப் புதுப்பிக்க ஏற்பாடு செய்ததை மிகவும் மகிழ்ச்சியுடன் பார்த்தார். மருத்து வமனை கட்டு வதற்கு அடிக்கல் நாட்டினார். மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். கடைசியாகப் பாடசாலைக்குச் சென்றார். அந்த ஊரில் உள்ள அனைவருக்கும் அருள் என்ற வியாபாரி அன்னதானம் அளிக்க முழுப் பொறுப் பையும் ஏற்றுக் கொண்டதால் அனை வருக்கும் சாப்பாடு போடப்பட்டது.

அனைவரும் சாப்பிட்ட பின்னர் பாடசாலை மைதானத்தில் கூடினர். எந்த ஒரு விடயத்தையும் ஊர் கூடிச் செய்யும் பொழுது, அதன் பலன் பலமடங்கு அதிக மாகும். இந்த ஊர் மக்கள் இவ்வளவு ஒற்றுமையாக இவற்றைச் செய்தது மனதுக்கு மகிழ்ச் சியைத் தருகிறது என்று கூறினார் மகான். அந்த ஊர் மக்களுக்கு நல்ல அறிவுரை வழங்கினார். அப்பொழுது அந்த ஊர்த் தலைவர் யார் யார் அதிக தொகை கொடுத் துள்ளார்களோ, அவர்களின் பெயர்களை வாசித்தார். அவர்களுக்கு எல்லாம், அந்த மகான் பொன்னாடைகள் போர்த்திச் சிறப்பித்தார். இந்தப் பொன்னாடைகள் போர்த்தப்பட்ட போது, அன்புக்கு மனதில் சிறிது வருத்தம் இருந்தது. அவனுடன் கூடப்படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் எல்லாம், அந்த மகானிடம் ஆசி வாங்கினர். எம்மால் இந்தக் கிராமத்துக்குச் சிறிய நன்கொடையைக் கூடக் கொடுக்க முடியவில்லையே என்று அன்புவின் மனதில் ஆதங்கம் எழுந்தது.

இதனிடையில் அனைவரது பெயர்களும் வாசித்து முடிந்த போது, மகான் ஒரு காசோலையை அந்தக் கிரா மத்துக்காக வழங்கினார். அந்த ஏழூர் கிராமம் நல்ல செல்வச் செழிப்போடும், மனநிம்மதி யோடும் மக்கள் வாழ வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன் எனவும் கூறினார். கோயில், மருத்துவமனை, பாட சாலை ஆகிய மூன்று இடங்களுக்கும் பணம் கொடுத் தாகி விட்டது. இன்னும் ஒரு காசோலை இருக்கிறது. அது தகுந்த இடத்துக்குச் செல்ல வேண்டும். எந்த இடம் என்று மக் களால் யூகிக்க முடிகிறதா? என்று ஒரு கேள்வி கேட்டார்.


மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு விழித்தனர். அப்பொழுது அந்த மகான், அன்பு என்ற சிறுவன் யார்?. அவன் எங்கு இருந்தாலும், உடனே வரவேண்டும் என்று கூறினார். அன்புவுக்கும், அவனது பெற் றோருக்கும் ஒன்றுமே புரியவில்லை. ஒரு வழியாக அன்பு அவர் இருக்கும் இடத்துக்குச் சென்றான். அவரை விழுந்து வணங்கினான்.

அப்பொழுது அந்த மகான் இரண்டு நாள்களுக்கு முன்பு என்னுடைய சீடனை இந்தக் கிராமத்தின் நிலவரத்தைப் பற்றி அறிய அனுப்பி வைத்தேன். இந்த அன்பு என்ற மாணவன் தனி ஒரு ஆளாக அனைத்து நெருஞ்சி முட் களையும் வெட்டிப் பாதையை அழகாகச் சரி செய்து கொண்டு இருந்தான். இவ்வளவு சிறிய வயதில், தன் னம்பிக்கையுடன் அந்த வேலையை முடித்து இருப்பதாக எனது சீடன் கூறினான். இந்தச் சிறுவனிடம் இருந்து நாம் ஒரு பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். பணத்தால் முடியாததை, தனது மன பலத்தால் உடல் உழைப்பால் செய்துள்ளான். இது மிகப்பெரிய நன்கொடை வழியில் ஒரு சிறு முள் இருப்பதைப் பார்த்து அதை எடுத்து ஒரு ஓரமாகப் போடாமல், அப்படியே விட்டு விட்டால், யார் காலிலாவது குத்திப் புண்ணாக்கி விடும் என்று தெரிந்த போதும் அந்த முள்ளை எடுத்து ஓரமாகப் போட விரும்பாமல் பார்த்துக் கொண்டே செல்லும் நிலையில் தான் பலர் இருக்கின்றனர். ஆனால் இந்த ஊரில் உள்ள தேவை இல்லாத முட்கள் அனைத்தையும் இந்தச் சிறுவன் அகற்றி விட்டான். இது பணத்தால் செய்த நன்கொடைக்கு மேலானது. நல் மனத்தால் செய்த இந்தச் செயல் சிறப்பானது. இந்தக் காசோலையை இந்த அன்புவினு டைய படிப்புச் செலவுக்காக நன்கொடையாக அளிக் கிறேன் என்றார்.


அன்புவுக்கும், அவனது பெற்றோருக்கும், மனது மிகவும் சந்தோஷமாக இருந்தது.



ஜே.சந்தோஷ்,
தரம் –8,
சென்.ஜோன்ஸ் கல்லூரி.



சு.ஹரிபிரசாத்
தரம் –6 F,
யாழ்.இந்துக் கல்லூரி.



ஜெ.துாரிகா
தரம் –3,
சென்.பெனாழ் வித்தியாலயம்.



தி.திருவேரகன்
தரம் –5 A,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.

## அம்மா



தேன் தேன்
என்ன தேன்
கொம்புத் தேன்
என்ன கொம்பு
மான் கொம்பு
என்ன மான்
புள்ளி மான்
என்ன புள்ளி
இலைப் புள்ளி
என்ன இலை
வாழை இலை
என்ன வாழை
ரச வாழை
என்ன ரசம்
மிளகு ரசம்
என்ன மிளகு
வால் மிளகு
என்ன வால்
நாய் வால்
என்ன நாய்
மரநாய்
என்ன மரம்
வேர் மரம்
என்ன வேர்
வெட்டிவேர்
என்ன வெட்டி
பாக்கு வெட்டி
என்ன பாக்கு
கொட்டப் பாக்கு
என்ன கொட்ட
மாங்கொட்ட
என்ன மா
அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்
## 11.10.2015 முதல் 17.10.2015 வரை
## உங்களுக்கு எப்படி?

### மேடம்

பெரும்பாலான கிரகங்கள் அளப்பரிய நன்மை தருவர். நீண்ட நாள் முயற்சி கூட இனிதே நிறைவேறும். பண வரவு பன்மடங்கு அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு சிறப்பாக நடந்தேறும். உடன்பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் பரிவால் மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், வருமானமும் அதிகரிக்கும். பணியாளர்கள் திறம்பட பணிபுரிந்து, நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்களுக்கு ஞாபகத்திறன் மேம்படும். சிவனை வழிபட்டால் சகல சௌபாக்கியங்களும் கூடும்.

### இடபம்

செவ்வாய், சுக்கிரன், கேதுவால் நன்மை மேலோங்கும். வாழ்க்கை முன்னேற்றப் பாதையில் செல்லும். வாகனத்தின் பயன்பாட்டால் இனிமை காண்பீர்கள். உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். புத்திரரை வழி நடத்துவதில் மென்மையான அணுகுமுறை தேவை. ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது. மனைவியின் ஆலோசனையை ஏற்பதால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் கடமை உணர்ந்து செயல்படுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவர். ஆஞ்சநேயர் வழிபாடு, வெற்றி அளிக்கும்.

### மிதுனம்

சுக்கிரன், புதன், சனீஸ்வரர் அதிக நன்மை வழங்குவர். ஆரோக்கியம் மேம்படும். அக்கம் பக்கத்தினரின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும். பூர்வீக சொத்து மூலம் வருமானம் உண்டாகும். எதிரியால் இருந்த தொல்லை மறையும். மனைவியின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் ஆதரவு கிடைக்கும். இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணியை விரைந்து முடிப்பர். பெண்கள் பணம், நகை பாதுகாப்பில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் கல்வியில் மேம்படுவர். விநாயகர் வழிபாடு, நன்மைக்கு வழிவகுக்கும்.

### சிங்கம்

சுக்கிரன், சந்திரனால் நன்மை அதிகரிக்கும். மாறுபட்ட கருத்து உள்ளவர்களுடன் பேசுவதைத் தவிர்க்கவும். திடீர் செலவால் கடன் வாங்கும் சூழல் உண்டாகலாம். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை. வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். பிள்ளைகள் உங்களின் கருத்துக்கு மதிப்பு கொடுப்பர். வழக்கு விடயத்தில் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. கணவன், மனைவி ஒற்றுமையுடன் செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளை உடனடியாகச் சரி செய்யவும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வர். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர்.

### கடகம்

குரு, சுக்கிரன், ராகு, சூரியன் சிறப்பான பலன் தருவர். பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். பசு, பால் பாக்கிய யோகத்தால் நன்மை காண்பீர்கள். வாகன பயணத்தால் இனிய அனுபவம் ஏற்படும். புத்திரர்கள் உங்களுடன் கருத்து வேறுபாடு கொள்ள வாய்ப்புண்டு. கடன் பிரச்சினை ஏற்படலாம். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சோம்பலைக் கைவிடுவது அவசியம். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவர். மாணவர்கள் படிப்புடன், விளையாட்டிலும் ஆர்வம் கொள்வர். வைரவரை வழிபாட்டால் நலம் பெருகும்.

### கன்னி

செவ்வாய், சுக்கிரன், சனீஸ்வரர் நன்மையை வாரி வழங்குவர். பகைவர்களால் ஏற்பட்ட தொல்லைகள் மறையும். குடும்ப வளர்ச்சிக்கான புதிய திட்டம் தீட்டுவீர்கள். சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும். வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வழக்கில் வெற்றி கிடைக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்கள் நண்பர்களுடன் பொழுதுபோக்கில் ஈடுபடுவர், சனீஸ்வரரை வழிபட்டால் மேன்மை தரும்.

### துலாம்

கேது, குரு, சுக்கிரனால் அதிக நன்மை உண்டாகும். மனதில் உற்சாகம் பிறக்கும். பேச்சிலும், செயலிலும், நிதானம் வெளிப்படும். வீடு, வாகன வகையில் கூடுதல் பாதுகாப்புத் தேவை. புத்திரரின் எதிர் கால வளர்ச்சிக்கு துணைபுரிவீர்கள். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். மனைவியால் குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் இலாபம் காண்பீர்கள். பணியாளர்களுக்கு எதிர் பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் திறமையை வளர்த்துக் கொள்வர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர். பெருமாள் வழிபாடு, வளம் சேர்க்கும்.

### விருச்சிகம்

சூரியன், புதன், ராகுவால் அதிக நன்மை உண்டாகும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். புதியவர்களின் நட்பை பெற்று மகிழ்வீர்கள். வாகனப் பயன்பாட்டால் நன்மை காண்பீர்கள். புத்திரர்களின் வளர்ச்சி கண்டு பெருமை உண்டாகும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் மனதில் உங்கள் மீதான நல்ல எண்ணத்துக்கு குறை வராமல் பாதுகாக்கவும். அரச வகையில் உதவி கிடைக்க வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்தி ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை மதித்து நடக்கவும். பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

### தனுசு

குரு, சுக்கிரன் நன்மை தரக் காத்திருக்கின்றனர். நற்செயலில் ஈடுபட்டு மக்கள் மத்தியில் புகழ் கிடைக்கும். முக்கியஸ்தர்களின் அறிமுகம் கிடைக்கும். புதிதாக வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். உடன் பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். புத்திரர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவீர்கள். எதிரி தொல்லை மறையும். மனைவியுடன் இருந்த மோதல் போக்கு மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் பெற்றோரின் அன்பைப் பெறுவர். முருகக் கடவுளை வணங்கினால், மேன்மை தரும்.

### மகரம்

கேது, சனி, சுக்கிரனால் நன்மை உண்டாகும். இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். அன்றாட பணி அனைத்தும் குறித்த காலத்தில் நிறைவேறும். மகளின் ஜாதக–யோக பலனால் நன்மை ஏற்படும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பை செய்வது நல்லது. உடல் நலனுக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும். மனைவி வழி சார்ந்த உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழிலில் புதிய உத்தி மூலம் வருமானத்தைப் பெருக்குவீர்கள். பணியாளர் கடமையை உணர்ந்து சிறப்பாகப் பணிபுரிவர். பெண்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்தவும். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது அவசியம். கிருஸ்ணரை வழிபட்டால் நன்மை தரும்.

### கும்பம்

செவ்வாய், குரு, புதன் நற்பலன் வழங்குவர். இடையூறு செய்தவர் விலகிப் போகும் சூழல் உருவாகும். சுப விடயத்தில் இருந்த தடை நீங்கும். உடன் பிறந்தவர்களின் ஆதரவால் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவர்களுக்கு இடம் தர வேண்டாம். புத்திரர்கள் உங்களின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பர். வருமானம் உயர்வதால் கடன் தொல்லை மறையும். மனைவியிடம் வாக்குவாதம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவர். பெண்கள் பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வர். மாணவர்களுக்கு நட்பு விடயத்தில் கவனம் தேவை.

### மீனம்

சந்திரனால் நன்மை அதிகரிக்கும். பேச்சு, செயலில் நிதானத்தை கடைபிடிக்கவும். தவிர்க்க இயலாத வகையில் திடீர்ச் செலவு ஏற்படலாம். வாகன பயணத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர்களின் செயற்பாடு நன்மைக்கு வழிவகுக்கும். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை உண்டாகும். மனைவியின் ஆலோசனையை பரிசீலிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதைக் குறைக்கவும். நந்தீஸ்வரர் வழிபாடு, நலம் சேர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ட்ராபெரி ஐஸ்கிரீம்

**தேவையான பொருள்கள்:**

ஸ்ட்ராபெர்ரி ஐஸ்கிறீம்
பால்– அரை லீற்றர்
சர்க்கரை – 200 கிராம்
கார்ன்ப்ளார்– ஒரு மேசைக்கரண்டி
ஜெலட்டின்– ஒரு மேசைக்கரண்டி
ப்ரெஷ் க்ரீம் (தேவைப்பட்டால்)– 200 மி.லி.
ஸ்ட்ராபெர்ரி பழங்கள்– 100 கிராம்
ஸ்ட்ராபெர்ரி எசென்ஸ்– ஒரு மேசைக்கரண்டி

**செய்முறை:**

பாலை அடுப்பில் வைத்துக் கொதி வந்ததும் சர்க்கரைச் சேர்த்து மறுபடி காய்ச்சவும். ஆறிய பால் சிறிது எடுத்து அதில் கார்ன்ப்ளார் கலந்து தனியே வைக்கவும். தண்ணீரில் ஜெலட்டைக் கரைத்து அடுப்பில் 2 நிமிடங்கள் வைத்து அதில் கொதித்துக் கொண்டிருக்கிற பால் கார்ன்ப்ளார் சேர்க்கவும். கார்ன்ப்ளார் வெந்து கலவை ஓரளவு கெட்டியானதும் இறக்கி ஆற விடவும். ஆறியதும் எசென்ஸும் ப்ரெஷ் கிறீமும் சேர்த்து, மிக்சியில் விப்பர் பிளேடில் ஒரு சுற்று ஓட விட்டு பொடியாக நறுக்கிய அல்லது அரைத்த ஸ்ட்ராபெர்ரி சேர்த்துக் கலந்து 2 மணி நேரங்களுக்கு ப்ரீசரில் குளிர வைக்கவும். ஐஸ்கிறீம் நன்கு செட் ஆனதும் பரிமாறவும்.



# தலை சீவும் போது கவனிக்க வேண்டியவை

தலையில் தண்ணீர் வார்த்ததுடன் கூந்தலை சீவ வேண்டாம். ஏனெனில் கூந்தலானது ஈரமாக இருக்கும் போது சீவினால் முடியில் முடிச்சுகள் மற்றும் சிக்குகள் அதிகமாக இருக்கும். இந்த நிலையில் சீப்பை கொண்டு சீவினால் முடியானது கொத்தாக வேரோடு தான் வரும்.

கூந்தலை சீவும் போது மண்டை ஓட்டில் நன்கு பதியும்படி நன்கு சீவ வேண்டும். கூந்தலும், தலைச்சருமமும் ஒன்றல்ல. ஆகவே கூந்தலை சீவும்போது தலைச்சருமத்தில் நன்குபடும்படி சீவினால் தலைச்சருமத்தில் இரத்த ஓட்டம் அதிகரித்து மயிர்க்கால் நன்கு வளரும். இவ்வாறு தினமும் செய்தால் கூந்தலானது நன்கு ஆரோக்கியமாக வளரும்.

கூந்தலை முதலில் சீவ ஆரம்பிக்கும்போது கூந்தலின் முனையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

ஏனென்றால் கூந்தலில் முடிச்சுகளானது முனையிலேயே அதிகமாக இருக்கும். ஆகவே அப்போது முதலில் இந்த முடிச்சுகளை அகற்றிப் பின் ஆரம்பித்தால் கூந்தல் உதிராமல் இருக்கும். இல்லையென்றால் கூந்தல் வேரோடு தான் வரும். மேலும் கூந்தலை இறுக்கமாக கட்டக்கூடாது. நிறையபேர் இந்த மாதிரியே கூந்தலை கட்டுகின்றனர். கூந்தலுக்கு போனி டைல் போடக்கூடாது. அப்படி போட்டால் முடியானது இடையில் கட் ஆகி உதிரும்.

# முகப்பருக்கள் வராமல் தடுக்க வழிகள்

முகப்பருக்கள் வராமல் தடுக்க எண்ணெய், வெண்ணெய், நெய், கொழுப்பு, இனிப்பு, காரம் போன்றவற்றை சாப்பிடக் கூடாது. உணவில் அதிக அளவு காய்கறி, பழங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். முகப்பரு வந்த பின்பு குளிர்ந்த நீரில் முகத்தை கழுவினாலே போதும். ஒரு நாளைக்கு 4 முறை முகத்தைக் கழுவ வேண்டும். எந்த சோப்பையும் உபயோகிக்கலாம். ஆனால் அது ஒரே சோப்பாக தொடர்ந்து இருக்க வேண்டும். ஒவ்வொரு சோப்பிலும், ஒருவித கெமிக்கல் கலக்கப்பட்டு இருக்கும். நாம் சோப்பை அடிக்கடி மாற்றினால் முகத்தோல் அந்த கெமிக்கல் கலவைகளால் பாதிக்கப்படும். இவற்றை முறையாக செய்தாலே முகத்தில் பரு என்பதே தோன்றாது.

# கால், கை பராமரிப்பு

தினமும் இரவில் வெந்நீரில், கல் உப்பு மற்றும் எலுமிச்சைச் சாறு சிறிது சம்பூ சேர்த்து இதில் நமது கால்களை ஊறவைக்கவும். தண்ணீர் சற்று சூடு ஆறிய பின்னர் பாதத்தை (கடையில் விற்கும்) பூமிக்ஸ்டோனை வைத்து, கால்களில் தேய்க்கவும். குளிர்ந்த நீரில் கால்களை மூன்று நிமிடம் வைத்து பின்னர் மிருதுவான பருத்தித் துணியால் துடைக்கவும். தேங்காய் எண்ணெய் அல்லது ஈரப்பதன்களைக் கால்களில் தேய்த்து விடவும். இதே முறையைக் கைகளுக்கும் செய்து வந்தால் கைகளும், கால்களும் நன்கு பளபளக்கும்.

இந்த முறை உங்களால் தினமும் முடியவில்லை என்றால் குறைந்தபட்சம் வாரம் ஒருமுறையாவது இவ்வாறு செய்துவர வேண்டும். தினமும் தூங்கப் போகும் முன் கால்களை வெந்நீரில் ஊறவைத்து புதிதாக வாங்கிய பல்துலக்கும் பற்தூரிகையால் கால்களைத் தேய்த்து நன்கு தூய்மை செய்யலாம். கால்களில் தேங்காய் எண்ணெய் தேய்த்து வந்தால், கால்கள் மிருதுவாக இருக்கும்.

# முகத்தில் இயற்கை அழகுக்கு

முழு பச்சைப்பயறு, கடலைப் பருப்பு இவற்றைக் காயவைத்து, மாவாக அரைத்து, இதில் கஸ்தூரி மஞ்சள் சேர்த்து! இதனுடன் தயிர் அல்லது பாலாடையுடன் கலந்து முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவலாம்.

வேலைக்குப் போகும் பெண்கள் தினமும் முக அழகைப் பராமரிக்க, மற்றும் நேரம் குறைவாகச் செலவு செய்ய கடைகளில் தயாராகக் கிடைக்கும் கிளன்சிங் கிரீம் அல்லம் கிளன்சிங் மில்க் இவற்றில் ஒன்றை இரவில் படுக்கப் போகும் முன்பு முகத்தில் தடவி சுமார் 7 நிமிடம் மேல் வட்டமாக மசாஜ் செய்து, பின் நீரில் கழுவி, டோனார் என்னும் திரவத்தைப் பஞ்சில் நனைத்து, முகத்தில் துடைத்து, பின்பு மாஸ்டரைசர் தடவிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பக்கம்

**Swathee** @iamswathee

புதிதாய் கற்றுக்கொள்ள ஏதாவது இருக்கும்வரை முதலாளியின் குறைகள் பெரிதாய் தெரிவதில்லை, தொழிலாளிக்கு!!!

**இளவேனில்** @_Hari_twits

மௌனம் என்பது பேசாமல் இருக்கதன்று மனம் உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் அமைதியில் திளைப்பது.

**Vigneswari Suresh** @VignaSuresh

வாரம் முழுக்க வீட்டில் இருந்த பின் வெளியே போக தவிக்கும் மனைவிக்கும், ஒரு நாளாவது வீட்டிலேயே அடைந்து கிடக்க ஆசைப்படும் கணவருக்குக்குமானது ஞாயிறு.

**அனாமிகா** @MissLoochu

"உன்னைப் பற்றி எனக்கும் தெரியாதா?" என்று சண்டையில் கேட்பவர்கள் தெரிந்திருந்தும் ஏன் பழகினார்கள் என்றுதான் தெரியவில்லை.

ப்ரியா Retweeted

**பனித்துளி** @mymindvoice

பைத்தியமாக இருப்பதை விட... பைத்தியமாக இல்லாத போது... பைத்தியமென்று நம்பப்படுவதின் பின்னிருக்கிறது. ஒரு சுதந்திரமான வாழ்வியல்!

**Indiavaasan** @indiavaasan

சில நேரங்களில் சிக்னலில் சிக்னலில் கதவுக் கண்ணாடியைத் தட்டி யாசிப்பவர்களின் நிலையை உணர வைத்து விடுகிறது புறக்கணிப்பைத் தாங்காத நெஞ்சம்!



## சிரிக்கலாம் வாங்க...

## ஆம்லெட்டும், கணவன் மனைவியும்

ஆம்லெட் போடுவதை வைத்து, கல்யாணம் ஆகி எத்தனை வருடம் ஆச்சுன்னு என்று கண்டுபிடிச்சிடலாங்க

**இதப் படிங்களேன்**
**கணவன்:** என்னம்மா! இன்னைக்கு ஸ்பெஷல்?
**மனைவி:** சாம்பார், பெரிய வெங்காயம் போட்டு, ஆம்லெட் தொட்டுக்க
**கணவன்:** அவ்ளோதானா?
**மனைவி:** முடியலைங்க!
**இது ஒரு வருடம் ஆன ஜோடிங்க!**

**கணவன்:** என்னம்மா! சாப்பிடலாமா?
**மனைவி:** இருங்க இந்த சீரியல் முடியட்டும்.என்னங்க கொஞ்சம் பெரிய வெங்காயம் உரிச்சு தாங்களேன்! ஆம்லெட் போட்டுடறேன்!
இது ஒன்றரை வருடம் ஆன ஜோடிங்க!



**கணவன்:** என்னம்மா இது? வெங்காயமே இல்லாம ஆம்லெட் போட்டிருக்கே. எனக்கு பிடிக்காதுன்னு உனக்கு தெரியும்லே?
**மனைவி:** ஒரு நாளைக்கு இதை சாப்பிட்டாதான் என்ன? எல்லாத்தையும் நானே செய்யனுமா?
இது இரண்டு வருடம் ஆன ஜோடிங்க!

**கணவன்:** என்னம்மா! ஆஃபாயில் போட்டிருக்க? நான் இத சாப்பிடவே மாட்டேன்னு தெரியும்ல?
**மனைவி:** ஒரு நாள் தின்னா ஒன்னும் குறைஞ்சு போயிடாது. ஊருல இல்லாத அதிசய புருஷன் எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்கு!
இது நான்கு–ஐந்து வருடம் ஆன ஜோடிங்க!

**கணவன்:** என்னம்மா? இன்னைக்கு ஒன்னும் செய்யலையா?
**மனைவி:** சாதம் வைத்து இருக்கேன், ஃப்ரிட்ஜில் நேற்று வாங்கிய மோர் இருக்கு, முட்டையும் இருக்கு! ஆம்லெட் போட்டு சாப்பிடுங்க!
இது ஏழு வருடம் ஆன ஜோடிங்க!

இதுல ஒரு விஷயம் கவனிச்சீங்களா?
அதாங்க.. நம்ம ஆளு (கணவன்) என்னம்மா என்று சொல்வது மட்டும் கடைசி வரை மாறவே இல்லீங்கோ!! என்னம்மா இப்படி பண்றிங்கலேம்ம்ம்ம்ம்மா?
**கணவன்:** என்னம்மா! தொட்டுக்க இத்தன இருக்கும் போது இப்ப போய் சின்ன வெங்காயம் வெட்டி ஆம்லெட் போட்டுகிட்டு இருக்க! வாம்மா.. வந்து உட்கார்,, எவ்ளோதான் நீ செய்வ, வா சேர்ந்து சாப்பிடலாம்!
**மனைவி:** இருங்க.. உங்களுக்கு தொட்டுக்க ஆம்லெட் இல்லாம ஒழுங்கா சாப்பிட மாட்டீங்க. அதுவும் சின்ன வெங்காயத்த வெட்டி போட்டாதான் டேஸ்ட் சூப்பராக இருக்கும்னு சொல்லுவீங்க. அதுக்கு தான்.
இப்படி சொன்னா கல்யாணமாகி ஆறுமாதம் என்று அர்த்தம்.

ஒருவர் தன் மிதிவண்டியை தொலைத்து விட்டு காவல் நிலைய ஆணையரிடம் முறையிட்டார். ஆணையர் கூறினார் கவலைபடாமல் போய் வா . நான் மறக்காது உன் வண்டியை கண்டுபிடித்து தருகிறேன்
வண்டி இழந்தவரும் அவருக்கு தெரிந்த இடங்களில் எல்லாம் இடைவிடாது தேடினார். பொழுது சாய்ந்தது. ஊருக்கு வெளியே வரை தேடி வந்த களைப்பில் ஒரு வீட்டின் திண்ணையில் சாய்ந்தார்.
வீட்டினுள் சிரிப்பும் சிணுங்கலும் வளையல் குலுங்கல் இன்னும் என்னவெல்லாமோ சத்தம் கேட்டது. களைப்பையும் மீறிய ஆர்வத்தோடு கதவு இடுக்கில் கண் வைத்து பார்த்தான் . உள்ளே
அந்த காவல் ஆணையர் ஒரு பெண்ணோடு ஜல்சா மூடில் இருந்தார் . அந்த மூடிலேயே பெண்ணிடம் கூறினார். கண்ணே வா ! எல்லாம் மறப்போம் ! அருகில் கதைப்போம் ! உலகை மறப்போம் ! உல்லாசமாக இருப்போம்
வெளியிலிருந்து நம்ம ஆள் கத்தி கூவினார் அய்யா எதை வேணும்னாலும் மறந்திடுங்க . ஆனா என் மிதிவண்டி காணாம போனதா மட்டும் மறந்திடாதீங்க

**வில்லேஜ் விஞ்ஞானி....**
**பிழச்சுக்குவீங்கடா...**






**றொம்ப பசிக்குது வீட்டில அம்மா இல்லீங்க.... அதான்.....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









காவல் துறையின் பச்சோந்தித் தனத்தைத் தோலுரித்துக் காடும் படம் கிருமி. கதிர் (மதயானைக் கூட்டம் கதிர்) வேலையில்லாத, ஆனால் மணமாகிக் குழந்தையுள்ள இளைஞன். வீட்டுக்குளப்போதாவது வரும் அவன் நண்பர்களுடன் அறையில் தங்கிப் பொழுதைப் போக்குகிறான். குடி, சீட்டாட்டம் என நகர்கிறது அவன் வாழ்க்கை. காவல்துறை தகவல்சொல்லி (இன்போர்மர்) பிரபாகரன் (சார்லி) கதிர் மீது பிரியம் கொண்டவர். கதிரும் பிரபாகரன் உதவியுடன் காவல்துறை தகவல்சொல்லியாக மாறுகிறான்.

இது பொருளாதார ரீதியாக அவனை உயர்த்துகிறது. ஆனால் முன்னெச்சரிக்கையின்றி அவன் செய்யும் சில காரியங்கள் அவனைச் சிக்கலில் மாட்டி விடுகின்றன. காவல்துறை ஆய்வாளர்கள் இருவருக்கு நடுவே நடக்கும் பனிப்போரிலும் அவன் மாட்டிக்கொள்கிறான். இந்தச் சிக்கல்களிலிருந்து அவன் தப்பித்தானா என்பதே கதை.

திரைக்கதையை இயக்குநர் அனுசரணும் காக்கா முட்டை இயக்குநர் மணிகண்டனும் சேர்ந்து எழுதியிருக்கிறார்கள். புதிய களமும் புதிய காட்சிகளும் படத்தின் பலம். காவல்துறை தகவல்சொல்லிகளின் உலகம் தமிழ்த் திரையில் முதல் முறையாகக் காட்டப்படுகிறது. காவல்துறையின் அழுக்குகளை அப்பட்டமாக்கி யிருக்கிறது கிருமி.

சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு காவல் துறை அதிகாரிகள் துணைபோவது, துறைக்குள் நடக்கும் பனிப்போர்கள், துறைக்குள் நடக்கும் விசாரணை, தகவல்சொல்லிகளை அவர்கள் பயனபடுத்திக்கொள்ளும் விதம் ஆகியவை மிகவும் தத்ரூபமாகக் காட்டப்படுகின்றன. காவல்துறையின் சந்தர்ப்பவாதமும் அழுத்தமாகச் சொல்லப்படுகிறது.

பாத்திர வார்ப்பில் இயக்குநர் மிகவும் கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். காவலர்களின் குணநலன்களை அனுபவத்தால் அறிந்த காரணத்தால் அவர்களிடம் எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்ற நாசூக்கு பிரபாகரனுக்குத் தெரிந்திருக்கிறது. அளவாகப் பேசுகிறார். எல்லாவற்றிலும் நிதானம் காட்டுகிறார். இளரத்தம் என்பதால் கதிருக்கு இந்த நிதானம் இல்லை. அதனால் சிக்கலில் மாட்டிக்கொள்கிறான். இரண்டு ஆய்வாளர்களின் இயல்பு, நடத்தை ஆகியவற்றிலும் இதே துல்லியம் வெளிப்படுகிறது.

சோதனை செய்த பிறகு சுந்தரபாண்டியனுக்கும் மதியரசுவுக்கும் இடையே நடக்கும் உரையாடலும் உயர் அதிகாரி இவர்கள் இருவரிடமும் பேசும் வார்த்தைகளும் வசனத்தின் வலிமையைப் பறைசாற்றுகின்றன. பிரபாகரன் குடும்பத்துக்கும் கதிர் குடும்பத்துக்கும் இடையே இருக்கும் பந்தம் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது.

பணம், அதிகாரம் என்று வரும்போது காவல் துறை, ரவுடிகளின் துணை கொண்ட நிழல் உலக வியாபாரிகள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து விடும் யதார்த்தத்தைத் திரைக் கதை துல்லியமாகக் காட்டிவிடுகிறது. இந்தக் கூட்டணியைத் தனிநபர்களால் எதிர்கொள்ளவே முடியாது என்பதை உணர்த்திவிடுவதில் படம் உண்மைக்கு வெகு நெருக்கமாக வந்து நிற்கிறது.

தமிழ்த் திரைப்படங்கள் பொதுவாக நாயக பிம்பத்தைத் தூக்கிப் பிடிக்கும் இடங்களில் துளியும் சமரசமின்றி யதார்த்தத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே இந்தப் படம் பாராட்டத் தக்கது. ஆனால், ஒதுங்கிப் போவது என்று தனிநபர் முடிவெடுத்தாலும் மற்றவர்கள் சும்மா விடுவார்களா என்ற கேள்வியும் எழுகிறது. இந்த இடத்தில்தான் படம் பலவீனமாகத் தெரிகிறது. மிகைத் தன்மை அற்ற உச்சக்காட்சி துணிச்சலானது. ஆனால் முழுமையானதல்ல.

துக்கிரித்தனமாக ஆட்டம்போடும் இளைஞர் பாத்திரத்தை முடிந்த அளவு நன்றாகக் கையாண்டிருக்கிறார் கதிர். தெனாவட்டான பேச்சு, காதல் குறும்பு, விடலைத்தனம், பொறுப்பான இன்ஃபார்மர், ரிஸ்க் எடுக்கும் இளமை வேகம் எனக் கச்சிதம் காட்டுகிறார்.

அவருடைய மனைவியாக வரும் ரேஷ்மி மேனன் அழகு. பெரிய வேலையில்லை என்றபோதும் கிடைத்திருக்கும் வாய்ப்பை நன்கு பயன்படுத்தியிருக்கிறார். வெளியே கிளம்பும் நேரத்தில் வீட்டில் இருக்கும் கணவனின் மனம் அறிந்து தாமதமாகச் செல்ல முடிவெடுக்கும் சமயத்தில் அவர் முகத்தில் மலரும் புன்சிரிப்பு அழகிய கவிதை.

யோகி பாபு/அப்புக்குட்டி வரும் காட்சிகள் கலகலப்புக்கு உத்தரவாதமளிக்கின்றன. சார்லி, தான் ஏற்றுக் கொண்ட பாத்திரத்தின் தன்மையை நன்கு உள்வாங்கி நடித்திருக்கிறார்.

கிருஷ்ணகுமாரின் இசை படத்தின் விறு விறுப்புக்குத் துணை செய்கிறது. ஆனால் பாடல்கள் படத்துக்குப் பலம் சேர்க்கவில்லை. அருள்வின் சென்டின் ஒளிப்பதிவு காட்சிக்குத் தேவைப் டும் ஒளியையும் இருட்டையும் கோணத்தையும் தந்து நிறைவான உணர்வேற்படுத்துகிறது. காட்சிகளுக்கேற்ற வசனங்கள். வனிதா, தென்னரசு, மாரிமுத்து போன்றவர்களிடம்

யதார்த்த நடிப்பு என படம் வழக்கமான படங்களிலிருந்து சிறிது தள்ளியே நிற்கிறது.

இயக்குநர் அனுசரண் முதல் படத்தில் தன் திறமையை நன்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அவரது முயற்சியில் முழுமை கூடவில்லை என்றாலும், புதிதாக ஒரு கருவை எடுத்துக் கொண்டு அதை நேர்த்தியாகவும் வலுவாகவும் கையாண்டிருக்கும் அவரை நம்பிக்கை தரும் இளம் இயக்குநர்களில் ஒருவர் என்று தயங்காமல் சொல்லலாம்.

---

# விதா(ர)னையாரிடம் ஒரு கேள்வி!

**வி.எஸ்.நடராசா**
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.



ஒரு காலத்தில் தொழிலாளர் மத்தியில் கொடிகட்டிப் பறந்த, இலங்கையின் அரசியல் கட்சிகளிலேயே 80 வருடங்களுக்கு மேலாக இயங்குகின்றது என்ற பெருமையும் கொண்டது லங்கா சமசமாஜக் கட்சி. தற்சமயம் அது எங்குள்ளது? எத்தனை அங்கத்தவர்கள் உள்ளனர் என்பது யாருக்குமே தெரியாது. அதன் மிகவும் மூத்த அங்கத்தவர்தான், இந்தப் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

இவர் சந்திரிகா அம்மையார், ஜனாதிபதியாக இருந்த காலத் தில் கொழும்பில் மாமனிதர் குமார் பொன்னம்பலம் நடத்திய கூட்டமேடைகளில் ஏறி இலங்கையில் சிறுபான்மையினர் படும் அவலங்களை உள்ளம் உருக அழகாக ஆங்கிலத்தில் உரையாற்றி மக்கள் (தமிழ்) மனங்களைக் கவர்ந்து வந்தார்.

பின்பு இவர் மகிந்த ஆட்சிக்காலங்களில், தேசியப் பட்டியலில் உள்வாங்கப்பட்டு, தவறாது ஏதோ ஓர் அமைச்சுப் பதவியையும் பெற்றுக் கொண்டார். அந்த சுகங்களிலேயே கிட்டத்தட்ட 10, 15 வருடங்களைக் கடத்திவிட்டார்.

இந்தமுறை, ஆகஸ்ட் 2015இல் அமைந்த நாடாளுமன்றத்தில், இவர் (கம்யூனிஸ்ட் டியூ.குணசேகரவைப் போல), ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முழுமையாகக் காற்றுக் கழற்றப்பட்டார். வழமையாகக் கிடைக்கும் தேசியப்பட்டியல் உறுப்புரிமையும் 'அவுட்'. தற்சமயம் பேராசிரியரின் பொழுது போக்கு பத்திரிகைகளில் அறிக்கை விடுவது மாத்திரமே.

அதாவது, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளில் சர்வதேச தலையீடு தேவையில்லை, உள்ளகப் பொறிமுறையிலான விசாரணை ஒன்று முன்னெடுக்கலப்பு நீதிமன்ற முறைமையை எதிர்க்கிறோம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டில் எமது பொருளாதாரம் உள்ளது. நாட்டையும் அவர்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே அவர்களது நோக்கம், ஆகவேதான் எங்களை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றியுள்ளனர், நாங்கள் இருந்தால் கேள்வி எழுப்புவோம் என்பது அவர்களுக்குத் தெரியும், அமெரிக்கத் தீர்மானமானது பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய உள்ளக நீதித்துறைக் கட்டமைப் புடன் கூடிய விசாரணைப் பொறி முறையையே முன்னெடுக்க வேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது, இது நாட்டின் இறைமைக்கும் சுதந்திரத்துக்கும் நீதித்துறைக் கட்டமைப்புக்கும் எதிரானது என்றெல்லாம் திருவாய் மலருவார்.


நான் இந்தப் பேராசிரியரிடம் விடுக்கும் வேண்டுகோள் ஒன்று தான்! நடந்து முடிந்த போர் உக்கிரம் பெறுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தங்கள் தலைமையில் ஒரு சர்வகட்சிக் குழுவை அமைத்திருந் தார். அந்த முயற்சியின்போது, தாங்கள் [illegible] இரண்டு வருடங்க [illegible] அழைத்து எத் தனையோ அமர்வுகளை நடத்தினீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆஸ்பத்திரி தந்த அனுபவம்

செ.திருநாவுக்கரசு,
நல்லூர்.

ஆஸ்பத்திரியின் பிரதான வார்ட்டுகளில் ஒன்று
எதிர்கால யாழ்ப்பாணம் எப்படி இருக்கும்
என்பதை எடுத்துக்காட்டும் மாதிரி அது
அடுக்கிய பலமாடிகளின் உச்சியில் அதன் இருப்பிடம்
மேலே ஆகாயம் பரந்து கிடப்பதால்
ஆண்டவனை விரைவாக அடையத் துடிக்கும்
ஆத்மாக்களின் சங்கமமது
வழுக்கி விழுந்த வயதானவர்களின்
ஓயாத ஒப்பாரி ஒருபுறம்
மாடுகளும் நாய்களும் மல்லுக்கட்டியதால்
தடுக்கி விழுந்து எலும்புகளும் நரம்புகளும்
இடம்மாறி ஒடிபட்டதால்
இரத்ததானம் செய்தவர்களின்
ஏக்கமும் அழுகையும் ஒருபுறம்
முள்ளந்தண்டின் முனைப்பு விலகியதால்
மெல்லத்தானும் நடக்க முடியாத
விறைப்புடையோர் வேதனையின்
இராகமாளிகை ஒருபுறம்
லைசென்சு இல்லாத மோட்டார் சைக்கிள் சவாரியால்
பொலிஸார் கண்பட்டுப்
போனபோக்கில் பறந்தோடி
பொல்லாங்கு தேடிய விடலைகள் ஒருபுறம்
போதை தலைக்கேற வாகனம் ஓட்டுவதை
அறியாமல் இன்னொன்றுடன்
மோதி முடிவுகாணத் துடித்தவர்களின்
முகாரிகள் ஒருபுறம்
வாகன விபத்துக்களால் வாழ்க்கையைத்
தொலைக்கத் துடிதுடித்த
இளமை சதுராடும் வாலிபர்களின்
கனவுகளைக் கலைத்தபடி அந்த வார்ட்
பகலிலும் இரவிலும் சுறுசுறுப்பாய்
பன்முகப் பரிமாணங்களுடன்...
சொன்னபடி கேட்காத நோயாளர்களைச்
சுகப்படுத்த முனைகின்ற வைத்தியர்கள்
தன்னலங்கருதாமல் தம்மால் முடிந்தளவு
பயங்காட்டி நயங்காட்டி
பக்குவப்படுத்தி நிற்கும் தாதிமார்கள்
அந்நியம் அணுகாமல் உறவின்
நிழல்களாய் ஆற்றுப்படுத்தும்
சிற்றூழியர்கள் பணி தொடரும்
இவற்றினிடையே
வெம்ப வைக்கும் பேச்சுக்களால்
விழிநீர் சொரிய வைக்கும்
இவர்களில் சிலர் எல்லா வகையிலும்
திரும்பவும் மனிதர் முன்
தெய்வங்கள் தோற்றதென
உயிர்களைக் காப்பாற்றல்
பிறவியின் பெருங்கடனென நினைத்துப்
பணிபுரியும் வைத்தியர்கள் பலபேர்
ஆனாலும் வெள்ளாடுகள் மத்தியிலும்
சில கறுப்புகளும்
எதையும் தாங்கும் இதயமுடையோர்
நோயாளர்கள் மட்டுந்தான் எனக்கருதிக்
கனியிருக்கக் காய்கவரும்
கடமையாளர் சிலபேர்,
சகல பணிநிலைகளிலும்
என் செய்வோம்? இதயமற்ற இவர்கள்
எப்படியோ நுழைந்துவிட்ட
சமூகத்தின் சாபக்கேடுகள்
தென்றலும் புயலும் மாறிமாறி வீசுவதற்கு
இந்த வார்ட்டே சாட்சியாகும்
இன்பமும் துன்பமும் ஒரு நாணயத்தின் இருபக்கமாய்
இணைந்திருப்பதற்கும் இதுவே சத்திய உதாரணம்
என்ன இருந்துமென்ன? எப்படித்தான்
மருத்துவ சேவை நடந்துமென்ன?
திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால்...
முக்கி முக்கி முக்காற் கிணறு பாய்ந்து பயனென்ன?
மனிதர்கள் எவராயினும் மனிதத்தை நேசிக்க வேண்டும்
அதைத்தான் இந்த வார்ட் உணர்த்தி உயர்ந்து நிற்கிறது



## சொற்சிலம்பம் - போட்டி இல: 390



அனுப்புபவர் பெயர்:.................................................

பூரணமான தபால் விலாசம்:
.........................................
.................................................................

கையொப்பம்:..............................................................

### இடமிருந்து வலம்

1.சிறப்பு
6.வந்தனை செய்
7.மீனவர்கள் தங்கித் தொழில் செய்ய அமைக்கும் தற்காலிக இருப்பிடம்
8.அரைவாசி
9. பரம்பல் அடைதல்
11.வஞ்சகம்
14.ரகம்
15.உயிரிழந்த ஆண்மகனுக்கான அடைமொழி
16.புத்திரன்
17.சொந்தக்காரன்
18. ஒன்றுடன் மற்றொன்றைச் சேர்
19. குத்து விழுவது இப்படி
20.இல்லற வாழ்விலிருந்து நீங்குதல்

### மேலிருந்து கீழ்

1. இனிய கவிதைகளைத் தருபவன்
2.வேகம்
3.ஒட்டை
4.அழகு
5. அறிவு
8. பல சத்துக்கள் அடங்கிய திரவ உணவு
9. தோற்றத்தை வெளிப்படுத்துவது
12. பதகளிப்பு
13. சுய நலத்தன்மை
15.விசாலமான
16.இது ஒரு குரங்கு என்பர்
17. (கண்ணீர்) சொரி
18.பசுவிலிருந்து பால் சேகரி

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 388 இற்கான
சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)சபர்மதி (5)துவி (7)கரி (8)கண்காட்சி
(10)வாசகன் (12)தடல் (13)சல்லி (14)பாலன்
(15)யாசகன் (18)பணயம் (19)மோர் (20)கரம்
(21)பிரதமை (23)விண் (24)பரிசில்

**மேலிருந்து கீழ்**
(1)சகவாசம் (2)பரிசல் (3)மகன் (4)திண்
(5)துட்டன் (6)விசில் (9)காதலன் (11)கலியாணம்
(14)பாகம் பிரி (16)சய (17)கூர்மை (18)பரண்
(19)மோதல் (20)கவி (22)ரசி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 388 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
ந.பிரசோத்,
ஆடி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

**2 ஆம் பரிசு**
கை.ரதீகா,
இல. 425, நாவலர் வீதி, ஆனைப் பந்தி,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
செல்வன் த. இந்துயன்
இல. 98, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
விவேகானந்தன்
கவிச்செல்வம்
செல்வி வளவு, இமையாணன்
கிழக்கு, உடுப்பிட்டி.

**5 ஆம் பரிசு**
ந.பாலசுப்பிரமணியம்,
'கூடல்', கொடிகாமம்.

**பாராட்டுப் பெறுவோர்**

கா.வேலுப்பிள்ளை,
இல.32, மில் வீதி,
வவுனியா.

திருமதி சி.பராசக்தி,
சிவன்கோவில் தெற்கு வீதி,
சாவகச்சேரி.

பூவதி தமோதரம்பிள்ளை,
தபாற் கந்தோர் வீதி,
மன்னார்.

சொற்சிலம்பம் போட்டி
இல.390
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(21.10.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.390 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 25.10.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 388 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ முருகு

# புகைவண்டி புகலுகின்ற புத்திமதி

முப்பதாண்டுக்கும்
முன்பே நான்
இம் மண்ணை
விட்டுச் சென்று
விட்டேன் உரிமைப் போர்
கூர்மை பெற்று
அதில் நான் சிக்குண்டு
சிதையுண்டதாலே!
சில திங்களின் முன்புதான்
நான் மீண்டும் இம் மண்ணில்
தடம்பதித்தேன்; அறிவீரே!
கால் பதித்த
நேரமென்னவோ; எவருக்கும்
கூடாத நேரமென்று
நினைக்கின்றேன்!
என்னில் சிக்குண்டதால் பலர்
தமது இனிய வாழ்வை
இழக்கின்றாரென்னும்
துயரம் மிகு செய்தியை நான்
அறிந்து கொண்ட கணம்
முதலாக என்னுள்ளம்
துடிப்பதனை
என் நெஞ்சம் பதைப்பதனை
எவர் தான் அறிவார்கள்?
எப்படித்தான்
அறியவைப்பேன்?
இரும்பினால் உருவான
எனக்குள்ளும் இதயம்
உண்டென்பதனை
யாரறிவார்? துடி துடிக்கும்
என் நெஞ்சுடனே
துயரில் வாடும் உங்களுடன்
என் நிலையையும் புரிய
வைக்க உங்களுடன் சில
வார்த்தைகள்!!

(என் பயணத்துக்காக)
இரும்பினாலான தனியான
பாதை என் பாதையில்
வேறொருவராலும்
பயணம் செய்ய
முடியாதன்றோ!
என் பாதையோ
தனிப்பாதை!
என் பயணமோ
தனிப்பயணம்!!!
என் பாதையின் குறுக்காக
இடையிடையே உங்கள்
பாதைகள் ஊடறுத்துப்
போவதுண்மை!
குறை சொல்லவும் முடியாது!
தடை செய்யவும் இயலாது!!
அதற்காக என்னைச் சற்றும்
கவனத்தில் நீங்கள்
கொள்ளாது
அதற்காக என்னை முற்றும்
உதாசீனம் நீங்கள் செய்து
கொண்டு என் பாதையைக்
கடப்பதுதான்
என் மனதைக் குடைகிறது!
அதிலேதான் சிக்கல்களும்
உருவெடுப்பதை அறிவீர்
அல்லவா?

என் பாதையைக்
கடப்பதற்கு முன்னே என்
பாதையோரம் நிதானமாய்
நின்று
புகைவண்டியேதேனும்
வருகிறதா எனக் கவனமாகக்
கண்காணித்த பின்பு
பாதையைக் கடந்து
செல்வதனால்
உங்களுக்கே நன்மையல்லால்
உங்களுக்கதால் பாதிப்பு
ஏதுமுண்டோ?

என் வருகையில்
கடுகளவேனும்
ஒழிப்பு மறைப்பு
எதுவுமில்லை!
நான் வருகின்ற போதெல்லாம்
ஊராரின் இரு காதும்
செவிடுபடும்படி
சத்தத்துடன் நில அதிர்ச்சியும்
ஊதலின் பேரொலியும் என்றும்
உருவாகும்போது என்மேலே
எவ்விதம்தான் குறை சொல்வீர்!
இத்தனை சத்தங்களையும்
கேட்டு உடன் வழிவிலகித்
தூரநின்று உங்கள் உயிர்
வாழ்க்கையைப்
பாதுகாத்துக்கொள்ள
உங்களாலே
முடியவில்லையென்றால்
இனிமேல் நான்வேறு என்னதான்
செய்வேன்? நான் வேறு
என்னதான் சொல்வேன்?
என்மேலே குறை குற்றம்
சொல்வதாலே எப்பயனும்
உங்களுக்கு விளைந்திடாது!

அது மட்டுமல்லாது என்
பாதையைக் கடக்க வேண்டிய
இடத்திலெல்லாம்
சிவப்பு நிறத்தில் எச்சரிக்கைப்
பலகைகள் இரு முனைகளிலும்
உங்களுக்காகவே
பொருத்தியிருப்பதனைப்
பார்த்திருப்பீர்!
எச்சரிக்கை ஒலியெழுப்பும்
சக்திமிக்க சைகை விளக்குகளு
மாங்காங்கே பெரும் செலவினில்
பொருத்தியுள்ளார்!
இவைகளையின்னும்
பார்க்காதவிடத்து
இனிமேலாவது
பார்த்துப் புரிந்து
கொள்வீர்!
இவற்றினுக்குப்
பின்பும் என்மேலே
நீங்கள் பழிகுற்றம்
சொல்லிச் சொல்லி
இளைக்க வேண்டாம்!!

நீங்களெல்லாரும்
என்மேலே தொடர்ந்து
குறை குற்றம்
சொல்வதனைப்
பார்க்கும்போது என்னவோ
நான்தான் தெருவினில்
போகின்ற உங்களைத்
தேடியோடி வந்து இழுத்துப்
பிடித்துமோதிக் கொல்/
ள்வதனைப் போலவன்றோ
அர்த்தம் தொனிப்பதனைக்
கேட்டு என்னுள்ளே
மனக்கவலை வளர்கிறது;
கண்ணீர் சொரிகிறது!!
உண்மையிலென் பாதையிலே
நடப்பதென்ன; சொல்லுங்கள்?
என் பாதையை நீங்கள்
கடக்கின்ற வேளையிலே
கடுகளவும் கவனமின்றிக்
கடப்பதனாலேதான்
பகுத்தறிவைத் துளியளவும்
பாவியாததனாலேதான்
என்னுடனே மோதிக் கொள்ள/
கொல்ல
நேரிடுகின்றதென்பதுவே
நெஞ்சுருக்கும் காரணமாம்!
அவற்றினையெல்லாம்
மறைத்துவிட்டு என்மேலே
அர்த்தமற்ற முறையில் குற்றம்
குறைகளினை சுமத்துவதால்
எவ்விதத்தும் பயனேதும் வராது!
சுயமாகச் சிந்திக்கும் எவரும்
இதுகேட்டு உங்களைத்தான்
மூளையற்றோர் என்று அவர்கள்
ஊருக்குச் சொல்லி எள்ளி
நகையாடிடுவார்!

எனக்கென்றே வகுத்துள்ள
பாதையிலே எப்படியும்
எப்போதும் போவேன் நான்!
என்னைத் தடுப்பதற்கு இங்கே
எவருமில்லை!
என்னைத் தடுப்பதற்கு இங்கே
எவருக்கும் துணிவுமில்லை!
எனக்குக் குறுக்காக இன்றேல்
எதிராக நீங்கள்
வருவதைக் கண்டு உடன்
என்னை நிறுத்துதல் இன்றேல்
என் வழியை மாற்றுதல்
என்பதுவும்
முட்டாள்தனமான ஆசை!
மூடத்தனமான யோசனை!!
தினமும் என்னை நம்பி
எத்தனையோ மக்கள்
தங்கள் அவசர அவசிய
அலுவல்களுக்காக
பயணம் செய்கின்றார்
என்பதனை அறிவீரோ? பயணம்
செய்யும் அவர்களையெல்லாம்
குறித்த குறித்த நேரங்களில் நான்
அவர்களிடத்துக்குக் கொண்டு
சேர்க்கும்
பெரும் பணி எனக்குண்டு
அறிவீரோ?
நீங்கள் அறிவின்றிச் செய்கின்ற
மூடச்
செயலுக்காய் என்பாதையை
என் பணியைத் தடுத்து நின்று
ஆர்ப்பாட்டம் செய்கின்றீர்!
சிந்திக்கும் திறனுண்டேல்
சிந்தித்துப் பார்ப்பீர்!!

வீதித் தடைகள்
இல்லையென்றுமோர்
புதுக்காரணம் சொல்லுகின்றீர்
இன்று! வீதித்தடையொன்றில்
கணம் நின்று கேட்டால் அங்கு
பேசப்படும் பண்பற்ற
வசைமொழிகளைக்
கேட்டுப் பார்த்தால் எவரின்
நெஞ்சினிலும்
கொதிப்புடனே சினமும் கொலை
வெறியும் கிளரும்! தம்பணியைச்
செய்கின்ற வீதித்தடைக்
காவலரை வாயில்
வந்தபடியெல்லாம்
வசைபாடுவதனை
பணி செய்யும் காவலரைத்
தாக்கத் துணிவதனை
காவலர்கள் இல்லாத நேரத்தில்
வீதித்தடைகளினைத்
தகர்த்தெறிந்து மக்களுக்கு இடர்
விளைவிக்க முயல்வதனைக்
கண்ணாரக் காட்சிகளை நான்
கண்டதன் பின்னாலும் காதாரச்
செய்திகளை நான் கேட்டதன்
பின்னாலும் வீதித்தடை
இல்லையென்று காரணத்தைச்
சொல்லி என்னுடன்
மோதுவதனை நியாயப்படுத்த
முனையாதீர்!

இத்தனை பாதுகாப்பு
வசதியெல்லாம் இருந்தாலும்
உங்கள் உயிர்களினை
வாழ்க்கையினைக் காப்பாற்ற
உங்களால் முடியவில்லை
என்றால் அதனால் வரும்
பாதிப்பும் பயங்கரமும்
எனக்கில்லை என்பதனை
நீங்கள் நன்றாக உங்கள்
நெஞ்சங்களில் பதித்துக்
கொள்வதுடன் இனிவரும்
நாள்களிலே
என் பாதையைக் கடக்கும் எந்த
நேரத்திலும் சரி எனது
வருகைபற்றி
எச்சரிக்கையாயிருப்பீர்!
உங்கள் அலட்சியத்தால்
பாதிப்பு உங்களுக்கே! எனக்கு
ஒரு பாதிப்பும்
ஏற்படப்போவதில்லை!!
என்பாதையின் குறுக்கே
கொம்பனெவன் வந்தாலும்
ஒரேயடிதான் வேறில்லை;
உயிர்தப்புவது உங்கள் விதி!
என்னைத் தட்டிக்கேட்பதற்கு
எவருக்கும் உரிமையில்லை!
என்னுடனே முட்டிமோத
எவருக்கும் துணிவுமில்லை!!
உங்கள் பாதுகாப்பு உங்கள்
கைகளில்தான்! உங்கள்
நல்வாழ்வு உங்கள்
கரங்களில்தான்!!
புகைவண்டியா மெனது
ஆலோசனைகளும் இவையாகும்!
புகைவண்டியா மெனது
அறிவுரைகளும் இவையேயாகும்!!



# விதா(ர)னையாரிடம் ஒரு கேள்வி!

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

அந்த அமர்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் ஜனதாவிமுக்தி பெர முவையும் தவிர நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் பங்குகேற்றன. நாட்டின் தேசிய இனப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கக்கூடிய பல ஆலோசனைகளை அவை கண்டறிந் தன. நீங்களும் அந்த மாநாட்டின் முடிவில் காணப்பட்ட பரிந் துரைகளை வைத்து ஓர் அறிக்கையைத் தயாரித்து, முன்னாள் ஜனாதிபதியிடம் கையளித்தீர்கள்.

முன்னாள் ஜனாதிபதியோ, அந்த அறிக்கை பற்றி என்றுமே வாய் திறக்கவில்லை. ஆனால், எனது ஞாபகத்தில் மாநாட்டு அமர்வுகளில் கலந்து கொண்ட ஒரு முக்கிய பிரமுகர் அந்த அறிக்கையில் காணப்பட்ட பரிந்துரைகளில் பல முக்கிய நல்ல அம்சங்கள் இருந்ததாகப் பத்திரிகைகளில் கசியவிட்டார். அப்பொழுதும் தாங்கள் வாய் மூடி மௌனமாக இருந்தீர்கள். அந்தச் செய்தியை வாசித்த பிரமுகர்கள் சந்திரிகா அம்மையாரால் தயாரிக்கப்பட்டு நாடாளு மன்றத்தில் (ஐ.தே.கட்சியினரால் தீயிடப்பட்ட) சமர்ப்பிக்கப் பட்ட தீர்வுத்திட்ட ஆலோசனை களிலும் பார்க்க பல நல்ல அம்சங்கள் தாங்கள் மகிந்தவிடம் கையளித்த சர்வ கட்சி மாநாட்டில் கண்ட பரிந்துரைகளில் இருந்ததாகக் கூறி னார்கள். தங்கள் அறிக்கையை தங்கள் (இன்றும்) தலைவர் மகிந்த [illegible] களிடம் [illegible] டமிருந்தும் கடும் எதிர்ப்பு ஏற்படும் என்ற கபட நோக்கத்தில், அதை நிரந்தரமாக ஒளித்தே வைத்து விட்டார். ஆனால் மெத்தப் படித்த, சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை நன்கு தெரிந் தவர் எனத் தம்பட்டம் அடிக் கும் தாங்கள் (திஸ்ஸவிதாரன) அந்த அறிக்கையை வெளிக் கொணர என்ன முயற்சி எடுத்தீர் கள்? தாங்கள் வாழ்நாளில் செய்த ஓரேயொரு நல்ல காரி யம் அந்த மாநாட்டுக்கூட்டங்களை (அமர்வு) நடத்தியதும் இறுதி அறிக்கையைத் (பரிந்துரைகள் கொண்ட) தயாரித்ததும் மட்டுமே. அதை உங்கள் தலைவரைக் கொண்டு வெளி யிட்டிருந்தால் இந்தப் போரின் உக்கிரமாவது சிறிதளவு குறைந்திருக்கும்! இனப்பிரச்சினைக்கான தீர்வு காணும் முயற்சியில் நாம் சிறிதளவாவது முன்னேறியிருக் கலாம் அல்லவா?

எங்கே போனது தங்களது கண்டறியாத பட்டமும் படிப்பும். தற்சமயம் தாங்கள் நாடாளுமன்றம், செல்லத்தேவை ஒன்றும் இல்லை. போகிறவழிக்கு (மேலுலகம்) புண்ணியம் தேடி, வீட்டில் கிடப்பதே எல்லோருக்கும் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# வாசல் பார்க்கும் வசந்தங்கள்

ஜோ.ஜெஸ்ரின்

**வா**சலை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கின்றார் சுந்தரம் ஐயா. யாழ்ப்பாணத்தில் வெளிவரும் நான்கு பத்திரிகைகளையும் முழுவதும் படித்து முடித்து விட்டார். ஆனால் நேரம் போகவில்லை. சாப்பாடு, தங்குமிடம், பராமரிப்பு என்று அடிப்படை வசதிகளுக்கு எந்தக் குறையுமில்லாதபோதிலும் இந்த மனுசன் தினமும் வந்திருந்து வாசலையே பார்த்துக்கொண்டிருக்கும்.

சுந்தரம் ஐயாவோடை இன்னும் பல பெரியவர்கள் வெற்றிலை போடுவர். எச்சில் துப்பும் சாட்டில் வாசல் பக்கமாக வந்து எவராவது தங்களைப் பார்க்க வருவார்களா என்ற ஏக்கத்தில் ஒரு பார்வை? மீண்டும் போய் படித்த பேப்பரையே மீண்டும் படிக்கத் தொடங்கிவிடுவர்.

பத்து மாதம் சுமந்து ஒரு பிள்ளையைத் தாயவள் பெற்றெடுக்கும் வரையில் அவள் படும் வேதனைக்கு ஈடான துன்பம் உலகில் வேறெதுவுமில்லை. பிள்ளைக்கு நல்ல உடுப்புப் போடவேணும், நல்ல சாப்பாடு குடுக்கவேணும் பெரிய பள்ளிக்கூடத்தில இலட்சக் கணக்கில் டொனேசனைக் கட்டி எண்டாலும் சேர்த்துப் படிப்பிக்கவேணும், வீடு கட்டிக் கொடுக்கவேணும், இப்படித்தான் பிள்ளைகள் என்னென்ன விரும்புதுகளோ அதுகளை எல்லாம் மனம் அறிஞ்சு வாங்கிக் கொடுத்து எந்தக்குறையுமில்லாமல் பிள்ளைகளை வளர்த்து நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்கத்தான் ஒவ்வொரு பெற்றோரும் பாடுபடுகுதுகள். அதுதான் உயிர் உள்ளவரை பெற்றோரின் அக்கறை. முட்டையைக் கோழி அடைகாத்துப் பொரித்த பின்பு ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்துப் பராமரிக்கின்றன, அங்கேதான் தாய்மையும் இறைமையும் ஒன்றாய் சங்கமிக்கின்றன.

ஒரு தாயவள் பிள்ளையை வயிற்றில் சுமப்பது பத்து மாதம் என்றால் அதனை வாழ்க்கை முழுதும் நெஞ்சில் சுமப்பவர் தந்தை. இப்படியான உறவுகள் பின்னாளில் எல்லோருமிருந்தும் எவருமில்லாதவர்களாக்கப்படும் அவலம் இந்த அவசர உலகில் ஏனோ உணரப்படாமலேயே இருக்கின்றது. இதெல்லாம் சுந்தரம் ஐயாவின் சிந்தனைகள்.

முதியோர் இல்ல வாசலிலிருந்து பல கண்கள் பார்த் துக்கொண்டிருக்கிறன. பெற்றெடுத்துப் பெயர் வைத்த பிள்ளைகள் ஒரு நேரமாவது தங்களைப் பார்க்க வரலாம் என்ற ஒரே நம்பிக்கையில்தான் அந்தக் காத்திருப்புத் தொடர்கிறது. வராதவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கைகள் வழமைபோல ஏமாந்து போகும்தான். என்ன செய்வது முதுசங்களின் எதிர்பார்ப்புக்கள் ஒரு தொடர் கதைதான்.

முதியோர் இல்ல தொலைபேசி அடிக்கின்றது. கடமையிலிருக்கும் பணியாளர் றிசீவரை எடுக்கின்றார்.

"வணக்கம்! இது முதியோர் இல்லமோ....? கனடாவில இருந்து கதைக்கிறம். பதினெட்டு வருசமாக நாங்கள் யாழ்ப்பாணம் வரயில்லை. எங்கட பேரன்ஸ் எல்லா இடப்பெயர்வுகளிலும் தப்பீட்டினம். கடைசியாய் முள்ளிவாய்க்காலாலையும் தப்பி வந்திட்டினமாம். இப்ப சரியாகக் கஷ்டப்படுகினம் எண்டு அறிஞ்சம். அவயளை உங்கட இல்லத்தில சேர்க்க ஏலுமோ எண்டு அறியத்தான் கோல் எடுத்தனான்."

பணியாளரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதைச் சுற்றியிருந்தவர்கள் ரசிக்கிறார்கள். தங்களுக்கென்றும் ஒரு உயிர் துடிப்பதை நினைக்கையில் அந்தச் சந்தோசம் எங்கிருந்தோ வந்து ஒட்டிக்கொள்கிறது.

"முள்ளிவாய்க்கால்லை இருந்து தப்பிப்பிழைச்சு வந்த அப்புவும் ஆச்சியும் தங்கள் சீவியத்தைத் தாங்கள் பாப்பினம்தானே! நீங்கள் கவலைப்படாதேயுங்கோ. ஒருவேளை அவையளுக்கு ஏதுமெண்டா ஊர் உலகத்துக்கு அவிச்சுக் கொடுத்து மேளதாளத்தோட அடக்கம் செய்வியள்தானே கவலைப்படாதேயுங்கோ....."

"படக்"

தொலைபேசி அழைப்பு துண்டிக்கப்படுகின்றது.

> **கட்டையில போற வயசு எண்டாலும் பிள்ளைகளைப் பார்க்கவேணும் என்கிற தணியாத தாகத்தைப் பார்க்கிறபோதெல்லாம் ஆளையாள் கிண்ட லடித்துக்கொள்வார்கள். வேறென்ன செய்ய! அது மட்டும்தான் அவர்களால் முடிந்தது.**

"தம்பி! என்ன மோனே, யாரும் புது மெம்பர் வரப் போகினமே?" சுந்தரம் ஐயா வினா தொடுத்தார்.

"இப்பதான் கேட்கினம். பார்ப்பம்... நீங்கள் போய்ப் படுங்கோ சுந்தரம் ஐயா. உங்களுக்கு உடம்பு ஏலாது,வெளியில வந்து நிக்கியறியள்..."

"இல்லயடா தம்பி! வாசலை பார்த்துக்கொண்டு நிக்கிறன். என்ரை மகன் என்னைப் பார்க்க வருவான் என்று மனசுக்குத் தோணுது அதுதான்....!"

"ஒவ்வொரு நாளும் இப்படித்தானே சொல்லுறியள்.... ஒரு நாயும் பார்க்க வரவேயில்லை."

போன் வந்த வேகத்தில் வார்த்தை தடித்துவிட்டதை உணர்ந்து, மெல்ல அருகில்போய் சுந்தரம் ஐயாவை ஆதரவாகப் பிடித்துக்கொண்டான் பணியாளன்.

"தம்பி ராசா! நீயும் என்ர பிள்ளை மாதிரித்தானேடா! பிள்ளையை நாய் எண்டு சொல்லாத. அவனுக்கு ஆயிரம் வேலை கண்டியோ! அவன் ஆறுதலா வரட்டும் நான் இஞ்ச சும்மாதானே வந்திருக்கிறன். வாசல்ல நின்று பார்த்திட்டுப்போய் படுக்கிறன் விடய்யா."

சுந்தரம் ஐயா மெல்ல உள்நோக்கித் திரும்பத் தொடங்கியிருந்தார்.

பாக்கியம் ஆச்சி வெற்றிலையை மடித்து பாக்கை இடித்து வாயில் போட்டுக்கொண்டே வந்தாள்.

சுந்தரம் ஐயா வழிமறித்து "எணேய்! எங்கயெண போறாய்? கூனிக்கொண்டு கனதூரம் நடக்காத. உனக்கு மூட்டு வாதமல்லே...!"

"கட்டிநிக்கிற பசுவில பால் கறந்து, மண் சட்டியில அதைக் காய்ச்சி என்ர பிள்ளையளுக்கு ஒவ்வொரு நாளும் குடுக்கிறனான். இண்டைக்கு காலமை பால் தேத்தண்ணி தந்தவங்கள் எல்லோ! அதுதான் பிள்ளையளின்ர நினைவு முட்டிப்போச்சு. அதுகளை மறக்கேலுமே? அதுதான் ஒருக்கா வாசலைப் பாத்திட்டுப் போகலாம் எண்டு வந்தன்."

சுந்தரம் ஐயாவும் பாக்கியம் ஆச்சியும் ஈடாடத் தொடங்கி பல வருடங்களாகிவிட்டன. பத்து வருடங்களாக இப்படித்தான் விசர் பிடித்த மாதிரி வாசல்ல வந்து நிக்கிறதும் போறதுமாகக் காலம் கழியுது.

சுந்தரம் ஐயாவின் துணைவி இறந்துபோனதுக்குப் பிறகும் அவர்தான் பிள்ளைகளை வளர்த்தவராம். பாக்கியமாச்சியின் துணைவர் அவவை விட்டிட்டு வேற கலியாணம் முடித்தாப் பிறகும் இந்த மனுசி அரிசி இடிச்சு தான் திரிச்சுக் கொடுத்துத்தான் பிள்ளைகளை ஆளாக்கிவிட்டதாம். இப்பிடிக் கன கதைகள் அந்த இல்லம் முழுவதும் காலமாய் சுற்றிச்சுழன்று திரியுதுகள்.

கட்டையில போற வயசு எண்டாலும் பிள்ளைகளைப் பார்க்கவேணும் என்கிற தணியாத தாகத்தைப் பார்க்கிறபோதெல்லாம் ஆளையாள் கிண்டலடித்துக்கொள்வார்கள். வேறென்ன செய்ய! அது மட்டும்தான் அவர்களால் முடிந்தது.

மாலை 5 மணியாகிவிட்டது. இனி சூரியனும் போய்விடுவான். ஒரு வெள்ளை நிறக் கார் மெல்ல மெல்ல இல்ல வளாகத்துக்குள் தயங்கித் தயங்கி ஊர்கிறது. "அங்க பார் காரில என்ர மகன் வாறான்."

பாக்கியமாச்சி விசுக்கென்று வேகம் கொண்டாள். காரைவிட்டு இறங்கிய மனிதர் வேட்டி சட்டை சந்தனப்பொட்டுடன் மாப்பிள்ளை மாதிரி வாறார். அருகில் ஓர் அழகிய பெண்.

சுந்தரம் ஐயாவும் பாக்கியம் ஆச்சியும் நெற்றி யில கையை வைத்து சலூட் அடிப்பதுபோல கூர்ந்து பார்க்கினம். வந்தவர்கள் தங்கள் பிள்ளைகள் இல்லையோ என்கிற அச்சம் அவர்களை ஊமையாக்கி இருந்தது. வந்தவரின் நடவடிக்கையில் தெரிந்த தடுமாற்றம், அவருக்கு கண் தெரியாது என்பதை மெல்லப் புரிய வைத்தது. கைத்தடியையும் நகர்த்திக்கொண்டே முன்னே வந்தாள் பாக்கியம்.

"பாக்கியம் ஓடாத" என்றார் சுந்தரம்.

"நீ பேசாம இரு சுந்தரம்" என்று வெடுக்கென்று சொல்லியபடியே முன்னேறினாள் பாக்கியம்.

"எங்களை இவரால பார்க்க ஏலுமோ..." கூட வந்த பெண்ணைப் பார்த்து ஒரு சிரிப்புடன் கேட்டார் சுந்தரம்.

"சுந்தரம் அப்பா! பாக்கியம் அம்மா! எப்படிச் சுகமாய் இருக்கிறியளே?"

பாசக்காரக் குரலைக் கேட்டதும் உடலில் மின்சாரமெனப் பாய்ந்த உணர்வைக் கட்டுப்படுத்துக்கொண்டே,

"கண் தெரியாத உமக்கு எங்கட பெயர் என்னெண்டு மோன தெரியும்?" என்றாள் பாக்கியம் ஆர்வத்துடன்.

சிரித்துக்கொண்டே அந்த மனிதர் "என் செவிகள் என்றும் திறந்திருக்கின்றன" என்றார்.

"நான் ஒரு அனாதை அம்மா! கண் தெரியாது எண்டு, என்னை சின்ன வயசிலயே அம்மா அப்பா உதறித் தள்ளீட்டினம். காப்பகத்தில் படிச்சு இப்ப பேராசிரியராக இருக்கிறன். மனிசி, பிள்ளை என்று எனக்கு கடவுள் எல்லாச் சொத்து சுகத்தையும் தந்திருக்கிறார். ஆனால் அப்பா அம்மாவைப் பார்க் கத்தான் குடுத்து வைக்கேல்லை." என்றார் அந்த மனிதர்.

"நான் பெற்றோர்களைத் தத்தெடுக்க வந்திருக்கிறன்." என்றொரு குண்டையும் படக்கெனத் தூக்கிப் போட்டார் மனுசன்.

"எனக்கொரு தாயும் ஒரு தந்தையும் வேணும். என்னைப் பெத்தவங்களுக்கு நன்றிக்கடன் செலுத் தோணும். அதான் ரெண்டு பேரைத் தத்தெடுக்கிறத்துக்காக இல்ல காப்பாளருக்கு மெயில் போட்டனான். அவரின்ர பதிலையும் வாசித்து பிறின்ட் எடுத்துக்கொண்டுதான் வந்திருக்கிறன். உங்களுக்கு விருப்பமெண்டால் சொல்லுங்கோ."

பாக்கியம் ஆச்சியும் சுந்தரம் ஐயாவும் சொல்லி வைத்தாற்போல ஒருவரையொருவர் பார்த்துவிட்டு வாசலைப் பார்க்கிறார்கள். அவர்கள் பார்வை வாயிலைத் தாண்டி வீதியில் ஓடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஹம் சிறிசேனவுக்கு

## ஒரு பகிரங்க மடல்!



அப்பன்! முதல்ல இந்தக் குழுவில இடம்பிடிக்க சனாதிபதியின்ர மகன் எண்டுறதைவிட வேற என்ன தகுதி இருக்கு உம்மட்ட? என்ன 'ஒவ்வீசியல் போஸ்ட்' இருக்கு? உம்மைவிட இலங்கையை பிரதிநிதித்துவம் செய்ய வேற பொருத்தமான பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இல்லையோ? நீர் முதல்ல அதை யோசிக்கவேணும்.

தம்பி தஹம்! வணக்கம்! எப்பிடிச் சுகமாயிருக்கிறீரோ? நலமாய்த்தான் இருப்பீர் என்று நம்புறன்.

இந்தமுறை இலங்கையிலிருந்து ஜெனீவாவுக்குப் போன சுற்றுப்பயண குறூப்பில நீர் இடம்பிடிச்சதால ஊடக தரப்பாரிட்ட மாட்டுப்பட்டு நொந்து நூலாகி வெந்து போய்க் கிடக்கிறீர் எண்டு தெரியும்.

பத்தாக்குறைக்கு அந்தப் போட்டோக்களை பேஸ்புக்கில போட்டபோய் அங்கையும் அறம்புறமான கொமன்ஸ் மழையால நீர் பாதிக்கப்பட்டதும் தெரியும். அதுவும் போதாதெண்டு நீர் செய்ததுதான் திறம் எண்டு புதிசா நியாயம் பிளக்கப்போய் அதுக்கும் நல்லா வாங்கிக்கட்டியிருந்தனீர் எண்டதும் தெரியும்.

இதைத்தான் தம்பி தமிழில சொல்லுறது, பொல்லைக்குடுத்து அடிவேண்டுறதெண்டு. இப்ப கடைசியாய் அந்த நியாய விளக்கம் குடுத்த பேஸ்புக் போஸ்ட்டையும் தூக்கிப்போட்டீர். 'பப்ளிக் பிகர்' எண்ட உம்மட பக்கத்தைத் தட்டிப்பார்த்தனான்: அங்க அந்தப் போஸ்ட்டைக் காணேல்ல.

ஏற்கெனவே குடும்ப ஆட்சிப் பிரச்சினையால தான் ஒராள் மாட மாளிகையளையும் கூடகோபுரங்களையும் விட்டுப்போட்டு ஓடினவர். ஓடினவர் எண்டுறது கூடப் பிழை. விரட்டப்பட்டவர் எண்டு சொல்றதுதான் சரி. அவருக்கும் உம்மை மாதிரி ஒரு மகன் இருந்தவர். எனக்கென்னவோ அவரின்ர ஸ்ரைலைத்தான் நீர் பின்பற்ற வெளிக்கிடுகிறீர் போலக் கிடக்கு.

வரலாற்றை மாத்தி எழுதவேணுமெண்டு நாங்கள் வாக்களிச்சு உம்மட தகப்பனாரை தெரிஞ்சுவிட, நீர் என்னடாவெண்டால், அதே வரலாற்றை திரும்ப எழுத வெளிக்கிடுற மாதிரித் தெரியுது.

உம்மட ஜெனீவாப் பயணம் சம்பந்தமா உம்மட தாய் தேப்பன் சத்தம் போடாமல் இருக்கிறதும் எங்கயோ இடிக்கிற மாதிரிக் கிடக்கு. நீர் வேற, அம்மா அற்றெண்ட் பண்ண முடியாமல் போனதாலதான் உமக்கு சான்ஸ் கிடைச்சதெண்டும் சொல்லியிருக்கிறீர்.

உம்மைப்பற்றி ஏற்கெனவே கொம்பிளெய்ன் ஒண்டு அடிபட்டது ஊரறிஞ்ச விசயம். அதுதான், 2013ஆம் ஆண்டு பெப்பிரவரி மாசம் பாசிக்குடா மாலு பீச்சில நடந்த சம்பவத்தைதான் சொல்லுறன். நீரும் உம்மட கூட்டாளியளும் அங்க போய்க் கூத்துப்போட, அதில வந்த பொலிஸ் அதிகாரி ஒராளின்ர மகனில கைவைக்கப் போய், அது ஹொஸ்பிட்டல் அட்மிசன் வரைபோனது உமக்கும் ஞாபகம் இருக்கும் எண்டு நினைக்கிறன். பிறகு அது பெரிய கேஸ் ஆகாமல் பார்த்துக் கொள்ள உம்மட தேப்பன் எவ்வளவு றைபண்ணினவர் எண்டும் தெரியும். ஏனெண்டா அங்க பிழை வந்து உம்மட சைட்டிலதான். அப்ப உம்மட தேப்பன் ஒரு மினிஸ்டர் மாத்திரம்தான். இப்ப...?

நீர் மாத்திரமில்ல உம்மட சகோதரி சத்துரிகாவுக்கும் அரசியல் பரப்பில தலைபோடுற பிளான் இருக்குதுபோலக் கிடக்கு. அவவும் ஒண்டிரண்டு மீற்றிங் வைச்சுத் திரியிறதாக் கேள்வி.

இலங்கையின்ர ஜெனீவா சுற்றுப் பயணக் குழுவில என்ன 'குவாலிபிக்கேஷ'னில எந்த 'கற்றகரி'யில நீர் 'செலக்ட்' ஆகினீர் எண்டு தெரிஞ்சு கொள்ள ஆசை. அது மட்டுமில்லாமல், இது எடுத்தா, அது பிறீ எண்ட கணக்கில ஒரு கூட்டத்தில பங்கு பற்றினதாலதான் பிரயோசனமான மற்ற மீற்றிங்கில கலந்துகொள்ளச் சான்ஸ் கிடைச்சமாதிரியும் சொல்லியிருக்கிறீர்.

அது மாத்திரமல்லாமல் இப்பிடி நீர் இந்தக் குழுவில இடம்பிடிச்சதும் கூட்டங்களில பங்குபற்றினதும் எப்பிடி நாட்டுக்குத் தீமையாக முடியும் எண்டு கேட்டிருக்கிறீர்.

அப்பன்! முதல்ல இந்த குழுவில இடம் பிடிக்க சனாதிபதியின்ர மகன் எண்டுறதைவிட வேற என்ன தகுதி இருக்கு உம்மட்ட? என்ன 'ஒவ்வீசியல் போஸ்ட்' இருக்கு? உம்மைவிட இலங்கையை பிரதிநிதித்துவம் செய்ய வேற பொருத்தமான பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இல்லையோ ? நீர் முதல்ல அதை யோசிக்க வேணும்.


உம்மட தாய் தேப்பன் கொஞ்சம் எளிமை விரும்பியள் மாதிரிதான் நடந்து கொள்ளுறவை. பாக்க அப்பிடித்தான் தெரியுது. ஆனால், நீர் அப்பிடியில்லை போல கிடக்கு.

மற்றது, நீரும் நாமல் மாதிரி நீலப் படையணி எண்டு குறூப் ஏதும் 'போம்' பண்ணுற 'பிளான்' வைச்சிருக்கிறீரோ ? சிலவேளை பிறகு உமக்குத் தோன்றினாலும் தோன்றும்.

தம்பி ஒண்ட ஞாபகத்தில வைச்சுக் கொள்ளும். இந்த வருசம் சனாதிபதி தேர்தல் நடந்த அண்டு இரவு தென்னந்தோப்புக்குள்ள பதுங்கின உங்கட குடும்பத்தாரை கௌரவமா வெளியில கொண்டுவந்தது எங்கட வாக்குகள்தான்.

இனிமேல் இப்படிப்பட்ட காரியங்களுக்குப் போறதைக் கைவிடக்கூடாது, அப்பிடிப்பட்ட போட்டோக்கள் ஊடக தரப்பாரிட்டக் கிடைக்கிறதைத் தவிர்க்கோணும் அல்லாட்டில் அதை எடிட் பண்ணி கிடைக்கப்பண்ண வேணும் எண்டு யோசிக்கிறதை விட்டுப் போட்டு ஆகவேண்டியதைப் பாரும். ஏனெண்டால் உம்மட்ட இருந்து இன்னும் நிறைய எதிர்பார்க்கிறம்! நன்றி!

*சிநேகிதமுடன்,*
***—ஸூடோ ஸ்வாமி***



# சிரிக்க சிந்திக்க சில வரிகள்!

நான் சிறுவனாக இருந்த காலத்தில் தமிழ் சினிமாப் பாடல்கள்தான் மக்களைக் கவர்ந்த ஒரே ஒரு பொழுது போக்காக இருந்தது. வானொலிப் பெட்டியில் பாடல்கள் ஒலிக்கும், அதைக் கேட்டுக் கேட்டு எம் மனதில் வரிகள் ஆழமாகப் பதிந்துவிடும்.

அப்படியான ஒரு பாடல்தான் 'எல்லாம் இன்ப மயம், எல்லாம் இன்பமயம்' எனத் தொடங்கும் பாடல் அந்தக் காலத்தில் யாழ். குடா நாடும் எமக்கு இன்ப மயமாகவே இருந்தது என்பது மூத்த குடிமக்களுக்கு நன்கு தெரியும். ஆனால், இப்பொழுது நிலமை தலை கீழாக மாறிவிட்டது கண் கூடு.

எல்லாம் இன்ப மயம் இப்போ எல்லாம் பய மயமாகி விட்டது. வீதிகள் காப்பெற் வீதிகளாக மாறியபின் அதில் பயணிக்கும் அதிவேக வாகனங்கள் ஒன்றை ஒன்று மோதிக்கொள்வதும் வேகக்கட்டுப்பாடு இல்லாத மோட்டார் சைக்கிள்களும் தாமாகவே தற்கொலை செய்யும் ஓட்டிகளும் அன்றாட நிகழ்களாகிவிட்டன.

கே.கே.எஸ் வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதியில் பயணிப்பதே ஒரு பயமயம். அளவு மீறிய பயணிகளை ஏற்றிக்கொண்டு 45 டிக்கிரி சரிந்த வண்ணமும் ஓடும் முனி பஸ்கள்... மன்னிக்கவும் மினி பஸ்களைக் கண்டாலே பயமயம். அதன் பின்னாலே பயணிப்பதும் பய மயம். தெருவில் தரிப்பிடமில்லாதபோதும், ஒருவர் ஏறுவதற்காகக் கையைக் காட்டினால்போதும் சாரதி திடீர் என பிறேக் அடிப்பார் பின்னால் வரும் வாகனங்கள் மோத, எல்லாம் பயமயம்.

இரவு வந்ததும் தெருவால் போவது பயமயம். வீட்டை விட்டுப் போகாமல் இருந்தாலும் வாள்கள் ஆட்சி புரியும் பயமயம். என்னதான் இந்த வாள்களைப் பற்றி, வாள்வாள் என்று கத்தினாலும் இன்று குடாநாடு வாள்களால்தான் ஆட்சி புரியப்படுகிறது.

சிங்கத்தின் கையில் வாள் இருக்கும்போது, எம் கையில் வாள் இருந்தால் என்ன எனக் கேட்பதால் மேலும் பயமயம்.

போர்க் காலத்தில் ஏற்பட்ட குண்டுச் சத்தம், செல்லடிதுவக்குச் சூடு ஓய்ந்து விட்டதென்றாலும் எம்மவர் இறுதி யாத்திரையில் மறக்காமல் பட்டாசுகளை வெடிக்க வைத்து எம்மைப் பயமயமாக்கி விடுவர்.


நம்மூரில் கோயில்களின் ஒலிபெருக்கியின் ஓசை காதைப் பிழக்கும் பயமயம். சிறுவர் துஷ்பிரயோகம் பாதுகாப்பின்மை என்ற பய மயம். எல்லாம் பயமயமாகத் தென்படுவதால், எனது நண்பர் ஒருவரைக் கேட்டேன் இந்தப் பய மயத்தை எப்படிப் போக்கலாம் என்று, அவர் சொன்ன பதில் பயமயமாகவே இருந்தது.

யாழ்ப்பாணத்தில் தாராளமாகக் கிடைப்பது போத்தல் அதை வாங்கி அடித்துவிட்டு வீட்டுக்குள் பத்திரமாகப் படு என்பதுதான் அவரது அறிவுரை!

*கலாபூசணம்*
*மு.மாசிலாமணி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரமும் கொடியும்

சந்திரசேகர ஆசாத்

பெரும்பான்மை இன மக்கள் மரத்தைப் போன்றவர்கள் எனவும் சிறுபான்மையினர் மரத்தைச் சுற்றிப்படரும் கொடி போன்றவர்கள் எனவும் ஓர் எண்ணப்பாடு இலங்கையில் பெரும்பான்மை மக்களிடம் வலுவூட்டப்பட்டு வந்துள்ளது. ஆனால் தமிழ் மக்கள் சிறுபான்மையினர் அல்லர். அவர்கள் வாழும் வடக்கு – கிழக்கில் அவர்களே பெரும்பான்மையினர். அவர்கள் எவரையும் சுற்றிப் படர வேண்டிய தேவை இல்லை. இரு இனங்களும் இரு மரங்களாக அருகருகே செழித்து வளர்வதே நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது.

இது ஜனாதிபதி, தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் முகமாக கிளிநொச்சிக்கு பயணம் செய்தபோது அவரை வரவேற்று உரை நிகழ்த்திய வடமாகாண முதலமைச்சர் வெளியிட்ட கருத்தாகும்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு வடக்குக்குப் பயணம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை மரியாதை நிமித்தம் கூடச் சந்திக்கவில்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரைச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளுக்கு நிதியுதவிகளை வழங்குவார் என்று வாக்களித்திருந்தார்.

இனப்படுகொலை பற்றிய தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டமையாலேயே முதலமைச்சருடனான சந்திப்பைப் பிரதமர் விரும்பவில்லையெனக் கூறப்பட்டது. ஒரு ஜனாதிபதியோ பிரதமரோ அல்லது வேறு எந்த ஒரு முக்கிய பிரமுகரோ ஒருபகுதிக்கு பயணம் செய்யும் போது அந்தப் பகுதியின் ஜனநாயகத் தலைவர் வரவேற்பது ஒரு முக்கிய சம்பிரதாயம். பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் இலங்கைக்கு பயணம் செய்யும் முகமாக கொழும்பில் வந்து இறங்கியபோது அவரைக் கொழும்பு மாநகர முதல்வராக இருந்த உருத்திரா வரவேற்றார் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இனப்படுகொலைத் தீர்மானம் காரணமாக இந்தப் பாரம்பரியச் சம்பிரதாயத்தைக்கூட மதிக்கத் தவறியிருந்தார். இதுவும்கூட தமிழ் மக்கள் நமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக தமது மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றக்கூடாது என்ற அகங்காரத்தின் வெளிப்பாடேயாகும். அடிப்படையில் பெரும்பான்மை இன அரசனான மரத்தைச் சுற்றிப்படரும் கொடியாகத் தமிழர்கள் அடங்கிப் போய் இருந்துவிடவேண்டும் என்ற எண்ணக் கருவில் உதித்த ஒரு நடைமுறையாகும். இருந்தாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ இந்தப் பாரம்பரிய சம்பிரதாயத்தைக் கௌரவித்துள்ளார். எனவே முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அவரை வரவேற்றதுடன் அவரினால் ஆரம்பிக்கப்பட்ட விழாவிலும் கலந்துகொண்டு உரையாற்றினார். எனினும் அவர் வடமாகாண முதலமைச்சர் என்ற தகைமையிலிருந்தும் வடபகுதித்தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதி என்ற நிலைப்பாட்டிலிருந்தும் எள்ளளவும் தளர்ந்துவிடாமலும் தனது கருத்துரைகளை வெளியிட்டுள்ளார்.

அந்த வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் ஏற்கனவே மீறப்பட்ட மனித உரிமைகள் பற்றியே பேசுகிறது எனவும் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் மீள மக்களுக்குக் கையளிக்கப்படல், மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், காணாமற்போனோர் விவகாரங்கள் ஆகியவை தொடர்பாக பயனுள்ள நடவடிக்கைகளுக்கான வழிகள் முன்வைக்கப்படவில்லை எனவும் அங்கு அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

ஜனாதிபதியும்கூட முதலமைச்சரின் கருத்துக்களுக்குச் சாதகமான முறையில் தனது உரையில் சில விடயங்களைக் குறிப்பிட்டதுடன் மூன்று வருடங்களில் நாட்டை உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வைக்கப் போகிறார் எனவும் சகல விடயங்களிலும் தமிழ் மக்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார். மேலும் ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக இராணுவத்தால் அபகரிக்கப்பட்டு வைத்திருந்த காணிகள் சிலவற்றையும் மக்களுக்கு வழங்கினார்.

எப்படியிருப்பினும் இந்த மரமும் கொடியும் என்ற மனப்போக்கு மக்களின் பல தரப்பினர் மத்தியிலும் வேரூன்றிப் போயுள்ளது என்பது மட்டும் உண்மை. நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று வடமாகாணசபையில் இனப்படு கொலை பற்றிய தீர்மானம் தொடர்பாகப் பிரதமர் கொதிப்படைந்ததும் இந்தச் சிந்தனைப் போக்கின் அடிப்படையிலேயே என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

இது மேல்மட்டங்களிலிருந்து அடிமட்டம் வரை புரையோடிப்போயுள்ளது என்பது மட்டுமன்றி இது வலுவிழந்து போகாமல் பார்ப்பதில் பல்வேறு தரப்புக்களும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன.

அண்மையில் புத்தளம் கற்பிட்டிப் பகுதியில் மூன்று பௌத்த பிக்குகள் பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இவர்கள் தற்சமயம் கற்பிட்டி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதில் அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்தான் உற்றுநோக்கப்பட வேண்டியவையாகும். அதாவது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளக விசாரணையில் வெளியாரின் பங்களிப்பு இருக்கக்கூடாது என்பது அவர்களின் முதலாவது கோரிக்கை. பொஹவந்தலாவை, அனுராதபுரம், கெப்பிட்டிப்பொல, மொறவேவ ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் [illegible] தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது இரண்டாவது கோரிக்கையாகும். அதாவது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக பக்கச்சார்பற்ற நடுநிலையான ஒரு விசாரணை நடத்தப்படக்கூடாது என் அவர்கள் கோரிநின்றனர். அதேவேளை சிங்கள மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு அவர்களே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்கின்றனர்.

சிங்களத் தரப்பினரால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் அநீதிகள் என்றால் என்ன தமிழ்த் தரப்பு மேற்கொண்டதாகக் கூறப்படும் அநீதிகள் என்றால் என்ன சிங்களத் தரப்பே விசாரித்து நீதி வழங்கவேண்டும் என்கிறார்கள். அதைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டுமாம். இது மரமும் கொடியும் தத்துவத்தை மூலமாகக் கொண்டது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

1958ஆம் ஆண்டு இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு காண்பதற்காக அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவுக்கும் எஸ். ஜே.வி. செல்வநாயகத்துக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதை எதிர்த்து புத்த பிக்குகள் பிரதமர் இல்லத்துக்கு முன்பாகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினர். அதன் காரணமாக அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. அது மட்டுமின்றி நாடு முழுவதிலும் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தமிழ் மக்களின் வர்த்தக நிலையங்களும் குடியிருப்புக்களும் எரியூட்டப்பட்டன. அந்த இன அழிப்பு நடவடிக்கைகளைப் புத்த பிக்குகளே நின்று நேரடியாக நெறிப்படுத்தினர்.

அன்று மட்டும் பண்டா–செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் இனப்பிரச்சினை அன்றே தீர்க்கப்பட்டிருக்கும். இடம்பெற்ற போராட்டங்களும், நீண்ட போரும், போரின் அழிவுகளும், போர்க் குற்றங்களும் ஏற்படும் சாத்தியமே இல்லாமல் போயிருக்கும்.

அப்படியான பேரழிவுக்கான விதையைப் புத்த பிக்குகளே முதலில் தூவினர். இன்றும்கூட கற்பிட்டிப் பகுதியில் அப்படியான ஒரு நிலைமையை உருவாக்கும் நோக்கில் புத்தபிக்குகள் பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இப்படியாக இவர்கள் நாட்டின் ஒரு மூலையில் நச்சு விதையைத் தூவ, நாடாளுமன்றத்திலும் மகிந்த ஆதரவாளர்களால் அதே நோக்கம் கொண்ட குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கலப்பு நீதிமன்றம் தொடர்பான விவாதம் நடத்தப்பட்டபோது குழப்பம் விளைவித்தார். கலப்பு நீதிமன்றத்துக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியை பிரதமர் ரணில் பெறவில்லை என்று குற்றஞ்சாட்டினார். இந்த நேரம் தேசிய சுதந்திர முன்னணி உறுப்பினர் ஒருவர் கலப்பு நீதிமன்றத்துக்கு எதிரான பதாகையை ஏந்தியவாறு நாடாளுமன்றுக்குள் புகுந்தார். அதன் காரணமாக ஏற்பட்ட குழப்ப நிலையால் நாடாளுமன்றம் சிறிதுநேரம் ஒத்திவைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் கேள்விகளை எழுப்பி குழப்பங்களை விளைவித்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட பிரேரணையில் கலப்பு நீதிமன்றம் என்பது நீக்கப்பட்டு வெளிநாட்டு நீதியாளர்கள், சட்டவல்லுநர்கள் ஒத்துழைப்பு என மாற்றப்பட்டு விட்டபோதும் இவர்கள் கலப்பு நீதிமன்றத்துக்கு எதிரான போராட்டங்களை நடத்துகிறார்கள் என்றால் அதன் அர்த்தம்தான் என்ன? அதாவது இலங்கையில் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான விசாரணைக்கு எதிரான ஒரு கருத்தோட்டத்தை சிங்கள மக்கள் மத்தியில் நிலைப்படுத்துவதே ஆகும். இதன் மூலம் மேற்படி விசாரணைகளுக்கு எதிராக பரந்தளவில் குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கம். எனவேதான் 1958ஆம் ஆண்டைப்போன்று ஒரு முனையில் பௌத்த பிக்குகள் பட்டினிப் போராட்டம் மூலம் களம் இறக்கப்பட்டுள்ளனர். இன்னொருபுறம் மகிந்த ஆதரவாளர்களால் நாடாளுமன்றத்தில் நடந்தது உட்பட பல்வேறு விதமான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதாவது குற்றம் சுமத்தப்பட்டவர்களின் தரப்பே குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தவேண்டும் என்பதும் பாதிப்பை ஏற்படுத்தியவர்களும் பாதிக்கப்பட்டவர்களும் அல்லாத மூன்றாவது தரப்பின் பங்களிப்பு மட்டுமன்றி ஒத்துழைப்புக்கூட விசாரணைகளில் இருக்கக்கூடாது என்பதுமான இறுமாப்பே அங்கு வெளிப்படுகிறது.

அதற்கான மூலம் பெரும்பான்மையினர் மரம் எனவும் சிறுபான்மையினர் அதைச் சுற்றிப் படரும் கொடிகள் எனவும் கற்பிக்கப்படும் மூல மந்திரத்தில் இருந்து பிறந்த அகங்காரமேயாகும். இன்னும் சொல்லப் போனால் சிறுபான்மையினர் தொடர்பான எந்தப் பிரச்சினையையும் பெரும்பான்மையினரே கையாளவேண்டும், சிறுபான்மையினரோ அல்லது மூன்றாவது தரப்பினரோ தலையீடு செய்யக் கூடாது என்பதே அவர்களின் அடிப்படைக் கோட்பாடாகும்.

எனவேதான் முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் அந்தக் கருத்தை மாற்ற வேண்டும் என்று ஜனாதிபதியின் முன்பாகக் கோரிக்கை விடுத்தார். பெரும்பான்மையினர் மரம் எனவும் சிறுபான்மையினர் அதில் படரும் கொடிகள் எனவும் வேரூன்றிப் போய்விட்ட சிந்தனை மாற்றப்படவேண்டும் என்றார்.

அப்போது மட்டுமே இரு இனங்களும் இரு மரங்களாக அருகருகே செழித்து வளர முடியும் என முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த அடிப்படை எண்ணக்கரு மாற்றப்படாத வரையில் போர்க்குற்ற விசாரணைகளிலோ இனப் பிரச்சினை விவகாரத்திலோ எட்டப்படும் தீர்வுகள் வெற்றி பெறுவதோ நிலைத்திருப்பதோ சாத்தியமில்லை என்பதே உண்மையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருப்பை விழுங்கியவள்! ௫

கண. மகேஸ்வரன்

தொடர்கதை



"அப்பா....." நான் அலறினேன்.
அப்போதுதான் அம்மா கவனித்திருக்க வேண்டும்.
"இஞ்சேருங்கோ...! என்ன செய்யுதப்பா? அப்பா...! என்ன மன்னிச்சிடுங்கோ அப்பா...!"
ஒரு நொடியில் மண்டியிட்டுக்கொண்டே, அம்மா அப்பாவின் நெஞ்சை நீவிவிட்டாள்.
".....ம்... ஒண்டுமில்ல... கொஞ்சம் தண்ணி தா பிள்ளை...."
அலட்டிக்கொள்ளாமல் அப்பா கீழே இருந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.
இடது பக்க மார்பை அழுத்திப் பிடித்தால், ஐயோ.... அப்பாவுக்கு காட் அற்றாக் போல... சொல்ல நினைத்தாலும் வெளியே சொல்லவில்லை. எனக்கும் நெஞ்சை அடைக்குமாப் போலிருந்தது.
தண்ணீர்க் குவளையைவாங்கி, மெதுவாக மிக நிதானமாகவே அப்பா குடிப்பதைப் பார்க்க ஆறுதலாக இருந்தது.
பொதுவாக யாரும் பயத்தில் மடமடவென்றே குடிப்பார்கள். இதை நான் கவனித்திருக்கிறேன். ஆனாலும் குடிக்கத் தொடங்கியதும் எச்சரித்தால் எங்கே புரைக்கேறிவிடுமோ என்று கொஞ்சம் பயமாகவே இருந்தது.
"அப்பா...! இப்ப எப்பிடி அப்பா இருக்கு?"
நான் கேட்க நினைத்ததை அம்மாவே கேட்டாள்.
"ஒண்டுமில்லையம்மா... சும்மா ரென்சன் தான்...!"
அப்பாவின் கண்கள் கலங்கியதை அன்றுதான் நான் முதன்முதலில் பார்த்தேன்.
"ஒண்டுமில்ல எண்டு சும்மா விடேலாது. அப்பாவைக் கொஸ்பிற்றலுக்குக் கொண்டு போய்க் காட்டவேண்டும்."
அம்மாவும் எனது யோசனையை அங்கீகரித்தாள்.
"அம்மா, நான் சித்திராவின்ர தம்பிக்குச் சொல்லி கார் பிடிச்சு வாறன், என்னம்மா?"
அம்மா தலையசைத்தாள். அப்பா தடுத்தார்.
"வேண்டாம் பிள்ளை... இப்ப எல்லாம் சரியாப் போச்சு!"
நான் அடம்பிடித்துக்கொண்டு சித்திரா வீட்டுக்குப் புறப்பட்டேன்.
அப்பாவுக்கு மாரடைப்பு என்று அதற்குள் ஊருக்கெல்லாம் எப்படித் தெரிந்ததோ தெரியாது.
ஒரு பெருங்கூட்டமே கூடத்தை நிறைத்திருந்தது.
அம்மாவும் நானும் இயந்திரமாய் இயங்கிக் கொண்டிருந்தோம்.
வருபவர்களை உபசரித்ததில், அப்பாவைக் கைவிட்டதாக அர்த்தம் கொள்ளுமளவுக்கு அதுவே ஓர் இடைஞ்சலாயிருந்தது.
அப்பா இருக்கும் வேளையில் வீட்டுக்கே வராத கேசவன்கூட வந்திருந்தான்.
அப்பாவின் பார்வை அவன் மீதுதான் குத்திட்டு நின்றது.
அவனை மனதால் எடைபோட்டு அளக்கிறாரோ, என்னவோ?
வாசல்படியே மிதியாதே என்று கொக்கரித்த அம்மாவும் அடங்கித்தான் இருந்தாள். எதுவுமே பேசவில்லை.
கேசவன் மட்டும் என்னவோ தங்கப் பதுமை போலத் தலை தாழ்த்தி இருந்தான்
எம் முன்னேயே அம்மா தன்னை அவமதித்து விட்டதான குற்றவுணர்வோ, என்னவோ?
இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்ற தோரணையில் வாடிப்போயிருந்த அவனைப் பார்க்கப் பாவமாகவும் இருந்தது. எரிச்சலாகவும் இருந்தது.
ஒற்றைக்காலில் தவமிருக்கும் கொக்கு, உறுமீன் வரும்வரை காத்திருப்பது போலிருந்தது, அவன் வாடிப்போயிருந்த கோலம்.
மாமா அம்மாவை அழைத்துக்கொண்டு உள்ளே போனார்.
கேசவன் பற்றியோ, என்னைப் பற்றியோ ஏதோ இரகசிய சம்பாசணைக்கு அத்திபாரமாயிருக்கலாம்.
எந்த நேரத்திலும் என்னவும் நடக்கலாமென்று ஓர் அமைதி குடியிருந்தது.
அம்மா இல்லாத வெறுமையினாலோ என்னவோ கூட்டமும் மெல்லக் கலையத் தொடங்கியது.
அப்பாவுக்கு இன்னும் வியர்த்துக் கொண்டு தானிருந்தது.
களைப்பு, மனவிரக்தி எல்லாம் காரணமாயிருக்கலாம். அவருக்குப் பிடிக்காத கேசவன் அங்கே அமர்ந்திருப்பதும் காரணமாகலாம்.
எழுந்துபோய் விசிறியை எடுத்து விசிறிவிடலாமென்றால், கேசவன் கல்லுப் பிள்ளையாராட்டம் இருக்கிறானே!
கேசவன் பார்வை இப்போது என்பக்கம் சரிந்தது.
எனக்கு என்னவோ ஒரு மாதிரி.....
நான் உள்ளே போக எத்தனித்தபோது, அப்பா கேசவனை அருகே அழைப்பது கேட்டது.
என்ன கேட்கப் போகிறாரோ?
நான் உள்ளே நழுவினேன்.
மீண்டும் கூடத்துக்கு வந்தபோது சூழ்நிலையே மாறியிருந்தது.
கேசவனைக் காணோம்.
அப்பா அம்மா மாமாவுடன் மாமியும் வந்து சேர்ந்து விட்டிருந்தாள்.
ஓஹோ... அப்படியானால் இது என்னைப் பற்றிய விடயம்தான். அப்படியானால் நான் இங்கே நிற்கக்கூடாது.
நான் விலக எத்தனித்தபோதே, அம்மா ஜாடையால் உள்ளே போகும்படி, கட்டளையிட்டாள்.
நீண்டநேர விவாதம் போலும். நேரம் நீண்டு கொண்டிருந்ததே தவிர, யாரும் உள்ளே வருவதாய்க் காணோம்.
என் காதில் எதுவுமே விழாதபடி அமசடக்கமாக மந்திராலோசனை தொடர்கிறது போலும்.
என் மனத்துள்ளும் ஆயிரம் கற்பனைகள் எழுவதை ஏனோ என்னால் தடுக்க முடியவில்லை.
நானும் ஒரு பெண்தானே.
எனக்குமட்டும்கணவன்குழந்தைகள் பேரப்.....!
அடச்சீ.... அதற்குள்ளாக ஆசையைப் பாரன்.
பெண் பொன்னுக்கு மட்டுமே ஆசைப்படுவதாகவே பல ஆண்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவளுக்கும் ஆசாபாசங்கள் இருக்குமென்று... ஹும்
அவள் தாய்மையின் தவிப்பைப் புரிந்து கொள்வதேயில்லை.
பெண் ஒரு போகப்பொருள் என்று மட்டுமே ஆண் நினைக்கின்றான்.
தான் மட்டுமே விருப்பம் போல ஆண்டனுபவிக்க வேண்டுமென்று அவனுக்கு எண்ணம். எல்லோரையுமே இந்த வரையறைக்குள் அடக்க முடியாதுதான்.
இல்லாவிட்டால், ஒன்றன்பின் ஒன்றாய் எத்தனை பெண்களுக்கு வலை விரித்திருக்கிறான், கேசவன்.
இவனை நம்பி என் கழுத்தை நீட்டலாமா?
தாலிக்கு மட்டுமா கழுத்தைக் கொடுப்பது?
இந்த ஸ்தீரீலோலன் மீண்டும் ஒரு புதுமலரைத் தாவத் தொடங்கினால் என் நிலைமை என்னாவது?
நினைக்கும்போதே அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது.
எல்லாருடைய கையாலாகத்தனமும் சேர்ந்து என் கழுத்தில் முடிச்சுப் போட நினைக்கிறதா? அல்லது தூக்குக் கயிறே மாட்டுவதென்று தீர்மானித்து விட்டார்களா?
இவர்கள் எல்லோரும் சேர்ந்து என்னதான் முடிவெடுத்தாலும் என்னை மாட்டி வைக்க முடியாது.
இப்படி ஒருவனை மணந்து அல்லல்படுவதுதான் வாழ்க்கை என்றால், அப்பா சொன்னது மாதிரியே முதிர் கன்னியாய்.... வாழாவெட்டியாய்.....
.... ச்சீ.... வாழ வேண்டிய நான் ஏன் இப்படி சிந்திக்க வேண்டும்?
ஆனால், ஆழமறியாது காலைவிடக் கூடாது.
அனித்தா, தன் மனவோட்டங்களோடு போராடிக் கொண்டிருந்தாள்.

*(நெருப்பு உமிழும்.......)*

# பேருந்துப் பயணம்

**ஜெ.வெலிசிற்றா றமணி**
**சில்லாலை**



பேருந்தில் தினமும் ஏறி
போயிடம் சேர்ந்ததுண்டு
பேராவல் கொண்டிங்கு நானும்
பேருவகை கொண்டதுண்டு - ஆயினும்
பேரிடரால் ஒரு நாள் துவண்டதுமுண்டு
போயிடம் சேருவோமோ அல்லது
போய்ச் சேருவோமோ.......
உயிரைக் கையில் பிடித்தபடி
ஒற்றைக் காலில் ஊசலாடி
ஒன்றையொன்று முந்திக்கொண்டு
போட்டிக்கு அவை ஓட
அவை போகும் வேகத்தில் என் மனமும் ஓட
இறுதியோ தொடருமே......
எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கிறேன்
மூச்சு முட்டும் நெருக்கத்தில்
முந்தானையைக் காணாமற் நான் தேட
மீன் மணமும் பூ மணமும்
ஒன்றோடொன்று கலக்க
என்னவாகுமோ ஏதுவாகுமோ
எல்லோரையும் நினைத்துப் பார்க்கிறேன்
திடீரென பேருந்து நிற்க
பெரும் சத்தம்................?
பேருந்தில் ஏறி பேரிடர் கண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கும் ஆபத்து!



ஆங்கில மூலம் : சுஜாதா பைரவன்
தமிழில் : ம.சுசித்ரா

இந்த நூற்றாண்டின் முடிவில் கடல் மட்டம் கிட்டத்தட்ட ஒரு மீற்றர் உயரம் அதிகரிக்கும் என்கிறது பருவநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கு இடையேயான குழுவின் ஐந்தாம் மதிப்பீடு அறிக்கை. பருவநிலை மாற்றத்தால் நிகழப்போகும் மிகப்பெரிய அசம்பாவிதம் இதுவாகத்தான் இருக்கும். ஆனால், கடல் நீர் எட்டப்போகும் உயரத்தைக் கணிப்பது விஞ்ஞானிகளுக்கே சவாலாகத்தான் உள்ளது.

இதில் அச்சுறுத்தும் யதார்த்தம் என்னவென்றால், உலகின் அதிகபட்ச மக்கள்தொகை கொண்ட நகரங்கள் பெரும்பாலும் கடற்கரையை ஒட்டித்தான் உள்ளன. ஆக, ஒரு மீற்றர் அளவுக்குக் கடல் மட்டம் உயர்ந்தால் நிச்சயம் பெரிய பரப்பிலான நிலம் அழிவைச் சந்திக்கும்.

கடல் மட்டம் எப்படி உயர்கிறது? கடலின் வெப்பநிலை அதிகரிக்கும்போது பனிப் பாறைகள் உருகும், அதன் விளைவாகக் கடல் விரிவடையும். இப்படிக் கடல் வெப்பமடையும்போது சூறாவளி உருவாகும், கடற்கரைப் பகுதிகள் வெள்ளக்காடாகும்.

## உருகும் பனித் தகடுகள்

உலகின் மிகப்பெரிய பனித் தகடுகளும் நன்னீர் பனிப் பாறைகளும் இருப்பது அண்டார்ட்டிகா மற்றும் கிரீன்லாந்தில்தான். அதிலும் மேற்கு அண்டார்ட்டிகாவில் உள்ள பனித் தகடுகளுக்கு ஆதாரம் ஆழ்கடல் மடியில் உள்ள பனிப் பாறைகள்தான். ஆனால், சமீபகாலமாக இந்தத் தாய்ப் பனிப் பாறையின் அடர்த்தி குறைந்துகொண்டே வருகிறது என்கின்றனர் பனி ஆய்வியலாளர்கள். கடல் மட்டம் 4.8 மீற்றர் அளவுக்கு உயர்வதற்கு, இந்தக் குறிப்பிட்ட பனித் தகடு மட்டுமே போதுமானது. ஆக, இந்தப் பனித் தகட்டின் சில பகுதிகள் அழிந்துபோனால்கூடக் கடல் மட்டம் உயர்வதை யாராலும் தடுக்க முடியாது.

மறுபுறம் பூமியின் மிகப்பெரிய பனித் தகடு கிழக்கு அண்டார்ட்டிகாவில்தான் இருக்கிறது. இதுவும் மளமளவென்று உருகிக்கொண்டிருக்கிறது. இதனால் 3.4 மீற்றர் அளவுக்குக் கடல்ப் பரப்பை உயர்த்த முடியும். சமீபகாலமாகக் கோடைக்காலம் கிரீன்லாந்தை அதிகப் படியாக உருக்குகிறது. அப்படி கிரீன்லாந்து முற்றிலுமாக உருகிப் போனால் கடல் மட்டம் மேலும் ஆறு மீற்றர் உயர்ந்து விடும்.

## விசித்திர சமிக்ஞை

2009 முதல் 2010 வரை அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையின் கடல் மட்டம் 10 சென்ரி மீற்றர் வரை அதிகரித்தது. இதைத் தவிரவும் கடல் தொடர்ந்து வெப்பமடைந்து வருகிறது. கடல் மட்ட உயர்வைத் தவிரவும் மேலும் பல மாற்றங்கள் பெருங்கடலில் நிகழ்ந்தபடி உள்ளன. மிதவைவாழ் உயிரினங்கள் மற்றும்



செடிகளின் அழிவு, நத்தை, கிளிஞ்சல்கள் மீதான கடல் அமிலத் தாக்கம், திமிங்கிலம், சால்மன், கடற்பசு உள்ளிட கடல் வாழ் உயிரினங்கள் வெளிப்படுத்தும் விசித்திரமான நடவடிக்கைகள். இப்படி நம்மை அச்சுறுத்தும் பல மாற்றங்கள் ஆழ்கடலில் தொடர்ந்து நிகழ்கின்றன.

பனிப் பாறைகள் உருகும் வேகத்தைத் துல்லியமாகக் கணிக்க முடியாமல் போனதற்குக் காரணம், அது பல நிலைகளில் பின்னிப் பிணைந் திருப்பதுதான். நாசாவில் இருந்து ஓய்வு பெற்று, தற்போது கொலம்பியா பல்கலைக் கழகப் புவி நிறுவனத்தில் பணிபுரியும் ஜேம்ஸ் ஹான்சன், பருவ நிலை மாற்றத்தைக் கண்டறிந்த விஞ்ஞானிகளின் முன்னோடி ஆவார். கடல் மட்டம் உயர்வு தொடர்பாக விஞ்ஞானிகள் மௌனம் சாதிப்பதாக இவர் குற்றம்சாட்டுகிறார். தற்போது வெளியாகியுள்ள பேலியோ பருவப் பதிவுடன் ஒப்பிடும்போது, நாம் பின்பற்றிவரும் பனித் தகடு மாதிரிகள் பழமையானவை என்கிறார்.



பருவநிலை மாதிரிகள், பனித் தகடு மாதிரிகள், பேலியோ பருவநிலைத் தகவல் ஆகியவற்றை விஞ்ஞானிகள் பயன்படுத்துவது வழக்கம். இதில் பேலியோ பருவ ஆய்வு முறை என்பது மனித இனம் தோன்றுவதற்கும் முன்பு, புவியின் வெப்பநிலை தற்போது உள்ளதைக் காட்டிலும் சில டிகிரிகள் கூடுதலாக இருந்தபோது கடல் மட்டத்தை அளவிடப் பயன்படுத்தும் ஆய்வு முறையாகும்.

ஆனால், இந்தப் பழங்கதையை ஒதுக்கிவைத்துவிட்டுப் புதிய அபாயச் சங்கை ஊதுகிறது ஹான்சன் மற்றும் அவர் குழுவினர் சமீபத்தில் வெளியிட்ட கட்டுரை. இப்போதுள்ள நிலையைவிடக் கூடுதலாக 2 டிகிரி செல்சியஸ் எனும் அபாயகரமான வெப்ப நிலையை விரைவில் பூமி எட்டப்போகிறது என்கிறது அக்கட் டுரை.

மறுபுறம், 2 டிகிரி செல்சியஸை எட்டாதபடி சூழலியலைத் தக்க வைத்துக்கொள்ளலாம் என்கிறது பருவநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கு இடையேயான குழு. இருப்பினும் 2 டிகிரி செல்சியஸ் வெப்பத்தைப் பூமி எட்டிய காலகட்டத்தில் கடல்மட்டம் எவ்வளவு உயர்ந்திருக்கும் என்பதை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்று துடிக் கின்றனர் விஞ்ஞானிகள்.

அது தொடர்பாக பேலியோ பருவநிலை ஆய்வு, பருவநிலை மாதிரி வடிவம், தற்போதைய பருவநிலை மாற்றங்களின் அவதானிப்பு ஆகியவற்றை அலசி ஆராய்ந்துவருகிறோம் என்கிறார் ஹான்சன். அவருடைய ஆய்வின்படி அடுத்த 10 ஆண்டுகளில் பனிக்கட்டிகளின் உருகும் வேகம் இரட்டிப்பாகும். ஆனால், மறுபுறம் இத்தகைய திடீர் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்கிறது பருவநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கு இடையேயான குழு. பனிப் பாறைகள் உருகுவதால் பெருமளவில் நன்னீர் பெருங்கடலில் கலக்கும் நிலை உண்டாகும். இதனால் தற்போது உள்ள சமநிலை குலைந்து சூறாவளி புறப்படும்.

## அழிவின் நுழைவாயிலில் கடற்கரை நகரங்கள்

1 லட்சத்து 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் வெப்பநிலை இன்று இருந்ததைக்காட்டிலும் ஒன்று முதல் இரண்டு டிகிரிதான் கூடுதல். ஆனால், அப்போது கடல் மட்டமோ ஐந்து முதல் ஒன்பது மீற்றர் வரை கொந்தளித்து எழுந்தது. அப்படியிருக்க, இன்றைய வாழ்க்கை முறை மற்றும் நுகர்வுக் கலாசாரப் போக்கை மட்டுப்படுத்தத் தவறினால், அண்டார்ட்டிகாவின் பனிப் பாறைகள் பெருமளவில் உருகிப் பேரழிவை உண்டாக்குவதை யாராலும் தடுக்க முடியாது. ஏனெனில், நம் வாழ்க்கை முறைக்கும் பசுமைக் குடில் வாயுக்கள் (பச்சைவீட்டு வாயுக்கள்) வெளியேற்றத்துக்கும் நேரடித் தொடர்பு உள்ளது.

நடுநடுங்கி உடனடியாக அபாயச் சங்கை ஊத வேண்டியதில்லை என்பதே பல விஞ்ஞானிகளின் கருத்தாக இருக்கிறது. ஆனால் உண்மை யாதெனில், கடல் மட்டம் அதிவேகமாக உயர்ந்து கொண்டிருப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இதுவரை எனக்குக் கிடைத்த ஆய்வுத் தகவல்களின்படி, நான் இறுதியாகவும் உறுதியாகவும் சொல்ல நினைப்பது, இந்த நூற்றாண்டுக்குள் பூமியின் வெப்பநிலை அதிகரித்துக் கடல் மட்டம் பல மீற்றர் அதிகரிக்கப்போகிறது. அடுத்து பனித் தகடுகளின் அழிவால் கடற்கரை நகரங்களைக் கட்டமைப்பதும் கடற்கரையில் நகரங்களை மீட்டுருவாக்குவதும் அபத்தமான கற்பனைகளாக மாறப்போகின்றனஎன்று தனது வலைப்பூவில் எச்சரித்திருக்கிறார் ஹான்சன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் ரஷ்யா தரைப் படைகளையும் ஈடுபடுத்தும் சாத்தியம்



## அமெரிக்கா, நேட்டோ சீற்றம் பிராந்தியத்தில் அமைதி மேலும் சீர்குலையும் அபாயம்



உக்ரேன் விவகாரத்தில் அமெரிக்காவுடனும் நேட்டோ நாடுகளுடனும் முரண்பட்டு நிற்கும் ரஷ்யா, இப்பொழுது சிரியா விவகாரத்தில் படைகளை இறக்கிப் போர் விமானங்களையும் செயற்பட வைத்திருப்பது அந்தப் பிரதேசத்தில் புதியதொரு சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

சிரியாவின் அதிபர் அல் ஆசாத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் ரஷ்யா இறங்கியிருப்பதாக மேற்கு நாடுகள் கருதுகின்றன. பஷார் அல் ஆசாத்தைப் பதவியிலிருந்து இறக்குவதற்கு அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் பெரும் எத்தனங்களைச் செய்துவரும் நிலையில் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒடுக்கும் சாட்டில், ஆசாத்துக்கு ஆதரவாக ரஷ்யா இப்போது இராணுவ மட்டத்திலும் செயற்படத் தொடங்கியிருப்பதாக அவர்கள் கருதுகிறார் கள்.

இந்த நிலைமையில் சிரியாவிலிருந்து செயற்படும் ரஷ்ய விமானங்கள் அண்மையில் வான்வெளியில் எல்லையை மீறி, துருக்கியின் வான்பகுதிக்குள் நுழைந்ததையடுத்து துருக்கிய விமானங்கள் ரஷ்ய விமானங்களை வழிமறிக்க நேர்ந்த சம்பவத்தால் நேட்டோ அமைப்பு ரஷ்யாவை எச்சரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

துருக்கிய எல்லைகளுக்கப்பால் இருந்து கொள்ளுங்கள் என்று நேட்டோ எச்சரிக்கை விடுத்துள்ளது. மேற்கு நாடுகளின் கூட்டணியான நேட்டோவில் துருக்கியும் ஒரு உறுப்பு நாடாகவுள்ளது. அதனால் அதன் பாதுகாப்புக் குறித்தும் நேட்டோ அக்கறை கொள்வது இயற்கை. சிரியாவில் ரஷ்யா இராணுவக் கட்டுக்கோப்பைப் பலப்படுத்தி வருவது நேட்டோவின் கவலையை அதிகரித்துள்ளது. வடமேல் எல்லைப்பகுதியிலுள்ள கிளர்ச்சியாளர்கள் நிலை கொண்டிருக்கும் பகுதிகளின் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்றும் நேட்டோ ரஷ்யாவைக் கேட்டுள்ளது.

இவ்வாறான தாக்குதல்கள் ஐ.எஸ். தீவிரவாதிகளைக் குறிவைப்பதற்குப் பதிலாக சிவிலியன்கள் மீதே தாக்குதல் நடைபெற ஏதுவாகின்றது என்று நேட்டோ தெரிவித்துள்ளது. கடந்த வார இறுதியில் ரஷ்ய விமானங்கள் துருக்கியின் வான் பரப்பின்மீது அத்துமீறிப் பறந்த சம்பவத்தையடுத்து நேட்டோ பிரதிநிதிகள் நடத்திய சந்திப்பொன்றின் பின்னர் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தற்செயலானது என ரஷ்யத் தூதுவர் தம்மிடம் தெரிவித்திருக்கிறார் என்று துருக்கிய பிரதமர் அகமது தவுத்தொகுலு தெரிவித்துள்ளார். எதுவானாலும் சிரியாவில் ரஷ்யா மேற்கொண்டுள்ள இராணுவத் தலையீடானது அந்தப் பிரதேசத்தில் காணப்படும் போர் நிலைமைக்குப் புதிய பரிணாமத்தை உருவாக்கியிருப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

ரஷ்ய போர் விமானங்கள் எதிர்த் தரப்பினர்கள் வசமுள்ள ஒருதொகை கிராமங்கள் மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தபோது, குறித்த ஆத்திரமூட்டும் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிரியாவின் வடக்கு எல்லை நகரமான லடாக்கியாவுக்கு அருகில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. 2014 ஆம் ஆண்டு துருக்கிய போர் விமானங்கள் சிரிய விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்திய பகுதிக்கு அருகில் இது நிகழ்ந்துள்ளது.

**ரஷ்யாவின் திட்டம் பற்றி சந்தேகம்**

சிரியாவில் ரஷ்ய நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதானது, சிரியாவில் கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்டுள்ள பகுதிகளில் அரச படைகளுடன் இணைந்து தரை மார்க்கமாகவும் நடவடிக்கைகளில் இறங்குவதற்கு ரஷ்யா திட்டமிட்டிருப்பதைக் காட்டுவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அமெரிக்க அதிகாரிகள் மூத்த ரஷ்ய அதிகாரி ஒருவரின் சமிக்ஞைகளைக் கொண்டு ரஷ்யா தரைப் படைகளையும் சிரியப் படைகளுடன் சேர்ந்து போராட அனுப்பத் திட்டமிட்டிருப்பது தெரிய வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

ரஷ்யா ஆறு நாள்களுக்கு மேல் நடத்தியிருந்த விமானத் தாக்குதல்கள் இஸ்லாமிய அரசுத் தீவிரவாத இலக்குகளை பெரிதாக இலக்கு வைக்கவில்லை என்றும் அமெரிக்க மற்றும் அதன் நட்பு நாடுகளின் ஆதரவு பெற்ற குழுக்கள் உட்பட ஆசாத்துக்கு எதிரான கிளர்ச்சியாளர்களையே இலக்கு வைப்பதாக இருந்துள்ளன என்றும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய தலைவர்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள். சிரியாவுக்குத் தரைப்படைகளை அனுப்பப் போவதில்லையென்று ரஷ்யா அறிவித்துள்ள போதிலும் உக்ரேனில் அது செய்ததுபோல் முறைசாராத படையணிகளை அனுப்பும் சாத்தியம் காணப்படுவதாகக் கருதப்படுகின்றது. புரட்சிப் படைகளுடன் போராடிக் களைத்துப் போயுள்ள சிரிய அரசுப் படைகளுக்கு ஊக்கமளித்து இழந்த நிலப் பகுதிகளை மீளக்கைப்பற்றுவதற்காக ரஷ்யப் படைகள் இறக்கப்படலாம் என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

**அணு ஆயுதக் கையிருப்பை விரிவாக்குகிறது இந்தியா**

அணு ஆயுதக் கையிருப்பை இந்தியாவும் விரிவாக்கி வருகின்றதென்று அமெரிக்க மூத்த நிர்வாகத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதங்கள் விரிவாக்கப்படுவதற்கு உலகம் முழுவதும் எதிர்ப்புகள் வலுவடைந்து வரும் நிலையில், பாகிஸ்தான், வடகொரியா, ஈரான் போன்ற நாடுகளுடன் இந்தியாவையும் அணு ஆயுத உற்பத்தியை விரிவாக்கும் நாடாக அமெரிக்க மூத்த அதிகாரி ஒருவர் குற்றஞ்சாட்டினார்.

நோர்வே ஒஸ்லோ நகரில் மாநாடொன்றில் பேசிய அமெரிக்க ராஜாங்க துணை அமைச்சர் பிராங்க் ரோஸ், இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் அணு ஆயுதக் கையிருப்பை அதிகரித்து வருகின்றன. வடகொரியாவின் அணு ஆயுதத்திட்டம் மற்றும் ஏவுகணைத் திட்டமானது அனைவருக்கும் கவலையளிப்பதாய் உள்ளது. ஈரான் அணு ஆராய்ச்சி தொடர்பாக ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டிருந்தபோதிலும் தொலைதூரம் சென்று தாக்கும் ஏவுகணை ஆராய்ச்சியைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்று கூறினார்.

இந்த நாடுகளின் அணுசக்தி ஆர்வத்துடன் ரஷ்யாவும் சீனாவும் தமது அணுசக்தி வலுப்படுத்தலை அதிகரித்து வருவதையும் சேர்த்துப்பார்க்கும்போது அணுசக்தி ஆயுதங்கள் தடைசெய்யப்படுவதற்கு மேலாகவும் ஏதாவது செய்தாக வேண்டும் என்பது புலனாகிறது. அணு ஆயுதங்கள் மேலும் பரவாமலும் அவைகளால் ஏற்படக்கூடிய பல்வேறு விதமான தாக்கங்களுடன் மோசமான விளைவுகளை வினைத்திறனுடன் தடுத்தாக வேண்டும் என்று ரோஸ் தெரிவித்தார். அமெரிக்க அணுசக்திக் கூட்டுத்தாபனத்துக்கும் இந்திய அரசுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் நிலுவையில் இருப்பதால் இந்தியாவுக்கு யுரேனியம் மற்றும் அணு உலை வசதிகளை அணு ஆயுத வல்லாண்மை நாடுகள் வழங்குவதற்காகச் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதற்கான அடிப்படை காணப்படுகின்றது. இந்தியாவின் அணு ஆயுத சட்டங்களில் காணப்படும் குறைந்தது இரண்டு விதிகள் தொடர்பாகத் தொடர்ந்து கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

> ரஷ்ய போர் விமானங்கள் எதிர்த் தரப்பினர் வசமுள்ள ஒருதொகை கிராமங்கள் மீது குண்டு வீசித் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தபோது குறித்த ஆத்திரமூட்டும் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

**ஐ.நா. முன்னாள் தலைவர் மீது லஞ்சக் குற்றச்சாட்டு**

உலக நாடுகள் பலவற்றில் கை லஞ்ச ஊழல்கள் தொடர்பில் பெரும் புள்ளிகள் எல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டும் கைது செய்யப்பட்டுமிருக்கும் நிலையில் ஐ.நாவில் உயர் பதவிகளில் இருந்தோரும் இந்தவித ஊழல்களுக்கு விதிவிலக்கல்ல என்பது இப்போது துலாம்பரமாகியுள்ளது.

ஐ.நாவின் பொதுச்சபையின் முன்னாள் தலைவர் ஒருவரும் வேறு நான்கு பேரும் இலஞ்ச ஊழலில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்று அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அன்ரிகுவா மற்றும் பார்புடாவின் முன்னாள் ஐ.நா. தூதுவரும் 2013 முதல் 2014 வரை பொதுச் சபையின் தலைவராக இருந்தவருமான ஜோன் அஷே சீன வர்த்தகர்களிடமிருந்து 1.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேலாக லஞ்சம் பெற்றுள்ளார் என்று நியூயோர்க் சமஷ்டி நீதிமன்றில் வழக்குத் தொடரப் பட்டுள்ளது.

அமெரிக்க மேன்ஹட்டன் சட்டவாளர் பிரீட் பாராரா, குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதை அறிவித்ததுடன் புலனாய்வுகள் தொடர்வதாகவும் மேலும் அதிக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படலாம் என்றும் ஐ.நாவில் ஊழல் என்பது ஒரு வர்த்தகமாக வழமைக்கு வந்து விட்டதா என்பதும் தெரிய வரும் என்றும் குறிப்பிட்டார். இந்தத் தகவல்கள் குறித்து ஐ.நா. செயலாளர் பான்கி மூன் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் வெளியிட்டுள்ளார்.

**மாட்டிறைச்சி சட்டவிரோத ஏற்றுமதியைத் தடுக்க ஏற்பாடு**

இந்தியத் துறைமுகங்கள் வழியாக சட்டவிரோதமாக மாட்டிறைச்சி கடத்தப்படுவதைத் தடுக்கும் முகமாகக் கடுமையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய அரசு திட்டமிட்டு வருகின்றது. பசு மாட்டிறைச்சியைச் சமைத்துச் சாப்பிட்டார் என்பதற்காக முஸ்லிம் ஒருவர் கொலை செய்யப்பட்டதை அடுத்து இந்திய மாநிலங்களில் பதற்றம் நிலவி வருகின்றது.

இந்திய மாநிலங்கள் பலவற்றிலும் பசுமாடுகள் இறைச்சிக்காகக் கொல்லப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. பசுமாடு புனிதமான மிருகம் என்று இந்துக்கள் கருதுவதே இதற்குக் காரணம். ஆனால் எருமை மாடுகளுக்கு விதிவிலக்குண்டு. தடையை மீறுபவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

மாட்டிறைச்சி இரகசியமாகக் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காகத் துறைமுகங்களில் சோதனை ஆய்வு கூடங்கள் நிறுவப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பசுமாடுகளைக் காப்பாற்ற அதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்து அமைப்புக்களால் பாரதிய ஜனதா அரசுக்கு நெருக்குதல் அதிகரித்திருப்பதால் இவ்வாறான நடவடிக்கைகளை இந்திய அரசு எடுக்க ஆரம்பித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு

## ஒழிக்கப் புதிய திட்டங்கள் தேவை





■ கு. கணேசன்,
பொதுநல மருத்துவர்.

முன்பெல்லாம் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களைப் பருவமழைக் காலம் என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றோம். இப்போது சில ஆண்டுகளாக இது டெங்கு காய்ச்சல் காலம் என்று பயந்து அலறும்படியாக நிலைமை மாறியிருக்கிறது. கடந்த சில மாதங்களாக மழை இல்லாதிருந்ததால் டெங்கை மறந்திருந்தோம். இப்போது மழை தூறத் தொடங்கியதும் மீண்டும் டெங்கு! டெங்கு! எங்கும் சோதனை, எதிலும் சோதனை என்று அதிகாரிகளும் தீவிரம் காட்டத் தொடங்கிவிட்டனர்.

புள்ளி விவரங்களின்படி வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையான காலத்தில் 1,638 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகளவில் யாழ்ப்பாணத்தில் 1,287 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவில் 115 பேரும் வவுனியாவில் 101 பேரும் மன்னாரில் 79 பேரும் கிளிநொச்சியில் 56 பேரும் இந்த நோயால் பீடிக்கப்பட்டனர். இலங்கை முழுவதும் இதுவரை 21 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2014ஆம் ஆண்டில் மொத்தம் 47 ஆயிரத்து 500 பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் ஆயிரத்து 800 பேர் யாழ்ப்பாணத்தவர்கள். 2013ஆம் ஆண்டில் மொத்தம் 32 ஆயிரம் பேரும் 2012ஆம் ஆண்டில் 44 ஆயிரத்து 461 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு (Dengue) எனும் வைரஸ் கிருமிகளின் பாதிப்பால் டெங்கு காய்ச்சல் வருகிறது. இந்தக் கிருமிகளைச் சுமந்து திரியும் ஏடஸ் எஜிப்தி (Aedes Aegypti) எனும் கொசுக்கள் நம்மைக் கடிக்கும் போது கிருமிகள் பரவுகின்றன. இந்தக் கொசுக்கள் கொஞ்சம் வித்தியாசமானவை. இவை சுத்தமான நீர்நிலைகளில் மட்டுமே வாழக்கூடியவை. பகலில் தான் கடிக்கும்; அதுவும் பெண்கொசுதான் கடிக் கும். கொசு கடித்த ஒரு வாரத்தில் நோய் தொடங்கிவிடும்.

### அறிகுறிகள் என்ன?

கடுமையான காய்ச்சல், வயிற்றுவலி, தாங்க முடியாத அளவுக்குத் தலைவலி, உடல்வலி, மூட்டு வலி, கண்ணுக்குப் பின்புறம் வலி, தொடர்ச்சியான வாந்தி, களைப்பு ஆகியவை டெங்குக்கே உரித்தான அறிகுறிகள். எலும்புகளை முறித்துப் போட்டது போல் எல்லா மூட்டுகளிலும் வலி ஏற்படுவது இந்த நோயை இனங்காட்டும் முக்கிய அறிகுறி. வாந்தியும் வயிற்றுவலியும் ஆபத்தான அறிகுறிகள். அடுத்து உடலில் அரிப்பு ஏற்படும். சிவப்புப் புள்ளிகள் தோன்றும். டெங்கு வைரஸ் குருதிக் குழாய்களைப் பாதிப்பதால், அவற்றில் துளை விழுந்து குருதியைக் கசியவிடும். இதன்விளைவால் ஏற்படும் சிவப்புப் புள்ளிகளே இவை.

### ஆபத்து எப்போது?

பெரும்பாலோருக்கு ஏழாம் நாளில் காய்ச்சல் சரியாகிவிடும். சிலருக்கு மட்டும் காய்ச்சல் குறைந்ததும் ஓர் அதிர்ச்சி நிலை (Dengue Shock Syndrome) உருவாகும். இவர்கள் தான் ஆபத்து மிகுந்தவர்கள். இவர்களுக்குக் கை, கால் குளிர்ந்து சில்லிட்டுப்போகும். சுவாசிக்கச் சிரமப்படுவார்கள். குருதி அழுத்தமும் நாடித் துடிப்பும் குறைந்து, சுய நினைவை இழப்பார்கள். டெங்கு வைரஸ் குருதியில் உள்ள தட்டணுக்களை (Platelets) அழித்துவிடும். இவை தான் குருதி உறைவதற்கு உதவும் முக்கிய அணுக்கள். இவற்றின் எண்ணிக்கை குறையும் போது, பல் ஈறு, மூக்கு, நுரையீரல், வயிறு, சிறுநீர்ப் பாதை, எலும்புமூட்டு ஆகியவற்றில் குருதிக் கசிவு ஏற்படும். இதற்கான சிகிச்சை கிடைக்க வில்லை என்றால் உயிரிழப்பு ஏற்படும். டெங்கு நோய்க்கென்று தனியாகச் சிகிச்சையோ தடுப்பூசியோ இல்லை. டெங்கு தானாகத்தான் சரியாக வேண்டும். அதுவரை குருதிக்கசிவு, குறை குருதி அழுத்தம், மூச்சிளைப்புப் போன்ற ஆபத்தான விளைவுகளைக் கட்டுப் படுத்தவே சிகிச்சை தரப்படும். எனவே, டெங்குக் காய்ச்சலை ஆரம்பத்திலேயே கண்டறிவது மிக முக்கியம்: இதன்மூலம் இந்த ஆபத்தான பின்விளைவுகளை வரவிடாமல் தவிர்க்க முடியும். டெங்கு ஐ.ஜி.எம். (Dengue IgM), என்.எஸ்.1 ஆன்டிஜென், எலிசா (Elisa), பி.சி.ஆர். (PCR) ஆகிய நவீன பரிசோதனைகளில் டெங்கு பாதிப்பு உடனே தெரிய வரும். இந்தப் பரிசோதனை வசதிகளை அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் கிடைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்தால், ஏழை எளியவர்கள் இந்தக் காய்ச்சலால் உயிரி ழப்பதைத் தவிர்க்கலாம்.

### உதவும் நவீனத் தொழில்நுட்பங்கள்

டெங்கு நுளம்புகளை ஒழிப்பது ஒன்றே இந்த நோயைக் கட்டுப்படுத்த ஒரே வழி. நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக, மழை மாதங்களில்தான் டெங்கு பரவுகிறது. கொழும்பு, மாகாண அரசுகள் இந்தப் பருவத்துக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துவிடவேண்டும். கொசுக்களை ஒழிக்க ஏற்கெனவே நடைமுறையில் இருக்கிற மருந்துகளை முறைப்படி முன்கூட்டியே பயன்படுத்துவதை அரசு உறுதிப்படுத்தவேண்டும். அத்தோடு உலக அளவில் பின்பற்றப்படும் நவீன தொழில்நுட்பங்களையும் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் தேவை.

உதாரணத்துக்கு, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளில் குளம், குட்டை, பிற நீர்நிலைகளில் கம்பூசியா அஃபினிஸ் (Gambusia affinis) எனும் மீன்களை வளர்க்கின்றனர். இவை கொசுக்களின் லாவாக்களைத் தின்றுவிடும். இதனால் கொசுக்கள் வளர்வதற்கு வாய்ப்பே இல்லாமல்போகும். கொசுக்களை வேரோடு அழிக்கும் தொழில்நுட்பம் இது.

சமீபத்தில், பிரேசில் நாட்டில் கொசுக்களை மலடாக்கும் புதிய தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்துள்ளனர். அதாவது, குறிப்பிட்ட பருவத்துக்குப் பிறகு கொசுக்கள் வளர்வதற்கு டெட்ராசைக்ளின் மருந்து தேவைப்படும் வகையில் கொசுக்களின் மரபணுக்களை மாற்றி அமைத்து, அந்தக் கொசுக்களை ஒரு பண்ணையில் வளர்த்து, வெளியில் விடுகின்றனர். இந்தக் கொசுக்களோடு மற்ற கொசுக்கள் இணைந்து இனப்பெருக்கம் செய்து பிறக் கிற கொசுக்கள் தொடர்ந்து வளர வேண்டுமானால், அவற்றுக்கு டெட்ராசைக்ளின் மருந்து தேவைப்படும். அது கிடைக்காதபோது அவை இனப்பெருக்கம் செய்ய முடியாதுஇறந்து விடும். இந்த வகையில் கொசுக்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி கொசுக்களை ஒழிக்க முன்வந்துள்ளனர். இங்கும் இந்த மாதிரியான தொழில் நுட்பங்களைச் செயல்படுத்துவதற்குப் புதிய திட்டங்களைக் கொண்டு வரவேண்டும்.

### மக்கள் கடமை

டெங்கு நோயை ஒழிப்பதில் மக்களுக்கும் அதிக கடமை உண்டு. வீட்டைச்சுற்றி கழிவுநீர் மட்டுமல்ல, சாதாரண தண்ணீர்கூடத் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தெருக்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வது, சாக்கடைகளைச் சுத்தப்படுத்துவது போன்றவற்றில் சுகாதாரப் பணியாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். கொசுக்களை ஒழிக்கும் புகை அடிக்கும் பணிகளை உள்ளாட்சிகள் தீவிரப்படுத்த வேண்டும். பூந்தொட்டிகள், அழகு ஜாடிகள், சிறு பாத்திரங்கள், தகரடப்பாக்கள், பயன்படாத டயர்கள், ஆட்டு உரல் போன்றவற்றில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கட்டடம் கட்டுமானப்பணிகள் நிகழும் இடங்களில் சுத்தம் காக்கப்பட வேண்டும்.

தண்ணீருக்குத் தட்டுப்பாடு வரும்போதெல்லாம் தொட்டிகளில் தண்ணீர் சேமிக்கும் வழக்கம் எல்லா ஊர்களிலும் உள்ளது. அப்போது அந்தத் தொட்டிகளைச் சரியாக மூடிவைக்கவேண்டும். டெங்கு நோயை நிரந்தரமாக ஒழிக்க வேண்டுமானால், கொசுக்களின் வாழ்வாதாரங்களை அழிப்பதற்கு மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

எப்படி பெரியம்மை, மலேரியா, போலியோ போன்ற நோய்களை ஒழிப்பதற்குத் தனித் திட்டங்களைச் செயல்படுத்தி வெற்றி பெற்றோமோ அதுபோல டெங்குவுக்கும் தேசிய அளவில் தனித்தொரு தடுப்புத் திட்டத்தை வரையறுத்து, போர்க்கால அடிப்படையில் செயல்படுத்தினால் மட்டுமே டெங்குவை ஒழிக்க முடியும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பழுவில் பதக்கம் வென்ற வவு. தமிழ் மத்திய ம.வி.



தமிழினியன்

துடுப்பாட்டம், உதைபந்து, கொக்கி, ரென்னிஸ், கூடைப்பந்து இவ்வாறான பணத்தேவை மிகுந்த விளையாட்டுக் களை வசதிகள் படைத்த பாடசாலை கள் பலவும் தத்தமது தெரிவாக கொண்டிருக்க பெரிதளவான மூல தனச் செலவுகள் அல்லாத விளை யாட்டுக்களை தெரிவுசெய்து தடகளத் தொடர்களிலும் ஏனைய பிரிவுகளி லும் சாதித்துக் கொண்டிருக்கின்றன சிறிய பாடசாலைகள். இந்த வரிசை யில் நடப்பு வருடத்தின் புதுவரவாக இணைந்துள்ளது வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

1933ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டு மௌனமாக இயங்கி வந்த இந்தப் பாடசாலையின் பெயரை நடப்பு வருடத்தில் நடைபெற்ற பழுதூக்கல் தொடரில் பழுவோடு இணைத்து உய ரத்தூக்கி பதக்கங்களைக் கைப்பற்றி தேசியத்துக்கு எடுத்துச் சென்றிருக் கின்றது அப்பாடசாலையின் பழுதூக் கல் அணி. பாடசாலை ஆரம்பிக்கப் பட்டு பலவருடங்கள் ஆகிவிட்ட போதி லும் பழுதூக்கலில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் தடம் பதித்தது 2013ஆம் ஆண்டில்தான். பழு தூக்கல் விளையாட்டு ஆரம்பிக் கப்பட்ட அந்த வருடத்தில் இருந்தே மாவட்டம், மாகாணம் என்பவற்றில் பதக்கங்கள் கிடைக்காத தொடர்களே இல்லை என்று சொல்லிக்கொள்ளும் அளவுக்கு ஆதிக்கம் செலுத்திவந்தது அப்பாடசாலை. பழுதூக்கலில் பல மாக தடம்பதித்து வந்த வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் அரியணையில் வைக்கப்பட்ட வைர கிரீடமாகியுள்ளது தேசியத்தில் கிடைக் கப்பெற்ற மூன்று வெண்கலப் பதக் கங்களும்.

17வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரி வில் சுகிசன், 17வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் சாமிகாதர்சினி, 19வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரி வில் ஹரிகரன் இம்மூவருமே கல் லூரித் தாயின் நீண்டகாலக் கனவை நனவாக்கிய மைந்தர்கள். பழுதூக் கலைப் பொறுத்தமட்டில் இலங்கைத் தீவின் உயர் பிரதிநிதித்துவத்தை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி யாலயம் பெற்றுவிட்ட போதிலும் தமக்கு கிடைக்க வேண்டியது வெண்கல மல்ல என்று கர்வமாகக் கூறுகின்றார் அந்த அணியின் பயிற்றுநரான ந.பிரதாஸ். வளங்களின் பற்றாக்குறை யுடன் தேசியத்தில் வெண்கலத்தைச் சாதித்த இந்த மாணவர்கள் திருப்தி யடையக்கூடிய வகையில் வளங்கள் கிடைக்கும் பட்சத்தில் நிச்சயம் இதை விடப் பெரிதாகச் சாதிப்பார்கள் என் பதே அவர் முன்வைக்கும் வாதம். இருக்காதா என்ன. வளவுகளுக் குள்ளும், ஒழுங்கைகளுக்குள்ளும் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் என்று சாத்தியமல்லாத எதிர்காலத்துக்காக பணங்களையும் உபகரணங்களை யும் வாரிக்குவிக்கும் அரசியல் பிரதி நிதிகளுக்கே இது வெளிச்சம். ■

# வீட்டிலதான் புலி இப்ப அதுவும் இல்லையா?

இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ரி-20 தொடரை தென்னாபிரிக்கா 2:0 என்ற அடிப்படையில் கைப்பற் றியது. இந்தியாவில் தொடர் நடைபெற்றதால் அன்னிய மண், பழக்கமற்ற ஆடுகளம் என்பன காரணமாகக் காட்ட முடியாத நிலையில் இந்தியாமீது சொந்த ரசிகர்களாலேயே பலவிதமான விமர்சனங்கள் வந்து குவிந்தன. அவற்றில் ஒரு விமர்சனமே இந்தக் கட்டுரையின் தலைப்பாகத் தரப்பட்டுள்ளது. குறித்த தொடரை வைத்துப் பார்க்கின்ற பொழுது இந்தக் கருத்து நூறு வீதம் உண்மை என்பதை இந்திய ரசிகர்களும் ஏற்றுக்கொள் ளத்தான் வேண்டும்.

இந்தியாவின் தோல்விகளுக்கு மூன்று பெரும் காரணங்கள் உள்ளன. ஒன்று இந்தியப் பந்துவீச்சாளர்களின் சொதப்பல். அதாவது முதலாவது ரி-20 ஆட்டத்தில் 200 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்து விட்டு சொந்த மண்ணில் தோல்வியடைவதென்பது இந்தியப் பந்துவீச் சாளர்களின் இயலாமையை துல்லியமாகக் காட்டி நிற்கின்றது. இதை அணித்தலைவர் டொனியும் ஏற்றுக்கொண்டார். இந்தி யாவுக்கு இது ஒன்றும் புதிதல்ல. வழக்கமாக நடப்பதுதான். ஆனால் இம்முறை சிறிய வித்தியாசம் ஒன்று உண்டு. இவ்வாறான தோல் விகள் இதுவரை காலமும் அன் னிய மண்ணில் நடந்தன தற் பொழுது சொந்த மண்ணிலேயே நடக்கிறது.

இரண்டாவது காரணம் திறமை யான வீரர்களுக்கு உரிய முக்கியத் துவம் கொடுக்கப்படாமை. இது இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் ஏற்பட்ட தோல்வியின் மூலம் அறி யக்கூடியதாக இருந்தது. அதாவது குறிப்பாக ரஹானேயின் புறக்கணிப்பு. ராயிடுவின் இடத்துக்கு இலங்கைத் தொடரில் சதங்கள் அரைச்சதங்கள் என்று விளாசி சிறந்த போர்மில் இருந்த ரஹானே தெரிவுசெய்யப்பட்டிருந்தால் நிச்சயம் சிறிதேனும் போராட்ட குணத்தை வெளிப்படுத்தியிருப் பார். ரஹானேயின் புறக்கணிப்புக்கான எதிர்ப்புக் குரல்கள் பல மாக ஒலித்திருந்த போதிலும் வழக்கம்போல டோனி அதனைக் கண்டுகொள்ளவில்லை. இதைவிட அக்சர் பட்டேலின் இடத்துக்கு மிஸ்ராவைத் தெரிவு செய்திருந்தாலும் பொருத்த மானதாக இருந்திருக்கும்.

மூன்றாவது காரணம் இந்திய அணியால் விடப்படும் அறிக்கை கள். இந்திய அணியின் இயக்குனர் ரவிசாஸ்திரியும், கோக்லியும், ரோகித் சர்மாவும் அடிக்கடி பாவிக்கும் ஒரு வார்த்தை 'ஆக்ரோசம்'. கிரிக்கெட் ஆட்டங்களில் ஆக்ரோசம் என்ற வார்த்தையும் செயலும் ஏன் தேவைப்படுகிறது? இவர்கள் என்ன போருக்கா போகிறார்கள்? தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களும் அள்ளி விளாசும் அறிக்கைகளுமே அந்த அணியின் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக உள்ளது.

மொத்தத்தில் இந் தியா இதுவரை கால மும் வீட்டில் புலி தற் பொழுது அதுவும் இல்லை.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org